# அறிமுகம்

## இந்தப் புத்தகம் யாருக்காக?

மேய்ப்பனின் கதைப் புத்தகம் எளிய முறையில் கீழ்வருபவர்களுக்காக எழுதப்பட்டது:
- தங்கள் மொழியில் வேதாகமம் இல்லாதவர்கள்
- அவசரமாகப் பயிற்சி தேவைப்படுபவர்கள்
- பயிற்சிபெற பண வசதி அற்றவர்கள்
- நீண்ட கடினமான பிரசங்கங்களை விடவும் எளிமையான கதைகளை விரும்புபவர்கள்.

மேய்ப்பனின் கதைப் புத்தகத்தை எந்த மொழியிலும் இலவசமாக மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.

## கதைகள் ஏன் பயன்படுத்தப்படுகின்றன?

காலங்காலமாக கிறிஸ்தவர்கள் நம்பி வாழ்க்கையில் கைக்கொண்ட கொள்கைகளையும், முக்கியமான சபை நடவடிக்கைகளையும் மேய்ப்பனின் கதைப்புத்தகம் விவரிக்கிறது. மரபாகப் பின்பற்றப்பட்டு வரும் முறையான ஆய்வுக்குப் பதிலாக, கதை வாயிலாக வேத சத்தியத்தை சொல்லும் இம்முறை, இயேசுவைப் போல தேவ வார்த்தைகளைப் பிறருக்கு விளக்கிக் கூறி நடைமுறைப் படுத்த, அதில் ஈடுபடும் புதிய விசுவாசிகளுக்கும் தலைவர்களுக்கும் உதவியாக இருக்கிறது.

எல்லா அடிப்படை வேத சத்தியமும் சரித்திர நிகழ்ச்சிகளில் இருந்தே வளர்ந்தெழுகிறது. இந்த சம்பவங்கள் குறித்து ஆவியால் ஏவப்பெற்ற தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் உரைத்தனவே கிறிஸ்தவ இறையியலின் அடிப்படையாகும். பரிசுத்த ஆவியானவர் இந்த சரித்திர கூற்றுக்களை பயன்படுத்தி மக்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டு வந்து, மாற்றம் அளித்து, சபை ஊழியங்களுக்கு முன் மாதிரிகளையும் தருகிறார்.

நமது நம்பிக்கைகளுக்கும், சபை நடவடிக்கைகளுக்கும் வேதாகமம் சரித்திர அடிப்படையை அமைத்துத் தருகிறது. உதாரணமாக தங்களுக்கு உரைக்கப்பட்டவைகளுக்கு அடிப்படையான வேதாகமக் கதைகளை ஏற்கெனவே அறிந்திருந்த மக்களுக்கே ரோமர் மற்றும் எபிரேயப் புத்தகங்கள் எழுதப்பட்டன. ஆதாமும் அவனது வீழ்ச்சியும், எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிப்பதாக ஆபிரகாமுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தமும், ஈசாக்கைப் பலிகொடுக்க ஆபிரகாம் முன்வந்ததும், மோசேயும் நியாயப்பிரமாணமும், முதல் தலைமை ஆசாரியனாகிய ஆரோனும், புறஜாதி விரோதிகள் மேல் தாவீதின் வெற்றியும் ஆகிய சரித்திர சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன. இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்குஏறல், பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருதல் ஆகியவையும் மேலும் பலவுமே புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் ஆகும்.

## வேதாகமக் கதைகளின் பட்டியல்

வேதாகமத்தில் உள்ள கதைகளின் ஏறத்தாழ ஒரு முழுப்பட்டியலுக்கு பகுதி IV ல் உள்ள “பழைய புதிய ஏற்பாட்டில் இருந்து வேதாகமக் கதைகள்” பார்க்கவும். இப்பட்டியல் வேதாகமக் கதைகளை சரித்திரவரிசையாக தந்து, எல்லா பெரும் கொள்கைகளையும் விளக்கி எவ்வாறு பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனமாக புதிய ஏற்பாட்டு சத்தியங்களை விளக்குகின்றன என்பதை எடுத்துரைக்கிறது.

## இணையதளத்தில் இருந்து மேய்ப்பனின் கதைப்புத்தகத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

மேய்ப்பனின் கதைப்புத்தகம் பெற : **<http://www.paul.timothy.net>**
மேலும் விவரங்களுக்கு எழுதவும் : **<training @ paul-timothy.net.>**

## இந்தப் புத்தகத்தை எவ்வாறு உபயோகிப்பது

நீங்கள் புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமானால் நீங்கள் பயிற்றுவிக்கும் புதிய மேய்ப்பர்களுடன் இந்த வேதாகமக் கதைகளைப் படித்து விவாதிக்கவும். அவர்கள் மொழியில் வேதாகமமே மொழி பெயர்ப்பு இல்லை எனில் வேதாகமக் கதைகளை அவர்களுக்குக் கூறுங்கள்.

அவர்கள் சபை மக்களுக்கு கதைகளைக் கூறும்படி கேளுங்கள். இந்த மேய்ப்பனின் கதைப் புத்தகத்தில் ஞானம் ஐயா கூறும் அறிவுரைகளைப் பின்பற்றுமாறும், ஞானசூனியர் வாய்ப்பேச்சாக வரும் தவறுகளை ஒதுக்குமாறும் சொல்லுங்கள். இந்தப் பாத்திரங்களும், கல்விநேசன், சகாயர் மற்றும் பலரும் கதாபாத்திரங்களே. வேதாகமத்தில் கூறுப்படும் சிலவகையான மக்களை அவர்கள் பிரதிபலிக்கின்றனர். இந்த மேய்ப்பனின் கதைப்புத்தகத்தில் கூறப்படும் வேதாகமப் பாத்திரங்கள் உண்மையில் வாழ்ந்தவர்களே.

இதைப் படிக்கும் மாணவர்கள் ஒரு மந்தையை மேய்க்க வேண்டும். இந்த மந்தை:

- ஒரு சபையாகவோ
- ஒரு சபையை ஆரம்பிக்கும் அல்லது தலைவர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பணிக்குழுவாகவோ
- ஒரு பெரிய சபைக்குள் செயல்படும் ஒரு சிறிய சபையான செல்குழுவாகவோ இருக்கலாம் (ஆரம்பத்தில் இந்த செல் ஒரே குடும்பமாகக் கூட இருக்கும். ஆனால் ஒரு சபையாக வளரும் எண்ணம் கொண்டதாகும்)

### நீங்கள் ஒரு புதிய மேய்ப்பராக இருந்தால்

இந்தக் கதைகளைப் படித்து அறிந்துகொள்ளுங்கள். புதிய விசுவாசிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் சொல்லுங்கள். ஞானம் ஐயா கூறுவதைப் போல செய்ய உற்சாகப்படுத்துங்கள். ஞானசூனியர் கூறுவதைப்போல செய்யக்கூடாது என எச்சரியுங்கள்.

### உடனடி தேவைகளுக்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்றபடி செயலாற்ற இப்புத்தகத்தில் உள்ள அத்தியாயங்களில் இருந்து தேர்ந்தெடுங்கள்

*மேய்ப்பனின் கதைப் புத்தகத்தில்* மூன்று பகுதிகள் உண்டு. தங்களது தற்போதைய தேவைக்கேற்ற பகுதியை முதலில் ஆரம்பியுங்கள்.

கிறிஸ்துவைப் பற்றிக் கூற பகுதி I ஐ உபயோகிக்கவும். ஜனங்கள் இயேசுவை அறிந்துகொள்ள உதவுங்கள்.

சபையை ஆரம்பிக்க அல்லது புதுப்பிக்க II வது பகுதியைப் பயன்படுத்தவும். கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியும் சபையை ஸ்தாபியுங்கள்.

மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்க, பகுதி III ஐ பயன்படுத்தவும். சபையின் அடிப்படை ஊழியத்தை வளருங்கள்.

### நீங்கள் ஒரு பள்ளியில் போதிப்பவராக இருந்தால்

பள்ளியில் பாடபுத்தமாக பயன்படுத்த *மேய்ப்பனின் கதைப்புத்தகம்* எழுதப்படவில்லை. புதிய சபைகளில் சேவை செய்யும் புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு உங்களுக்கு உதவியாக எழுதப்பட்டது. இதை நீங்கள் பாடபுத்தமாக பயன்படுத்தினால், மாணவர்கள் கற்று தேர்வு எழுதுவதோடு அதற்கு மேலும் அவர்களைச் செய்ய வைக்க வேண்டும். இந்த பாடதிட்டத்தின் ஓர் அங்கமாக, அவர்கள் ஒரு மந்தையை ஸ்தாபிக்கவோ அல்லது ஒரு மந்தையை மேய்க்கவோ செய்ய வேண்டும்.

தேர்வு எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்கள் மந்தைக்கு போதித்ததும் செய்ததும் என்ன என்பது பற்றியும், சபைமக்கள் செய்தவைபற்றியும் மாணவர்களிடம் அறிக்கை பெறலாம். (மாற்கு 6:30).

**மேய்ப்பனின் கதைப்புத்தகம்**

இந்த மேய்ப்பனின் கதைபுத்தகத்தில் 85 பயிற்சிகள் உள்ளன. ஒவ்வொரு பயிற்சியும் ஒரு செய்முறை குறிப்புக்கு (Practical assignment) அடிப்படை ஆகும். இந்த புத்தகத்தில் உள்ள விஷயங்கள் குறித்து விரிவுரை மட்டுமே ஆற்றக்கூடாது. அடுத்த இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான வாரங்களுக்கு மாணவர்கள் ஊழிய நடவடிக்கைகள் குறித்து திட்டமிட உதவ நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும். மேலும் அவர்களது அறிக்கைகளுக்கும் கேள்விகளுக்கும் செவிசாய்க்க வேண்டும்.

## பகுதி I

# கிறிஸ்துவை அறிந்துகொள்ள மக்களுக்கு உதவுதல்

பகுதி I ல் உள்ள அதிகாரங்கள். அறிந்து கொள்ளல்கள். திருப்தியளிக்கும் வகையில் உங்கள் மக்களால் பயிற்சி செய்யப்பட்டவைகளை ✓ அடையாளப்படுத்துங்கள்.

I-1 அறிந்துகொள்ளல் 1: வாழ்க்கையின் மெய்யான அர்த்தத்தை அறிதல் (தேவன் நம்மில் அன்புகூருகிறார். அவரில் நாம் எப்போதும் களிகூரவே விரும்புகிறார்)
I-2 அறிந்துகொள்ளல் 2: ஒரே தேவனை நோக்கித் திரும்பு (விக்கிரங்களையும், ஒரே திரியேக தேவனைப் புறந்தள்ளும் எதையும் விட்டு விலகு)
I-3 அறிந்துகொள்ளல் 3: இயேசு கிறிஸ்துவுக்குள் மன்னிப்பையும் ஜீவனையும் கண்டடை (அவரது ஊழியத்தையும், மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நம்பு).
I-4 அறிந்துகொள்ளல் 4: தீமை, மரணம் ஆகியவற்றின் வல்லமையில் இருந்து விடுதலை பெறு (இயேசு மரணத்தையும் பிசாசுகளையும் ஜெயிக்கிறார்)
I-5 அறிந்து கொள்ளல் 5: வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களை உணர்ந்தறி (பாவத்திலிருந்து விலகி நித்தியமானவைகளை நாடு)
I-6 அறிந்துகொள்ளல் 6: மெய்யான நன்மையைக் கண்டறி (நான் நல்லவன் என்று கூறும் மனிதனும் தேவ மன்னிப்பைப் பெற வேண்டும்)
I-7 அறிந்து கொள்ளல் 7: இயேசுவுக்குள் பரிபூரிண ஜீவனை கண்டடை (ஞானஸ்நானத்தில் தொடங்கி, கீழ்ப்படிதல் மூலம் விசுவாசத்தைக் காட்டு)
I-8 அறிந்து கொள்ளல் 8: இயேசுவின் சீஷனோடு (உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சந்தித்து, அறிந்து, பின்தொடர்)

வீடு கட்டிய இருவரைப் பற்றி இயேசு ஒரு கதை கூறினார். ஒருவன் ஞானமுள்ளவன். அவன் பாறை மேல் கட்டினான். இரண்டாமவன் முட்டாள். அவன் மணல் மேல் கட்டினான். நான் உங்களை ஒரு மனிதனிடம் அறிமுகப்படுத்துகிறேன். அவர் இயேசுவின் கதையில் வரும் ஞானமுள்ள மனிதனைப் போன்றவர்.

அவர் தேவ வார்த்தைகளைக் கேட்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் விரும்புகிறார். அவரை நாம் ஞானம் ஐயா என்று அழைக்கிறோம். அவர் கல்விநேசனின் சமுதாயம் வாழும் இடத்துக்கு பஸ்ஸில் வந்து சேருகிறார். அங்கு தன் உறவினர் வீட்டில் தங்கி சுவிசேஷம் கூறும் பணியில் ஈடுபடுகிறார்.

ஞானம் ஐயா கல்வி நேசனின் புதிய தச்சுக்கூடத்திற்கு வருகிறார். “நீங்கள் நன்றாக செய்திருக்கிறீர்கள். இது ஒரு நல்ல கடை. நான் உங்களைக் குறித்துப் பெருமைப்படுகிறேன்.”

“போன வருஷம் நான் உங்களோடு வேலைபார்த்த போது எனக்கு நன்றாக கற்றுக் கொடுத்தீர்கள்.” கல்விநேசன் கூறுகிறார். “இப்போது என் கைவசம் நல்ல தொழில் இருக்கிறது. இதற்காக நான் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் கற்றுக் கொள்வதில் எனக்கு அதிக சாமர்த்தியம் கிடையாது என்பதே என் பயம்.”

“இன்னொரு தச்சுத்தொழிலாளியான இயேசு என்பவரின் அற்புதமான செய்தியை நான் சொன்னபோது நீங்கள் கேட்க மறுத்துவிட்டீர்கள்.”

கல்விநேசன் முகம் சுழிக்கிறார். “மதசம்பந்தமான பேச்சு எப்போதும் எனக்கு கடினமானதாகவே இருக்கிறது. நீங்கள் பெரிய வார்த்தைகளை உபயோகித்தீர்கள் ஞானம் ஐயா.”

“இந்த மேசையை மணல்தாளால் நான் தேய்த்து உங்களுக்கு உதவுகிறேன்.” ஞானம் ஐயா கூறுகிறார். “சரியாகச் சொன்னீர்கள். நான் உங்களோடு வாதாடி என் கொள்கைகளை உங்கள் மனதில் திணிக்க முயன்றேன். ஆனால் இப்போது நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள ஒரு சிறந்த முறையைக் கற்றுக் கொண்டேன். இயேசு கூறியது போல, ஒரு கதை மூலம் தேவனைப் பற்றிய சத்தியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். புரிந்து கொண்டு ஞாபகம் வைக்கக் கதைகள் எளியவைகளாக இருக்கும். நீங்கள் இதை உங்கள் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் கூறலாம். மனிதன் தன் நண்பர்களையும் குழந்தைகளையும் மகிழ்விக்க கட்டும் கதைகளைப் போன்றவைகள் அல்ல வேதாகமக் கதைகள். அவை சரித்திரத்தில் நிகழ்ந்த உண்மையான சம்பவங்கள்.”

கல்வி நேசனின் இன்னொரு நண்பர் வருகிறார். உங்களுக்கு எது தேவையோ அதைத் தவிர மீதி எல்லாவற்றையும் செய்யும் ஒரு தொழிலகத்தின் விற்பனையாளரான அவர் பெயர் ஞானசூனியர். அவர் இயேசுவின் கதையில் வரும் வீடுகட்டிய முட்டாளைப் போன்றவர். அவர் எல்லாவற்றையும் தமது சொந்தப் பாணியிலேயே செய்வார். ஞானசூனியர் குறுக்கிட்டு கூறுகிறார்,” கல்விநேசரே! இந்த மனிதர் ஏதோ ஒரு புதிய மதமும் தேவை

இல்லை. நாம் எப்போதும் வாழ்ந்து வரும் முறையை மாற்றத் தேவை இல்லை. இப்போது நான் சொல்லுவதைக் கேளும். நீங்கள் வாங்க வேண்டிய ஒரு சோப் கொண்டு வந்திருக்கிறேன். இலவங்கம் மாதிரி மணக்கும். இதோ முகர்ந்து பாருங்கள்.''

கல்வி நேசர், ஞானசூனியரைப் பொருட்படுத்தவில்லை. தமது வாழ்க்கையில் ஏதோ ஒரு குறை இருப்பதை அவர் தனது இருதயத்தில் உணர்கிறார். அவர் கடவுளைப்பற்றி மேலும் அறிய விரும்புகிறார். ஞானம் ஐயா கூறுவதை கவனமாகக் கேட்கிறார்.

## I – 1 – அறிந்து கொள்ளல் 1

# வாழ்க்கையின் மெய்யான அர்த்தத்தை அறிந்துகொள்

(தேவன் நம்மில் அன்பு கூருகிறார். அவரில் நாம் எப்போதும் **களிகூரவே** விரும்புகிறார்).

மன்னிப்பைக் கண்டடைந்த கெட்ட குமாரன் கதையை ஞானம் **ஐயா கல்விநேசனு**க்குக் கூறுகிறார்.

**லூக்கா 15:11-32**

### பயிற்சிகள்

இக்கதையை **லூக்கா 15:11-32** ல் வாசிக்கவும். அல்லது உங்களுக்காக வேறு யாரையாவது வாசிக்கச் சொல்லவும். உங்கள் மொழியில் வேதாகமம் இல்லை என்றால் வேறொரு மொழியில் இருந்து யாரையாவது சொல்லச் சொல்லுங்கள். இந்தப் புத்தகத்தில் நாங்கள் வாசிக்கக் கூறும் எல்லா வேத பாடங்களையும் நீங்களாகவே வாசிக்கவோ அல்லது வேறு ஒருவர் உங்களுக்குக் கூறவோ வேண்டும் என்பது அத்தியாவசியமானதாகும். இல்லாவிட்டால் இந்தப் பாடங்கள் வீணாகப் போய்விடும்.

**லூக்கா 15:11-32** ல் உள்ள இந்தக் கதையை வாசிக்கும் போது அல்லது கேட்கும் போது, கல்விநேசன் என்ன அறிந்து கொண்டார் என்பதைக் காணுங்கள்:

- தனது வாழ்க்கையின் மூலம் மகன் தன் தந்தைக்கு எவ்விதம் வேதனையைத் தந்தான்?
- தனது முட்டாள்தனம் மோசமானது என்று உணர்ந்ததைப் பின்னர் அந்த மகன் எவ்விதம் வெளிப்படுத்துகிறான்?
- மனம் திரும்பி வீட்டிற்கு வரும் மகனைத் தந்தை எவ்வாறு வரவேற்கிறார்?

''கல்வி நேசரே!'' ஞானம் ஐயா விளக்குகிறார், ''நாம் யாவரும் அந்தக்கெட்ட குமாரனைப் போலவே இருக்கிறோம். நாம் நமது பரலோகப் பிதாவை மறந்து போய்விட்டோம். நமது வாழ்க்கையை முட்டாள் தனமாக நடத்துகிறோம். தேவன் விரிந்த கரங்களோடு நமக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார். நம்மை மன்னித்து, வரவேற்று மகிழ்ச்சியோடு விருந்தளிக்க ஆயத்தமாய் இருக்கிறார். தமது இழந்து போன பிள்ளைகள் தங்களது உண்மையான நித்திய வீட்டுக்கு திரும்பி வருவதை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறார்.''



மணல் காகிதத்தால் மேசையைத் தேய்த்துக் கொண்டிருந்த கல்விநேசன் செய்வதை நிறுத்திவிட்டு ஞானம் ஐயா கூறுவதை கவனித்துக் கேட்கிறார். ஆனால் ஞானசூனியரோ தமது சோப்புப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியேறத் தொடங்கிறார். ''தேவன் விருந்துகள் அளிக்கிறார் என்று நீங்கள் உண்மையிலேயே நம்புகிறீர்களா? அவருக்கு நேரத்தைப் போக்க மேலான வழிகள் உண்டு என நான் நினைக்கிறேன்''. அவருடைய பேச்சில் இகழ்ச்சி தொனிக்கிறது.

ஞானம் ஐயா அவருக்கு உறுதி அளிக்கிறார், ''மெய்தான். இயேசு விருந்துகளைப் பற்றிக் கூறியதோடு அல்லாமல் அவைகளில் மகிழ்ச்சியோடு பங்கேற்றார். நாம் இயேசுவின் நாமத்தினால் கேட்போமானால், தேவன் மகிழ்ச்சியோடு நம்மை மன்னித்து, பரிசுத்த ஆவியானவரை அனுப்பி நமது பழைய வாழ்க்கையில் இருந்து திரும்ப நமக்கு உதவி செய்து, எல்லா விருந்துகளிலும் பெரிதான விருந்தில் கலந்துகொள்ளச் செய்வார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் காரணமாக, காணாமற்போன குழந்தைகள் திரும்பி வருவதுபோல வரும் நம்மை மன்னித்து மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார். அவரோடு நாம் பரலோகத்தில் இருப்பது ஒரு பெரிய கலியாண விருந்தில் இருப்பது போல் இருக்கும் என்று அவர் கூறினார்.''

**சிருஷ்டிப்பும் ஆதாமின் வீழ்ச்சியும்** பற்றி ஞானம் ஐயா கல்வி நேசனுக்குச் சொல்லுகிறார்.

### பயிற்சிகள்

**ஆதியாகமம் அத்தியாயங்கள் 1 லிருந்து 3 வரை** படித்து ஞானம் ஐயா கல்விநேசனிடம் கேட்கும் பின்வரும் கேள்விகளுக்கு விடைகாணுங்கள்:

- ஆதாமும் ஏவாளும் ஏன் திடீரென தேவனைக் கண்டு பயப்படுகிறார்கள்?
- ஆதாமையும் ஏவாளையும் பார்த்தபோது தேவன் தோட்டத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்?

- மனித குலத்தின் விரோதிக்கு என்ன செய்யப்போவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்தார்?
- கீழ்ப்படியாததனால் அந்தத் தம்பதியரை தேவன் எங்கு அனுப்பினார்?



புதிய மேசையை உருவாக்கக் கல்விநேசனுக்கு உதவிக்கொண்டே ஞானம் ஐயா விளக்குகிறார், ''தேவன் ஆதியில் ஆதாம் ஏவாளோ உலாவினார்: அவர்களோடு பேசினார். நண்பர்களைப் போல தன்னோ நடக்கவும் பேசவுமே இவர் மக்களை சிருஷ்டித்தார். துன்பமடையவோ இழந்து போகவோ, குழப்பமடைந்து திரியவோ அவர் அவர்களை படைக்கவில்லை. மக்கள் தேவ சிருஷ்டிப்பை அனுபவித்து மகிழ்ந் அவரோடு வாழும்படியாகவே உருவாக்கப்பட்டனர். மக்க தம்மேல்சுயமாகவே அன்புகூர வேண்டும் என்று தேவன் விரும்பினார் ஏனெனில் அன்பு கட்டாயத்தால் வருவதில்லை. ஆதாமும் ஏவாளும் தங்க பாதையைத் தாங்களாகவே தேர்ந்து கொள்ள தேவன் அனுமதித்தார் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவர்கள் தங்கள் வழியே போகத் தெரிந் கொண்ட பாதை, தேவனின் எதிரியான சாத்தானின் வழியாக இருந்தது தேவன் தமது பரதீசை விட்டு அவர்களை வெளியே அனுப்பிவிட்டார்.''

''ஓ! எவ்வளவு வேதனைக்கு உரியது!''

''தற்போதும் மனிதன் தேவனைவிட்டு மிகவும் நீங்கியே வாழ்கிறான் என்பதையே மனித வரலாறும் காட்டுகிறது. நாம் தேவனோடு நமக்கு இருந்த நட்பை இழந்துவிட்டோம். இந்த உலகம் மரணத்தினாலும் வன்முறையினாலும் நிறைந்து காணப்படுகிறது. தேவனில்லாமல் நாம் மிகுந்த ஆவிக்குரிய அபாயத்தில் வாழ்கிறோம். தேவன் நமது எதிரியை மேற்கொண்டு, நம்மை மரணத்தின் தீமையில் இருந்து விடுவிக்கும் ஒரு மகா வீரனை அனுப்புவதாக வாக்களித்தார். இயேசு தமது மரணத்தின் மூலம் நமது மீறுதலுக்கு உரிய விலைக் கிரயத்தை அளித்து, தமது உயிர்த்தெழுதலின் மூலம் தேவனிடத்தில் நாம் திரும்பும் வகை அமைத்துக் கொடுத்தார். இயேசுவின் மூலமாக நாம் நமது உண்மையான வீட்டுக்குப் போய் தேவனோடு வாழ முடியும்.''

இந்தக்கதையை விவாதித்து முடிந்தபின் ஞானம் ஐயா கல்வி நேசனைக் கேட்கிறார், ''நமது வாழ்க்கையின் அர்த்தத்தை உங்களால் உணர்ந்து கொள்ள முடிகிறதா? நாம் தேவனோடு சிநேகிதமாக வாழவே அவர் விரும்புகிறார். நீங்கள் மேலும் தேவனைப் பற்றிய கதைகளை அறிந்து உங்கள் குடும்பத்துக்குக் கூறப் போகிறீர்களா?'' கல்வி நேசன் ஒத்துக்கொள்கிறார். ''நாம் இருவரும் மனப்பாடம் செய்ய வேண்டிய ஒரு வசனம் யோவான் 1:9 ல் உள்ளது. நாம் அடுத்த வாரம் சந்திப்போம்.''

## பயிற்சி

**யோவான் 1:9** - ஐ மனப்பாடம் செய்க.
எது ஆதாமில் இருந்து அவனது பாவ சந்ததிக்கு தொடர்ந்து வந்தது என்று **ரோமர் 5:12**-ல் காண்க.
முதல் ஆதாம் ''கடைசி ஆதாமில்'' இருந்து எவ்வாறு வேறுபடுகிறான் என்பதை **ரோமர் 5:13-21** -ல் காண்க.

## I -2 - அறிந்துகொள்ளல் 2

# ஒரே தேவனை நோக்கித் திரும்பு

(விக்கிரகங்களையும், ஒரே திரியேக தேவனை புறந்தள்ளும் எதையும் விட்டு விலகு)

அடுத்த வாரம் ஞாம் ஐயா கல்விநேசனின் தச்சுக்கூடத்திற்கு வருகிறார். ஒரு ஜோடி நாற்காலிகளைச் செய்ய உதவுகிறார். கைநிறைய சிறு சிலைகளைக் கொண்டு வந்த ஞானசூனியர், உங்கள் வீட்டில் இருந்து தீயசக்திகளை விலக்கும் வல்லமை இவைகளுக்கு உண்டு. ஒன்று வாங்குங்கள் என்று கல்விநேசனிடம் கூறுகிறார்.

''அவைகள் விக்கிரகங்களைப் போல எனக்குத் தெரிகிறது'' என்று ஞானம் ஐயா சொல்லுகிறார்.



ஞானசூனியர், ''இல்லை! இல்லை! இவை சும்மா உங்கள் வீட்டை அழகுபடுத்தி தீயசக்திகளை விரட்டவே'' என்று பதில் அளிக்கிறார்.

''விக்கிரகங்கள் வீட்டுக்கு துன்பத்தையே கொண்டு வரும்'', ஞானம் ஐயா கூறுகிறார், ''வாழ்வதற்காக நீங்கள் நிச்சயமாக வேறு எதையாவது விற்றுப் பிழைக்கலாம்.''

''நான் இதைத்தான் விற்க வேண்டும். மற்ற எதையும்விட இதில் அதிகப் பணம் கிடைக்கிறது.''

கல்விநேசன் கேட்கிறார், ''ஏன் இவைகள் மோசமானவை ஐயா?''.

இந்தக் கதையை **1 இராஜா. 15:16-39** -ல் காண்க.

- இஸ்ரவேல் தேசத்துக்கு ஏன் துன்பம் வந்தது?
- விக்கிரக ஆராதனைக்காரர்களான பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் ஒரே மெய் தேவனுக்கும் நடுவில் எலியா தீர்க்கதரிசி ஏற்படுத்திய போட்டி என்ன?
- பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குக் கிடைத்த பதில் என்ன? எலியா பெற்றப் பதில் என்ன?
- ஒரே மெய் தேவன் யார்?

ஞானம் ஐயா கதையை விளக்குகிறார். ''பழங்கால இஸ்ரவேல் நாட்டில் பலர் தங்களுக்குச் சொந்தமான தென்படும் தெய்வங்களின் உருவங்களை உண்டாக்கினர். அவர்கள் ஒரே மெய் தேவனை விட்டு விலகியதால் அவர்களுடைய தேசத்துக்குத் துன்பங்கள் வந்தன. நாமும் நமக்கென தெய்வங்களை உருவாக்குவதால் நமக்கும் துன்பங்கள் உண்டாகின்றன. ஏனெனில் நாம் ஒரே மெய் தேவனை விட்டு விலகுகிறோம். மெய்தேவன் ஒருவரே உலகத்தையும், வானங்களையும், இந்த உலகின் அனைத்துத் தேசங்களையும் ஆளுகிறார். எந்த நாட்டின் எல்லையும் அவரைக் கட்டுப்படுத்தவும் சொந்தம் கொண்டாடவும் முடியாது. தம்மிடம் திரும்பி வருமாறு அவர் எப்போதும் நம்மை அழைத்துக்கொண்டே இருக்கிறார்.''

''கொஞ்சம் பொறுங்கள்!'', ஞானசூனியர் மறுக்கிறார், ''அது உங்களுக்கு சரியான வழியாக இருக்கலாமே தவிர, எனக்கல்ல. இந்த விக்கிரங்களுக்கு நிகரான ஆவிகளையே என் முன்னோர்கள் வணங்கி வந்திருக்கின்றனர். நான் அவர்களது வழியையே பின்பற்றுவேன்.''

ஞானம் ஐயா கூறுகிறார், ''**கிணற்றருகே இருந்தப் பெண்** பற்றிய கதையைக் கூறுகிறேன். அவளும் தன் முன்னோர்களின் வழியைப் பின்பற்றியவளே. ஆனாலும் ஒரு நன்மையான வழியைக் கண்டடைந்தாள்.''

### பயிற்சி

ஞானம் ஐயா விளக்கியதை **யோவான் 4:4-42** ல் உள்ள இந்தக் கதையில் காண்க:
கிணற்றருகே இருந்த சமாரியப் பெண்ணுக்கு இயேசு கொடுப்பதாகச் சொன்னது என்ன?

- இயேசு தேவனின் தீர்க்கதரிசியே என்று அப்பெண்ணை நம்ப வைத்தது எது?
- தான் யாரென்று இயேசு கூறினார்?
- இயேசுவைப் பற்றி தனது ஜனங்களிடம் அப்பெண் கூறியபோது என்ன நடந்தது?

நாற்காலி செய்யும் பணியில் ஈடுபட்டவாறே இக்கதையை ஞானம் ஐயா கல்வி நேசனுக்கும், ஞானசூனியருக்கும் விவரித்துக் கூறுகிறார்.

"அந்நிய தேசம் ஒன்றில் ஒருமுறை இயேசு கிணற்றருகே இருந்த ஒரு பெண்ணிடம் பேசுகிறார். ஒருக்காலும் தாகம் எடுக்காத தண்ணீரைத் தருவதாக அவர் அவளிடம் கூறுகிறார். நாம் ஒரு போதும் காணாத புதிய வாழ்க்கையைக் கொண்டுவரும் தண்ணீரை அவர் குறிப்பிடுகிறார் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாமும் தேடுகிறோம். ஆனால் கண்டடைய முடியவில்லை.

கிணற்றைத் தோண்டி, தேவனைத் தொழுது கொள்ள கற்றுக்கொடுத்தத் தன் முன்னோர்களை விடவும் அவர் பெரியவரோ என்று அந்தப் பெண் இயேசுவைக் கேட்டாள். தேவனை எவ்வாறு உண்மையாக ஆராதிப்பது என்று எல்லோருக்கும் எடுத்துக்காட்ட தேவனால் அனுப்பப்பட்டவரே தாம் என்று இயேசு அவளிடம் கூறினார். இவ்வகை ஆராதனையே மற்ற எவைகளையும் விட நம்மைத் திருப்திப்படுத்தும். சாத்தியம் என்று இதுவரை நமக்குத் தெரியாத புதிய ஜீவனை அது கொடுக்கிறது."

கல்விநேசன், "நான் இயேசுவைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறேன்." என்று கூறுகிறார். "தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்குரிய சில எளிய முறைகளை நான் உங்களுக்கு சொல்லி உதவுவேன். என்னோடு கூட ஒரே மெய் தேவனிடம் பேசி, அவரிடம் இருந்து விலகிப் போனதற்கு அவரிடம் மன்னிப்பைக் கோருங்கள்".

"ஜெபமா? நான் அதற்கு இன்னும் ஆயத்தமாக இல்லை".

உங்கள் குடும்பத்தினருக்குக் கூற மேலும் கதைகளைக் கேட்க விரும்புகிறீர்களா? ஒரே மெய் தேவனை ஆராதிக்கும்படி நமக்கு ஞாபகப்படுத்தும் ஒரு வேதாகமக் கற்பனையை நாம் இருவருமே மனப்பாடம் செய்வோம். அது மாற்கு 12:29-30.

### பயிற்சி

இப்போதே **மாற்கு 12:29-30** ஐ வாசித்து மனப்பாடம் செய்க

அவர்கள் மூவரும் கல்விநேசனின் தச்சுக்கூடத்தில் வைத்து தேவனைப் பற்றித் தொடர்ந்து பேசுகையில் ஞானசூனியர் இவ்வாறு கேட்கிறார். "ஒரே மெய் தேவன் என்று நீங்கள் எதற்காகக் கூறுகிறீர்கள்? முஸ்லீம்களும், புத்தமதத்தினரும்,இந்துக்களும் பிற தெய்வங்களை வணங்குகிறார்கள், இல்லையா? பல கடவுள்கள் இல்லையா?"

"ஒரே ஒரு மெய் தேவனே உண்டு. சில ஜனங்கள் தெய்வங்கள் என்று அழைக்கும் ஆவிகள் தேவனால் படைக்கப்பட்டவையே. சில இடங்களில் வேதவசனங்கள் அவற்றைத் "தூதர்கள்" எனக் கூறும். அசுத்த ஆவிகளும் ஒருகாலத்தில் தூதர்களே. அவர்கள் சாத்தான் என்ற அலகையைப் பின்பற்றி பரிசுத்தமும் மேன்மையுமான தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தனர். அவர் தமது பரிசுத்த ஸ்தலமாகியப் பரலோகத்தில் இருந்து அவர்களைத் துரத்திவிட்டார். அவர்கள் தேவனை நேசிக்கவில்லை. தேவனிடத்தில் அன்பு கூருவதே எல்லாவற்றையும் விட பிரதானமானது. நமக்குப் பிறதெய்வங்கள் இருந்தால் அவரில் அன்புகூர முடியாது. பிதாவாகிய தேவனோடு ஒன்றாயிருக்கும் இயேசுவைப் போல, இயேசுவோடு இணைந்திருப்பதையே நமது இரட்சிப்பு சார்ந்திருக்கிறது."

"பிதாவாகிய தேவனோடு இயேசு எப்படி ஒன்றாய் இருக்க முடியும்? எனக்குப் புரியவில்லை" ஞானசூனியர் கூறுகிறார்.

‘‘நாம் அவரைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற தேவை எல்லாம் வல்ல தேவனுக்கு இல்லை. அவர் வேதாகமத்தில் மூன்று ஆட்களாக வெளிப்பட்டிருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொண்டால் போதும். ஒரே தேவனில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூவருண்டு. ஒரே ஒரு மெய் தேவனே உண்டு.’’

‘‘ஆனால் நீங்கள் இம் மூன்று பேரையும் கூட்ட வேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று என்று கூட்டுங்கள். மூன்று தெய்வங்கள்’’.

‘‘இல்லை நாம் கூட்டுவது இல்லை. இந்த இரகசியத்தை கணிதப்படி விளக்க வேண்டுமானால் நீங்கள் அவற்றை பெருக்குவதே சரியாக இருக்கும். ஒன்றை ஒன்றால் பெருக்கினால் ஒன்று. மீண்டும் ஒன்றால் பெருக்கினால் கிடைப்பது ஒன்றே. இது ஏனெனில் குமாரன் நித்தியமாக பிதாவில் இருந்தே புறப்பட்டு வருகிறவராய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரை பற்றி இயேசு யோவன் 15:26 ல் விளக்குகிறார், பிதாவின் இடத்தில் இருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவின் இடத்தில் இருந்து புறப்பட்டு வருகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும் போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்.’’

ஞானசூனியர் தன்னுடைய சிலைகளை எடுத்துக்கொண்டு வெளியேறுகிறார்.

## பயிற்சி

யோவான் 15:26 ஐ இப்போதே மனப்பாடம் செய்க.

## I-3 - அறிந்து கொள்ளல் 3

# இயேசு கிறிஸ்துவுக்குள் மன்னிப்பையும் ஜீவனையும் கண்டடை

(அவரது ஊழியத்தையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நம்பு - நமது மனித முயற்சிகளை அல்ல)

அடுத்த வாரமும் ஞானம் ஐயா கல்வி நேசனின் கடைக்கு வந்து ஒரு புதிய டெஸ்க்கைப் பாலீஷ் இடுவதில் உதவுகிறார். கல்விநேசன் கூறுகிறார், ‘‘இந்தக் கதைகளை நான் என் குடும்பத்தாரிடம் கூறினேன். அவர்களுக்குப் பிடித்திருந்தது. ஆனால் என் தந்தையார் இயேசுவைப் போலவே நமக்கும் நல்ல போதகர்கள் உண்டு என்று கூறுகிறார். இதற்கு ஞானம் ஐயா இவ்வாறு பதிலளித்தார், ‘‘நமக்கு வேறு நல்ல போதகர்கள் உண்டுதான். ஆனால் அவர்கள் இயேசுவைப் போன்றவர்கள் அல்ல. நான் உங்களுக்கு மத்தேயு 26:31-56 லிருந்து **இயேசுவின் கைதும் விசாரணையும்** பற்றி கூறுகிறேன்.’’



ஞானம் ஐயா விளக்குவதை **மத்தேயு 26:31-56** ல் காண்க:

- நெருங்கி வரும் தமது மரணத்தைக் குறித்து ஜெபித்தபோது ஒப்புக்கொடுத்து மன்றாடிய வார்த்தைகள் எவை?
- யூதாஸ் இயேசுவை எவ்வாறு காட்டிக் கொடுத்தான்?
- மற்ற சீஷர்கள் எப்போது அவரைக் கைவிட்டனர்?
- இயேசுவைக் குற்றவாளியாகத் தீர்க்க ஆசாரியர்கள் என்ன காரணத்தை உபயோகித்தனர்?



டெஸ்க்கை செய்வதில் குறியாய் இருந்து கொண்டே ஞானம் ஐயா விளக்குகிறார், ‘‘பாவமே நமக்கும் தேவனுக்கும் இடையில் பிளவை உண்டாக்கியது. இருந்த போதிலும் தேவன் இந்த உலகத்தை மிகவும் நேசித்த படியால், நம்மைத் தமதண்டை சேர்க்கத் தமது ஒரே குமாரனை அனுப்பினார். அவரே உலகத்தை உண்டாக்கினார். ஆனால் உலகம் அவரை அறிந்து கொள்ளவில்லை. யோவான் 3:16 ம் 1:10 ம் இதை விளக்குகின்றன. அவரது சொந்தச் சீடர்களே அவரைக் கைவிட்டு ஓடினர். அவர் ஒரு பாவமும் அறியாத பரிசுத்தராக இருந்த போதிலும், தேவாலய ஆசாரியர்கள் அவரை மரணத்துக்குப் பாத்திரமாக்கினர். இயேசுவின் சொந்த ஜனங்களைப் போலவே நாமும் அவரை ஒதுக்கினோம். காரணம் நாம் எல்லாருமே தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களே. இருந்தாலும் நம்மை மிகவும் நேசித்ததால் இயேசு நமக்காக மரண மடைவதைத் தெரிந்து கொண்டார். அவர் நமக்குப் போதகர் மட்டுமல்ல. அவர், பாவத்திற்கான தேவ தண்டனையில் இருந்து நம்மை இரட்சித்துக் கொண்டார்.’’

ஞானசூனியின் கடையின் கதவருகில் வந்து கத்துகிறார், "இன்று என்னிடம் என்ன இருக்கிறது என்று பாருங்கள். எலும்பு கைப்பிடி கொண்ட விதை உடைக்கும் கருவியை வாங்கிக்கொள்ளுங்கள்."

அவர்கள் அவரைப் பொருட்படுத்தவில்லை. ஞானம் ஐயா **இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்** பற்றிப் பேசுகிறார்.

## பயிற்சி

ஞானம் ஐயா கூறியதை **லூக்கா 23, 24 ம் அதிகாரங்களில்** காண்க:

- இயேசுவின் மரணம் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் காட்ட இயேசு இறந்த கணத்தில் நிகழ்ந்தது என்ன?
- இயேசு மரித்த மூன்றாம் நாள் அவரைத் தேடிவந்தப் பெண்ணிடம் தேவதூதர் கூறியது என்ன?
- எம்மா ஊர் நோக்கி நடந்து கொண்டிருந்த மனிதர்கள் இறுதியில் எப்போது இயேசுவை அறிந்து கொண்டார்கள்?
- சீஷர்களுக்கு இயேசு கொடுத்த கடைசி அறிவுரைகள் என்ன?

ஞானம் ஐயா கல்விநேசனிடமும், ஞான சூனியரிடமும் கூறுகிறார், "இயேசு மரித்த அன்று ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி நேரம் வரை சூரியன் இருட்டாய்ப் போனது. தேவாலயத் திரைச்சேலைக் கிழிந்தது. இயேசு அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் வரை மரித்தவராகவே இருந்தார். மிகு பரிசுத்தரான தேவன், உண்மையிலேயே நல்லவரும் குற்றமற்றவருமான இந்த மனிதரை மரித்தோரிடத்தில் விட்டுவிடவில்லை."



"இயேசு பலமற்றவரா?" ஞானசூனியர் ஆச்சரியப்படுகிறார். "அவரைக் கொல்ல வந்த மக்களை அவரால் தடுக்க முடியவில்லை."

"அவரால் தடுத்திருக்க முடியும். ஆனால் இயேசு தம்மைத் தாமே மரணத்துக்குத் தாமாகவே ஒப்புக்கொடுத்தார். சிலுவையில் நாம் இருக்க வேண்டிய இடத்தை அவர் எடுத்துக் கொண்டார். மூன்றாம் நாள் அவரை தேவன் மரித்தோரிடத்தில் இருந்து எழுப்பினார். அவர் தமது சீஷர்களிடம் திரும்பி வந்தார். அவர்கள் அவரைத் தொட்டனர். அவரோடு உணவருந்தினர். அவர்கள் அவரை "கர்த்தர்" "தேவன்" என்று அழைத்துத் தொழுது கொண்டனர் (யோவான் 20:28). அவரது உயிர்த்தெழுதல் மரணத்தின் ஆற்றலைத் தகர்த்தெறிந்தது. வேறு எந்த மனிதனும் மரணத்தை இவ்வாறு வென்றதில்லை."



ஞானம் ஐயா கல்விநேசனைப் பார்த்துக் கேட்கிறார், "நீங்கள் தேவனுக்கு அப்படியே கீழ்ப்படிவீர்களா? இதுவரை வாழ்ந்த எவரை விடவும் இயேசு பெரியவர் என்பதைக் காண்கிறீர்களா? மரணத்திலிருந்து உங்களை இரட்சித்து புதிய ஜீவனை அளிக்கும்படி வல்லமையுள்ள இயேசுவின் நாமத்தினால் தேவனைக் கேட்பீர்களா? இயேசுவைப் பற்றிய இந்த வசனத்தை குடும்பத்துடன் மனப்பாடம் செய்யுங்கள்: யோவான் 3:16."

கல்விநேசன் உடனடியாக அதை மனப்பாடம் செய்கிறார். ஞானம் ஐயா புறப்பட எழுந்த போது கல்விநேசன் குறிப்பிடுகிறார், "இப்போது இக்கதைகளை நான் என் குடும்பத்துக்கும் கூற முடியும். இயேசுவைக் குறித்துப் பேச நாம் மறுபடியும் சீக்கிரமாக சந்திக்க முடியுமா?"

## பயிற்சி

**யோவான் 3:16** ஐ மனப்பாடம் செய்வதோடு உங்கள் குடும்பத்தாரும்நண்பர்களும் மனனம் செய்ய உதவுங்கள்.

## I – 4 – அறிந்து கொள்ளல் – 4
# தீமை, மரணம் ஆகியவற்றின் வல்லமையில் இருந்து விடுதலை பெறு

(இயேசு மரணத்தையும், பிசாசுகளையும் ஜெயிக்கிறார்)

ஒருவாரம் கழித்து ஞானம் ஐயா மீண்டும் கல்விநேசனின் தச்சுக்கூடத்தில் அவருக்கு உதவிக்கொண்டு இருக்கிறார். அப்போது மூச்சிறைக்க ஞானசூனியர் அங்கே வருகிறார். ‘‘கல்விநேசரே! ஒரு துயரமான செய்தி. நதிக்கு அந்தப் புறத்தில் வாழும் உங்கள் சகோதரன் ஒரு பஸ் விபத்தில் காலமாகிவிட்டார்.’’

கையில் இருந்த பாலீஷ் நழுவி கீழே விழ, கல்விநேசன் அப்படியே மௌனமாக உட்கார்ந்து விடுகிறார். ஞானம் ஐயா அவர் அருகில் சென்று அமர்ந்து ஜெபிக்கிறார். நீண்ட நேர அமைதிக்குப் பின் கல்விநேசன் கேவிக்கேவி அழுகிறார். ‘‘ஓ! தேவன் ஏன் இந்தத் தீமையை அனுமதிக்கிறார்? அவனுடைய குடும்பத்துக்கு நான் எப்படி ஆறுதல் சொல்லுவேன்?’’ ஞானம் ஐயா தமது நண்பருக்கு **மரணத்தின் மேல் இயேசுவுக்குள்ள அதிகாரம்** குறித்து கூறுகிறார்.



### பயிற்சி

ஞானம் ஐயா விளக்குவதை **யோவான் 11:17-44** ல் காண்க.

- தமது நண்பனான லாசருவின் மரணத்தைக் குறித்து இயேசு எவ்வாறு உணர்ந்தார்?
- தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு என்ன நிகழும் என்று மார்த்தாளிடம் இயேசு கூறினார்?
- இயேசு அழைத்தபோது இறந்துபோன லாசருவுக்கு என்ன நிகழ்ந்தது?

கல்விநேசன் கடையில் மூவரும் அமர்ந்திருக்க ஞானம் ஐயா விளக்குகிறார், ‘‘இயேசுவுக்கும் ஒரு நல்ல நண்பர் இருந்தார். அவது இறந்து போய்விட்டார். ஜனங்கள் துன்பமுறுவதைக் காண தேவன் விரும்புவதில்லை. விஷயங்களை சரிசெய்ய இயேசு வந்தார். லாசரு உயிரோடு வருவான் என்று இயேசு மார்த்தாளிடம் கூறினார். ஏனெனில் லாசரு இயேசுவை விசுவாசித்தான். அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர். அவர் தேவனை நோக்கி ஜெபித்து கல்லறையில் இருந்த லாசருவை அழைத்தார். லாசரு உயிரோடு கல்லறையை விட்டு வெளியே வந்தான்.’’

ஞானசூனியர் கேட்கிறார், ''ஆனால் இப்போது உயிர் கொடுக்க இயேசுவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?''

''தமக்கு மரணத்தின் மேல் அதிகாரம் உள்ளது என்பதை இயேசு எல்லோருக்கும் காட்டினார். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த போது அவர் தம்மை விசுவாசிக்கும் யாவருக்கும் ஒரு புதிய ஜீவனை அளித்தார். தேவனுடைய ஆவி நமக்குள் இருப்பதால் இந்த ஜீவனுக்கு ஒரு போதும் முடிவில்லை.''

ஞானம் ஐயா, இயேசுவை சந்தித்த **அசுத்த ஆவிகளால் அலைக்கழிக்கப்பட்ட மனிதனைப்** பற்றி கூறுகிறார்.

## பயிற்சி

ஞானம் ஐயா கல்விநேசனைக் கேட்கும் கேள்விகளுக்கு **மாற்கு 5:1-20** ல் பதில் காண்க:

- அசுத்த ஆவிகள் அந்த மனிதனை தனக்குத்தானே என்ன செய்ய வைத்தன?
- அசுத்த ஆவிகள் இயேசுவிடம் என்ன கூறின?
- இயேசு அந்த மனிதனுக்கு என்ன செய்தார்?
- குணமான பின்னர் என்ன செய்யும்படி இயேசு அந்த மனிதனுக்குக் கூறினார்?

ஞானம் ஐயா விளக்குகிறார், ''இயேசு தேவ குமாரன். தேவ ரூபமே அவரிடம் இருந்தது. பிலி. 2:6 இதை விவரிக்கிறது. அசுத்த ஆவிகள் அம் மனிதனைத் தனக்குத்தானே காயப்படுத்திக் கொள்ளவும் கூக்குரலிடவும் வைத்தன. அவன் மிகவும் பலசாலியாக இருந்தான். அவனை அடக்க யாராலும் கூடாமற் போயிற்று. இயேசு வந்தபோது அசுத்த ஆவிகள் அவரை தேவனுடைய குமாரன் என்று அறிந்து கொண்டன. அவன் இயேசுவுக்கு முன்பாக முழங்காலிட்டுப் பணிந்தான். அசுத்த ஆவிகள் தங்களைப் பன்றிக் கூட்டத்துக்குள் அனுப்புமாறு இயேசுவைக் கெஞ்சின. இயேசு ஆவிகளை அந்த மனிதனை விட்டுத் துரத்தினார். இயேசு அவனை முற்றிலுமாகக் குணமாக்கினார். பின் அந்த மனிதனை தேவன் தனக்கு செய்ததை குடும்பத்துக்கு சொல்லுமாறு அனுப்பினார்.''

ஞானசூனியர் ஒரு வார்த்தையும் பேசாமல் அகன்று போகிறார். ஞானம் ஐயா தொடர்கிறார். ''இயேசு பரலோகம் சென்றபின் தன்னை நம்புகிற மக்களுக்குள் வாசமாயிருக்கும்படி தன் ஆவியை அனுப்பினார். தேவ ஆவி வல்லமையுள்ளது. அது தீமையிலிருந்து நம்மைக் காக்கிறது. அவர் நமக்கு புதிய ஜீவனை அளிக்கிறார். அது நித்தியமானது பரிசுத்தமானது. இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பிறருக்குக் கூற அவர் நமக்கு உதவி செய்கிறார்.''

ஞானம் ஐயா கல்விநேசனை கேட்கிறார், ''உங்கள் வாழ்க்கையை மாற்றும்படி இயேசுவின் நாமத்தினால் தேவனிடம் கேட்க இப்போது விரும்புகிறீர்களா? இந்தக் கதையை உங்கள் குடும்பத்துக்கு விளக்க உதவும் ஒரு வசனம் இதோ:யோவான் 11:25. இதுவே நீங்கள் உங்கள் குடும்பத்துக்கு கொடுக்கக்கூடிய நம்பிக்கை.'' கல்விநேசன் இன்னும் ஜெபிக்க விரும்பவில்லை. ஆனால் அவ்வசனத்தை அவர் மனப்பாடம் செய்கிறார்.



## பயிற்சி

யோவான் 11:25 ஐ மனனம் செய்க.

## I – 5 – அறிந்துகொள்ளல் 5

# வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களை உணர்ந்தறி

(பாவத்தில் இருந்து விலகி நித்தியமானவைகளை நாடு)

அடுத்த வாரமும் ஞானம் ஐயா வருகிறார். ஆனால் கல்விநேசனை வீட்டிலோ கடையிலோ காணவில்லை. கடைசியில் தெருவில் அவரை சந்திக்கிறார். "மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா. என் சகோதரனின் அடக்க காரியங்களில் அலைந்து திரிந்ததால் தேவனைப் பற்றி நினைக்க முடியவில்லை. இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில்..."

நீங்கள் உங்கள் பிரச்சினைகளில் மூழ்கி இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்த வாழ்க்கையின் பிரச்சினைகளை எது அதிமுக்கியமோ அதை மறக்கடிக்கும்படி விட்டுவிடக் கூடாது. நான் உங்களுக்கு **நோவாவும் வெள்ளப்பெருக்கும்** பற்றி கூறுகிறேன்.



### பயிற்சி

ஞானம் ஐயா விவரிப்பதை **ஆதி. 6:5-14** ல் காண்க.

- நோவாவின் காலத்தில் ஜனங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி தேவன் எவ்வாறு உணர்ந்தார்?
- நோவாவையும் அவன் குடும்பத்தையும் தேவன் ஏன் இரட்சித்தார்?
- தேவனுக்கும் கீழ்ப்படியும் பொருட்டு நோவா செய்தது என்ன?



அவர்கள் கல்வி நேசனின் கடைக்கு வந்து ஒரு கதவை செய்யத் தொடங்குகின்றனர். ஞானம் ஐயா ஜலப்பிரளயத்தை விவரிக்கிறார். "லூக்கா 17:27 ல், நோவாவின் காலத்தில் ஜனங்கள் எப்போதும் போல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்று இயேசு கூறுகிறார்.

அவர்கள் தேவனை மறந்து பொல்லாதவர்களாயும், வன்முறையாளர்களாகவும் மாறினர். அவர்கள் மனம் திரும்பட்டும் என்று தேவன் பொறுமையாகக் காத்திருந்தார். ஆனால் அவர்கள் தேவனை மறந்தனர். தேவன் பரிசுத்தர். அவர் பாவத்தை சகிப்பதில்லை. நோவாவின் காலத்தில் அவர் தாம் கண்ட பாவத்தையும் பொல்லாப்பையும் கண்டு அவன் மனம் வருந்தி கோபம் அடைந்தார். அவர் உலகத்தின் ஜனங்களை அழிக்க எண்ணினார்."

"எல்லாரையுமா?"

“ஆமாம். ஆனால் நோவா என்ற ஒரே மனிதன் மட்டுமே தேவனுக்கு செவி கொடுத்தான். தேவனைப் பார்க்க முடியாவிட்டாலும் அவரை விசுவாசித்தான். மிதக்க தண்ணீரைக் காணவில்லை; என்றாலும் பல வருடங்களாக ஒரு பெரிய பேழையைச் செய்தான். தம்மை விசுவாசித்து தமக்குக் கீழ்ப்படிந்த நோவாவை தேவன் இரட்சித்தார். தேவன் உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழித்து நோவாவின் குடும்பத்தைப் பேழையின் மூலம் இரட்சித்தார்.”

இவற்றைக் கேட்டவாறே ஞானசூனியர் கதவருகே நிற்கிறார். ஞானம் ஐயா தொடர்ந்து பேசுகிறார், “இன்று நாமும் நோவா காலத்து ஜனங்களைப் போலவே இருக்கிறோம். நாம் தேவனை மறந்து பொல்லாதவர்களாயும், பாவிகளாயும் இருக்கிறோம். நமது பாவங்கள் தேவனுக்கு கோபத்தையும் வருத்தத்தையும் தருகின்றன. தேவன் நமக்கு அளித்துள்ள பாதுகாப்பான இடத்திற்குள் நுழையவில்லை எனில் நாம் அனைவருமே மரணத்தால் அழிக்கப்பட்டுப் போவோம். அந்தப் பாதுகாப்பான இடம் ஒரு பெரிய பேழையைப் போன்றதே. அதுவே இயேசு கிறிஸ்து. நாம் விசுவாசித்தால் இயேசுவின் கரத்துக்குள் பாதுகாப்பாய் இருப்போம்.”

ஞான சூனியர் மறுத்துப் பேசுகிறார், “கல்விநேசன் தீமையான எதுவும் செய்யவில்லை. அவர் ஏன் மறைந்து கொள்ள ஒரு பாதுகாப்பான இடத்தைத் தேட வேண்டும்? அவருக்கு நிறைய பணம் தேவை. இதோ நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் பாருங்கள். இது மிட்டாய் எந்திரம். இதோ இங்கு நாணயத்தைப் போட்டு, இந்த குமிழைத் திருப்பினால் மிட்டாய் வெளிவரும். கல்விநேசரே, இதை வாங்கிக் கடையில் வையுங்கள். மக்கள் மிட்டாய்க்காக வருவார்கள். நல்ல பணம் கிடைக்கும். பணமே மிக முக்கியமான விஷயம்.”

ஞானம் ஐயா ஞானசூனியரைப் பார்த்துக் கூறுகிறார், “நான் உங்களுக்கு முட்டாளான ஐசுவரியவானைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.”

## பயிற்சி

மேலும் மேலும் சொத்தைத் தேடுவோருக்கு இயேசுவின் எச்சரிக்கையை **லூக்கா 12:13-21** ல் காண்க.

மிட்டாய் எந்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு நின்ற ஞானசூனியரிடம் ஞானம் ஐயா கேட்கிறார், “இந்த ஐசுவரியவான் அவனுக்குரிய வேலையைத்தான் செய்கிறான், என்பதைப் பார்க்கிறீர்கள். ஆனால் அவன் தேவனை விடவும், தனது விளைச்சலுக்கும் களஞ்சியங்களுக்கும் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான். எதிர்பாராதபோது அவனுக்கு மரணம் வந்தது. அவன் மரணத்துக்கு ஆயத்தமாக இருக்கவில்லை. இயேசு தாம் மறுபடியும் உலகத்துக்குத் திரும்பி வரப்போவதாகக் கூறுகிறார். நோவாவின் நாட்களைப் போலவே சில மனிதர்கள் அன்றாடக வேலையை கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்காக ஆயத்தமாய் இருக்க மாட்டார்கள். வெள்ளத்தால் கவிழ்க்கப்பட்ட மக்களைப் போல அவர்கள் அழிந்து போவார்கள். ஆனால் இயேசுவுக்குச் சொந்தமானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.”

ஞானசூரியர் சிரித்துக்கொண்டே நடந்து போகிறார். ஆனால் கல்விநேசன் பதில் அளிக்கிறார், “ஐயா, நான் தேவனை மறந்து போகிறேன். இயேசுவின் நாமத்தினாலே மன்னிப்புக்கேட்க என்னோடு கூட ஜெபியுங்கள்.” ஜெபத்துக்குப் பின் அவர் கூறுகிறார், “நான் உங்களோடு சேர்ந்து முன்னரேயே ஜெபித்திருக்க வேண்டும். இப்போது ஆசுவாசமாக இருக்கிறது. நான் இந்தக் கதைகளைக் கூறி தேவனை என் குடும்பத்துக்கு நினைவூட்டுவேன். நான் மனனம் செய்ய வேறு வசனம் இருக்கிறதா?”

“ரோமர் 6.23 ஐப் படியுங்கள். நாம் விரைவில் சந்திக்கலாமா?”

“தாராளமாக, இன்றிரவே. இரவு என் வீட்டில் சாப்பாடு. என் மனைவி சாரா உங்களைக் காண விரும்புகிறாள்.”

## பயிற்சி

- உலகத்தின் விலைமதிப்பற்ற பரிசு பற்றிய ரோமார் 6:23 ஐ மனப்பாடம் செய்யவும்.


## I – 6 – அறிந்துகொள்ளல் –6
# மெய்யான நன்மையைக் கண்டறி
(நான் நல்லவன் என்று கூறும் மனிதனும் தேவமன்னிப்பைப் பெற வேண்டும்)

கல்விநேசன் வீட்டில் ஒரு நல்ல உணவுக்குப் பின் ஞானம் ஐயாவிடம் அவர் கூறுகிறார், ''ஐயா, தன்னை வருத்தும் ஒரு விஷயத்தைக் குறித்து சாரா ஒரு கேள்வியை நான் கேட்குமாறு விரும்புகிறாள்.''

''நீங்கள் அனுமதித்தால் சாராவே நேரடியாக அது பற்றி விளக்கலாமே.''

சாரா சற்று வெட்கத்தோடு கூறுகிறாள், ''என் கணவர் ஏதோ ஒரு விஷயத்துக்காக மன்னிப்பைக் கோர வேண்டும் என்று நீங்கள் கூறி இருக்கிறீர்கள். அவர் மோசமானவரல்ல. அவர் ஒரு கணவராகவும் தந்தையாகவும் தன் கடமைகளை ஆற்றுகிறார். அவர் தமது நண்பர்களிடம் நல்லபடியாக நடந்து கொள்ளுகிறார். தேவனது பார்வையில் செம்மையானவராகக் காணப்பட இவை போதாதா?''

''நான் **பாவியாகிய ஓர் ஆயக்காரனைப்** பற்றி கூறுகிறேன்.'' அவர் அந்தக் கதையைக் கூறி, அவர்கள் அதைப் புரிந்து கொண்டார்களா என்று அறிய சில கேள்விகளைக் கேட்கிறார்.



### பயிற்சி
கல்விநேசன் அறிந்து கொண்டதை **லூக்கா 19:1–10** ல் காண்க.

- சகேயு தன்னை சந்திக்க விரும்பியதை இயேசு எவ்வாறு கண்டு கொண்டார்?
- இந்தப் பாவியான ஆயக்காரனை இயேசு எப்படி நடத்துகிறார்?
- சகேயு இயேசுவிடம் எப்படி நடந்து கொண்டான்?
- மற்றவர்கள் நியாயம்தீர்த்தது போல் இயேசு செய்யவில்லை. இதற்கு நன்றியுணர்வாக தான் என்ன செய்யப்போவதாக சகேயு கூறினான்?

இதற்குப் பின் ஞானம் ஐயா சகேயுவைக் குறித்துப் பேசுகிறார், ''தன்னைத் தேடுபவர்களிடம் இயேசு வருகிறார். அவர்களது இருதயங்களை மாற்றுகிறார். நமது முயற்சிகளால் மட்டுமே நம்மால் நல்லவர்களாக முடியாது. சிலர் தங்களைத் தாங்களே நல்லவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்ளுவதால் தங்களுடைய சொந்தப் பாவங்களைப் பார்க்க முடியாமல் போகிறார்கள். நமது வாழ்க்கையில் இயேசு வரும்போது தமது நல்லியல்புகளை நமக்கு அருளுகிறார். சகேயு போலவே நாமும் நமது கிரியைகளினால் அவருக்கு நன்றி உணர்வைக் காட்டுவோம்.''

சாரா சொல்லுகிறாள், ''இன்னும் எனக்குக் குழப்பமாக இருக்கிறது. பக்தியான என் மாமாவைப் பாருங்கள். பூசாரி கூறும் ஜெபங்களை ஒரு நாளைக்குப் பலமுறை திருப்பிக் கூறுகிறார். அவரும் இயேசுவால் இரட்சிக்கப்பட வேண்டுமா?''

“ஆம்! சில மத சடங்காச்சாரங்களையும், சட்டதிட்டங்களையும் கைக்கொள்ளுவதால் மட்டுமே தேவனை நம்மால் மகிழ்சியாக்க முடியாது. பரிசேயனும் ஆயக்காரனும் பற்றி நான் உங்களுக்குக் கூறுகிறேன்.”

## பயிற்சி

**லூக்கா 18:9-14** ல் கல்விநேசரும், சாராவும் அறிந்து கொண்டதைக் காண்க:

- பாவியான ஆயக்காரனைப் பற்றிய கதையை எப்படிப்பட்ட ஜனங்களுக்கு இயேசு கூறுகிறார்?
- தேவனைக் குறித்த பரிசேயனின் மனோபாவம் என்ன?
- ஆயக்காரனின் மனநிலை என்ன?
- எந்த மனிதன் கர்த்தரின் கண்களில் தயை பெற்று நீதிமான் ஆனான்.

அருமையான உணவுக்காக ஞானம் ஐயா சாராவுக்கு நன்றி கூறுகிறார். அவள் பதில் அளிக்கிறாள் “வேதாகமக் கதைகளுக்காக நன்றி, ஐயா! இப்போது நான் அதிகமாகப் புரிந்து கொண்டேன். தேவன் மோசமான மனிதர்களையும் மன்னிக்கிறார்.”

“ஒரு சிறு ஜெபம் அந்த மனிதனை எவ்வாறு நீதிமான் ஆக்கியது என்று விளக்கிச் சொல்ல முடியுமா?” கல்விநேசன் கேட்கிறார்.

“தேவனால் மட்டுமே நம்மை நீதிமான்கள் ஆக்க முடியும். நமது பாவங்களை நாம் உள்ளபடியே ஒத்துக்கொள்ளும் போதும், இயேசுவின் நாமத்தினால் தேவன் நம்மை மன்னிப்பார் என்று விசுவாசிக்கும் போதும், அவரது ஆவி நமக்குள் வந்து நம்மை நீதிமான்கள் ஆக்குகிறது. நாம் இந்தக் கதையில் வரும் பரிசேயனைப் போல மதசம்பிரதாயங்களைப் பின்பற்றுவர்களாய் மட்டும் இருந்தால், அது கர்த்தரை மகிழ்ச்சிப் படுத்தாது. நமது மனந்திரும்புதலும் விசுவாசமுமே அவருக்கு மகிழ்ச்சியைத் தரும்.”

விடைபெற்று கிளம்பும்போது ஞானம் ஐயா கல்விநேசனிடம் கூறுகிறார், “சாரா இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்திற்கு தனது மனதில் இடம் கொடுக்கிறார் என்று நினைக்கிறேன். இதுபற்றி அவரிடம் பேசுவீர்கள் என்று நம்புகிறேன். நான் உங்களோடு இணைந்து ஜெபித்தது போல, அவர் ஆயத்தமாக இருப்பதாக நினைத்தால், இயேசுவின் நாமத்தினால் பாவ மன்னிப்புக்காக அவரோடு சேர்ந்து ஜெபிக்கலாம்.”

“இன்று இரவு நான் அவளோடு பேசுகிறேன். முடிந்தால் நாளை காலையில் மீண்டும் வாருங்கள்.”

## I – 7 – அறிந்துகொள்ளல் – 7
# இயேசுவுக்குள் பரிபூரண ஜீவனை கண்டடை!
(ஞானஸ்நானத்தில் தொடங்கி, கீழ்ப்படிதல் மூலம் விசுவாசத்தைக்காட்டு)

அடுத்த நாள் காலையில் ஞானம் ஐயா கல்விநேசன் வீட்டிற்கு மீண்டும் வருகிறார். கொஞ்ச நேரத்தில் ஞானசூனியர் பல்வண்ணத் தொப்பிகளோடு கதவண்டைத் தோன்றுகிறார். ''கல்வி நேசரே உங்கள் மனைவிக்கு ஒரு தொப்பி வாங்கிக் கொடுங்கள்!''

கல்விநேசன் சிரிக்கிறார். ''தொப்பியை விட மேலான சிலவற்றைக் குறித்து நாங்கள் பேசவேண்டும். நானும் என் வீட்டாரும் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறோம். நீங்களும் அவ்வாறே கீழ்ப்படிவீர்கள் என்று நான் நம்புகிறேன்.''

''நான் அதைக்குறித்து சிந்தித்துப் பார்த்தேன். நான் எனக்கு உரிய பாணியில் அவரைப் பின்பற்றுகிறேன். இதைக்குறித்து நீங்கள் தீவிரமாய் இருக்கக்கூடாது கல்விநேசரே. பரலோகம் போவதற்கு இயேசுவை நம்பினாலே போதும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதற்குமேல் எதுவும் தேவை இல்லை. நானும் அவ்வாறே செய்வேன்.''

''அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும் என்று நான் சொன்னேன்.''

''உம்மால் முடியாது. உங்கள் எதிரிகளையும் நேசிக்க அவர் சொன்னார். அது பைத்தியக்காரமானது.''

ஞானம் ஐயா இதை ஒத்துக்கொள்ளவில்லை, ''இல்லை. நம்பிக்கை என்பது ஆரம்பமே. உடனடி கீழ்ப்படிதல் மூலம் உங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதைப் புரிந்து கொள்ள **எத்தியோப்பிய அரசாங்க அதிகாரியின்** கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்.''



### பயிற்சி

**அப்போஸ்தலர் 8:26-38** ல் காண்க:

- கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு வேத பகுதியில் எத்தியோப்பிய அதிகாரி யாரைப் பற்றி வாசித்தான்?
- இயேசுவைப் பற்றி என்னென்ன செய்திகளை அந்த வேத பகுதி தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ளது?
- இயேசுவைத் தான் விசுவாசிப்தைக் காட்ட அந்த எத்தியோப்பியன் என்ன செய்தான்?

கல்விநேசனின் வீட்டில் ஞானம் ஐயா அவருக்கும், சாராவுக்கும், ஞானசூனியருக்கும் விவரிக்கிறார், ''எத்தியோப்பிய அதிகாரி வாசித்த வேத பகுதி ஏசாயா 53-ம் அதிகாரம். இயேசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் அது எழுதப்பட்டது என்றாலும், இயேசு என்ன செய்வார் என்பதை தீர்க்க தரிசனமாகக் கூறியது. பாவத்தின் காரணமாக நாம் தேவனை விட்டு வழிதப்பி அலையும் ஆடுகளைப் போல்

ஆனோம் என்று அது கூறியது. நாம் மரணத்திற்குப் பாத்திரவான்களாய் இருந்தும், நமது பாவம், நோய், துன்பம், மரணம் ஆகிய எல்லாவற்றையும் இயேசு தமது தோள்மேல் சுமத்திக் கொண்டார். அவர் பாடுபட்டு மரித்ததினால் நாம் பாவத்தில் இருந்தும் விடுதலை பெற்றோம்.''

சாரா காபி கொண்டு வருகிறாள். ஞானம் ஐயா தொடர்கிறார், ''இயேசு தனக்காகச் செய்ததை எத்தியோப்பிய அதிகாரி நம்பினான். தனது விசுவாசத்தைக் காட்ட. அருகில் தண்ணீர் தென்படவே, உடனடியாக ஞானஸ்நானம் தருமாறு பிலிப்பை வேண்டினான். இயேசு கிறிஸ்துவின் மரணத்தில் பரிசுத்த ஆவியானவர் நம்மை அவரோடு இணைத்ததையே ஞானஸ்நானம் காட்டுகிறது என்று கொலோ. 2:12 ம் ரோமர் 6 ம் வெளிப்படுத்துகின்றன. நமது பாவ வாழ்க்கை இயேசுவோடு கூட மரித்துவிடுகிறது. விசுவாசத்தின் மூலம் அவரது உயிர்த்தெழுதலில் இணைந்து நித்தியமானதும் பரிசுத்தமானதுமாகிய ஒரு புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிக்கிறோம். அவரது ஆவி நமக்குள் வந்து வாழ்கிறது.''

ஞானசூனியர் முகம் சுழிக்கிறார். ''இது நம்ப முடியாதது. நாம் பரிசுத்தமாக தண்ணீர் தேவை இல்லை. அதற்கு நாம் நீண்ட தியானம் செய்ய வேண்டும். ஒரு இந்து யோகி தியானம் செய்வது குறித்து எழுதிய புத்தகத்தை விலைக்குத் தருகிறேன். இதோ பாருங்கள்.''

ஞானம் ஐயா **குஷ்டரோகியான நாகமானைப்** பற்றி கூறி, அவர்கள் புரிந்து கொள்ள உதவியாகக் கேள்விகள் கேட்கிறார்.



## பயிற்சி

**2 இராஜா. 5:1-14** ல் காண்க

- தனது விசுவாசத்தைக் காட்ட நாகமான் என்ன செய்தான்?
- ஆற்றுநீர் நாகமானின் குஷ்ட ரோகத்தைக் கழுவவில்லை. தேவனே அதைச் செய்தார். ஆனால்தண்ணீரை உபயோகித்து நாகமான் தன்னை விசுவாசிக்கும்படி தேவன் எவ்வாறு செயலாற்றினார்?

கொண்டுவந்த புத்தகத்தை விற்க முடியாமல் ஞானசூனியர் வீட்டைவிட்டு வெளியேறுகிறார். ஞானம் ஐயா கல்விநேசனுக்கும் சாராவுக்கும் விளக்குகிறார், ''தேவன் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற நமக்குக் கூறுகிறார். நாகமானின் கழுவுதலும், எத்தியோப்பியனின் ஞானஸ்நானமும் நமது விசுவாசத்தைக் காட்டுகிறது. நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதே முதன்மையானதாகும். அப்போஸ்தலர் 22:16 வெளிக்காட்டுவது போல தேவன் இயேசுவின் இரத்தத்தினால் நமது பாவங்களை எல்லாம் கழுவினார் என்பதையே ஞானஸ்நானம் உணர்த்துகிறது. 1 யோவான் 1:7 ம் தேவன் அளித்த சுத்திகரிப்பை உறுதிப்படுத்துகிறது.''

ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே கல்விநேசரும் ஞானம் ஐயாவும் கடையை நோக்கி நடக்கின்றனர். ''கல்விநேசரே! குடும்பத்துடன் நீங்களும் இந்த முதற்படியில் கால் வைக்க வேண்டும் என்பதே தேவ விருப்பமாகும்.ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவுடன் நம்மை எவ்வாறு இணைக்கிறது என்பதை சாராவுக்கும் குழந்தைகளுக்கும் நீங்கள்தான் விளக்க வேண்டும்.'' ''நான் சாராவோடு பேசுவேன். அதற்கு அவள் ஆயத்தமா என்று எனக்குத் தெரியவில்லை.''

## பயிற்சி


- **அப். 2:38** ஐ மனனம் செய்க.
- கிறிஸ்துவுடன் நம்மை ஞானஸ்நானம் எவ்வகையில் இணைக்கிறது என்பதை ரோமர் 6:1-14 ல் காண்க.
- நமது வாழ்க்கை முறையில் ஞானஸ்நானத்தின் விளைவு என்னவாக இருக்க வேண்டும் என்பதை **ரோமர் 6:1-14** ல் காண்க.

## I – 8 – அறிந்துகொள்ளல் – 8
# இயேசுவைப் பின்பற்றுபவனாக மாறு
(உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சந்தித்து, அறிந்து, பின்பற்று)

பின் சிலநாள் கழித்து கல்விநேசனின் கடைக்கு வந்த ஞானம் ஐயா, ''நான் சீக்கிரமாக தேசத்தின் இன்னொரு பகுதிக்குப் போகப்போகிறேன். ஆனால் அதற்குமுன் இங்கு ஒரு விசுவாசிகளின் சபையை ஸ்தாபித்து விடலாம் என நம்புகிறேன். இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்டிருக்கிறீர்கள். ஒரே மெய்தேவனின் தேவையையும், அவர் நம்மை பாவத்திலும் மரணத்திலும் இருந்து மீட்க எவ்வாறு இயேசுவை அனுப்பினார் என்பதையும் அறிவீர்கள். ஞானஸ்நானத்தின் மூலம் உங்கள் விசுவாசத்தைக் காட்டுவதைப் பற்றி சாராவிடம் பேசினீர்களா?''

''ஆமாம். இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் நமக்கு மன்னிப்பையும் புதிய ஜீவனையும் கொண்டு வருகிறது என்பதை நாங்கள் இருவரும் விசுவாசிக்கிறோம். ஆனால் நான் ஞானஸ்நானத்தைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறேன்.''

''அப்படியானால் பவுல் இயேசுவை எவ்வாறு சந்தித்தார் என்பதைக் கேளுங்கள்.''



## பயிற்சி
**அப். 22:1-16** ல் காண்க
- இயேசுவை சந்திக்கு முன் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் என்ன செய்து கொண்டிருந்தார்?
- தமஸ்கு போகும் வழியில் பவுலோடு பேசியது யார்?
- ஒரு கீழ்ப்படிதலுள்ள சீஷராவதற்குப் பவுல் என்ன செய்ய வேண்டியிருந்தது?

நாற்காலி செய்வதில் கல்விநேசனுக்கு உதவிக் கொண்டே ஞானம் ஐயா இக் கதையைத் தொகுத்துரைக்கிறார், ''இயேசுவைச் சந்திக்கும் முன் பவுல் பல கிறிஸ்தவர்களைச் சிறைக்குள் தள்ளினார். கிறிஸ்தவர்களைத் தடுப்பதின் மூலமாகத் தாம் தேவனுக்கு உதவுவதாக நினைத்தார். ஆயினும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து பவுலோடு பேசினார். ஒரு தேவனுடைய தீர்க்கதரிசி வந்து சொஸ்தமாக்கும் வரை பவுல் குருடர் ஆக்கப்பட்டார். தீர்க்கதரிசி பவுலை எழுந்து, ஞானஸ்நானம் பெற்று, பாவங்களைக் கழுவுமாறு இயேசுவின் நாமத்தினாலே கூறினார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எல்லா ஜனங்களுக்கும் சாட்சியாக உரைப்பார் என்று தீர்க்கதரிசி கூறினார்.''

கடைக்குள் வேகமாக வந்த ஞானசூரியர் ஏதோ பேச ஆரம்பித்து பின் ஞானம் ஐயாவைப் பார்த்துவிட்டு தயங்கினார். கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டு இருந்து விட்டுப் பின் கூறுகிறார், ''கல்விநேசரே! நாம் இந்த மாதிரி விஷயங்களில் அவசரப்படக்கூடாது. நன்றாக யோசியுங்கள். இந்த இயேசு மதத்தில் ரொம்ப தூரம் இழுபட்டு போய்விடாதீர்கள். அது உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும்.''

ஞானம் ஐயா மௌனமாக ஜெபித்துவிட்டு **இயேசு எவ்வாறு பரத்துக்கு ஏறினார்** என்பது பற்றி கூறுகிறார்.

## பயிற்சி

ஞானம் ஐயா கல்விநேசரிடம் கேட்பதை **லூக். 24:36-53** ல் காண்க.

- தாம் ஆவியல்ல என்பதைக் காட்ட இயேசு என்ன செய்தார்?
- எந்த குறிப்பிட்ட சரித்திர சம்பவத்தை எல்லா ஜனங்களுக்கும் செய்தியாக அறிவிக்கும்படி இயேசு நமக்கு அறிவுறுத்தினார்?
- அனுப்புவதாக இயேசு தம் சீஷர்களுக்கு வாக்களித்த அற்புதமான விஷயம் என்ன?

கல்விநேசனுக்கும் ஞானசூனியருக்கும் கடையில் வைத்து அந்த சம்பவத்தை ஞானம் ஐயா கூறுகிறார், ''ஒரு மனிதனாக இயேசு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். சென்ற வண்ணமாகவே திரும்பி வருவார் என்று தேவதூதர்கள் உறுதி அளித்தனர் (அப். 1:8-11). இதற்கிடையில் இயேசு தமது சீடர்களுக்குப் பணிகளைக் கொடுத்து, பரத்திலிருந்து அவர்களைப் பலப்படுத்தத் தமது பரிசுத்த ஆவியையும் அனுப்பினார். இப்பணிகள் இன்று நமக்கும் உரியவைகளே. இவற்றை செய்ய பரலோகத்தில் இருந்து வல்லமையை அனுப்புவதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார். அந்த வல்லமை நமக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவரால் வருகிறது. நமது வேலை இயேசுவைப் பற்றி, குறிப்பாக அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை எல்லா ஜனங்களுக்கும் சொல்லுவதே. மேலும், மனம் மாறுதலையும், பாவ மன்னிப்பையும் பிரகடனப்படுத்த வேண்டும்.''

ஞானசூனியர் கூறுகிறார், ''அப்படியானால் இயேசு இப்போது வெகுதூரத்தில் இருக்கிறார். நான் போகிறேன். நீங்கள் மத வெறியர்களாக மாறிக்கொண்டு இருக்கிறீர்கள்.''

அவரைப் பொருட்படுத்தாமல் ஞானம் ஐயா கல்விநேசனிடம் கூறுகிறார், ''ஒருநாள் இயேசு மறுபடியும் வந்து தமது ஜனங்களை மரித்தோரிடத்தில் இருந்து எழுப்புவார். அவர் இருக்கும் இடத்தில் அவர்கள் அவரோடு நித்திய காலமாக வாழ்வார்கள் (யோவான் 14:3). கல்விநேசரே! தேவனை நோக்கி இந்த அடியை எடுத்து வைக்க ஆயத்தமா? இயேசுவின் குரலை கவனியுங்கள். பாவங்களை அறிக்கை இட்டு, ஞானஸ்நானம் எடுத்து, உங்கள் பாவங்களை இயேசுவின் நாமத்தினால் கழுவுங்கள் (அப். 22:16).''

''இது உண்மை என்று என் உள்ளத்தில் அறிகிறேன். நானும் என் குடும்பமும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவோம். நாங்கள் ஞானஸ்நானம் எடுப்போம். மேலும் இயேசுவைப் பற்றி நான் ஏற்கெனவே என் நண்பர்களுக்குக் கூற ஆரம்பித்து விட்டேன்.''



## பயிற்சி

ஞானம் ஐயா கல்விநேசரிடம் செய்யச் சொன்னதை செய்யவும்:

- மத்தேயு 28:18-20 ஐ மனனம் செய்க
- இயேசுவைப் பற்றி பார்த்ததை கேட்டதைப் பிறருக்குக் கூறுங்கள்.
- அவர் திரும்பி வந்து தம்முடையவர்களை தம்மோடு அழைத்துப் போகும் நாளுக்காக தேவனைத் துதியுங்கள்.

# பகுதி II
# கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சபைகளை நிறுவுதல்

பகுதி II ல் உள்ள அதிகாரங்கள் கிறிஸ்துவின் அடிப்படையான கற்பனைகள். பயிற்சி செய்யப்பட்டவைகளை ✓ அடையாளப்படுத்தவும்.

II-1 கிறிஸ்துவின் கற்பனை #1 : மனம் திரும்பி விசுவாசித்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள் (இரட்சிப்பு).

II-2 கிறிஸ்துவின்கற்பனை #2 : புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளி (அது ஆரம்பித்துத் தரும் பரிசுத்தவாழ்க்கையைக் கிறிஸ்துவுக்குள் நடத்து).

II-3 கிறிஸ்துவின் கற்பனை #3 : கிறிஸ்துவின் சீஷர்களை உருவாக்கு (இயேசுவுக்கும், தேவ வார்த்தைக்கும் கீழ்ப்படிதலை உபதேசி)


II-4 கிறிஸ்துவின் கற்பனை #4 : அன்பு கூரு (தேவனையும் மனிதனையும் நேசி, தேவை உள்ளவர்களுக்கு சேவைசெய், விரோதியை மன்னித்து விடு).

II-5 கிறிஸ்துவின் கற்பனை #5 : ஜெபி (தேவனைத் துதி, பாவத்தை அறிக்கை இடு, பிறருக்காக ஜெபி, குணமாகு, ஆவிக்குரிய போராட்டத்தை நடத்து)

II-6 கிறிஸ்துவின் கற்பனை #6 : அப்பம் பிட்குதல் (கர்த்தரின் பந்தியை ஆசரி, தேவனை ஆவியோடு துதி)

II-7 கிறிஸ்துவின் கற்பனை #7 : கொடு (நமக்கு தேவன் தரும் எல்லாவற்றிலும் நல்ல பணியாளனாக இரு).

எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை ஊருவாக்குவதே இப்பகுதியின் நோக்கம் ஆகும்.



வேதாகமத்தில் தீத்து என்ற மேய்ப் அப்போஸ்தலராகிய பவுல், புதிய கிறிஸ்தவர்களுக்கு தீவில் எவ்வாறு விட்டுவந்தார் என்பதைத் தீத்து 1:5 ல் க உள்ள புதிய சபைகளில் குறைவாய் இருக்கிறவைகளை தீத்துவிடம் கூறினார். நீங்கள் பகுதி I ல் ஞானம் ஐயா இல்லாவிட்டால் நான் அவரை உங்களுக்கு அறிமுகப் மேய்ப்பர். அவது ஒரு கற்பனைப் பாத்திரமே. ஆனால் தீத்துவைப் போன்றவர்.

பகுதி I ல் ஞானம் ஐயா, இயேசுவைப் ப கல்விநேசன் என்ற தச்சுத் தொழிலாளிக்குக் கூறினார். கதைகளைப் பயன்படுத்தினார். கல்விநேசன் இதை கூறினார். இப்போது கல்விநேசனும், குடும்பமும், அ இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானமும் பெற்றனர். கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் வீட்டைக்கட்டிய புத்தியுள்ள மனிதனைப் போன்றவரே ஞானம் ஐயா. புதிய விசுவாசிகள் கீழ்ப்படிதலுள்ள இயேசுவின் சீஷர்களாக மாற கதைகளை பயன்படுத்துகிறார். இந்தக் கதைகள் சரித்திரத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் கூறுகின்றன.

இயேசுவைப் பின்பற்றுபவர்களைத் துன்புறுத்தும் மக்கள் உள்ள இடத்தில் வாழ்பவரே கல்விநேசன். அவரது நண்பரான ஞானசூனியர் ஒருவரும் விரும்பாதப் பொருட்களை விற்பவர். இவர் வேதாகமம் கூறும் மணலில் வீடு கட்டியப் புத்தியில்லாத மனிதனைப் போன்றவர்.

ஞானசூரியர் கல்விநேசனின் கடைக்கு வந்து கூறுகிறார், "நீங்கள் கிறிஸ்தவராகிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். நானும் கூடத்தான். நான் கிறிஸ்தவன் என்றால் சுற்றுலாப் பயணிகள் என்னிடம் பொருட்கள் வாங்குவார்கள். இதோ பாருங்கள். நீங்கள் கூட வாங்க விரும்பும் ஒன்று." தமது பையில் இருந்து விசிலை

எடுக்கிறார். ‘‘இது பறவையின் விசில். இதை ஊதினால் பறவைகள் உங்களை நோக்கிப் பாடும். உங்களுக்குக் காட்டுகிறேன் பாருங்கள்!’’ அவர் விசிலை ஊத, மூன்று நாய்கள் ஊளையிட ஆரம்பிக்கின்றன.

கல்விநேசன் கூறுகிறார், ‘‘பணத்துக்காக அல்ல. ஊழியம் செய்யவே இயேசுவை நான் பின்பற்றுகிறேன். நான் என் நண்பர்கள் எல்லோரிடமும் அவரைப்பற்றி கூறுகிறேன்.’’

ஞானசூனியர் சிரிக்கிறார். ‘‘நீங்களா? மற்றவர்களுக்கு போதிக்கும் முன் நீங்கள் முழுவேதாகமத்தையும் கற்றுத் தீர வேண்டுமே! நான் வரட்டுமா?’’ பின்னர் அதே நாளில் ஞானம் ஐயா வருகிறார். கல்விநேசனுக்கு தச்சுவேலை கற்றுத்தந்தவர் இவரே. கல்விநேசனின் கடைக்கு வந்து அவருக்கு உதவி செய்வதிலும், அவரோடு பேசுவதிலும் ஞானம் ஐயாவுக்கு மகிழ்ச்சி. கல்விநேசன் கூறுகிறார், ‘‘மற்றவர்களுக்குப் போதிக்கும் முன் நான் முழு வேதாகமத்தையும் கற்றாக வேண்டும் என்று ஞானசூனியர் கூறுகிறாரே?’’

ஞானம் ஐயா எச்சரிக்கிறார், ‘‘இல்லை என் கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே! நாம் தேவனுடைய வார்த்தைகளை அப்படியே கேட்டு, கேட்டு, மேலும் கேட்டுக் கொண்டே போவதில்லை. கேட்கக்கேட்க கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை கைக்கொள்ளுகிறோம். இல்லாவிட்டால் எந்த பயனும் இல்லை. வீடுகட்டிய இருவரைப் பற்றி நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். புதிய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, அவரது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைக் காட்ட இயேசு அவரது சீஷர்களுக்கு இதைக் கூறினார்.

### பயிற்சி

இந்தக் கதையை **மத்தேயு 7:24-29** ல் வாசிக்கவும். உங்கள் மொழியில் வேதாகமம் இல்லை என்றால் வேறு யாரையாவது சொல்லச் சொல்லுங்கள். இக் கதையை வாசிக்கும் போதே கல்விநேசனுக்காக ஞானம் ஐயா உருவாக்கிய பின் வரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.

- இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட இரு மனிதர்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் என்ன?
- எல்லா நன்மைகளுக்கும் அடித்தளமான கன்மலை யார்?
- இந்தக் கன்மலையின் மேல் நமது வாழ்க்கையையும் ஊழியத்தையும் கட்ட நாம் என்ன செய்ய வேண்டும்?

கல்விநேசன் உணர்ச்சி பொங்கக் கூறுகிறார். ‘‘இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பது மட்டும் போதாது. இயேசு நமக்கிடும் கட்டளையை அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து கொள்வது மட்டும் போதாது. நாம் இயேசுவின் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.’’

ஒரு மேசையை செய்வதில் கல்விநேசனுக்கு உதவிக் கொண்டே ஞானம் ஐயா புன்னகைத்தார் ‘‘ஆமாம்! அவர் யோவான் 14:15 ல் இப்படிக் கூறுகிறார். ‘‘நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.’’ நாம் கேட்டு கைக்கொள்ளுகிறோம். கேட்டு கைக்கொள்ளுகிறோம். கேட்டு கைக்கொள்ளுகிறோம். நாம் கேட்டு, கேட்டு, கேட்டு பின்னால் ஒருவேளை கைக்கொள்வதில்லை.’’

‘‘புரிகிறது!’’

‘‘கன்மலையாம் இயேசுகிறிஸ்துவின் மேல் கட்டும் வழி, ஒரு குழந்தையின் விசுவாசத்தோடும், அன்போடும் அவருக்குக் கீழ்ப்படிவது தான்.’’ இயேசுவுக்கு நாம் அன்போடு கீழ்ப்படிவதை தேவன் ஆசீர்வதிக்கிறார். அவருடைய வார்த்தைகளில் நமக்கு அதிக அறிவு இருப்பதால் ஆசீர்வதிப்பதாக அவர் வாக்களிக்கவில்லை. இயேசு பரத்திற்கு ஏறுமுன் இந்த உலகில் நாம் வாழ்வதற்குரிய கட்டளைகளைத் தந்தார். மாபெரும் ஆணைகள் என்று கூறப்படும் இந்தக் கட்டளைகளை மத் 28:18-20 ல் பார்க்கிறோம். உலகெங்கும் மக்களைத் தமக்கு சீஷர்களாக்கும்படி கூறுகிறார். முதலில் ஞானஸ்நானம் கொடுத்து ஆரம்பிக்கவும், பின் அவர் கட்டளை இட்ட யாவற்றுக்கும் கீழ்ப்படிய போதிக்கவும் அவர் நமக்குக் கூறுகிறார்.



இயேசுவின் எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படியும்போது நாம் அவருடைய சீஷர்கள் ஆகிறோம். மற்றவர்களை அவரது கற்பனைக்குக் கீழ்ப்படியுமாறு போதித்து அவர்களையும் சீஷர்கள் ஆக்குகிறோம். அன்பான கீழ்ப்படிதலே சீஷர்கள் ஆக்குவதின் ஆரம்பம். அதுவே அடிப்படை. ஓர் உண்மையான சபை என்பது அன்போடு இயேசுவுக்குக் கீழ்ப்படிய கூடி வரும் மக்கள் கூட்டமே. இந்த உலகத்தின் முதல் சபை இயேசுவுக்கு அன்போடு கீழ்ப்படிய உடனடியாக ஆரம்பிக்கப்பட்டதே.''

யாரோ பாடுவதை அவர்கள் கேட்டனர். கல்விநேசனின் தம்பி ஒரு கிட்டாரைத் தூக்கிக்கொண்டு கடைக்குள் நுழைகிறார், ''அண்ணா! இதை சரியாக்க முடியுமா? ஒட்டு இளகி விட்டது... ஓ! ஞானம் ஐயா! உங்களை சந்தித்தது மகிழ்ச்சியைத் தருகிறது. நீங்கள் அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்துவதாக ஒரு போலீஸ்காரர் கூறுவதைக் கேட்டேன். உங்களுக்கு அபாயம் காத்திருக்கிறது. நீங்கள் உடனடியாக இப்பகுதியை விட்டு மறைந்துவிட வேண்டும்.''

ஞானம் ஐயா உறுதிபட கூறுகிறார், ''என்னால் தற்போது போக முடியாது. முதலில் இயேசுவுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களைக் கொண்ட ஒரு சபையை உங்கள் குடும்பத்தாரும் நண்பர்களும் சேர்ந்து பலமாக ஸ்தாபிக்க நான் உதவ வேண்டும். பின் நான் இங்கிருந்து வேறொரு இடத்துக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வேன்.''

சகாயர் கூறுகிறார், ''நான் இயேசுவைப் பின்பற்றுகிறவன் அல்ல. கல்விநேசர் அவரைப் பற்றி கூறினார். நான் மேலும் அறிய விரும்புகிறேன். மனிதன் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கட்டளை இட்டார்?''

ஞானம் ஐயா விவரிக்கிறார், ''அது விசுவாசத்தில் ஆரம்பிக்கிறது. இயேசு பல விஷயங்களைப் பற்றி கட்டளை இட்டார். அவற்றை நாம் ஏழு கற்பனைகளாகத் தொகுக்க முடியும். இரட்சிப்பு அடைவதற்காக நாம் இந்தக் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவில்லை. நாம் இயேசுவுக்கு சொந்தமாகும் போது கீழ்ப்படிதல் இயல்பாய் வருகிறது. அவரில் அன்புகூர்ந்து அவரை கனம் செய்வதால் நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம். அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது அவருடைய ஜீவன் நமக்குள் இருப்பதைக் காட்டுகிறது.''

கல்விநேசர், ''அவருடைய கற்பனைகள் என்ன?'' என்று கேட்கிறார்.

''எளிய முறையில் கிறிஸ்துவின் ஏழு அடிப்படையான கற்பனைகள் இவைகளே:

- மனந்திரும்பி, விசுவாசித்து, பரிசுத்த ஆவியால் மறுரூபமாகு
- புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளி
- அன்புகூரு
- அப்பம் பிட்டு பகிர்ந்தளி
- ஜெபி
- கொடு
- சீஷர்களை உருவாக்கு''

ஞானம் ஐயா தொடர்கிறார், ''உண்மையில் ஒரு சபை என்பது என்ன என்று வேதாகமத்தில் பார்ப்போம்.'' எவ்வாறு **ஆதி கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிந்தனர்** என்று அவர் கல்விநேசனுக்கும் அவரது தம்பி சகாயருக்கும் கூறுகிறார்.

## பயிற்சி

இருவரையும் ஞானம் ஐயா கேட்கும் கேள்விகளை **அப். 2:36-47 ல்** காண்க:

- புதிய விசுவாசிகளுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்?
- கர்த்தரின் பந்தியை ஆசரிக்க அவர்கள் எங்கே அப்பம் பிட்டார்கள்?
- ஒருவருக்கொருவர் கொண்ட அன்பை அவர்கள் எவ்வாறு நடைமுறையில் காட்டினர்?
- புதிய கீழ்ப்படிதலுள்ள சபை வளர கர்த்தர் என்ன செய்தார்?

கல்விநேசர் கவனமாகக் கேட்கிறார். “ஒரு சபை என்பது என்ன என்பது இப்போது நான் புரிந்து கொள்ளுகிறேன். அது மக்கள் கூடி வந்து இயேசுவுக்குக் கீழ்ப்படிவதே. ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் கனப்படுத்தினார்கள். அவர் போதித்ததை அவர்கள் ஞாபகத்தில் வைத்து, அவருடைய வார்த்தைக்கு உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் கீழ்ப்படிந்தனர். ஆதி கிறிஸ்தவர்களைப் போலவே என் குடும்பமும் இயேசுவைக் கனப்படுத்தும்.”

“நல்லது!” ஞானம் ஐயா பதிலளிக்கிறார், “பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் ஆதி முதலே அவர்கள் இயேசுவின் ஏழு அடிப்படையான கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். அன்போடு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சபைகளுக்கு தேவ ஆசீர்வாதமும் சந்தோஷமும் உண்டாகும்.”

**நடைமுறைப் பணிகள்**

- யோவான் 14:15 ஐ மனனம் செய்ய உங்கள் சபையாருக்கு உதவுங்கள்.
- மேலே பட்டியல் இடப்பட்டுள்ள, கிறிஸ்துவின் ஏழு அடிப்படை கற்பனைகளை மனப்பாடம் செய்ய சபையாருக்கு உதவுங்கள்.
- இதுவரை யாரும் செய்யாவிட்டால், இயேசுவின் ஏழு அடிப்படை கற்பனைகளைப் பட்டியல் இட்டு ஒரு பாடல் எழுதுங்கள். இது மற்றவர்கள் மனனம் செய்ய வசதியாக இருக்கும். உங்களுக்கு உதவி செய்ய பிறரைக் கேளுங்கள்.
- பயத்தால் அல்லாமல் அன்பால் தேவனுக்குக் கீழ்ப்படிய உங்கள் சபையாருக்கு உதவுங்கள்.
- மனிதன் எழுதிய விதிகளுக்கு கீழ்ப்படிவதற்கு முன்னால் சபை மக்கள், இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுமாறு ஒவ்வொருவரிடமும் கூறுங்கள்.

# II - 1 கிறிஸ்துவின் கற்பனை #1

அடுத்த வாரம், பல புதிய விசுவாசிகளும், தேவனைத் தேடும் வேறு பலரும் கல்வி நேசனின் சிறிய வீட்டில் கூடுகிறார்கள். எல்லோரும் ஒருவருக்கொருவர் பார்க்கவும், சிறந்த முறையில் உரையாடவும் வசதியாக வட்டமாக உட்கார வைக்கப்படுகின்றனர். ஞானம் ஐயா, மனந்திரும்பி, விசுவாசித்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள் என்ற இயேசுவின் கற்பனையைப் போதிக்கிறார். மாற்கு 1:15, யோவான் 3:16, 20:22 ஆகிய பகுதிகளில் இருந்து, அக்கற்பனையின் பல்வேறு அம்சங்களை வாசிக்கிறார்.

அப்போது ஞானசூனியர் கூட்டத்திற்கு வந்து, ‘‘நானும் இப்போது ஒரு கிறிஸ்தவன். அதுவே சிறந்த முறையில் வாழும் வழி’’ என்று அறிவிக்கிறார்.

‘‘நான் அதைப்பற்றி பின்னர் உங்களிடம் பேசுவேன்’’ ஞானம் ஐயா கூறுகிறார். ‘‘இப்போது நாம் இன்னும் பலரை சந்திப்பது குறித்துத் திட்டம் இடுவோம். நான் பிரசங்கம் செய்ய வரவில்லை. தேவன், நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைக் குறித்து இப்போது பேசுவோம். தயவு செய்து நீங்கள் எல்லோரும் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.’’

கல்விநேசன் கூறுகிறார், ‘‘இந்த சாலைக்கு வடக்குப்புறம் எனக்கு நண்பர்கள் உண்டு. நான் அவர்களிடம் இயேசுவைக் குறித்துப் பேசுவேன்.’’

ஞானசூனியர் கூறுகிறார், ‘‘நாம் அவர்களை எரிச்சல்படுத்திவிடக்கூடாது. சில சமயம் அவர்கள் என் சிறு சிலைகளை வாங்குவதுண்டு. எப்போதும் அவர்களைப் பாவிகள் என்று கூறிக்கொண்டே இருக்கக்கூடாது. அவர்கள் கோபம் அடைவார்கள்.’’

‘‘இதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்’’ ஞானம் ஐயா கூறுகிறார்.

‘‘சிலசமயம் ஜனங்களுக்கு நாம் செய்யக்கூடிய அன்பான விஷயம் அவர்கள் பாவத்தில் இருந்து மனம் திரும்ப வேண்டும் என்று எச்சரிப்பதே. அவர்களுடைய மனம் புண்படுமே என்று நாம் பயப்படக் கூடாது. யோவான் ஸ்நானகனின் அச்சமற்ற பிரசங்கம் குறித்து நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’



### பயிற்சி

ஞானம் ஐயா கேட்பதற்கு பதிலை **மத்தேயு 3:4-10** ல் காண்க:

- யோவான் ஸ்நானகன் எந்த வகையான மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் - அதற்கு தகுதியான நல்லவர்களுக்கா அல்லது தேவைப்படும் மோசமானவர்களுக்கா?

சாரா சொல்லுகிறாள், ‘‘நீங்கள் எங்கள் எல்லோரையும் பேசச் சொல்லி இருப்பதால், நான் அறிந்து கொண்டதைக் கூறுகிறேன். தங்களை நல்லவர்கள் என்று நினைப்பவர்களை விட, நமது வாழ்க்கையில் நிறைய பாவம் உண்டு என்று அறிந்திருக்கும் நாமே இயேசுவின் மன்னிப்பை அதிகமாகப் பாராட்ட முடியும்.’’

ஞானசூனியர் பதில் கூற முனைகிறார். ஆனால் கல்விநேசர் கேட்கிறார், ‘‘தேவனைப் பற்றி ஜனங்களுக்கு முதலில் நாம் என்ன கூறவேண்டும்?’’

ஞானம் ஐயா கூறுகிறார், ‘‘**சுவிசேஷ செய்தியின் மிக முக்கியமான விஷயங்கள்** குறித்து நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’

## பயிற்சி

இந்த முக்கிய விஷயங்களை **லூக். 24:36-53** ல் காண்க:

- இயேசுவின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து நாம் பிறருக்கு சொல்லும் இரண்டு மாபெரும் நிகழ்ச்சிகள் எவை?
- இந்த வசனங்களின்படி பாவ மன்னிப்பைப் பெற ஒரு பாவி என்ன செய்ய வேண்டும்?
- இயேசுவைப் பற்றி பிறருக்குக் கூறும் வல்லமை நமக்கு எங்கிருந்து வருகிறது?

கல்விநேசன் இல்லத்தில் கூடி இருந்த குழுவிற்கு ஞானம் ஐயா விளக்கி உரைக்கிறார், ‘‘இயேசுவைப் பற்றி பிறருக்குக் கூறும்போது, அவர் தேவனால் ‘அனுப்பப்பட்டவர்,’ கிறிஸ்து, தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் என்று சொல்லுகிறோம். அவர்களுக்கு வேறு என்ன சொல்ல முடியும்?’’

தயங்கியவாறே ஒரு புதிய விசுவாசி பேசுகிறார், ‘‘அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி கூறலாம் என்று கல்விநேசன் என்னிடம் சொன்னார்.’’

‘‘ஆமாம். மேலும் அவர்களை மனந்திரும்பும்படி அழைக்கிறோம். முடிவுமட்டும் அல்ல, உடனடியாக செயல்படவும் கூறுகிறோம். மனந்திரும்பி அதை அவர்கள் ஞானஸ்நானம் எடுத்து உறுதி செய்ய வேண்டும்.’’

கல்விநேசர் மேலும் கூறுகிறார், ‘‘அப்போது பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப் பற்றி நாம் பிறருக்குச் சொல்வதற்காக அளிக்கும் தேவ வல்லமையை புதிய விசுவாசிகள் பயன்படுத்த அவர்களுக்கு உதவுகிறோம்.’’

ஞானசூனியர் குறுக்கிடுகிறார், ‘‘நாம் ஜனங்கள் தங்களுடைய பாவத்தைக் குறித்து வருந்தும்படி செய்யத் தேவையில்லை. அது அவர்களைப் புண்படுத்தும். அதனால்தான் அதிகாரிகள் ஞானம் ஐயா இங்கு தங்கி இருப்பதை விரும்பவில்லை. அவர் அவர்களை புண்படுத்துகிறார். தேவன் அவர்களை நேசிக்கிறார் என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டால் அது போதும்.’’

இதைப் பற்றி பலரும் விவாதிக்கத் தொடங்குகிறார்கள். ஞானம் ஐயா பேசுகிறார், ‘‘தயவுசெய்து கவனியுங்கள். ஒரு செய்தியை மக்கள் ஏற்றுக்கொள்வது மட்டும் போதாது. அதைவிட அதிகமாகச் செய்ய வேண்டும். பேதுரு இயேசுவை **யூத மக்களுக்கு எவ்வாறு எடுத்துக் கூறினார்** என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’

## பயிற்சி

**அப். 2:22-38** ல் காண்க:

- இயேசுவைக் குறித்துப் பேதுரு என்ன கூறினார்?
- இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு ஜனங்களுக்குக் கூறினார்?

அந்தக் குழுவினர் கல்விநேசர் வீட்டில் வட்டமாக அமர்ந்து இவற்றை பல நிமிடங்கள் விவாதித்தனர். பின் தாங்கள் கூறியவை சரியா என்று ஞானம் ஐயாவைக் கேட்டனர், ‘‘ஆம்! நீங்கள் நன்றாகப் படித்து விட்டீர்கள். நாம் அவற்றைத் தொகுத்துப் பார்ப்போம். சுவிசேஷத்தைப் பற்றிய முக்கியமான உண்மைகளை அப்போஸ்தலராகிய பேதுரு பிரசங்கித்தார். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளங்களில் பேசியதால் அன்று மூவாயிரம்

மக்கள் மனம் திரும்பினர். அவர்கள் அன்றே ஞானஸ்நானம் பெற்று சபைக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஞானஸ்நானம் பெறும் வரையில் நாம் ஒரு புதிய விசுவாசியை சபையின் அங்கத்தினராக எண்ணக் கூடாது. ஏனெனில் குழப்பம் நேரிடும். இப்போது, தேவனைத் தேடியவர்களுக்கு அப்போஸ்தலர்கள் போதித்த சத்தியங்கள் எவை?''

ஒருவர் பதில் தருகிறார், ''தேவன் அற்புதங்கள் மூலம் அங்கீகரித்த கர்த்தராகிய மேசியாவே இயேசு இரட்சகர்.'' சாரா கூறுகிறாள், ''அவரது மரணம் நமக்குப் பாவமன்னிப்பைக் கொண்டு வந்தது.''

இன்னொருவர் தொடர்கிறார். ''அவரது உயிர்த்தெழுதல் பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு மரணத்தின் மேல் வெற்றியையும் புதிய ஜீவனையும் கொண்டு வருகிறது.''

இன்னொருவர் பேசுகிறார், ''நமது பதில் மனம்திரும்புதல், இயேசுவின் மேல் விசுவாசம், ஞானஸ்நானம், சபைக்குள் நுழைதலாக இருக்கிறது.''

கல்விநேசன் உறுதி செய்கிறார், ''நான் அப்போஸ்தலர் பேதுருவின் முன்மாதிரியைப் பின்பற்றி, என்னுடைய உறவினர்களுக்கு இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதலாகிய வல்லமையான கதையைக் கூறப் போகிறேன். நான் முதன்முதலில் இயேசுவைப் பின்பற்றுகிறவன் ஆனபோது ஞானம் ஐயா கூறிய கதைகளையும் உபயோகிப்பேன். சுவிசேஷத்தை மக்கள் அறிந்து கொள்ள உதவியாக வேதாகமத்தில் உள்ள கதைகளின் பட்டியல் ஒன்றை அவர் எனக்குத் தந்துள்ளார்'' *(இந்தக் கதைப் பட்டியல் பகுதி IV ல் உள்ளது).*

கல்விநேசனின் தம்பி சகாயர் கூறுகிறார், ''நான் இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறேன். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவி செய்வதால் என் பாவத்தை அறிக்கையிட்டு என்னால் மனம்திரும்ப முடியும்.'' அவர் கிட்டாரை மீட்டி இயேசுவின் அற்புத மன்னிப்பைக் குறித்து ஒரு புதிய பாடலைப் புனைகிறார்.

''அற்புதம்!'' கல்விநேசன் மகிழ்சியோடு கூவுகிறார். ''என் நண்பர்களும், உறவினர்களும் இயேசுவிடம் வந்து கொண்டு இருப்பதால் நான் களிப்படைகிறேன்!''

சில நாட்கள் கழித்து அந்தக் கூட்டம் மீண்டும் கல்விநேசன் வீட்டில் கூடுகிறது. ஞாம் ஐயா அறிவிக்கிறார், ''நான் இனி தொடர்ந்து வந்து நீண்ட நாட்களாக உங்களுக்குப் போதிக்க முடியாது. நான் கல்வி நேசனைப் பொறுப்பாக வைக்கிறேன். அவர் கிறிஸ்துவுக்குள் வளர்ந்திருக்கிறார். ஒரு மேய்க்கும் மூப்பனுக்கு வேண்டிய வேத அறிவை அவர் பெற்றிருக்கிறார். நான் அவர் மேல் என் கைகளை வைத்து நான் இல்லாதபோது இந்த மந்தையை மேய்க்கும் மேய்ப்பராக நியமிக்கிறேன்.''

''நீங்கள் எங்களை விட்டுப் போகக் கூடாது'' சாரா அழுகிறாள்.

''நான் போய்த்தான் ஆகவேண்டும். எனது தொடர்ந்த மேற்பார்வை இல்லாமலேயே இந்தக் காரியங்களை செய்யும்வரை, கல்விநேசரே உங்களை நாங்கள் 'தற்காலிக மூப்பர்' என்று அழைப்போம். நீங்கள் சகாயருக்கும் மற்றவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பீர்கள்.''

ஞானசூனியர் மறுக்கிறார், ''இது அவசர முடிவு. என்னுடைய மருமகன் ஒரு புதிய தலைவரின் மேல் இப்படி உடனடியாக கைகளை வைக்கக் கூடாது என்று வேதத்தில் இருந்து படித்துச் சொன்னான்.''

ஞானம் ஐயா விளக்குகிறார், ''உடனடியாக என்ற வார்த்தையை அப்போஸ்தலர் பவுல் எந்த அர்த்தத்தில் உபயோகப் படுத்துகிறார்? அவரது உதாரணத்தைக் கண்டு தெளிவோம். இங்கு இருப்பது போன்ற அதே சூழ்நிலை இருந்த போது அப்போஸ்தலர் பவுல் செயலாற்றிய வேகத்தை விடவும் இது குறைந்தது தான். அப்போஸ்தலர் 14:23 ல் இதற்கு உதாரணம் உள்ளது. இக்கேனியா பட்டிணத்துப் புதிய சபையில் அனுபவமற்ற தலைவர்களும், பாடுகளும் இருந்த போது பவுல் அப்போஸ்தலர் இங்ஙனம் மூப்பர்களை ஏற்படுத்தினார். கல்விநேசரே, கிறிஸ்துவுக்குள் நீங்கள் கொண்டு வரும் ஜனங்களுக்கு நீங்கள்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.''

## நடை முறைப்பணிகள்:

- லூக். 24:46-47 ல் உள்ள மற்றவர்களுக்கு சொல்ல வேண்டிய விஷயங்களை உங்கள் சபைமக்கள் அறிந்து கொள்ள உதவுங்கள்.
- மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி உங்கள் உறவினர், நண்பர் மற்றும் அயலகத்தாருக்கு உதவுங்கள். நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதைத் திட்டமிடுங்கள்.
- தேவனிடம் திரும்பும்போது அவர்களுக்குப் பாவமன்னிப்பும், பரிசுத்த ஆவியின் வரமும் கிடைக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள புதிய விசுவாசிகளுக்கு உதவுங்கள்.

## II - 2 – கிறிஸ்துவின் கற்பனை #2

# ஞானஸ்நானம் பெறு

(பின் அது ஆரம்பித்துத் தரும் பரிசுத்த வாழ்வை கிறிஸ்துவுக்குள் வாழ்)

கல்விநேசனின் வீட்டில் நடக்கும் குழுக் கூட்டம் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசுகிறது. ஞானம் ஐயா கூறுகிறார், ''மத்தேயு 28:18-20 ல் உள்ள ஞானஸ்நானம் இயேசுவின் ஒரு அடிப்படைக் கற்பனை. எந்தக் கேள்வியையும் இப்போது நீங்கள் கேட்கலாம்.''

ஞானசூனியர் வாதாடுகிறார், ''இந்த ஜனங்களுக்கு இவ்வளவு சீக்கிரமாக ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது. மனமாறி வந்தவர்கள் எல்லா வகையிலும் முழுமையாகும் வரையிலும் என் மருமகன் செல்லும் சபையில் ஞானஸ்நானம் தருவதில்லை என்று அவன் கூறுகிறான். எனவே கவனம் தேவை. ஞானஸ்நானம் பெற்றபின் இவர்களில் சிலர் சபையை விட்டு விலகிப்போனால் என்ன செய்வீர்கள்? அவர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள். பின் இவர்களில் சிறந்தவர்களுக்குப் பரிசாக ஞானஸ்நானம் அளிக்கலாம்.''

ஞானம் ஐயா வேதனையோடு கூறுகிறார், ''நீங்கள் ஞானஸ்நானத்தின் அர்த்தத்தையே தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதைக் காலம் தாழ்த்தக் கூடாது. அதுவே எல்லாவற்றிலும் முதன்மையானது. புதிய மனந்திரும்பிய விசுவாசிகளை மேய்ப்பது ஞானஸ்நானத்திலே ஆரம்பமாகிறது.''

சகாயர் கூறுகிறார், ''நான் ஞானஸ்நானம் பெற விரும்புகிறேன். அதைப்பற்றி வேதாகமம் வேறு என்ன கூறுகிறது?''

ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், ''கல்விநேசரே! மனந்திரும்பிய சிறைசாலைக்காரனின் கதை உங்களுக்குத் தெரியுமே. இவர்களுக்குக் கூறுங்கள்.''

**பயிற்சி**

கல்விநேசன் விளக்குவதை **அப். 16:23-34** ல் காண்க.

- சிறைச்சாலைக்காரன் எதற்காகத் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளப் போனான்?
- மற்றவர்களும் கிறிஸ்துவை அறிந்துகொள்ள ஏதுவாக நீயும் இரட்சிக்கப்படலாம் என்று பவுல் கூறியபோது சிறைச்சாலைக்காரன் உடனடியாக என்ன செய்தான்?
- எவ்வளவு சீக்கிரமாக சிறைச்சாலைக்காரனும் அவனது குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெற்றனர்?



கல்விநேசனின் வீட்டில் ஞானஸ்நானத்தைப் பற்றி படித்துக் கொண்டிருந்த குழுவிடம் ஞானசூனியர் கூறுகிறார், ‘‘வேதாகமம் கூறுகிறபடி நாம் செய்ய முடியாது. அன்றுள்ளது போல் இன்றில்லை.’’

கல்விநேசன் அவரைத் திருத்துகிறார், ‘‘அன்றுள்ளதுதான் இன்றும் இருக்கிறது. பாவம் மாறவில்லை. தேவன் மாறவில்லை. ஞானஸ்நானம் மாறவில்லை. பிலிப்பிய சிறைச்சாலைக்காரன் தனக்குக் கேடு வந்துவிட்டதாக அஞ்சினான். கைதிகளைக் காக்கத் தவறிய தனக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று பயந்தான். அவன் அஞ்சி இரட்சிப்பின் நம்பிக்கை அற்றவனாய் இருந்தான். தான் மோசம் போய்விட்டதை அவன் அறிந்தான். **என்னுடைய உறவினர்களும் அவ்வாறே இருக்கிறார்கள்.** அவர்கள் உண்மையிலேயே மோசமானவர்கள். ஆனால், தாங்கள் பாவிகள், நம்பிக்கை அற்றவர்கள் என்று ஒத்துக் கொள்ளுபவர்களை இரட்சிக்கவே இயேசு வந்தார். மன்னிப்பைக் குறித்த பலமான உறுதி தேவைப்படுபவர்களுக்கு ஞானஸ்நானம் ஒரு வரமாகும்.’’

ஞானம் ஐயா மேலும் சொல்லுகிறார், ‘‘ஆமாம், ஞானஸ்நானம் என்பது சும்மா தண்ணீரால் கழுவுவது அல்ல என்று பவுல் அப்போஸ்தலர் ரோமர் 6:3-8 ல் விளக்குகிறார். ஞானஸ்நானத்தின் போது நமது பாவசுபாவம் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்படுகிறது. கிறிஸ்துவுடனே கூட புதிய ஜீவனுக்குள் எழுப்பப்படுகிறோம். மக்கள் மனம் திரும்பும் போது கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புதிய ஜீவனைப் பற்றி உறுதியாய் இருக்க ஞானஸ்நானம் அவர்களுக்கு உதவுகிறது. இந்த ஜீவனை சாத்தியமாக்க பரிசுத்த ஆவியானவர் தேவனிடம் இருந்து அவர்களுக்கு வரமாக வருகிறார் என்பதை விளக்கிக் கூறுகிறோம். சிறைச்சாலைக்காரன் உண்மையில் மனம் திருந்தி விட்டான் என்பதைப் பவுல் எவ்வாறு அறிந்தார்?’’

கல்விநேசன் பதில் சொல்லுகிறார், ‘‘தனது செயல்கள் மூலம் தான் இயேசுவை நம்புவதை சிறைச்சாலைக்காரன் வெளிப்படுத்துகிறான். அவன் உடனே தனது குடும்பத்தினரை அழைக்கிறான். அவர்கள் எல்லோரும் இயேசுவின் சீஷர்கள் ஆகிறார்கள். மேலும் அவன் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறுகிறான். தங்கள் சொந்தக்காரர்கள், நண்பர்கள் உறவினர்கள் என்று தொடங்கி கிறிஸ்துவுக்கு உடனடியாக சீஷர்களை உருவாக்குமாறு நாமும் புதிய விசுவாசிகளை ஊக்கப்படுத்துவோம்.’’

சகாயர் குறிப்பிடுகிறார், ‘‘அந்த சிறைச்சாலைக்காரன் அவனுடைய மனம் திரும்புதலையும் விசுவாசத்தையும் ஞானஸ்நானம் மூலம் உடனடியாக உறுதி செய்தான்.’’

‘‘ஆம்’’ ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், ‘‘நமது இருதயத்தில் தேவன் ஆரம்பிக்கும் மறுரூபமாக்குதலாம் மனமாற்றத்தை உறுதி செய்ய இயேசு தமது சபைக்கு அளித்த ஒரே ஒரு சடங்காச்சாரமே ஞானஸ்நானம். இயேசுவை நோக்கித் திரும்பிய ஒவ்வொருவருக்கும் அப்போஸ்தலர்கள் உடனடியாக ஞானஸ்நானம் அளித்தனர். தேவர்கள் அவர்களைக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் இணைத்தார்.’’

ஞானசூனியர் மறுக்கிறார், ‘‘ஆனால், ஞானஸ்நானம் பெற விரும்பும் கல்விநேசனின் சில நண்பர்களும் உறவினர்களும் குடிகாரர்களும் திருடர்களும் ஆகும். அவர்கள் தங்கள் தகுதியை நிரூபிக்கும் முன்னால் அவர்களை உள்ளே விட்டால் ஜனங்கள் சபையைக் கேலி செய்வார்களே.’’

அவர்களில் ஒருவர் கூறுகிறார், ‘‘நான் மிகவும் பாவியாக வாழ்ந்தேன். நான் மனம் திரும்பி இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறேன். ஆனால் ஞானசூனியர் கூறுவதும் நிஜம் தான். நான் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் சபைக்கு என்னால் களங்கம் வருமே.’’

ஞானம் ஐயா அவருக்கு தைரியம் ஊட்டுகிறார். ‘‘ஞானஸ்நானம் மோசமான மக்களுக்கே. **மன்னிக்கப்பட்ட ஆயக்காரனின்** கதையைக் கேளுங்கள்.’’

## பயிற்சி

அதைரியம் அடைந்த மனிதருக்கு ஞானம் ஐயா என்ன விளக்கம் அளித்தார் என்பதை லூக் 18:9-14 ல் காண்க.

- ஜெபித்த இரண்டு பேரில் நீண்ட நேரம் ஜெபித்தது யார்?
- யாருடைய ஜெபத்தை தேவன் கேட்டார்?
- யார் தேவனுக்கு முன்பாக நீதிமானாகக் காணப்பட்டான்?

அதைரியம் அடைந்தவர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். பின் புன்னகைத்தார். ஞானம் ஐயா குழுவுக்கு விளக்கிக் கூறுகிறார், ''ஒரு நீண்ட படிப்புக்குப் பின் அளிக்கும் பட்டமளிப்பு விழாவாக அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானத்தை உபயோகிக்கவில்லை. தங்கள் தகுதியை நிரூபித்தவர்களுக்கு அளிக்கும் பரிசாகவும் உபயோகிக்கவில்லை. இந்த மனிதப் பழக்கவழக்கங்கள் சில சபைகளில் பிற்காலத்தில் நுழைந்தனவே. புதிய ஏற்பாட்டில், ஜனங்கள் மனமாறி ஞானஸ்நானம் எடுத்து சபைக்குள் நுழைந்தனர். அதற்குப்பின், அவர்களை நேசித்து சேவைசெய்த பிற விசுவாசிகள் ஆகிய கிறிஸ்துவின் சரீரத்தின் உதவியால் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ந்தனர்.''

ஞானசூனியர் கல்விநேசனைப் பார்த்துக் கூறுகிறார், ''இந்த ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தேவனிடத்தில் இருந்து உங்களுக்கு அதிகாரம் இல்லை.''

''நிச்சயமாக அவருக்கு உண்டு'' ஞானம் ஐயா வலியுறுத்துகிறார். ''**புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளிக்கும் நமது அதிகாரம்** பற்றி மத்தேயு 28:18-20 ல் பார்க்கிறோம். அதுவே இயேசுவின் மாபெரும் ஆணை. மேலும் கல்விநேசனுக்கு தேவன் கூறும் எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன.''

**பயிற்சி**

**மத்தேயு 28:18-20** ஐ வாசித்து காண்க.

- சீஷர்களை உருவாக்க எந்த அதிகாரத்தைக் கொண்டு இயேசு நமக்குக் கட்டளை இடுகிறார்?
- ஜனங்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக, நாம் அவர்களுக்கு செய்ய வேண்டிய இரண்டு விஷயங்கள் என்ன?
- அவரது மாபெரும் ஆணைக்கு நாம் கீழ்ப்படிவது எளிதாக இருக்கும்படிக்கு இயேசு செய்வதாக வாக்களித்தது என்ன?

மக்கள் கலைந்து போகிறார்கள். ஆனால் ஞானம் ஐயா கல்விநேசனுக்கு சபையாக செயலாற்றத் தேவையான மூன்று கட்ட அதிகாரத்தைப் பற்றி கூறுகிறார், ''கல்விநேசரே. நமது அதிகாரம் எங்கிருந்து வருகிறது என்பதை நினைவில் வைக்க ஒரு எளிதான வழி:

- முதன்மையானது, இயேசுவின் மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் கற்பனைகள்.
- இரண்டாவது, நமக்கு கட்டளையாகத் தரப்படாத அப்போஸ்தலரின் நடவடிக்கைகள்.
- மூன்றாவது, மனித சம்பிரதாயங்கள், புதிய ஏற்பாட்டில் சொல்லப்படா விட்டாலும், சபையாகச் செய்ய நாம் ஒத்துக்கொள்வது.''

''அப்படியா! நாம் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறோம். இந்தக் கற்பனைகளும் அப்போஸ்தலரின் கட்டளைகளும் முதற்கட்ட அதிகாரம். அன்புகூர்ந்து இயேசுவுக்குக் கீழ்ப்படிவதில் இருந்து நம்மை எதுவும் தடுக்காது'' கல்விநேசன் கூறுகிறார்.

''ஆம்! இரண்டாம் கட்ட அதிகாரம், நமக்குக் கட்டளைகளாகத் தரப்படாத அப்போஸ்தலரின் நடவடிக்கைகள். அவைகள் நமக்கு முன்மாதிரிகள். அவர்கள் நடைமுறைப் படுத்தினவற்றை நம்மால் விலக்க முடியாது. அவற்றை கட்டளை இடவும் முடியாது. ஏனெனில் அவைகளை இயேசு கூறவில்லை. இந்த அப்போஸ்தலரின் நடவடிக்கைகளாவன: வாரத்தின் முதலாம் நாள் கூடுதல், வீடுகளில் கூடுதல், உடனடி ஞானஸ்நானம், புதிய தலைவர்களை நியமிக்க கைகளை வைத்து ஜெபித்தல்.''

கல்விநேசன், ''மனித சம்பிரதாயங்கள் மூன்றாம் கட்ட அதிகாரம். எல்லா சம்பிரதாயங்களும் மோசமானவைகளோ?'' என்று கேட்கிறார்.

''இல்லை. பெரும்பாலான சம்பிரதாயங்கள் நல்லவைகளே. அவை, நாம் ஒற்றுமையாக செயலாற்ற உதவுகின்றன. ஒரு மனித சம்பிரதாயம் இயேசுவின் கற்பனைக்குள் குறுக்கிட்டால், நாம் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும். நாம் நமது சபை மரபைக் கட்டிக் காப்போமா அல்லது கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிவோமா?''

## நடைமுறைப் பணிகள்

- மத்தேயு 20:18-20 ஐ சபையோடு சேர்ந்து மனப்பாடம் செய்க.
- மனிதன் ஏற்படுத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் காலந்தாழ்த்தாமல் புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளியுங்கள்.
- பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் புதிதாக ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளும் ஏனைய சபை உறுப்பினர்களைப் போல சபை காரியங்களில் ஈடுபட அனுமதியுங்கள்.
- புதிய விசுவாசிகள் கிறிஸ்துவை உடனடியாக தங்கள் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் கொண்டுசெல்ல உதவுங்கள்.
- கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதை எதுவும் காலதாமதம் செய்துவிடக் கூடாது என்பதை உறுதி செய்ய உங்கள் சபை பின்பற்றும் சம்பிரதாயங்களை ஆய்வு செய்யவும்.

# I - 3 - கிறிஸ்துவின் கட்டளை # 3
# சீஷர்களை உருவாக்கு

சில நாட்கள் கழித்து ஞானம் ஐயா பஸ்ஸில் வந்து இறங்கி, கல்விநேசனின் வீட்டிற்கு நடந்து செல்லுகிறார். சாரா கூறுகிறாள் ‘‘அவர் கடையில் இருந்கிறார் நல்லவேளை வந்தீர்கள். அவர் அதைரியமாய் இருக்கிறார்.’’

‘‘ஏன்? என்ன நடந்தது?’’

‘‘ஞானசூனியரும் அவரது நண்பர்களும் அவரைப்பற்றி எல்லோரிடமும் புகார் சொல்லித் திரிகிறார்கள். இறையியல் பட்டம் எதுவும் பெறாமல் இவர் போதகம் செய்வதை அவர்கள் கண்டனம் செய்கிறார்கள். இவரது பேச்சு பாமரத்தனமாக இருக்கிறதாம். ஒரு போதகரைப் போலவோ, கல்வியாளரைப் போலவோ இல்லையாம்!’’

ஞானம் ஐயா தச்சுக்கூடத்தை நோக்கி விரைகிறார். அவர்கள், ஞானசூனியரும் அவரது நண்பர்களும் பேசித்திரிவதைக் குறித்து உரையாடுகிறார்கள். கல்விநேசன் புலம்புகிறார், ‘‘நான் ஒரு நல்ல பேச்சாளன் இல்லை. எனக்கு நாவன்மை கிடையாது.’’

‘‘பாரம்பரிய மேடைப் பிரசங்கம் செய்வதற்கு உங்கள் சபை மிகவும் சிறியது. நீங்கள் சில வேதாகமக் கதைகளைக் கூறலாம், அல்லது வாசிக்கலாம். மேலும் கேள்விகள் கேட்டு சிறு சபைக் குழுவை சுதந்திரமாக கலந்துரையாட வைக்கலாம்.’’

‘‘அதைத்தான் நானும் செய்கிறேன். நீங்கள் எனக்கு சொல்லியவாறே நானும் சொல்லுகிறேன். நான் ஒரு கதையை வாசிக்கிறேன் அல்லது கூறுகிறேன். பின் கேள்விகள் கேட்டு பதில் பெறுகிறேன். அவர்களோடு விவாதிக்கிறேன். எல்லோரையும் பங்கேற்குமாறு ஊக்கப்படுத்துகிறேன். ஆனால் அதை ஞானசூனியர் விரும்பவில்லை. அவர் கேட்க மட்டுமே விரும்புகிறார். பொறுமையாகக் கேட்கிறார்.’’



‘‘ஆனால், யாக்கோபு 1:22, 1 கொரிந்தியர் 14:26 ன் படி அது மிகவும் தவறானது. பல வேத வசனங்கள், போதிக்கவும், திருத்தவும், ஒருவருக்கொருவர் புத்தி கூறவும் கட்டளை இடுகின்றன. இது கூட்டங்களில் நாம் ஒருவருக்கு ஒருவர் பேச வேண்டும் என்று அர்த்தமாகும். கேட்கமட்டுமே நாம் வரவில்லை. சபை பற்றிய தேவ அறிவுறுத்தலின்படி, பெரிய சபைகளும் சிறு குழுக்களாகப் பிரிந்து தேவ வார்த்தையை விவாதித்து தங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் அவற்றை கைக்கொள்ள திட்டமிட வேண்டும். நாம் நாவன்மை படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறவில்லை. அவர் நாம் சீஷர்களை உருவாக்க விரும்புகிறார். நல்ல மேடைப் பேச்சாளர் ஆவது குறித்து நீங்கள் கவலைப்பட்டால், உங்கள் குறிக்கோள் தவறாக இருக்கிறது என்று அர்த்தம். ஒரு நல்ல மேய்ப்பனாக இருப்பதே சிறந்தது. **சீஷர்களை உருவாக்குவது பற்றிய இயேசுவின் கற்பனையை** நாம் சிந்தித்துப் பார்ப்போம்.

## பயிற்சி

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாம் செய்ய வேண்டும் என்று விரும்பும் முக்கிய விஷயத்தை **மத். 28:18-20** ல் காண்க:

- சீஷர்களை உருவாக்க குறிப்பாக நாம் செய்ய வேண்டியது என்ன?
- குறிப்பாக சீஷர்கள் என்ன செய்ய வேண்டும்?

அப்போது கிட்டாருடன் அங்கே வரும் கல்விநேசனின் தம்பி சகாயர், ‘‘இயேசுவின் கற்பனைகளைப் போதிக்க நான் கட்டிய புதிய பாடலைக் கேளுங்கள் ஐயா!’’ என்று கூறிப் பாடிக் காட்டுகிறார்.

‘‘அருமை! புதிய சபைக்கு இதைச் சொல்லிக் கொடுங்கள்’’ ஞானம் ஐயா பாராட்டுகிறார்.

‘‘நாங்கள் சீஷர்களை உருவாக்குதல் பற்றி பேசுகிறோம். நீயும் கலந்து கொள்’’ என்று கல்விநேசன் சகாயரை அழைக்கிறார்.

ஞானம் ஐயா தச்சுபீடத்தில் கிடக்கும் கருவிகளை சுட்டிக்காட்டி ‘‘சாதாரண உழைக்கும் மக்களையே இயேசு சீஷராக அழைத்தார். புகழ் பெற்ற பேச்சாளர்களை அல்ல. அவர் தம்மை பின்பற்றுபவர்கள் சும்மா சபைக் கூட்டங்களில் அமர்ந்து நல்ல பேச்சாளர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு இருப்பதை விரும்பவில்லை. ஆரோக்கியமான சபை வாழ்க்கைக்கு அவசியமான விஷயங்களை செய்யுமாறு அவர் தமது சீஷர்களுக்கு கட்டளை இடுகிறார். தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இயேசுவின் வாக்குத்தத்தங்கள் பற்றி நான் கூறுகிறேன்.

- இயேசுவைப் பின்பற்றும் போது நாம் என்னவாக மாறுவோம் என்று அவர் கூறியதை லூக்கா 5:1-11 ல் காண்க.
- இயேசுவைப் பின் தொடர ஆரம்பித்தவுடன் லேவி (மத்தேயு) உடனடியாக செய்த இரு காரியங்களை லூக் 5:27-32 ல் காண்க.
- மிக நல்ல மனிதர்களோடு மட்டும் நண்பராக இருக்க இயேசு வரவில்லை. அவர் இரட்சிப்பதற்காக வந்த மக்கள் எப்படிப்பட்ட மக்கள் என்று இயேசு கூறுகிறார்?

சகாயர் கூறுகிறார், ‘‘நான் என் நண்பர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூற முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன். ஆனால் நான் கூச்ச சுபாவம் உடையவன். நன்றாக அறிமுகம் ஆகாதவர்களோடு பேச எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.’’


‘‘தேவன் உங்களுக்கு உதவி செய்வார்,’’ ஞானம் ஐயா விளக்குகிறார் ‘‘இப்போது கல்விநேசன் செய்யும் புதிய அலமாறிக்கு வண்ணம் பூச உதவுவோம். வேலை செய்துகொண்டே பேசலாம். இயேசு தமது சீஷர்களுக்கு அவர்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவதாக வாக்களித்தார். பேதுருவைப் போல, தேவ உதவி இன்றி நம்மால் கிறிஸ்துவுக்காக மக்களை சென்றடைய முடியாது. அவரது வல்லமையைக் கொண்டே மனந்திரும்புதலுக்குள்ளும் விசுவாசத்துக்குள்ளும் மக்களை நம்மால் அழைக்க முடியும். பரிசுத்த ஆவி என்ற வரத்தின் மூலம் அவர் நமக்கு வல்லமையைத் தருகிறார். இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுவாக நாம் இணைந்து வேலை செய்யும்போதே நாம் இந்த வல்லமையைப் பெற்று அதை சிறப்பாக பயன்படுத்த முடியும்.’’

‘‘இதனால்தான் மக்களோடு நமது கர்த்தரைப் பற்றிப் பேச எனக்குக் கஷ்டமாக இருக்கிறது’’ சகாயர் புரிந்து கொள்கிறார், ‘‘நான் தனியாகச் செய்ய முயன்றேன்.’’



ஞானம் ஐயா கல்விநேசனுக்கு ஆலோசனை வழங்குகிறார், ‘‘இயேசுவைப் பற்றி பிறருக்குச் சொல்லப் போகும்போது உங்கள் தம்பி சகாயரையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். மத்தேயு 9:38 ல் இயேசு வாக்களித்தபடி, பரிசுத்த ஆவியானவர் உங்களை அபிஷேகிக்கவும், மேலும் பல உடன் வேலையாட்களைத் தரவும் இப்போது உங்கள் இருவருக்குமாக ஜெபிப்போம்.’’

ஜெபித்த பிறகு ஞானம் ஐயா விளக்குகிறார், ‘‘பேதுருவையும் மற்ற சீஷர்களையும் போல, இயேசு அழைத்த உடன், லேவி எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றுகிறார். நல்ல சீஷர்கள் இயேசுவுக்குத் தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து அவருக்கு உடனடியாக கீழ்ப்படிகிறார்கள்.’’



கதவருகில் யாரோ நிற்கும் சத்தம் கேட்கிறது. ஞானசூனியர் ஒரு சிறிய கூண்டில் பச்சை நிற பல்லிகளைக் கொண்டு வருகிறார், ‘‘இவை பூச்சிகளைத் தின்னும். உங்கள் வீட்டைப் பூச்சிகளில் இருந்து காக்கும். ஒன்று வாங்குங்கள். காட்டுகிறேன் பாருங்கள்’’ என்று விளக்கிவிட்டு, ஒன்றை தரையில் விடுகிறார். அது கதவை நோக்கி ஓடுகிறது. பூனை சாடி வந்து பல்லியைக் கவ்விக்கொண்டு மறைகிறது.

அவர்கள் சீஷர்களை உருவாக்கும் மூப்பனாராக கல்விநேசனின் பொறுப்பைக் குறித்துப் பேசுகின்றனர். ஞானசூனியர் தன் கையை தச்சுவேலை மேசையில் தட்டுகிறார். பெயின்ட் டப்பா கவிழ்கிறது. அவர் சத்தம்போட்டு கூறுகிறார். ‘‘இறையியலை அதிகமாகப் படிக்காமல் உங்களால் சீஷர்களை உருவாக்க முடியாது. என்னுடைய மருமகன் என்ன கூறுகிறார் தெரியுமா? தேவனைப் பற்றி மற்றவர்களுக்குப் போதிக்குமுன் அவருடைய போதகர் பல வருஷங்கள் படித்தாராம். உங்களுக்கே ஒன்றும் தெரியாமல் மற்றவர்களுக்கு நீங்கள் போதிக்க முனைந்தால் நீங்கள் ஒரு வேஷதாரியாகும்.’’

‘‘இல்லை’’ ஞானம் ஐயா வேகமாகக் குறுக்கிடுகிறார் ‘‘நீங்கள் கேட்பது என்ன? தேவன் தமக்குத் தந்த மந்தையை மேய்க்க தன்னால் இயலும் என்று கல்விநேசன் நிரூபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா? நீர் மேல் நடப்பதா? எல்லா வகையிலும் அவர் முழுமையாக இல்லை என்பதாலேயே மற்றவர்கள் மேல் அக்கறை எடுத்துக்கொள்வதை அவரால் நிறுத்த முடியாது. நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது முன்னெப்போதையும் விட பிறரை நேசிக்க ஆரம்பித்து விடுகிறோம்.’’

‘‘நாம் ஏற்கெனவே பேசிக்கொண்டு இருந்த விஷயத்துக்கு வருவோம்’’ கல்விநேசன் வேண்டினார், ‘‘நாம் சீஷர்களை உருவாக்க வேண்டும். சீஷரான பிறகு மத்தேயு முதலாவதாக செய்த காரியம் தம் நண்பர்களை ஒரு விருந்துக்கு அழைத்ததுதான். அதில் அவர் இயேசுவைப் பற்றி கூறுகிறார். புதிய சீஷர்கள் இயேசுவைப் பற்றி தங்கள் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் கூற நாம் உதவ வேண்டும். நாம் இயேசுவை, அவரது போதகத்தை, அவர் செய்த அற்புதங்களை, அவரது மரணத்தை, அரவது உயிர்த்தெழுதலை அவர்களுக்கு கூறுவோம். சுவிசேஷம் என்பது இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததனால் மனிதனை மன்னிப்புக்குள்ளும் நித்திய ஜீவனுக்குள்ளும் கொண்டு வந்தார் என்பதே என்று 1 கொரி. 15:2-5 விளக்குகிறது.’’

சகாயர் கூறுகிறார், ‘‘நேற்று நான் இதை என் குடும்பத்தாருக்கு வாசித்துக் காட்டினேன். நியாயப்பிரமாண போதகர்கள் லேவியையும் அவருடைய நண்பர்களையும் பாவிகள் என்று அழைத்தனர். பேதுருவும் தம்மை ஒரு பாவி என்றே கூறிக்கொள்ளுகிறார். இந்தப் பாவிகளான மனிதர்களையே இயேசு மனந்திரும்புதலுக்குள்ளாக அழைத்து மனுஷர்களைப் பிடிக்கிறவர்கள் ஆக்க வந்தார். மத்தேயுவின் விருந்தில் கலந்துகொண்ட ஆயக்காரர்களைப் போன்ற பாவிகளின் கூட்டத்தையே இயேசு தமது சபைக்குள் அழைத்தார். அவர் அவர்களை மாற்றுகிறார்.’’

ஞானசூனியர் தன் பல்லிக் கூண்டை எடுத்துக்கொண்டு கடையை விட்டு வெளியேறுகிறார். அவரது ஒரு கையில் பெயின்ட் பட்டிருக்கிறது. சீஷராக்குதல் பற்றிய விவாதத்தை சகாயர் தொடர்கிறார். ‘‘அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், இயேசு, அவர் மரணம், அவரது உயிர்த்தெழுதல் குறித்துப் பேசுவதை அப்போஸ்தலர்களால் நிறுத்த முடியவில்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையால் அநேகர் மனந்திரும்பினர். அப்போஸ்தலராகிய பேதுரு, மனம்திரும்பி, மன்னிப்புக்காகவும், பரிசுத்த ஆவியின் வரத்துக்காகவும் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கூறுகிறார். அன்றையத் தினமே மூவாயிரம் பேர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.’’

ஞானம் ஐயா மேலும் கூறுகிறார், ‘‘ஞானஸ்நானத்திற்குப் பிறகு இயேசுவின் மற்ற எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவது குறித்து அப்போஸ்தலர்கள் உடனடியாக அவர்களுக்குப் போதித்தனர். மக்கள் கேட்டு அப்போஸ்தலர்களின் போதனைப்படி நடந்தனர் என்று அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் கூறப்படுகிறது. அவர்கள் அன்போடு ஐக்கியப்பட்டு, அப்பம் பிட்டு, ஜெபித்து, ஏழைகளுக்குக் கொடுத்தனர். இவ்வாறே ஆதி சபை ஆரம்பமானது.’’

கல்விநேசர் உணர்ச்சியோடு கூறுகிறார், ''ஆதி கிறிஸ்தவர்களைப் போலவே நமது சபையும் இயேசுவுக்குக் கீழ்ப்படித்தலோடு ஆரம்பிக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பு கூர்ந்தனர். நாமும் இயேசு கட்டளையிட்டவைகளுக்குக் கீழ்ப்படிய ஒருவருக்கொருவர் உதவுவோம். நாம் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுள்ள சீஷர்களை உருவாக்குவோம்.''

''நல்லது'' ஞானம் ஐயா மகிழ்ச்சியோடு பாராட்டுகிறார். ''கர்த்தரின் பந்தி, அன்பான ஐக்கியம் போன்ற ஒரு சில கிறிஸ்துவின் கற்பனைகளை நாம் ஒன்றாகக் கூடி வரும்போது கைக் கொள்ளுகிறோம். மெய் ஆராதனையின் சாராம்சம் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதே. சபையாகக் கூடி வராத போதும் நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறோம். ஜெபித்து, பிறருக்கு அவரைப் பற்றிச் சொல்லி, ஏழைகளுக்கு சேவை செய்யும் நாளெல்லாம் மகிழ்ச்சியோடு அவருக்கு நாம் கீழ்ப்படிகிறோம்.''

''ஒரு சபையாக ஆராதிக்கக் கூடி வரும்போது நாம் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும்?'' கல்விநேசன் கேட்கிறார்.

''ஆராதனையின் முக்கியப் பகுதிகளை நான் உங்களுக்குப் பட்டியல் இடுவேன்:

- ஜெபி
- தேவனைத் துதி
- பாவங்களை அறிக்கையிட்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறு
- கர்த்தரின் பந்தியை ஆசரி
- ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாய் இரு
- கொடு
- தேவ வார்த்தையைத் தியானி

''இதே வரிசையில் தான் செய்ய வேண்டுமா?''

''உங்களுக்கு ஏற்ற முறையில் நீங்கள் செய்யலாம்.'' சகாயர் கூறுகிறார், ''ஒரு புதிய சபை அல்லது ஒன்றோ இரண்டோ குடும்பங்கள் அடங்கிய ஒரு மிகச் சிறிய குழு ஒன்றாகக் கூடி வரும்போது இவைகளைச் செய்யலாம் என்று நான் நினைக்கிறேன்.''

ஞானம் ஐயா எச்சரிக்கிறார், ''நீங்கள் ஒரு சிறு குழுவாக ஒரு வீட்டில் கூடிவரும்போது ஆராதனை நேரத்துக்கென ஒரு திட்டமான ஆரம்பத்தையும் முடிவையும் வைத்திருக்க வேண்டும். அல்லது ஆராதனை பிற நடவடிக்கைகளோடு சேர்ந்து குழப்பம் அடைந்து, நம்மை பிரமிப்பூட்டும் தேவ பிரசன்னத்துக்குள்ளும், ஆழமான பயபக்திக்குள்ளும் கொண்டுவரத் தவறிவிடும்.''

''இதை ஏற்கனவே நான் அறிந்து கொண்டேன், கல்விநேசன் கூறுகிறார். ''ஆராதனையை ஆரம்பிக்க, எல்லோரும் எழுந்து நின்று ஒரு துதியின் சங்கீதத்தை மாறிமாறி கூற வைக்கிறோம். எழுந்து நின்று ஒரு விசேஷமான ஜெபத்தோடும் ஆசீர்வாதத்தோடும் முடிவுக்குக் கொண்டு வருகிறோம். இதனால் சிறுவர்களும், விளையாடுவதையும் சத்தம் இடுவதையும் எப்போது நிறுத்த வேண்டும் என்று அறிந்திருக்கின்றனர். ஆராதனை நேரம் முடிந்தபின் அவர்கள் அதை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.''

ஞானம் ஐயா பேசுகிறார், ''குடும்ப ஆராதனையை எளிதாக எவ்வாறு நடத்துவது என்பதை நான் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் காட்டினேன். அதை நீங்கள் சிறப்பாகச் செய்கிறீர்கள். சகாயரும் அவர் மனைவி ராகேலும் மற்றவர்களும் உங்களோடு இணைந்திருக்கிறார்கள். ஆனால் நான் எப்போதும் உங்களோடு இருக்க முடியாது. எந்த நேரத்திலும் நான் போக வேண்டியது இருக்கும். என்னுடைய துணை இல்லாமலேயே நீங்கள் நடத்திச் செல்ல வேண்டி இருக்கும். கல்விநேசரே! ஒவ்வொருவருக்கும் செய்வதற்கு ஏதாவது ஒரு பணி கொடுங்கள். ஒவ்வொருவருக்கும் எதில் சுவை இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். அது அவரவர்களுடைய ஆவிக்குரிய வரத்தைப் பொறுத்து அமையும். இப்படி செய்யும் போது எல்லோரும் இணைந்து செயல்படுவார்கள்.''



**நடைமுறைப் பணிகள்**

- அருகிலும் தூரத்திலும் புறக்கணிக்கப்பட்ட இடங்களிலும் இருக்கும் இயேசுவை அறியாத மக்களுக்காக சபையாக சேர்ந்து ஜெபிக்கவும்.
- மற்றவர்களுக்கு, குறிப்பாக, குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும், இயேசுவைப் பற்றி நட்பு முறையில் எவ்வாறு கூறுவது என்பதை சபை மக்களுக்கு காட்டுங்கள்.
- ஒரு வாரத்தில் நடைபெறும் கூட்டங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி, தங்கள் நண்பர்களுக்கு சுவிசேஷம் கூற உங்கள் சபை மக்களுக்கு நேரம் கொடுங்கள்.
- முக்கிய வாரக் கூட்டத்தில் ஆராதனையின் எல்லா அம்சங்களையும் நடைமுறைப் படுத்துங்கள்.
- சபைக் கூட்டங்களில், மற்றவர்களுக்கு போதிக்கும் வண்ணம் ஒவ்வொருவரும் எதையாவது செய்ய விசுவாசிகளுக்கு உதவுங்கள்.

## II - 4 - கிறிஸ்துவின் கற்பனை #4
# அன்பு கூரு

கல்விநேசரும் அவரது தம்பி சகாயரும் தங்கள் அயலகத்தாரிடமும் நண்பர்களிடமும் சென்று இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள். சகாயர் பாடல்களைப் பாடுகிறார். அவர்கள் யாவரும் ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் பல இடங்களில் வாழ்பவர்கள். ஆகவே ஒருநாள் அவர்கள் கல்விநேசனின் வீட்டிலும், மறுநாள் சகாயரின் வீட்டிலும் சந்திக்கிறார்கள். சகாயரின் அயல்வீட்டுக்காரரான தயாளர் கூறுகிறார், ''நான் ஒரு பள்ளி ஆசிரியர். ஆனால் சுகவீனமாய் இருப்பதால் என்னால் வேலை செய்ய முடியவில்லை.''

சகாயர் அவருக்கு இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். ஆனால் கல்விநேசன் அமைதியாக இருக்கிறார். வீட்டை விட்டு வந்ததும் சகாயர் கல்விநேசனிடம் கேட்கிறார், ''நீங்கள் ஏன் அமைதியாய் இருந்தீர்கள்? அவருக்கு ஏதாவது ஒரு வகையில் நாம் உதவிசெய்ய வேண்டும். அவரது குடும்பம் துன்பத்தில் உள்ளது.''

''எனக்கு தயாளரைப் பிடிக்காது'' கல்விநேசன் ஒத்துக்கொண்டார். அவர் ஞானசூனியரின் மைத்துனர். கடந்த வருஷம் அவருக்கு நான் இரண்டு நாற்காலி செய்து கொடுத்தேன். அதற்கான விலையை அவர் தரவில்லை. பின்னர் கேட்டபோது எங்களுக்குள் தர்க்கம் ஏற்பட்டது. அவர் கோபம் அடைந்து என் மேல் ஒரு புத்தகத்தை விட்டெறிந்தார். அவர் எனது எதிரி. அவர் வீட்டுக்கு இனிமேல் நான் வரமாட்டேன்.''



கல்விநேசனின் வீட்டுக்கு அவர்கள் திரும்பி வந்தபோது அங்கு ஞானம் ஐயா காத்துக்கொண்டு இருக்கிறார். சகாயர் அவரிடம் கூறுகிறார், ''தயாளர் மிகுந்த கஷ்டத்தில் உள்ளார். கடந்த வருஷம் ஏற்பட்ட தகராறு காரணமாக கல்விநேசன் அவருக்கு உதவி செய்ய விரும்பவில்லை.''

ஞானம் ஐயா அறிவுரை கூறுகிறார், ''கல்விநேசரே! மத்தேயு 22:36-40 ல் உள்ள அன்பு குறித்த இயேசுவின் கற்பனைக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். அதுவே மாபெரும் தேவ கற்பனை. **நல்ல சமாரியன்** பற்றி இயேசு கூறியதைக் கேளுங்கள்.''

### பயிற்சி

நடைமுறையில் அன்புகாட்டுவது குறித்து கல்விநேசன் அறிந்து கொண்டதை **லூக். 10:25-37** ல் காண்க

- தேவனைத் தவிர வேறு யாரிடம் நாம் அன்புகூர வேண்டும்?
- தனது அயலகத்தானுக்கு அன்பைக் காட்ட சமாரியன் செய்தது என்ன?
- தேவனுடைய பார்வையின் படி நமக்கு அயலான் யார்?

இதைக் குறித்து கல்விநேசன் வீட்டில் வைத்து அவர்கள் தொடர்ந்து பேசுகின்றனர். ஞானம் ஐயா அறிவுரை கூறுகிறார், ''கல்விநேசரே! காயப்பட்டுக் கிடந்தப் பிரயாணியைக் கண்டும் காணாதும் சென்ற மதத்தலைவர்களுக்கு அயலானை நேசிச்க வேண்டும் என்ற கற்பனை தெரியும்தான். ஆனால் அவர்கள் நின்று அவனுக்கு உதவவில்லை. சமாரியர்கள் யூதர்களுக்குக் காலம் காலமாக விரோதிகள். ஆனாலும் காயம்பட்டுக் கிடந்த யூதப்பயணிக்கு உதவ சமாரியன் நின்றான். தேவையில் இருக்கும் ஒருவன் எதிரியாக இருந்தாலும் தேவ பார்வையில் அவன் நமக்கு அயலானே. எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்றே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.''

“நான் தயாளரை நேசிக்க வேண்டுமா?”
“நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”
“ஆமாம் என்றுதான் தோன்றுகிறது”

“தேவன் அன்பாக இருக்கிறார். நாம் அவரைப் போல இருக்கவே உருவாக்கப்பட்டோம். அவர் நம்மில் அன்பாய் இருப்பது போலவே, அவரில் அன்பாய் இருக்கவும், ஒருவருக்கு ஒருவர் அன்பாய் இருக்கவும் அவர் நம்மை சிருஷ்டித்தார். இயேசுவைப் பற்றிப் பேசுவதால் மட்டுமே பயன் இல்லை. நாம் ஒருவருக்கொருவர் பயனுள்ள அன்பை செலுத்த வகை தேடும் போது, நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதை ஜனங்கள் அறிகிறார்கள். தேவன் நமக்கு செய்யக் கூடியவற்றில் மட்டுமே அக்கறை உள்ளவர்களாய் இனியும் இருக்கக் கூடாது.”



“பயனுள்ள அன்பு என்றால் என்ன?”

“இயேசு கட்டளை இட்ட காரியங்களைச் செய்யும்போதே அன்பு பயனுள்ளதாக மாறுகிறது. நமது ஆராதனைகளும், எல்லா சபை நடவடிக்கைகளும் இந்த முதல் கற்பனையில் இருந்தே எழுகின்றன. நாம் நமது அயலகத்தாரிடம் உள்ள அன்பை அவர்களுக்கு உதவும் போதே காட்ட முடியும். குறிப்பாக அவர்கள் தேவையின் நடுவில் தத்தளிக்கும்போது”

கட்டிப் பச்சை திராவகம் அடங்கிய குப்பிகளுடன் ஞானசூனியர் கல்விநேசன் வீட்டுக் கதவருகில் வருகிறார். “இது குரல் டானிக்” அவர் அறிவிக்கிறார். “சகாயரே! தினம் ஒரு கரண்டி இந்த மருந்தை ஒரு மாதத்துக்குக் குடித்தால் நன்றாகப் பாட முடியும். ஞானம் ஐயா, உங்கள் பிரசங்கத்தை வெகு தூரத்தில் இருந்தே மக்களால் கேட்க முடியும். இதை நான் இந்தப் பூனையின் மூலமாக நிரூபிக்கிறேன்.” அவர் ஒரு கரண்டி மருந்தைப் பூனையின் வாய்க்கு நேராக நீட்டுகிறார். முகர்ந்து பார்த்த பூனை சீறிக் கொண்டு அவரது விரலைக் கடித்து விடுகிறது. ஞானசூனியர் எல்லோரையும் திட்டுகிறார், “இப்படி நீங்கள் சிரிக்க அவசியமில்லை. எப்படி நடந்து கொள்வது என்று உங்களுக்குத் தெரியவில்லை.”

சாரா அவருடைய விரலுக்குக் கட்டுப்போட்டு விட்டு சொல்லுகிறாள், “நம்மை மோசமாக நடத்துகிறவர்கள் மேலும் அன்பு செலுத்த வேண்டும் என்று இயேசு கட்டளை இடுகிறார். அது உங்களுக்குத் தெரியுமா, ஞானசூனியரே! இன்று காலை நான் மத்தேயு 5:44 ல் வாசித்தேன்.”

“ஆனால் உங்களை துன்புறுத்தும் எதிரியை ஒன்றும் செய்யாமல் அப்படியே விட்டுவிட முடியாது. தன்னை மோசமாக நடத்தக் கூடியவர்கள் என்று நினைத்தால் அவர்களைக் கடிக்கப் பூனைக்கு கூடத் தெரிகிறது. தவறு செய்பவர்கள் அதற்காக துன்பம் அடைந்தால் தான் தவறு மீண்டும் நடக்காது” “கேளுங்கள்” ஞானம் ஐயா குறுக்கிடுகிறார் “**மன்னிக்காத ஊழியக்காரன்** பற்றி நான் கூறுகிறேன்.”

## பயிற்சி

**மத்தேயு 18:21-35** ல் காண்க:

- ராஜா எவ்வளவு கடனை மன்னித்தான்?
- அந்த ஊழியக்காரன் ஏழையான உடன் வேலைக்காரனை எவ்வாறு நடத்தினான்?
- மன்னிக்காத ஊழியக்காரனுக்கு ராஜா என்ன செய்தான்?

கல்விநேசனின் வீட்டில் அவர்கள் தொடர்ந்து அன்பையும் மன்னிப்பையும் குறித்துப் பேசுகிறார்கள். ஞானம் ஐயா விளக்குகிறார், “மன்னிக்கும் போதே நமது எதிரிகளுக்கு நமது அன்பைக் காட்டுகிறோம். இவ்வாறே இயேசு நம்மை மன்னித்தார். நமது சபைக் குடும்பத்திற்குள் வரவேற்பதின் மூலம் நாம் புதிய விசுவாசிகளுக்கு நமது அன்பைக் காட்டுகிறோம். நமது சீஷர்கள் பேசுவதை கவனித்துக் கேட்டு, பயனுள்ள ஊழியம் அமைய அவர்களுக்கு உதவி செய்யும்போது அவர்களுக்கு நமது அன்பைக் காட்டுகிறோம். எல்லா விசுவாசிகளுக்கும் ஏதோ ஒரு வகையான சிறந்த ஊழியம் அமைய, போதிப்பவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று எபேசியர் 4:11-12. கூறுகிறது.”

ஜெபத்துக்குப் பின் கல்விநேசன் பெருமூச்செறிகிறார், “நான் தயாளரை மன்னிப்பேன். ஆனால் அவரை வெறுப்பதை நிறுத்த முடியாது. சாரா! தயவுசெய்து அவரது குடும்பத்துக்கு கொஞ்சம் உணவு சமைத்துக் கொடு. நான் அவர்களுக்கு உதவுவேன்.”

அவர் ஒரு பெரிய கூடையில் ரொட்டி, முட்டை, மற்றும் பிற உணவுப் பொருட்களைக் கொண்டு சென்று தயாளருக்குத் தருகிறார். அவர் நன்றியுணர்வோடு பார்க்கிறார். கல்விநேசன் கூறுகிறார், “உங்களுக்குத் தேவை வேலை. ஆனால் முழு நாளும் உங்களால் வேலை செய்ய முடியாது. உங்களுக்கு போதிய பலம் வரும் வரை என் கடைக்கு வந்து பகுதி நேரம் வேலை செய்யுங்கள். நான் செய்யும் மரப்பெட்டிகளுக்கு வண்ணம் பூசுவது போன்ற மென்மையான வேலைகளைச் செய்யலாம். களைப்படையும் போது வேலையை நிறுத்திவிட்டு ஓய்வு எடுக்கலாம். குடும்பத்துக்குத் தேவையான வருமானமும் வரும்.”

தயாளர் கல்விநேசனை சற்று நேரம் பார்க்கிறார். “ரொம்ப நன்றி! காலையில் நான் கடையில் இருப்பேன்.”

சில வாரங்கள் கழித்து அவர் கல்விநேசனிடம் கூறுகிறார், “இப்போது முழுநேரம் கற்றுக் கொடுக்க என்னால் முடியும். கேளுங்கள். கடந்த வருஷம் நமக்கிடையே ஒரு தகராறு ஏற்பட்டது. நான்தான் தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். தரவேண்டிய பாக்கியை நான் தந்து விடுவேன்.” தயாளர் சபை ஆராதனைகளில் கலந்து கொள்ளத் தொடங்குகிறார். சில நாட்களில் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெறுகிறார்.

ஒரு துதி ஆராதனையில் ஞானம் ஐயா அந்த சபைக் குழுவிடம் கூறுகிறார், “தேவன் உங்களுக்கு ஒரு நல்ல தலைவரைத் தந்துள்ளார். எனது துணை இல்லாமலேயே கல்விநேசர் இப்போது ஆராதனையை நல்லமுறையில் நடத்துகிறார். அதை வேதாகம முறைப்படியே செய்கிறார். நீங்கள் எல்லோரும் கலந்து கொள்ளுகிறீர்கள், நீங்கள் சாட்சி சொல்லுகிறீர்கள், புத்திமதி கூறுகிறீர்கள், மனப்பாடமாய் வசனம் சொல்லுகிறீர்கள், வேதாகமக் கதைகளை நாடகமாக நடிக்கிறீர்கள். ஒருவர் வேதபகுதியை வாசித்தப் பின், அல்லது ஒரு கதையைக் கூறிய பின் கல்விநேசர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லுகிறீர்கள். 1 கொரிந்தியர் 12 ம் அதிகாரத்தில் பவுல் இதைத்தான் செய்யுமாறு கூறினார். இவை எல்லாம் வேதாகமத்தின் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வகையில் ஆரோக்கியமாகவும் இருக்கின்றன. வேதாகமம் எப்படி கூறுகிறதோ அப்படியே வழிநடத்தக் கூடிய ஒரு தலைவரைத் தந்ததற்காய் நீங்கள் யாவரும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.”

கல்விநேசன் வீட்டில் நடந்த கூட்டம் முடிந்ததும் எல்லோரும் போன பிறகு ஞானசூனியர் ஞானம் ஐயாவிடம் சொல்லுகிறார், “கல்விநேசன் பெருமை அடையும்படி செய்து விட்டீர்கள். ஆனால் அவர் வழிநடத்தும் முறை எனக்குப் பிடிக்கவில்லை. நமது குழுவில் உள்ள புதிய ஜனங்கள் குழறுகிறார்கள்; கேள்விகளுக்கு மடத்தனமாக பதில் அளிக்கிறார்கள். அவர் அவர்களுக்கு அதிக இடம் அளிக்கிறார். அவர்களுக்கு அதற்கான

தகுதி இன்னும் வரவில்லை. அவர் அவர்களுக்கு அதிகப்படியான சுதந்திரம் வழங்குகிறார். கண்டிப்பான தலைவர் குழுவிற்குத் தேவை. நான் இதைவிட நன்றாக வழி நடத்துவேன்!''

''இல்லை! இல்லை!'' ஞானம் ஐயா வேதனைப்படுகிறார். ''தேவ கிருபையில் நீங்கள் மிகவும் கருமித்தனமாக இருக்கிறீர்கள். **பொறாமைப்பட்ட வேலைக்காரர்கள்** கதையைக் கேளுங்கள்.''

## பயிற்சி

**மத்தேயு 20:1-16** ஐ வாசித்துக் காண்க.

- நம்மைப் போல் கிறிஸ்துவுக்காக கடுமையாக உழைத்துப் பாடுபடாத புதிய விசுவாசிகளைக் குறித்த நமது மனநிலை என்னவாக இருக்க வேண்டும்?

ஞானசூனியர் ஞானம் ஐயாவிடம் குறிப்பிடுகிறார், ''உங்கள் போதகத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பழைய விசுவாசிகளான நமக்கு தேவ கிருபையில் உள்ள அதே உரிமை புதிய விசுவாசிகளுக்கும் உண்டு!''

''தேவன் நமக்குக் காட்டிய அதே அளவு கிருபையுடன் தான் நாம் அவர்களை சபைக்குள் வரவேற்கிறோம்.''

கல்விநேசன் வருகிறார். சபையங்கத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்த ஞானம் ஐயா அவர்களை அவசரப்படுத்துகிறார். **நாம் ஒன்றாய் இருக்கவும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கவும் இயேசுவின் ஜெபம்** பற்றி கூறுகிறார்.

## பயிற்சி

**யோவான் 17:20-2**3 ஐ வாசித்துக் காண்க:

- நமக்கு என்ன செய்யும்படி இயேசு தேவனை வேண்டினார்?
- நம் ஒருவருக்கு ஒருவரிடையே உள்ள ஒற்றுமை எந்த வகையில் பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய தேவனுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையைப் போல் இருக்கிறது?
- தேவன் தம்மை அனுப்பியதை இந்த உலகம் எவ்வாறு அறியும் என்று இயேசு கூறினார்?

ஞானம் ஐயா, ஞானசூனியரையும் கல்விநேசனையும் பார்த்துக் கூறுகிறார், ''நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஒத்துப் போக வேண்டும். சபையில் தேவமக்கள் இணைக்கப்பட்டு இருக்கிறார்கள். இயேசுவுக்குள் நாம் அனைவரும் ஒன்றே. எங்கே இருந்தாலும், அன்போடு இயேசுவுக்குக் கீழ்ப்படிய ஒன்று சேர்ந்த ஒரு மக்கள் கூட்டமே ஒரு சபையாகும். நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி, ஒருவரை ஒருவர் கட்டவே தேவன் விரும்புகிறார். தனியாக, அவனவனுக்கு ஏற்ற முறையில் தம்மைப் பின்பற்ற நமக்கு இயேசு கூறவில்லை. நாம் சேர்ந்து அதைச் செய்கிறோம்.''

''நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறோம் என்றால் அர்த்தம் என்ன?'' கல்விநேசன் கேட்கிறார்.

''கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியானவர் நம்மை இணைக்கும் விதத்தை மனித அறிவால் விவரிக்க முடியாது. யோவான் 17 ம் அதிகாரத்தில் இயேசு, அவர் தேவனில் ஒன்றாய் இருப்பது போல நாமும் அவரில் ஒன்றாக இருப்பதாக கூறுகிறார்.''

''என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' ஞானசூனியர் முனகுகிறார்,'' ''என்னால் புரிந்து கொள்ள முடியாததை நான் நம்ப மாட்டேன்.''

''கொலோசெயர் 3:1-7 வெளிப்படுத்துவது போல, கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கும் நமது புதிய பரிசுத்த வாழ்க்கையையும், தேவ இருப்பின் இரகசியத்தையும் எந்த ஒரு மனிதனும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. நாம் எப்படி புரிந்து கொள்ளுகிறோம் என்பது தேவனுக்கு மிக முக்கியமான விஷயம் அல்ல. அவர் நமது கீழ்ப்படிதலுக்கே முதன்மை அளிக்கிறார். நாம் நிறையக் கொள்கைகளைக் கற்றுக் கொள்ளலாம். அதுவும் நல்லதே. ஆனால், இயேசுவுக்குக் கீழ்ப்படிய கற்றுக் கொள்வது மிக நல்லது. இரண்டையும் செய்வது நிச்சயமாக சிறப்பான விஷயம். கற்றுக்கொள்ளவும், கீழ்ப்படியவும் வேண்டும். அது கிறிஸ்துவின் சரீரமான சபையை பலப்படுத்தும்.''

“சபையை ஏன் கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கிறீர்கள்?” கல்விநேசன் கேட்கிறார்.

“புதிய ஏற்பாட்டு சபை கிறிஸ்துவின் சரீரமே. அது ஒரு கட்டிடமோ சபைப் பிரிவோ அல்ல. தேவனை ஆராதித்து சேவிக்கக் கூடும் மக்களை குறிப்பிடுகிறோம். சபையின் அங்கமாக ஒரே மெய் தேவனிடமும், ஒருவருக்கொருவரும் நடைமுறை அன்பைக் காட்ட கற்றுக் கொள்ளுகிறோம்.”

“அன்பு ஏன் இவ்வளவு முக்கியமானது” ஞானசூனியர் ஞானம் ஐயாவிடம் கேட்கிறார்.

“நாம் செய்யும் எல்லாவற்றிலும் பரிசுத்தமான நோக்கம் கொண்டது அதுவே. இயேசு அது குறித்து என்ன சொன்னார் என்பது உங்களுக்கு நினைவு இருக்கிறதா, கல்விநேசன்?”

“ஆமாம். அவர் **உபாகமம் 6:4-5** லிருந்து பழைய கற்பனையை உறுதிப்படுத்தினார். இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடம் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக!”

“தேவன் அன்பு கூருகிற ஒருவர் என்று நாம் விசுவாசித்தால் மட்டுமே அன்பு கூரும் தேவனை தரிசிப்பது சாத்தியமாகும்” ஞானம் ஐயா கூறுகிறார்.

“புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அன்போடு இயேசுவுக்குக் கீழ்ப்படிய ஒன்று கூடினர். மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றபின் அவர்கள் அப்போஸ்தலர்களுடைய போதகங்களை வாழ்க்கையில் கடைபிடித்தனர் என்று அப்போஸ்தலர் 2 கூறுகிறது. அன்போடு கூடிய ஐக்கியத்தைப் பேணி, மனதார கொடுத்து, கர்த்தரின் பந்தியை ஆசரித்து, வல்லமையாக ஜெபித்தார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒற்றுமையாக அன்போடு கீழ்ப்படிந்ததின் மூலமே ஆதி சபை ஸ்தாபிக்கப்பட்டது. தேவனிடத்தில் பிறந்த மெய் அன்பால் மகிழ்ச்சியோடு கூடிய கீழ்ப்படிதல் உருவாகிறது. இதுவே நம் விசுவாசத்தின் சாராம்சம்.”




## நடைமுறைப் பணிகள்

- உங்கள் சபை அன்பில் வேர் கொண்டு கட்டப்பட ஜெபிக்கவும்.
- லூக்கா 10:27 ல் உள்ள இயேசுவின் அன்பு செலுத்துவது பற்றிய கற்பனையை மனப்பாடம் செய்ய உங்கள் சபைக்கு உதவவும்.
- உலக மற்றும் ஆவிக்குரிய தேவையில் உள்ள மக்களுக்கு உதவும் வகைகளை சபை மக்களுக்கு ஏற்படுத்தித்தரவும்.
- ஒவ்வொருவருக்கு இடையிலும், சபைகளுக்கு நடுவிலும், அன்பான ஒற்றுமையைக் கட்ட, சபையாக, அதற்கேற்ற நடவடிக்கைகளுக்காகத் திட்டமிடுங்கள்.

## II – 5 கிறிஸ்துவின் கட்டளை #5
# ஜெபி

சில நாட்கள் கழித்து, கடைவீதியில், ஒரு வாகன ஓட்டியுடன் இயேசுவைப் பற்றி ஞானம் ஐயா பேசிக்கொண்டு நின்றார். அப்போது தயாளர் பரபரப்பாய் வந்து, ‘‘போலீஸ் உங்களைக் கைது செய்யத் திட்டமிட்டுள்ளனர். ஒருவர் பேசுவதை ஒட்டுக் கேட்டேன். பொது இடங்களில் நீங்கள் இயேசுவைக் குறித்து அப்பட்டமாகப் பேசுவதை அதிகாரிகள் விரும்பவில்லை’’ என்று கிசுகிசுத்தார்.

‘‘அவர்கள் துரிதமாக கல்விநேசனின் கடைக்கு வந்தனர். ஞானம் ஐயா சொல்லுகிறார், ‘‘இனி எவ்வளவு நாள் உங்களிடம் வருவேன் என்று தெரியவில்லை. ஆபத்து மிரட்டும் போது மட்டுமல்ல,ஜெபம் எப்போதும் நமது அன்றாக நடைமுறையாக இருக்க வேண்டும் என்பதை நான் போகுமுன் உங்களுக்கு உறுதிசெய்ய விரும்புகிறேன். யோவான் 16:24ல் இயேசு நம்மை ஜெபிக்கும்படி கூறுகிறார். அப்பொழுது நமது சந்தோஷம் நிறைவாய் இருக்கும். மரணத்தை எதிர் நோக்கியபோது செய்த **இயேசுவின் முக்கிமான ஜெபத்தைப்** பற்றி கூறுகிறேன் கேளுங்கள்.




**மத்தேயு 26:36-46** ஐ வாசித்து காண்கஃ
- இயேசு எங்கு ஜெபித்தார்?
- யாரிடம் இயேசு ஜெபித்தார்?
- இயேசு மிகுந்த வியாகுலத்துடன் ஜெபித்தார் என்பதை உணர்த்திய அவரது ஜெப நிலை (Posture) என்ன?
- தமது முதல் விண்ணப்பத்தை கை விட்டுவிட்டு, தம்மை ஒப்புக் கொடுக்கும் படியாக வழிநடத்திய இயேசுவின் மாபெரும் ஜெப விருப்பம் என்ன?

ஞானம் ஐயா, கல்வி நேசனிடமும் தயாளரிடமும் மரக்கடையில் வைத்துப் பேசுகிறார், ‘‘ தாம் மரணத்தை சந்திக்க ஆயத்தம் ஆகும் வரை தமது பிதாவிடம் விடாமல் விண்ணப்பிக்கிறார். அவர் சிலுவையில் மரணமடைய விரும்பவில்லை. ஆனாலும் அவர் தமது பிதாவாகிய தேவனின் சித்தத்துக்குக் கீழ்ப்படிய மிகவும் விரும்பினார். அது ‘‘இல்லை’’ என்பதாக இருந்தாலும் பிதாவின் பதிலே சிறந்த பதில் என்று அவர் நம்பினார். நாமும் நமது சொந்த விருப்பத்தையே கேட்டுக் கொண்டு இராமல், தேவனை நம்பி, உற்சாகமாக ஜெபித்துக்கொண்டே இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.’’

‘‘நீங்கள் எங்களை விட்டு நீங்கிப் போய்விடக்கூடாது என்று நான் ஜெபித்தேன்.’’ தயாளர் கூறுகிறார்.

“தேவன் நான் போக வேண்டும் என்று விரும்பலாம். தேவசித்தம் எதுவாக இருந்தாலும் அதைக் காட்டும்படி, இயேசுவைப் போல, பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிதாவிடம் நாம் ஜெபிப்போம். சென்ற வாரம் நான் ஜெபத்தைக் குறித்து போதித்ததை ஞாபகம் வைத்திருக்கிறீர்களா?”

“ஆம்” கல்வி நேசன் பதில் அளிக்கிறார். “நாம் இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம். தேவனிடம் செல்வதற்கான ஒரே வழி அவரே. நாம் வேண்டுவதை பிதாவின் சமூகத்தில் சென்று, தைரியமாக நேரடியாக கேட்கும் உரிமையை அவரது சிலுவை மரணமே நமக்கு சாத்தியமாக்கித் தந்தது என்று எபிரேயர் 4:16 வெளிப்படுத்துகிறது. நாம் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஜெபங்களை இப்போதும் நமது பாவசுபாவமே தடுத்துக்கொண்டு இருக்கிறது. இயேசுவே நமது ஒரே மத்தியஸ்தர்.”

தயாளர் மேலும் கூறுகிறார், “செத்தவர்களிடத்தில் குறி கேட்க வேண்டாம் என்று வேதாகமம் உபாகமம் 18:11ல் குறிப்பிடுகிறது. நான் இயேசுவை அறியுமுன் அதைச் செய்தேன். கடந்த வருஷம் கல்விநேசன் செய்து கொடுத்த நாற்காலிகளுக்குப் பணம் கொடுக்கக்கூடாது என்று என் முன்னோர் ஒருவரின் ஆவி என் மனதில் சொல்வதாக நான் நினைத்தேன். இயேசு அந்த ஆவிகளிடம் இருந்த பயத்தில் இருந்து என்னையும் என் குடும்பத்தையும் இரட்சித்தார். எந்த அசுத்த ஆவியையும் விட வல்லமை அவருக்கு உண்டு என்பதை இப்பெழுது நாங்கள் அறிகிறோம்.”

ஞானம் ஐயா தெளிவுபடுத்துகிறார், “நாம் எல்லா ஜெபங்களையும் தேவனை நோக்கியே செய்ய வேண்டும். மேலும் கிறிஸ்துவின் நாமத்தினாலேயே ஜெபிக்க வேண்டும். அவருக்கே வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும் பிதாவாகிய தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை மத்தேயு 28:18 வெளிப்படுத்துகிறது”.

தயாளர் ஞானம் ஐயாவிடம் கேட்கிறார், “மற்ற எல்லாவற்றையும் விட வல்லமையாக ஜெபிக்கும் தனி முறை ஏதாவது உண்டா? ஒரே ஜெபத்தைப் பல முறை திரும்பக் கூறுவதினாலும், சத்தமாகக் கேட்பதாலும், என் ஜெபத்தை அருள தேவன் மிகவும் விரும்புவாரா? தமது மருமகனின் சபையில் ஜெபிப்பதுபோல் ஜெபித்தால் தேவன் நமது ஜெபத்தைக் கேட்பார் என்று ஞானசூனியர் கூறினார்.”

“வேதாகமத்தில் காண்கிறபடி நாம் பல்வேறு விதங்களில் ஜெபிக்கலாம். நாம் நின்று கொண்டு, உட்கார்ந்து, முழங்கால் ஊன்றி, படுத்துக்கொண்டு, சத்தமாக, அமைதியாக, தனியாக, மற்றவர்களோடு ஜெபிக்கிறோமா என்பதில் தேவன் அக்கறை கொள்வதில்லை. குழப்பமின்றி முழு இருதயத்தோடு ஜெபிப்பதையே தேவன் விரும்புகிறார். வீண்வார்த்தைகளோடும், மக்களைக் கவர அதிக வசனிப்போடும் செய்யப்படும் ஜெபங்களைக் குறித்து இயேசு மத்தேயு 6ல் எச்சரித்துள்ளார். கைதுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும் முன், தமது மிகுந்த தேவையையும் பிதாவுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்ததையும் காட்டும் வண்ணம் இயேசு தரையில் முகங்குப்புற விழுந்து ஜெபித்தார். வேதாகமத்தில் பிறர் இருந்தும், நின்றும், முழங்காலூன்றியும், கைகளை உயர்த்தியும் ஜெபித்தனர். மக்கள் வெவ்வேறு விதமாக ஜெபித்தனர். அவர்கள் பேசியும், பாடியும், இசைத்தும் குழுவாக சேர்ந்தும், அமைதியாகவும் ஜெபித்தனர். நமது உடலின் நிலை எப்படி இருக்கிறது என்பதை வைத்து நமது ஜெபம் வல்லமையாக இருப்பதில்லை. அவர் கேட்கிறார் என்று உறுதியாக நம்பி, நேர்மையாக நமது உள்ளத்தை தேவனிடம் ஊற்றும்போதே ஜெபம் வல்லமை உள்ளதாக இருக்கும்.”

கல்விநேசன் தொடர்கிறார், “சில வேளைகளில் பிதாவிடம் மன்றாட இயேசு தனிமையாகச் சென்றார். பரலோகத்தில் உள்ள நமது பிதாவோடு கூடிய உறவை பலப்படுத்த நாமும் தனியாக ஜெபிக்கிறோம். இயேசு பொதுமக்கள் முன்னிலையில் ஜெபித்தார். நாமும் நமது சகோதர சகோதரிகளின் மத்தியில் கிறிஸ்துவுக்குள் சத்தமாக ஜெபிப்போம்”.

ஞானம் ஐயா கூறுகிறார், “எப்படி ஜெபிக்க வேண்டும் என்று இயேசு போதிப்பதை கூறும் கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன். நமது உடலின் நிலையை விட முக்கியமான ஜெபத்துக்குரிய பல காரணங்களை அவர் நமக்குத் தருகிறார்.”

## பயிற்சி

கர்த்தரின் ஜெபம் என்று சிலர் கூறும் இந்த ஜெபத்தை மத்தேயு 6:1-13 ல் வாசிக்கவும். தினமும் ஜெபிக்க இந்த காரணங்களை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் காண்க:

- தேவனைத் துதிக்க
- தேவ ராஜ்யம் விரிவடைய

- நமது தேவைகளைக் கேட்க
- மன்னிப்பு கோர
- தீமையில் இருந்து காக்க

தச்சுக்கூடத்தின் கதவருகில் நின்று கேட்டுக்கொண்டு இருந்த ஞானசூனியர் உள்ளே வருகிறார், ‘‘நான் ஒரு பெரிய வீட்டை கடவுளிடம் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அது இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. மன உந்துதல் வரும் சமயத்தில் மட்டுமே தேவன் ஜெபத்துக்குப் பதில் தருகிறார். அவர் தேவனாய் இருப்பதால் தான் செய்வதையே செய்கிறார். இதைக் குறித்து நாம் ஒன்றும் செய்ய இயலாது.’’

‘‘தேவன் நமக்குப் பதில் தருகிறார்.’’ ஞானம் ஐயா கூறுகிறார். ‘‘ஆனால் 1 யோவான் 3:21-22 கூறுவது போல நமது ஜெபத்துக்குப் பதில் நமது கீழ்ப்படிதலைப் பொறுத்துள்ளது. நான்கு பாவங்கள் நமது ஜெபத்தைத் தடுக்கின்றன: மன்னிக்கத் தவறுதல், சுயநலம், விசுவாசம் இன்மை, பிறரிடம் அன்பு இல்லாமை. நாம் இந்த பாவங்களை அறிக்கை இட வேண்டும். நாம் அவ்வாறு செய்யும்போது உண்மையுள்ள தேவன் நம்மை மன்னித்து, நமது இருதயத்தை மாற்றுவார் என்று 1 யோவான் 1:18-10 வாக்களிக்கிறது.’’

அதேநாள் மாலை, கல்விநேசன் விசுவாசிகளைத் தன் இல்லத்தில் கூட்டி, போலீசிடம் இருந்து ஞானம் ஐயாவைக் காக்கும்படி ஜெபிக்க வேண்டுகிறார். அப்போஸ்தலா 4:29-31 ல் காணும் புதிய ஏற்பாட்டு சபை போல அவர்கள் உற்சாகமாய் ஜெபிக்கின்றனர். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை ஜனங்களிடத்தில் எடுத்துச்செல்ல அனுக்கிரகம் செய்யுமாறு அவர்கள் தேவனிடத்தில் வேண்டுகின்றனர்.

## நடைமுறைப் பணிகள்

- மத்தேயு 6:9-13 ல் உள்ள கர்த்தரின் ஜெபத்தை மனப்பாடம் செய்ய சபை மக்களுக்கு உதவவும்.
- குடும்பத் தலைவர்கள் தங்கள் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தினமும் தனியாகவும் குடும்பமாகவும் ஜெபிக்க அறிவுரை கூறுவதற்கு உதவுங்கள். தனிமையாக ஜெபிக்க ஏற்ற நேரம் பொதுவாக அதிகாலை ஆகும்.
- குடும்ப ஜெபத்திற்காக தனியாக ஒரு நேரத்தை ஒதுக்குமாறு, ஒவ்வொரு குடும்பத்தையும் கேளுங்கள்.
- தேவன் ஜெபத்துக்கு பதில் தரும்போது அதை சபைக்கு அறிவித்தால் மற்றவர்கள் உற்சாகமடைவார்கள்.
- மக்களைக் கவர பெரிய வார்த்தைகளையும், திரும்பத்திரும்பக் கூறுதலையும் தவிர்த்து, உள்ளத்தின் ஆழத்தில் இருந்து உண்மையாக ஜெபிக்க உங்கள் சபையாருக்குக் கற்றுக்கொடுங்கள்.

## II – 6 – கிறிஸ்துவின் கட்டளை #6
# அப்பம் பிட்டு பகிர்ந்தளி

ஒரு நாள் அதிகாலையில் கல்விநேசன் ஞானம் ஐயாவின் மருமகன் வீட்டிற்குப் போகிறார். ஞானம் ஐயாவைப் போலீஸ் கைதுசெய்து விட்டதோ என்று அவருக்கு அச்சம். அவர் அங்குதான் இருந்தார். ''நீங்கள் என் வீட்டிற்கு வரவேண்டும்'' கல்விநேசன் மன்றாடினார். ''அவர்கள் உங்களைப் பிடிக்க வந்தால் உங்கள் மருமகன் எச்சரிக்கை தருவார். நாங்கள் உங்களை ஒளித்து வைப்போம். இப்போதே வாருங்கள். கர்த்தரின் பந்தியை ஆசரிக்க வேண்டும். அனைவரும் காத்துக் கொண்டு இருக்கின்றனர். நீங்கள் தான் வழி நடத்த வேண்டும்.''

ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், ''நான் வருகிறேன். ஆனால் இப்போது முதல் நீங்கள்தான் ஆராதனையை நடத்த வேண்டும். எப்படி என்று உங்களுக்குக் காட்டி இருக்கிறேன்.''

ஞானம் ஐயா ஆயத்தம் செய்து உதவ, கல்விநேசன் தன் வீட்டில் ஒரு கலந்தாலோசனையை நடத்துகிறார். அப்பம் பிட்குதல் பற்றிய கர்த்தரின் கட்டளையையும், அவரது சரீரத்தில் பங்கேற்கும் இரகசியத்தையும் அந்தக் குழு பேசுகிறது. கல்விநேசன், அப்பமும் பாத்திரமும் இருக்கும் மேசையை சுட்டிக்காட்டி, ''வேதாகமத்தில் இருந்து தாம் அறிந்து கொண்டபடி ஞானம் ஐயா கர்த்தரின் பந்தியை எவ்வாறு ஆசரிப்பது என்று நமக்குக் காட்டியுள்ளார். கர்த்தரின் பந்தியை நாம் ஏன் ஆசரிக்க வேண்டும் என்பதைப் பற்றி பேசுவோம்.'

## பயிற்சி

- அப்பமும் பாத்திரமும் என்ன என்று இயேசு கூறியதை மத்தேயு 26:26-27ல் காண்க
- கர்த்தரின் பந்தியை ஆசரிக்க இயேசு சொன்ன காரணங்களை லூக்கா 22:1-22ல் காண்க
- 1 கொரிந்தியர் 11:23-34ல் காண்க
- ஒரு முழுவிருந்தோடு ஒருபோதும் கர்த்தரின் பந்தியை ஏன் இணைக்கக் கூடாது?
- கர்த்தரின் பந்தியில் யார் கலந்துகொள்ள வேண்டும்?



தனது வீட்டில் கூடி இருந்த சபைக்கு கல்விநேசன் தொடர்ந்து விளக்கம் அளிக்கிறார். ''அப்பம் தமது சரீரம் என்றும், பானம் புது உடன்படிக்கைக்கான தமது இரத்தம் என்றும் இயேசு கூறுகிறார். இந்த ஆசரிப்பின் போது கர்த்தர் நமக்கு மிக அருகில் இருப்பதை நாம் அறிகிறோம். இந்த தேவனுக்கும் நமக்கும் இடையிலான புது உடன்படிக்கை இயேசுவின் மூலம் அவருக்கு அருகில் நம்மை வரவிடுகிறது. இயேசுவின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நமக்கு புதிய, பரிசுத்த, நித்திய வாழ்க்கை கிடைக்கிறது. இதை நாம் அப்போஸ்தலர் 2:38 மற்றும் எவிரேயர் 9:15 ல் பார்க்கிறோம். கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதின் மூலம் நாம் தேவ கிருபையில் நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறோம்.''

''அதை ஏன் புதிய உடன்படிக்கை என்று அழைக்கிறீர்கள்?'' தயாளர் கேட்கிறார்.

கல்விநேசன் தயங்குவதால் ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், ''இயேசு மரித்து உயிர்த்தெழுவதற்கு முன் மனிதனுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக மிருக பலியை ஏற்றுக்கொண்டார். இது பழைய இஸ்ரவேல் தேசத்தை மோசே வழிநடத்தியபோது அதனுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை ஆகும். இந்தப் புதிய உடன்படிக்கை இயேசுவின் இரத்தத்தை அடிப்படையாகக் கொண்டது. மீறுகிறபோது சட்டங்கள் மரணத்தை கொண்டுவரும். ஆனால் அதுபோல் அல்லாமல் தேவன் இப்போது தமது பரிசுத்த ஆவியை அளித்து நமது இருதயத்தை புதுப்பித்து வழிநடத்துகிறார். நாம் பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின் கீழ் இனியும் இல்லை. ரோமர் அத்தியாயங்கள் 1-8 இதை விவரிக்கின்றன.''

கல்விநேசன் கூறுகிறார், ''இயேசு வரும்வரை அவரை நினைவு கூரவும், அவரது கிருபாதார பலியான மரணத்தில் நமக்குள்ள விசுவாசத்தைக் காட்டவுமே நாம் கர்த்தரின் பந்தியை ஆசரிக்கிறோம். இதில் நடைபெறும் இரகசியத்தை நாம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும் என்ற அவசியம் இல்லை.''

''அது சரிதான்.'' ஞானம் ஐயா உறுதிப்படுத்துகிறார். ''நமது கீழ்ப்படிதலுக்கு உரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவே நாம் தொடர்ந்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கிறோம். கர்த்தரின் பந்தியை மறக்கும் ஒரு சபை கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது இல்லை. சரீரமாகிய நாம் ஒருவருக்கு ஒருவர் இடையில் உள்ள ஒற்றுமையையும், ஒன்றாக தலையாய கிறிஸ்துவோடு நமக்கு உள்ள ஒற்றுமையையும் காட்டுவதே கர்த்தரின் பந்தி. இப்போது கல்விநேசன் நமக்கு அதைப் பரிமாறுவார்.''

ஞானம் ஐயா கல்விநேசனிடம் கேட்கிறார், ''கர்த்தரின் பந்தி எதில் பங்கேற்க நமக்கு உதவுகிறது என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?''

சில விநாடி சிந்தித்த கல்விநேசன் பின் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறார், ''அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்கேற்பது என்பது கர்த்தரின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கேற்பது என்று 1 கொரிந்தியர் 10:16-17 கூறுகிறது. எனவே கர்த்தரின் பந்தியை நாம் ஆசரிக்கும் போது வேதவசனங்களை வாசித்து அவர் நமது உள்ளத்தில் கிரியை செய்ய அவரை நாம் விசுவாசிக்கிறோம். அவரது இயற்கை கடந்த கிரியை நமக்குள் இருக்கிறதே தவிர உயிரற்ற அப்பத் துணிக்கைகளில் அல்ல. மத்தேயு 26:26-28ல் சொல்லுவதையே நாமும் சொல்லுகிறோம், ''வாங்கிப் புசியுங்கள்: இது என் சரீரமாய் இருக்கிறது. பானம் பண்ணுங்கள், இது புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்.''

கர்த்தரின் பந்தி முடிந்ததும் ஞானசூனியர் சத்தமாகக் கூறுகிறார், ''கர்த்தரின் பந்தி ஒரு பரிசுத்தமான ஆராதனை. ஒரு இறையியல் பட்டம் பெற்ற போதகர் இதற்குத் தேவை என்று என் மருமகன் கூறுகிறார். அடிக்கடி இதை ஆசரித்தால் ஒரு பயபக்தி இல்லாமல் போய்விடும்.''


ஞானம் ஐயா இதை ஒத்துக்கொள்ளவில்லை, ''அப்போஸ்தலர் 20:7 சொல்லுகிறபடி புதிய ஏற்பாட்டு சபை வாரத்தின் முதல் நாள் கூடி அப்பம் பிட்டனர். வாரம் ஒரு முறை அப்பம் பிட்கவேண்டும் என்று கர்த்தர் அறிவுறுத்தவில்லை. ஆனால் அப்போஸ்தலர்கள் நமக்கு முன் மாதிரி தந்துள்ளனர். அது புதிய சபையில் கட்டுப்பாட்டையும் துதியையும் பலப்படுத்துகிறது. சிறியதோ, பெரியதோ எந்த ஒரு விசுவாசிகளின் கூட்டத்தையும் கர்த்தரின் பந்தியை ஆசரிக்க ஊக்கப்படுத்த வேண்டும். ஒரு நன்றாகப் படித்தப் போதகர் வரும் வரை தமக்குக் கீழ்ப்படிவதற்கு காத்திருக்க வேண்டும் என்று கர்த்தர் கூறவில்லை. கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய மனித சம்பிரதாயங்கள் தடுக்குமானால் அது கேடு பயக்கும்.''

ஞானசூனியர் குற்றம் சாட்டுகிறார், ''சகாயரின் மனைவி ராகேல் என் மனைவியுடன் மூன்று வாரத்துக்கு முன் சண்டை இட்டாள். இது மறக்கப்படும் வரை நாம் ஒருவரும் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளக் கூடாது. ராகேல் குறைந்தது ஆறு மாதங்கள் இதை எடுக்கக் கூடாது. இவற்றை என் மருமகன் கூறினான்''

''ஞானசூனியரே! கிறிஸ்துவின் மேலும், ஒருவருக்கு ஒருவர் மீதும் உள்ள அன்பைக் கொண்டாடவே கர்த்தரின் பந்தி என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதாலேயே நாம் இதைச் செய்கிறோம். சபையில் ஒருவர் பாவம் செய்துவிட்டார் என்பதற்காகவே நாம் எல்லோருக்கும் பந்தியை மறுக்கக் கூடாது. அப்படியானால் யாருமே ஒருபோதும் பங்கேற்க முடியாது. தவறு செய்யும் மக்களை நீண்ட காலமாக நீக்கி வைத்து தண்டிக்கும் ஒரு சாட்டையாக நாம் இதை பயன்படுத்துவதில்லை. தவறு செய்யும் விசுவாசி மனந்திரும்பும் போது அவரை மீண்டும் உடனே சேர்த்துக் கொள்ளுகிறோம் என்று கலாத்தியர் 6:1 போதிக்கிறது. நாமும் இதையே செய்தோம். ஆம் நம்முடைய பாவங்கள் தேவனோடு கூடிய நம் உறவையும், சில சமயம், பிற விசுவாசிகளோடு உள்ள உறவையும் பலவீனப்படுத்துகிறது. ஆனால், அறிக்கையிட்டு மனம் திரும்பும் போது, தேவன் நமது ஐக்கியத்தைப் புதுப்பிக்கிறார். 1 யோவான் 1:9 வாக்களிப்பது போல, நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டால், நமது பாவங்களை நீக்கி, மீறுதல்கள் அற சுத்திகரிக்க அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார். சகாயரின் மனைவி ராகேல் உங்கள் மனைவியிடம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டார். எனவே அவரை கர்த்தரின் பந்திக்கு வரவேற்றோம்.''

ஞானசூனியர் கருவுகிறார், "அவரை மன்னிக்க நீங்கள் விரும்பலாம். ஆனால் என்னால் முடியாது."

ஞானம் ஐயா உறுதியாக அறிவுறுத்துகிறார், "ஒரு சபை குறை கூறுதலையும், புறங்கூறுதலையும் வளர்ப்பதில்லை. மாறாக தேவனித்தில் திரும்பும் வகையைக் காண மக்களுக்கு உதவுகிறது. ராகேல் தனது பாவத்தை தேவனிடம் அறிக்கையிட்டார். அவரும் அவரை மன்னித்து விட்டார். சபையும் அவரை மன்னித்தேயாக வேண்டும். திரும்பவும் சீர்பொருத்தும் வண்ணமாக தவறு செய்யும் விசுவாசிகளைக் குறித்து நாம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் மனம்திரும்பாதவர்களை என்ன செய்யலாம் என்பது குறித்தும் பார்ப்போம்."



## பயிற்சி

• விசுவாசிகளைத் திருத்த எடுக்கும் நடவடிக்கைகளை மத்தேயு 18:15-17 ல் காண்க.

கல்விநேசனின் வீட்டில் கர்த்தரின் பந்தியை ஆசரித்து முடிந்தபின், ஞானம் ஐயா சபையாரிடம் கூறுகிறார், " நான் இப்போது விடை பெறுகிறேன். நான் போக வேண்டும். தேவன் ஒருநாள் மீண்டும் என்னை இங்கே கொண்டு வருவார்." அவரது கண்களில் நீர். பலர் விம்மி அழுகிறார்கள்.

கல்விநேசன் கூறுகிறார், " ஞானம் ஐயா இந்த சபையை நேசித்தார். நாம் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய போதித்தார். அவர் சென்ற பிறகும் நாம் நல்ல சபையாகத் திகழ வேண்டும். நாம் புதிய சபைகளை ஸ்தாபிக்கவும் தேவையான எல்லாவற்றையும் செய்தார். நாங்கள் யாவரும் உங்களுக்கு நன்றி சொல்லுகிறோம், சகோதரரே."

"பொறுங்கள்!" ஞானம் ஐயா கூறுகிறார், "நான் ஒன்றை மறந்து விட்டேன். செய்ய வேண்டிய இன்னொருகாரியம் உண்டு." அவர் ஒரு மூப்பராகத் தேவையானவை குறித்து வாசிக்கிறார்.

## பயிற்சி

ஒரு மூப்பர் ஆகத் தேவையானவற்றை தீத்து 1:1-9 ல் காண்க.

ஞானம் ஐயா சபை மக்களுக்குக் கூறுகிறார், "பயபக்தி உள்ள தலைமை இல்லாவிட்டால் ஒரு சபை முழுமையானதாக இருக்காது. கல்விநேசனின் கிறிஸ்தவ வாழ்க்கையை கடந்த சில மாதமாக கவனித்து வருகிறேன். அவர் வேதாகமம் கூறும்ஒரு மூப்பரின் தகுதிகளைக் கொண்டவராக இருக்கிறார். அவரது தம்பி சகாயரும் அவ்வாறே. இந்த மந்தையின் முழுப்பொறுப்பை எடுக்கத் தேவையான தேவ அபிஷேகத்தைப் பெற உங்கள் இருவர் மேலும் நான் கைகளை வைக்கப் போகிறேன்."

ஞானசூனியர் குற்றம் சாட்டுகிறார், "எங்கள் தலைவர்களை இவ்விதம் அதிகாரப்படுத்துவது உங்களுக்கு உரியதல்ல, ஞானம் ஐயா. நீங்கள் வெளியாள். நீங்கள் இந்த சமுதாயத்தைச் சார்ந்தவருமல்ல, சபையைச் சேர்ந்தவரும் அல்ல. எனது மருமகன், வெளியே உள்ள பேராயர் ஒரு சபையின் தலைவர்களை நியமிக்கக் கூடாது என்று கூறுகிறார். அந்தியோகியா சபை செய்தது போல, சபையே தன் தலைவர்களை நியமிக்க வேண்டும்."

“உங்கள் மருமகன் சிலவிஷயங்களைக் கவனிக்கத் தவறிவிட்டார்.” ஞானம் ஐயா பதில் கூறுகிறார், “அந்தியோகியா சபை அப்போஸ்தலர் 13:1-3 ல் செய்ததுபோல தலைவர்களை நியமிக்க முடிந்தது. ஏனெனில் அது முதிர்ந்த ஊழியர்களை உடைய வளர்ந்த சபையாக இருந்தது. ஆனால் கிரேத்தாவில் சபை புதிதும், அனுபவமுள்ள தலைவர்கள் அற்றதுமாய் இருந்தது. எனவே பவுல் வெளியில் உள்ள தீத்து என்ற அனுபவமுள்ள ஊழியரைப் பார்த்து புதிய தலைவர்களை நியமித்து ஆயத்தப்படுத்துமாறு தீத்து 1:5ல் கூறுகிறார். ஆகவே, நான் உங்களுக்காக செய்வது போல, அந்த புதிய சபைக்கு தீத்துவும் கண்காணிப்பாளராக செயல்பட்டார்”.

ஞானம் ஐயா கல்விநேசனிடமும் சகாயரிடமும் கூறுகிறார், “இந்த சபைக்கு நீங்கள் இருவருமே மூப்பர்கள். நீங்கள் விசுவாசத்தில் இளமையாக இருந்தாலும், வழிகாட்ட வேதாகமமும், வல்லமையளிக்க பரிசுத்த ஆவியானவரும் உண்டு. கல்விநேசரே, நான் உங்களைப் பயிற்றுவித்தது போலவே, நீங்களும் தொடர்ந்து சகாயரை பயிற்றுவிக்க வேண்டும். சகாயரே நீங்கள் மற்றவர்களை பயிற்றுவித்து புதிய சபைகளை ஆரம்பிக்க வேண்டும். நான் உங்களுக்கு கடிதம் எழுதுவேன். முடியும் போது வருவேன்”

“நாங்கள் நம்புகிறோம்” கல்விநேசன் கூறுகிறார்.

“உங்கள் சபையை உண்மையாய் வழிநடத்த நீங்கள் இருவரும் விருப்பம் உள்ளவர்களாய் இருக்கிறீர்களா? எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிய சபைக்குக் கற்றுக் கொடுப்பீர்களா? 1 பேதுரு 5:1-4 கட்டளை இடுவது போல, இந்த சபைக்கு சேவை செய்யும் வகைகளைக் கண்டறிய இந்த மக்களுக்கும் எல்லா விசுவாசிகளுக்கும் தாழ்மையோடு சேவை செய்வீர்களா?”

கல்விநேசரும் அவரது தம்பியும் சபையாருக்கு முன் பயபக்தியாய் உறுதிமொழி தருகின்றனர், “நாங்கள் தேவனுடைய உதவியுடன் தேவ மக்கள் மேல் அக்கறை எடுத்துக் கொள்ளுவோம்.”

ஞானம் ஐயா குழுவினரைக் கேட்கிறார், “நீங்கள் தேவனுடைய உதவியுடன் இந்த தலைவர்களுக்காக ஜெபிக்கவும், அவர்கள் தேவ வார்த்தையை போதிக்கும் போது கீழ்ப்படியவும், ஊழியத்துக்கு உங்களை ஆயத்தப்படுத்தும் போது ஒத்துழைக்கவும் உறுதிமொழி அளிக்கிறீர்களா?”

ஞானசூனியரைத் தவிர யாவரும். “ஆமென்” என்று பதில் அளிக்கிறார்கள்.

கிரேத்தாவில் புதிய மூப்பர்களுக்கு தீத்து செய்தது போல, பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களாக அபிஷேகம் செய்யும்படி ஞானம் ஐயா கல்விநேசன் மற்றும் சகாயர் மேல் கைகளை வைத்து ஜெபிக்கிறார்.

அந்தக் குழு முழங்காலிட்டு ஜெபிக்கிறது. சிலர் விம்முகின்றனர். தேவ மந்தையை தானும் தன் தம்பியும் மேய்க்க ஏதுவாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தம்மிடம் இருப்பதை கல்விநேசன் அறிகிறார்.

## நடைமுறைப் பணிகள்

- மத்தேயு 26:26-28 ஐ மனப்பாடம் செய்க. இதனால் கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் போது கிறிஸ்து பேசிய அதே வார்த்தைகளை உங்களால் பேச முடியும்.
- மனந்திரும்பி வந்தவர்களுக்கு தொடர்ந்து கர்த்தரின் போஜனத்தை அளியுங்கள்.
- புதிய சபைகளுக்கு கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் அறிவுரைகளையும் அதிகாரத்-தையும் அளிக்கவும்.




# II - 7 - கிறிஸ்துவின் கட்டளை #7
# கொடு

கல்விநேசன் வீட்டில், விசுவாசிகள் ஞானம் ஐயாவுக்கு விடைகொடுத்து கலைந்து போகின்றனர். அவர் கல்விநேசனுடன் ஜெபிக்கக் காத்திருக்கிறார். யாரோ கதவைத் தட்டுகிறார்கள். ஒரு போலீஸ்காரர் நிற்கிறார். அவர், “ஞானம் ஐயா, எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இப் பகுதியை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று சொல்லவே வந்திருக்கிறேன். நீங்கள் நல்லவராக இருப்பதால் உங்களைக் கைது செய்யாமல் அனுப்புவதே நான் உங்களுக்குச் செய்யும் உதவி. உடனே சென்று விடுங்கள் அல்லது உங்களை சிறையிலிட நேரிடும்'' என்று கூறுகிறார்.

ஞானம் ஐயாவின் வழிப்பயணத்திற்காக சாரா வேகமாக ஒரு பையில் உணவுப் பொருட்களால் நிரப்புகிறார். அவர் கூறுகிறார், “நீங்கள் பெருந்தன்மை உடையவர்கள். நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். கல்விநேசரே, லூக்கா 6:38 சொல்லுவது போல, எல்லோருக்கும் கொடுத்தல் பற்றிய இயேசுவின் கற்பனைக்குக் கீழ்ப்படிய கற்றுக் கொடுக்க வேண்டும்.

“இவர்களில் சிலர் மிகவும் ஏழைகள். பணம் இல்லாதவர்களும் இருக்கின்றனர்.''

“அவர்கள் வேறு பொருட்களைக் கொடுத்து தேவையில் இருப்பவர்களுக்கு உதவி சபைக்கு சேவை செய்யலாம். கல்விநேசரே, நான் உங்களுக்கு சேவை செய்தது போல நீங்களும் பிறருக்கு சேவை செய்ய வேண்டும். தங்கள் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் மேல் அதிகாரம் செலுத்த விரும்பும் உலகத்தலைவர்கள் போல் இருக்கக் கூடாது. அதிகாரத்தின் மேல் பேராசை வேண்டாம். புதிய சபைகளின் மூப்பர்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தைக் கூறும் வாய்ப்புகளைத் தேட வேண்டும்.''



“நிச்சயமாக'' கல்விநேசன் உறுதி கூறுகிறார்.''

“நான் இதை என் பரிசாகத் தருகிறேன்.'' ஞானம் ஐயா தனது வேதாகமத்தைக் கொடுக்கிறார். “இதைப் படிக்கும் போது, நான் கற்றுக் கொடுத்தவைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.''

“போவதற்கு முன் எங்களுக்கு இன்னொரு வேதாகமக் கதையைக் கூறுங்கள். பஸ் வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்.''

**“தாராளமாய்க் கொடுத்த விதவை**யைப்பற்றி நாம் வாசிப்போம்.''

## பயற்சி

**லூக்கா 21:1-4** ல் காண்க:

- தனக்கு உள்ளது எல்லாவற்றிலும் அந்த விதவை எவ்வளவு கொடுத்தாள்?
- பணக்காரனின் காணிக்கையோடு ஒப்பிட்டு, அவளது காணிக்கையை தேவன் எவ்வாறு அளந்தார்?

ஞானம் ஐயா விளக்குகிறார், “அந்த விதவை தன் ஜீவனத்துக்கு உள்ள எல்லாவற்றையும் கொடுத்தாள். 100%? பழைய ஏற்பாட்டில், மக்கள் தங்களுக்குக் கிடைப்பவற்றில் 10% தேவனுக்குத் தர வேண்டும் என்பது கட்டளை. ஆனால் புதிய ஏற்பாட்டில் நம்மை ஊக்கப்படுத்துவது அந்தச் சட்டம் அல்ல. அந்த விதவையைப் போல, நம்மால் முடிந்ததைக் கொடுக்க தேவ அன்பு நம்மை ஊக்கப்படுத்துகிறது. 1 கொரிந்தியர் 16:2 ல் பவுல் அப்போஸ்தலர் கர்த்தருடைய காரியங்களுக்காக ஒவ்வொரு வாரமும் கொஞ்சத்தை ஒதுக்கி வைக்கும்படி கொரிந்து கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிறார். நமது நிகர வருமானத்தில் 10% நல்ல ஆரம்பம்.''

கல்விநேசர் ஒத்துக்கொள்கிறார்.

“2 கொரிந்தியர் 9:6-7 ல், மகிழ்ச்சியோடும் உற்சாக மனதோடும் கொடுக்கிறவர்களிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார் என்பது உறுதி செய்யப்படுகிறது. நமக்குள்ள யாவும் தேவனிடத்தில் இருந்து வருகிறது. நாம் அவருக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பதால் உற்சாகத்தோடு கொடுக்கிறோம். நமக்குள்ள யாவற்றிற்கும் அவரே கர்த்தர் என்று நாம் நம்புவதை நமது தாராளம் உணர்த்துகிறது. நம்மைக் காத்து ஆசீர்வதிப்பதாக அவர் அளித்த வாக்குத்தத்தின் மேல் நமக்கு உள்ள நம்பிக்கையை அது காட்டுகிறது.”

கல்விநேசன் மீண்டும் அந்த விதவையின் சுருக்கமான கதையை வாசிக்கிறார். “தேவன் விதவை மற்றும் ஐசுவரியவானின் உள்ளங்களைப் பார்க்கிறார். அவர்கள் என்ன நோக்கத்தோடு கொடுக்கிறார்கள் என்பதை அவர் நோக்கினார். நேர்ந்ததை நிவிர்த்தி செய்யவும், பிறரைக் கவரவும், தனக்கு மீதி இருந்ததில் இருந்து பணக்காரன் தருகிறான். அந்த விதவை இரு சிறு நாணயங்களைப் போடுகிறாள். ஆனால் அது அன்பின் காணிக்கை என்று தேவன் அறிகிறார். எனவே அது ஐசுவரியவானின் காணிக்கையை விட மேலானது என்று கருதுகிறார்.”

மக்கள் தங்கள் காணிக்கைகளை உபயோகித்த சில விதங்கள் பற்றி வேதாகமத்தில் இருந்து கல்விநேசனுக்கு ஞானம் ஐயா சொல்லுகிறார்:

- மூப்பர்களையும் ஊழியர்களையும் தாங்க,
- விதவைகள், அனாதைகள், ஏழைகளுக்கு உதவ,
- பசியாய் இருப்பவர்களுக்கு உதவ,
- பழைய ஏற்பாட்டு தேவாலயத்தைக் கட்ட, பழுதுபார்க்க.

ஞானம் ஐயா விடை பெறுகிறார். கதவுக்கு வெளியே காத்து நின்ற ஞானசூனியர் கூறுகிறார், “நீங்கள் அதிகாரிகளிடம் சென்று அவர்களுக்கு அடங்கி நடப்பதாகக் கூறினால் அவர்கள் உங்களை இங்கேயே இருக்க விடுவார்கள். நீங்கள் ஏன் உங்கள் வாழ்க்கையைப் பாழாக்க வேண்டும்? இந்த வாழ்க்கையில் உங்கள் விசுவாசம் பெரிய நன்மைகளைக் கொண்டு வராது. இயேசுவைப் பற்றி போதிப்பதை விட்டுவிட்டு ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்ளுங்கள்.”


ஞானம் ஐயா பெருமூச்செறிகிறார். “ஞான சூனியரே! நமது நம்பிக்கையின் பாக்கியத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. இப்போது நாம் கொடுப்பது பரலோகத்தில் நமது பலனாக சேர்க்கப்படுகிறது. அப்போஸ்தலர் 1:9-11 சொல்லுவது போல, எப்படிப் போனாரோ அப்படியே இயேசு திரும்பி வர நாம் காத்திருக்கிறோம். அவர் வரும்போது எல்லாம் மாறிவிடும். பரலோகத்தின் ஈவை நாம் பெறுவோம். நித்திய நித்தியமாக குறையாத செல்வம் நம்மிடம் இருக்கும். நான் இப்போது போக வேண்டும். ஞானசூனியரே வெளிப்படுத்தின விசேஷம் **21 ல் இயேசுவுக்குள் நமது எதிர்காலம் எப்படி இருக்கும்** என்பதைக் காண்க.” ஞானசூனியர் “வணக்கம்” என்று மட்டும் கூறிவிட்டு நடக்கிறார். ஆனால் கண்களில் மகிழ்ச்சி பொங்க கல்விநேசன் வேத வாக்குத்தத்தத்தை வாசிக்கிறார்.

## பயிற்சி

**வெளிப்படுத்தின விசேஷம் 21:1-9** ல் காண்க

- புதிய ராஜ்யத்தில் தேவன் யாரோடு வாழ்வார்?
- பரலோகத்தில் கண்ணீருக்கும் மரணத்திற்கும் என்ன நடக்கிறது?
- தேவனை விசுவாசித்து பாவ வாழ்க்கையை விட மறுக்கும் மக்களுக்கு என்ன நடக்கிறது?

கல்விநேசன் மகிழ்ச்சி அடைகிறார். “நாம் தேவனோடு வாழ்ந்து அவர் ஜனங்களாய் இருப்போம் என்று இது கூறுகிறது.நாம் பூரணமாய் இருப்போம். ஒரு கணவன் அழகான தன் மணவாட்டியை வரவேற்பது போல் அவர் நம்மை வரவேற்பார். அலறுதலும், மரணமும், துக்கமும் இல்லை. எல்லாம் புதிதாகவும் அழகாகவும் இருக்கும். ஞானம் ஐயா! உங்களை நான் மறுபடியும் பார்க்காவிட்டால், தேவன் புதிய வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்கும் போது பார்ப்பேன்.”



“கல்விநேசரே! நாம் ஓர் அற்புதமான ராஜ்யத்தை எதிர்நோக்குகிறோம். எனவே இந்த வாழ்க்கையில் சொத்துக்களையும் அதிகாரங்களையும் சேர்ப்பதற்குக் கவலைப்பட வேண்டாம். இவை முக்கியம் இல்லை. ஏனெனில் இந்த வாழ்க்கை வேகமாகக் கடந்து போகும். தேவன் பணத்தால் உங்களை ஆசீர்வதித்தால் அவைகளைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி தேவனுக்கு சேவை செய்யுங்கள். என்னுடைய முன்னு-தாரணத்தைக் கண்டீர்கள். நான் உங்களுக்கு ஒருபோதும் பாரமாய் இருக்கவில்லை. அப்போஸ்தலர் 20:34-35 ல் தேவன் கூறுவது போல வாங்குவதை விட கொடுப்பதே பாக்கியம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.”

## நடைமுறைப் பணிகள்

- உற்சாகமாய் கொடுப்பதைக் குறித்த வசனம் 2 கொரிந்தியர் 9:6-7 ஐ மனப்பாடம் செய்க. பின் உங்கள் சபை மக்களுக்குக் கற்பியுங்கள்.
- காணிக்கையாக மக்கள் கொடுக்கும் பணத்தையும், அதை செலவு செய்யும் விதத்தையும், எவ்வாறு கணக்கு வைப்பது என்று சபையாரோடு சேர்ந்து திட்டம் இடவும்.
- பொருளாளராக ஒருவரையும், காணிக்கைப் பணத்தை எண்ண ஒருவரையும் நியமியுங்கள்.
- சபையின் தலைவர்கள் அனுமதிக்காத எதையும் செலவு செய்யவோ கடன் வழங்கவோ கூடாது என்று பொருளாளருக்கு அறிவுறுத்துங்கள்.
- பணம் எவ்வாறு செலவு செய்யப்பட வேண்டும் என்ற முடிவை தனியாக மூப்பர் எடுக்கக்கூடாது. எல்லாவற்றையும் தானே எடுத்துக்கொள்ளக் கூடாது.
- காணிக்கை எதற்காக செலவு செய்யப்பட வேண்டும் என்பதை சபையாக திட்டமிடவும். மிகவும் அவசரத் தேவையில் இருக்கும் மக்களுக்கு முதலில் உதவவும்.

# பகுதி III
# அடிப்படை ஊழியங்களைக் கட்டுதல்

பகுதி III ல் உள்ளவை அடிப்படையான புதிய ஏற்பாட்டு ஊழியங்கள் ஆகும். திருப்திகரமாக நீங்களும் உங்கள் சபையும் நிறைவேற்றுபவைகளை ✓ குறியிடவும்.

III - 1 ஊழியம் 1 : சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவித்து புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளி
III - 2 ஊழியம் 2 : ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து ஒருவருக்கொருவர் உதவி செய்து சரீரமாகிய சபையைக் கட்டு.
III - 3 ஊழியம் 3 : தேவனை ஆராதித்து கர்த்தரின் பந்தியை ஆசரி.
III - 4 ஊழியம் 4 : தேவ வார்த்தையைக் கற்று, கற்பித்து, கைக்கொள்.
III - 5 ஊழியம் 5 : புதிய சபைகளை ஸ்தாபி.
III - 6 ஊழியம் 6 : மேய்ப்பர்களையும் (மூப்பர்கள்) பிற தலைவர்களையும் பயிற்றுவி.
III - 7 ஊழியம் 7 : சபைக்குள்ளும் சபைகளுக்குள்ளும் ஐக்கியத்தை வளர்.
III - 8 ஊழியம் 8 : தனிப்பட்ட, குடும்ப பிரச்சினைகள் உள்ள மக்களை சந்தித்து ஆலோசனை வழங்கு.
III - 9 ஊழியம் 9 : திருமணங்களையும் முழுக் குடும்பத்தின் விசுவாசத்தையும் பலப்படுத்து.
III - 10 ஊழியம் 10:பிணியாளிகள், தேவையில் இருப்போர், புறக்கணிக்கப்பட்டோரை ஆதரி.
III - 11 ஊழியம் 11: இயேசுவைப் போலாகி சபையில் கட்டுப்பாட்டைப் பேணு.
III - 12 ஊழியம் 12: தேவனோடு பேசு.
III - 13 ஊழியம் 13: தேவன் தரும் ஆதாரங்களின் நல்ல பராமரிப்பாளனாக இரு
III - 14 ஊழியம் 14: ஊழியர்களை அனுப்பு

## பகுதி III ஐ எவ்வாறு பயன்படுத்துவது

பகுதி III பதினான்கு அடிப்படை ஊழியங்களை அறிமுகப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் சபைகள் ஆற்ற வேண்டும் என்று தேவன் விரும்பும் ஊழியங்களே இவைகள். மேய்ப்பனின் கதைப் புத்தகத்தில் வரும் கல்விநேசனின் சபையைப் போன்று, உங்கள் சபை சந்திக்கும் பிரச்சினைகளும், வாய்ப்புகளும் என்ன என்பதை ஆராய வேண்டும். அதன் பின் ஓர் உணவு விடுதி மெனுவைப் போன்று இந்த ஊழியங்களின் பட்டியலை பயன்படுத்தவும். இந்த காலகட்டத்தில் உங்கள் சபையைப் பலப்படுத்தும் ஊழியம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள கதைகளையும் குறிப்புகளையும் போதித்து அந்தக் குறிப்பிட்ட ஊழியத்தை வளர்த்தெடுங்கள். பின் சத்தியத்தைக் கைக்கொள்ள உங்கள் சபைக்கு உதவுங்கள்.

இந்தப் புத்தகத்தின் முதல் பகுதியில் ஞானம் ஐயா என்ற ஒரு வேத ஆசிரியரை உங்களுக்கு அறிமுகப்படுத்தினோம். அவர் ஒரு கற்பனைப் பாத்திரமே. ஆனால் வேதாகமத்தில் வரும் அப்போஸ்தலர் பவுலைப் போன்றவர். பல நாடுகளில் விசுவாசிகளின் சபையை உருவாக்கும் பணியைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பவுலுக்கு அளித்தார். சுவிசேஷம் அறிவித்து, சபைகளை அமைத்து, மூப்பர்களை நியமித்து பவுல் காரியமாற்றினார். அவர் தீத்து, தீமோத்தேயு போன்ற உடன்பணியாட்களைப் பயிற்றுவித்து, தனக்குப் பின் பணிகளைத் தொடர்ந்து நடப்பித்தார். தான் ஆரம்பித்த சபைகளை ஒருபோதும் மறவாத பவுல், கடிதங்கள் அனுப்பி, அறிவுரை கூறி உற்சாகப்படுத்தினார். சில கடிதங்கள் வேதாகமத்தில் உள்ளன. தீத்துவையும், தீமோத்தேயுவையும் பயிற்றுவிக்க அவர் எழுதிய கடிதங்களும் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன.

பவுலைப் போலவே, ஞானம் ஐயா, கல்விநேசன் என்ற ஒருவருக்கும், அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தாருக்கும் சுவிசேஷம் கூறுகிறார். தச்சுத்தொழிலாளியான அவரைக் கண்டு ஒரு சபையை ஸ்தாபிக்கிறார். அவர்கள் இயேசுவின் அடிப்படைக் கற்பனைகளைப் பின்பற்றவும், ஆராதனையின் போது தேவன் நமக்கு செய்யச் சொன்னவற்றை கைக்கொள்ளவும் ஆரம்பிக்கின்றனர். போலீஸ் கிறிஸ்தவ தலைவர்களுக்கு எதிராக எழும்பி ஞானம் ஐயாவை அவ்விடத்தில் இருந்து கட்டாயமாக வெளியேற்றுகின்றனர். அதற்குப்பின் அவரை கல்விநேசன் வெகுநாளாகப் பார்க்கவில்லை.

சபையின் ஒரு தலைவராக தன் தம்பி சகாயரைப் பயிற்றுவிக்கக் கல்விநேசன் விரும்புகிறார். சகாயர் அதற்குப் பதில் அளிக்கிறார், ‘‘என்னால் சரியாக வாசிக்க முடியாது. ஆனால் என்னால் கிட்டார் வாசித்துப் பாட முடியும்.’’

‘‘இந்தப் பாடங்களை வெகு சீக்கிரமாக உன்னால் படித்து விட முடியும். நான் ஞானம் ஐயாவிடம் கற்றவைகளை உனக்கு போதிக்கிறேன். அவர் அப்போஸ்தலர் பவுலைப் போன்றவர். அவர் தூரத்தில் இருந்து கொண்டே இங்குள்ள தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார். அவர் பாடங்களைத் தபால் மூலம் அனுப்புகிறார். அவர் அனுப்பும் பாடங்களையும் வேதாகமத்தையும் நாம் பயன்படுத்துவோம். மக்களுக்கு சத்தியத்தை நடைமுறைப்படுத்தும் வேதாகமக் கதைகளைக் கொண்டது அப்பாடங்கள்.’’

இந்த மேய்ப்பனின் கதைப்புத்தகம் ஞானம் ஐயா பயன்படுத்தும் கதைகளைக் கொண்டது. இந்த மூன்றாவது பகுதி, கல்விநேசன் தான் கற்றவைகளை எவ்வாறு தனது சீஷர்களுக்கும் சபைக்கும் சொல்லுகிறார் என்பதாகும். இந்த விதமாகக் கல்விநேசன் இயேசுவின் ஏழு அடிப்படைக் கற்பனைகளின் மூலம் தனது சபை ஊழியங்களை வளர்க்க உதவி செய்கிறார். அவர் சகாயரையும் மேலும் பல தலைவர்களையும் பயிற்றுவிக்கிறார். சகாயர் ஒரு புதிய சபையை ஆரம்பிக்கிறார். யாருமே விரும்பாதப் பொருட்களை விற்கும் ஞானசூனியர் கல்விநேசனுக்கு அறிமுகமுள்ளவர். அவர் தனக்கு சாதகமாக ஏதாவது கிடைக்குமா என்ற எண்ணத்தில் சபையில் சேர்கிறார். அவர் கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பால் வரவில்லை. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்கும் கல்விநேசரை அவர் மனச்சோர்வு அடைய வைக்கிறார்.

## III – 1 ஊழியம் 1
# சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச்சென்று புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளி.



தச்சுக் கூடத்தில் கல்விநேசனுக்காக ஓர் ஏணியை செய்தவாறே சகாயர் பாடுகிறார். அப்போது ஞானசூனியர் வந்து வேண்டுகிறார், ''கல்விநேசரே, நீங்கள் காய்கறி காரனுக்கு செய்து கொடுத்த மாதிரி, நான் விற்கும் பொருட்களை கொண்டு செல்ல கனமற்ற ஒரு இரு சக்கரவண்டி செய்து தருவீர்களா? இப்போது என்னால் பணம் தரமுடியாது. ஆனால் பொருட்களை விற்று எளிதாக அடுத்த மாதம் தந்து விட முடியும்.'' கல்விநேசன் கொஞ்ச நேரம் யோசித்து பின் பதிலளிக்கிறார், ''போய் பழைய இரண்டு சைக்கிள் சக்கரங்களையும் சில மரத் துண்டுகளையும் கொண்டு வாருங்கள். நான் செய்து தருகிறேன். ஆனால் இலவசமாக. கடன் வாங்குவதும் கொடுப்பதும் கூடாது என ஞானம் ஐயா எச்சரித்திருக்கிறார்.''

சகாயர் தனது திட்டங்களைச் சொல்லுவதை ஞானசூனியர் நின்று கவனிக்கிறார், ''நான் இன்னொரு சபை நிறுவ விரும்புகிறேன், அண்ணா! உங்கள் வீட்டில் நடக்கும் சபைக்கு, துணை சபை. என்னுடைய இடத்தில் வசிக்கும் சிலர் ஆராதனைக்காக இவ்வளவு தூரம் வருகின்றனர்.''

கல்விநேசன் பதிலுரைக்கிறார், ''இதற்காகவே நான் ஜெபித்துக் கொண்டு இருக்கிறேன். இங்கு வரும் அந்தப் பகுதி மக்களை நான் அதில் கலந்து கொள்ள கேட்பேன். நிறைய பேர் வருவார்கள் என் நினைக்கிறேன்.''

''கூடாது'' ஞானசூனியர் குற்றம் சொல்கிறார், ''இது நமது சபையை இங்கு பலவீனப்படுத்தி விடும்.''



கல்விநேசர் அவரைத் திருத்துகிறார், ‘‘ஒவ்வொரு பகுதியிலும் பல சபைகளை ஆரம்பிக்கும் போதே நாம் வாழும் இந்த மொத்த இடத்தையும் கிறிஸ்துவுக்காக நம்மால் ஆதாயப் படுத்த முடியும் என்று ஞானம் ஐயா கூறினார். நமது பகுதியில் இருக்கும் இந்த சபை ஒரே ஒரு சிறு குழுவாக இருந்து விடக்கூடாது. பல குழுக்கள் இணைந்து இயேசுவுக்காக சந்திக்க முடியும். இந்த பகுதி முழுவதும் சுவிசேஷம் பெரும் கொடியாகப் பரந்து செல்லும்.’’

ஞானசூனியர் சென்றதும் சகாயர் கூறுகிறார், ‘‘எனக்கு அருகில் வாழும் விசுவாசிகளை சுவிசேஷம் கூற உதவுமாறு கேட்டேன். எவ்வாறு என்று எங்களுக்குத் தெரியாது என அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்குப் பயம். அவர்கள் தங்கள் பயத்தை மேற்கொள்ள நான் எவ்வாறு உதவ முடியம்?’’

அச்சத்தைப் போக்குவது பற்றி ஞானம் ஐயா நடத்திய ஒரு பாடம் கல்விநேசனுக்கு ஞாபகம் வருகிறது. அவர் கூறுகிறார், ‘‘உனக்கும் பிறருக்கும் பயிற்சிதர ஞானம் ஐயா பாடங்களைக் கொடுத்துச் சென்றுள்ளார். வேதாகமத்தில் வரும் எத்தனை மனிதர்கள் தேவனைப் பற்றி விசுவாசத்தோடும் தைரியத்தோடும் பிறருக்கு சொல்லி இருக்கிறார்கள் என்பது இந்த வேதபாடங்களில் ஒன்று. அவர்களைப் போல விசுவாசத்தை நடைமுறையில் எப்படி காட்டுவது என்று உனக்கு உதவி செய்பவர்களுக்கு விளக்க இது உதவும். இயேசுவைக் குறித்து பேசும்போது அவர்கள் பிரச்சினைகளை எதிர் கொள்வார்கள். **தாவீதும் கோலியாத்தும்** என்ற கதை தைரியத்துக்கு ஓர் உதாரணம் ஆகும்.’’

## பயிற்சி

பயம் என்ற இராட்சசனை எப்படி எதிர்ப்பது என்பதை **1 சாமுவேல் 17:1-51**ல் காண்க.

- மேய்ப்பனாக இருந்த போது தாவீது செய்த நல்லவேலைகள் எவ்வாறு அவனை ஓர் அபாயகரமான மனிதனோடு சண்டையிட ஆயத்தப்படுத்தியது?
- ஒரு படைவீரனின் ஆயுதங்கள் இன்றியே அரக்கனை தோற்கடிக்க முடியும் என்று தாவீது எவ்வாறுஉறுதியாய் இருந்தான்?

ஏணியை செய்து கொண்டே கல்விநேசன் விவரிக்கிறார், ‘‘மேய்ப்பனாக இருக்கும் போதே அபாயகரமான சூழ்நிலைகளில் தாவீது தேவன் மேல் நம்பிக்கையாய் இருக்கக் கற்றுக்கொண்டான். அவன் தேவனைத் துதிப்பதிலும் தேவ வார்த்தைகளை படிப்பதிலும் நேரத்தை செலவழித்தான். இது கோலியத்தைப் பயமின்றி எதிர்க்க அவனை ஆயத்தப் படுத்தியது. இதுபோல் அநேக மனிதர்கள் தேவனுக்கு சாட்சியாக வேதாகமத்தில் காணப்படுகின்றனர். இப்போது இதுபோல் இன்னொரு கதையான **நெருப்பில் நின்ற மூன்றுபேர்** பற்றிக் கேள்.’’



தானியேல் 3ல் காண்க:

- அபாயத்தை அச்சமின்றி ஏன் அவர்களால் எதிர்கொள்ள முடிந்தது?
- தேவனுடைய மகத்துவத்தை இராஜா ஏன் நம்பினான்?

சுவிசேஷத்தை ஊக்கப்படுத்த சகாயர் தாவீதைப் போல தைரியமாய் இருப்பது பற்றி ஒரு பாடல் எழுதுகிறார். அந்தப் பாடல் அவர்கள் இருதயத்தைத் தொடுகிறது. பயம் இப்போது அவர்களுக்கு ஒரு தடையாய் இருக்கவில்லை. அடுத்தநாள் சகாயர் கல்விநேசனின் தச்சுக்கூடத்திற்கு வந்து கேட்கிறார், சிறந்த முறையில் சுவிசேஷம் அறிவிப்பது குறித்து வேதாகமத்தில் உதாரணங்கள் உள்ளனவா? எங்களுக்கு உதவி வேண்டும்’’.

“மரம் அறுப்பதை நிறுத்திவிட்டு கலிவிநேசன் குறிப்பிடுகிறார், **கொர்நேலியுவும் முதல் புறஜாதி சபையும்** என்பதைப் படி. சுவிசேஷம் அறிவித்தலுக்கு மூன்று வழிகாட்டுதலைக் காணலாம்.”

**சுவிசேஷம் அறிவித்தலுக்கு முதல் வழிகாட்டல்: ஆயத்தப்படு** என்பதைக் கல்விநேசன் விவரிக்கிறார். “நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். சிறப்பாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் பேதுருவை ஆயத்தப்படுத்தினார்.”

சகாயர் அறிந்து கொண்டதை **அப்.10:1-33** ல் காண்க:

- அவனைக் காண மனிதர்கள் யோப்பா பட்டிணத்துக்கு வந்து கொண்டிருந்த போது பேதுரு என்ன செய்து கொண்டிருந்தான்?
- மற்றவர்கள் அவனைப் போல ஆவதற்குக் காத்துக்கொண்டு இராமல், அவன் அவர்களிடத்திற்குப் போய் அவர்களுடைய வெவ்வேறு வழிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் பேதுருவுக்கு எவ்வாறு காட்டினார்?
- பேதுருவுடனும், படைவீரர்களுடனும் செசரியாவுக்கு சென்றது யார்?
- செசரியாவில் கொர்நேலியுவுடன் தனக்காக வேறுயார் காத்துக் கொண்டிருப்பதை பேதுரு கண்டான்?
- சுவிசேஷ பிரசங்கத்தைத் தொடங்குமுன் பேதுரு கொர்நேலியுவுக்கு எவ்வாறு மரியாதை காட்டினான்?

சகாயர் மணல்தாளால் தேய்த்து ஒரு மேசையை முடிக்க கல்விநேசருக்கு உதவுகிறார். பேதுரு சுவிசேஷம் அறிவிக்க எவ்வாறு ஆயத்தப்பட்டார் ஏ்னபதைப் பற்றி பேசுகிறார்கள்.

கல்விநேசன் விவரிக்கிறார், “அவர் கீழ்வரும் காரியங்களைச் செய்து ஆயத்தப்பட்டார்”:

1) ஜெபம்

2) தேவனுடைய வழிகாட்டுதலை கேட்டல்.

- பேதுரு ஜெபிக்கும் போது, தாம் ஒவ்வொருவரையும் ஏற்றுக் கொள்ளுவதைக் காட்டினார். நம்மைப் போல் ஜனங்கள் ஆவதற்கு காத்திராமல், நாம் முதலில் அவர்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்லுகிறோம்.

3) ஒரு பணிக்குழுவை அமைத்தல்

- பேதுரு தனியாகச் செல்லாமல் பிறரையும் தன்னோடு அழைத்துச் சென்றார். நாமும் மக்களுடைய வீடுகளுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் கொண்ட குழுவாகச் செல்ல வேண்டும்.

4) பொதுமக்களிடம் செல்லாமல் தேவ வார்த்தையை கேட்க விரும்புவோரைத் தேட வேண்டும்

- செசரியா சென்றபோது அங்கு சுவிசேஷத்தைக் கேட்க கொர்நேலியுவின் நண்பர்களும் உறவினர்களும் காத்துக் கொண்டிருந்ததைப் பேதுரு கண்டார்.

5) தேடுபவரின் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் மரியாதை காட்ட வேண்டும்.

- ஏன் தன்னை அழைத்தார்கள் என்று கேட்டும், அவர்கள் பேசுவதை கவனித்துக் கேட்டும் பேதுரு தமது மரியாதையைக் காட்டிய பின்னரே பேசத் தொடங்கினார். கொர்நேலியுவைப் போன்று மக்கள் செவிசாய்க்கும் போது, நற்செய்தியை அவர்களுடைய குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் கூற நாம் உதவ வேண்டும்.

தச்சுக்கூடத்தில் இணைந்து பணியாற்றிக் கொண்டே கல்விநேசன் சகாயரிடம் **சுவிசேஷம் கூறுவதற்கான இரண்டாம் வழிமுறையான அப்போஸ்தலர்களைப் போல கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருத்தல்** பற்றி எடுத்துரைக்கிறார். “நாம் அனுபவித்தது குறித்தும், நாம் யாவருக்காகவும் அவர் செய்தவைகளைக் குறித்தும் நாம் கிறிஸ்துவுக்காக சாட்சியளிக்கிறோம். இப்போது நீ நன்றாக வாசித்து இதைக் காண்:”

## பயிற்சி

**பேதுருவின் பிரசங்கத்தை அப்.10:34-43** காண்க:

- தன்னைப் பற்றி பேதுரு சொன்ன சாட்சி என்ன?
- இயேசுவைப் பற்றி பேதுரு சொன்ன மூன்று முக்கியமான விஷயங்கள் என்ன?
- தமது உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக சீஷர்கள் என்ன செய்ய வேண்டுமென இயேசு கட்டளை இட்டார்?

கல்விநேசன் விளக்குகிறார், "தேவன் நம்மை மாற்றியதையும், தம்மைப் பற்றிக் கூற அனுப்பியதையும் பேதுருவை போல நாமும் எளிய வார்த்தைகளால் பிரசங்கிக்க வேண்டும். இயேசுவின் நல்லியல்பையும் அதிகாரத்தையும், அவரது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் விவரிக்க வேண்டும். இயேசுவின் நாமத்தில் பாவத்துக்குண்டான மன்னிப்வை வாக்களிக்க வேண்டும்."

கல்விநேசன் சகாயருக்கு, சுவிசேஷம் அறிவிப்பதற்கான மூன்றாவது வழி முறையான புதிய விசுவாசிகளுக்கு அவர்களை தேவனும் அவரது மக்களும் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துதல், பற்றி விளக்குகிறார். "ஏற்றுக்கொள்பவர்களை உறுதிப்படுத்த நாம் என்ன செய்கிறோம் என்பதைக் காணலாம்."

## பயிற்சி

அப்போஸ்தலர் 10:44-48ல் என்ன நடந்தது என்று காண்க"

- இயேசுவின் மரணத்திற்குப் பின், மக்கள் இருதயத்தில் பரிசுத்த ஆவி வந்திறங்கிய மாபெரும் நிகழ்ச்சியாக பேதுரு கண்டது என்ன?
- பரிசுத்த ஆவியின் கிரியையைஉறுதிப்படுத்த உடனடியாகப் பேதுரு செய்தது என்ன?

கடையில் இணைந்து பணியாற்றியவாறே கல்விநேசன் தனது தம்பி சகாயருக்குக் கூறுகிறார், "கூடி இருந்த மக்கள் தேவ செய்தியை நம்பினார்கள் என்று கண்டதும் பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார். பரிசுத்த ஆவி இறங்கியதால் அவர்கள் மனந்திரும்பினார்கள் என்றும், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றும் அவர் அறிந்தார்.அவர் மேலும் காலதாமதம் செய்யாமல் ஆவியின் கிரியையை ஞானஸ் நானத்தால் உறுதிப்படுத்தினார். மத்தேயு 28:18-20 ல் உள்ள சீஷராக்குதல் பற்றிய இயேசுவின் கற்பனையைப் பேதுரு பின்பற்றினார். இயேசுவினிடத்தில் எவ்வாறு பாவமன்னிப்பைக் கண்டடைவது என்று அவர் கொர்நெலியுவுக்கும் அவரது நண்பர்களுக்கும் கூறினார். அவர்கள் ஆயத்தமானவுடன் அவர்களுக்கு உடனடியாக அவர் ஞானஸ்நானம் அளித்தார். பேதுருவின் தாழ்மையான உடனடி கீழ்ப்படிதலை நாமும் உதாரணமாகப் பின்பற்ற வேண்டும்."

சகாயர் பதிலளிக்கிறார், "நாம் ஏன் வல்லமையாக செயல்பட முடியவில்லை என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நாம் ஜனங்களிடம் போவதை விட்டு, அவர்களை நமது கூட்டங்களுக்கு வருமாறு முதன் முதலில் அழைத்தோம். ஒவ்வொருவரும், குறிப்பாகப் புதிய விசுவாசிகள், தங்களுடைய குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் பேச நாம் உதவி செய்ய வேண்டும்."

கல்விநேசன் நினைவு கூருகிறார், "ஞானசூனியர் தமது மருமகன் சபையைச் சார்ந்த ஒரு பிரசங்கியாரை சுவிசேஷக் கூட்டம் ஒன்றிற்கு அழைத்தார். அவர் பெரிய வார்த்தைகளைப் போட்டு பிரசங்கத்தை சிக்கல் ஆக்கியதால் ஜனங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நிறைய காணிக்கை தருமாறு மக்களைக் கெஞ்சினார்."

"நாம் பேதுருவைப் போல சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்." சகாயர் குறிப்பிடுகிறார். "நான் தயாளரிடம் இன்றிரவு அவருடைய நண்பர்களை சந்தித்து இயேசுவைப் பற்றி கூறமுடியுமா என்று கேட்பேன். ஞானம் ஐயா விட்டுச் சென்ற ஒரு பாடத்தில், சிலர் நம்மை ஏற்றுக் கொள்ள மறுக்கலாம் என்று படித்தேன். யாராவது நாம் கூறுவதைக் கேட்காவிட்டால், வேறு யாரிடமாவது போக வேண்டும் என்று மத்தேயு 10:14ல் இயேசு கூறுகிறார். நமது சொந்தக்காரர்கள் வாழும் பல பகுதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல விரும்புகிறேன். எனக்கு நீங்கள் உதவி செய்வீர்களா?"

கல்விநேசன் பதிலளிக்கிறார், ‘‘நிச்சயமாக ஞானம் ஐயா உன்னையும பிறரையும் பல சபைகளின் தலைவர்கள் ஆக்கி இந்த பகுதி முழுவதும் இயேசுவைப் பற்றி கூறச் சொன்னார். நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கும் மக்களை நானும் சந்திக்க வேண்டும். இதனால் உன்னுடைய வேலையைப் பார்த்து ஞானம் ஐயா என்னைப் பயிற்று வித்தது போல உன்னையும் பயிற்றுவிக்க முடியும். நம்முடைய பலத்தை அல்ல தேவனுடைய பலத்தை சார்ந்து இருக்கும் படி ஞானம் ஐயா கூறினார். ஸ்தேவானின் பயமற்ற சாட்சி பற்றிய கதையைக் கூறுகிறேன்.’’

## பயிற்சி

தன்னுடைய பிரசங்கம் நிராகரிக்கப்பட்ட போதிலும் ஸ்தேவான் எவ்வாறு தேவனுக்கு மகிமை கொண்டுவந்தான் என்பதை **அப்.6:54-7:60**ல் காண்க:

வீட்டுக்கு வெளியே மணி சத்தம் கேட்பதை சாரா கவனிக்கிறாள். மணி கட்டிய தன் வண்டியைத் தள்ளிய படியே ஞானசூனியர் வருகிறார். அவர் அவளிடம் கூறுகிறார், ‘‘இந்த அழகிய மெழுகுவர்த்திகளைப் பாருங்கள். கல்விநேசன் இருக்கிறாரா?’’

‘‘அவர் வேலை செய்து கொண்டு இருக்கிறார்.’’ ஞானசூனியர் ஒரு மெழுகுவர்த்தியை எடுத்துக்காட்டி, ‘‘இந்த மெழுகில் மருந்து கலந்து இருக்கிறது. இதனால் இது பல வண்ணமாக எரியும். அழகாய் இருக்கும் ஒன்றை நான் கொளுத்தி காட்டுகிறேன்.’’ அவர் வீட்டுக்குள் நுழைந்து ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்துகிறார். அது மஞ்சள், சிவப்பு, நீலமாக எரிந்து, பின் பலமாகப் படபடத்து அதன்பின் அணைந்து விடுகிறது. வீடு முழுவதும் புகையால் நிரம்புகிறது. சாரா ஒரு டவலை எடுத்து வீசி புகையை வெளியேற்றுகிறார்.

பக்கத்து வீட்டுப் பெண்ணான தெபோரா ‘‘தீ’’ என்று கத்திக்கொண்டே உதவி செய்ய ஓடி வருகிறாள். அவர்கள் இருமி முடிந்ததும் தெபோரா மகிழ்ச்சியோடு கூறுகிறாள், ‘‘கல்விநேசர் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்த பிறகு நான் மிகுந்த சமாதானத்தையும் பாதுகாப்பையும் உணருகிறேன். இயேசு எப்போதும் என்னோடு இருக்கிறார்.’’

‘‘என்ன?’’ ஞானசூனியர் கூவுகிறார், ‘‘இவ்வளவு சீக்கிரமாக எப்படி உனக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியும்.’’ சாராவைப் பார்த்து அவர் குற்றம் சாட்டுகிறார், ‘‘ இவளுக்கு சட்டத்துக்கு புறம்பான குழந்தை ஒன்று இருக்கிறது. இதனுடைய தகப்பன் யார் என்றே தெரியவில்லை. இப்படிப்பட்டவர்களை உள்ளே அனுமதித்து கல்விநேசர் சபையைப் பாழடித்து விடுவார்.’’

தெபோரா விம்மி அழுகிறாள். ‘‘நான் அந்தப் பாவ வாழ்க்கையை விட்டுவிட்டேன்.’’ அவள் போக முற்படுகிறாள். ஆனால் சாரா அவளைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் அமர வைக்கிறாள்.

திரும்பி கதவை நோக்கி நடந்தவாறே ஞானசூனியர் கத்துகிறார், ‘‘அவளை உங்களை விட எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். அவளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததற்காகக் கல்விநேசர் வருத்தப்படப் போகிறார்.’’ தெபோரா நாக்கை நீட்டி அவரது முதுகைப் பார்த்துப் பழித்துக் காட்டுகிறாள்.

### ஞானஸ்நானம் கொடுக்கும் கிறிஸ்துவின் கற்பனைக்குக் கீழ்ப்படிதல்

சாரா தெபோராவை சமாதானம் செய்யத் தொடங்குகிறாள். கல்விநேசன் குடும்ப ஜெபத்தில் கூறிய **கல்லெறியுண்டு சாகும் தருவாயில் இருந்தப் பெண்**ணைப் பற்றிய கதையை நினைவு கூருகிறாள்.

## பயிற்சி

**யோவான் 8:1-11**ல் காண்க

- பரிசேயர் ஏன் அந்தப் பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்தனர்?
- இத்தகையப் பெண்களை ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாணம் கூறுகிறது?
- மரணத்திற்குப் பாத்திரமான இந்தப் பாவியைப் பரிசேயர் எவ்வாறு நடத்தினர்?
- இயேசு அவளை எவ்வாறு நடத்தினார்?
- இயேசு உலகத்திற்கு வந்துவிட்டதால் பாவியை நியாயம் தீர்க்க யாருக்கு உரிமை இருக்கிறது?

தெபோராவுக்கு சாரா உறுதி அளிக்கிறாள், ''என் அருமை சிநேகிதியே! தேவன் மன்னித்தவர்களுக்கு மனிதன் எவ்வாறு தண்டனை தர முடியும். அவர் உன்னை நேசிக்கிறார். ஞானசூனியர் இந்தக் கதையில் வரும் பரிசேயர்களைப் போல் நடந்து கொண்டார். அவர்கள் அந்தப் பெண்ணின் மேல் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் இயேசுவினிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவே அவளை அவரிடத்தில் கொண்டு வந்தனர். எல்லார் முன்னிலையிலும் நிறுத்தி அவர்கள் அவளை அவமானப் படுத்தினர். இயேசு பூரணராய் இருந்தார். அவள் மேல் கல்லெறியும் தகுதி அவரிடம் இருந்தது. அவர் அவளை நியாயம் தீர்க்கவில்லை. அவளை அவர் மரணத்தில் இருந்து விடுவித்தார். அவர் உன்னையும் மரணத்தில் இருந்து விடுவித்துவிட்டார்.

''இயேசு உலகத்திற்கு வரும் முன், ஜனங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கூற தேவன் மோசேக்கு தனது நியாயப்பிரமாணங்களைக் கொடுத்தார். அது விக்கிரக ஆராதனை, கொலை, களவு, பொய், விபச்சாரம் ஆகியவற்றை செய்யக்கூடாது என்று கூறியது. இந்த நியாயப்பிரமாணத்தைப் பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறோம். இந்த நியாயப்பிரமாணம், தேவன் பரிசுத்தர், பாவத்தை சகிக்கக் கூடாதவர் என்று கூறியது. இந்தப் பிரமாணத்தை மீறினால் மரணம் நிச்சயம். நியாயப்பிரமாணத்தைப் பூரணமாக கடைபிடித்தவர் இயேசு ஒருவர் மட்டுமே. அவர் மரித்த உடன், நம்மை மரணத்துக்கு ஏதுவாக நியாயந்தீர்க்கும் இந்த பிரமாணத்துக்கு முடிவு கட்டினார்.''

''நீ தேவனிடம் இயேசுவின் நாமத்தினால் பாவமன்னிப்பைக் கோரியதால் நாங்கள் உனக்கு ஞானஸ்நானம் கொடுத்தோம். அவர் உன்னை மரணத்தில் இருந்து இரட்சித்து பதிய ஜீவனையும் அளித்தார். அவர் உனக்கு பரிசுத்த ஆவியாகிய வரத்தையும் தந்துள்ளார். நாங்கள் உனது விசுவாசத்தையும், தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் ஞானஸ்நானம் மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறோம். நீ நியாயப்பிரமாணத்தின் படி கிறிஸ்துவுடனே கூட மரித்துவிட்டாய். இயேசுவுக்குள் புதிய வாழ்க்கை பெற்று எழுந்தும் விட்டாய். இயேசுவின் பூரணமான மன்னிப்பை ஞாபகம் வைத்துக் கொண்டு இனிமேல் ஒருபோதும் பாவம் செய்யாதே''

கல்விநேசன் வீட்டிற்குத் திரும்பிவந்ததும் சாரா, ஞானசூனியர் தெபோராவிடம் கூறியதைக் கூறுகிறாள். ''ஞானசூனியர் போன்ற அரைகுறை மக்கள், ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமானால் எல்லாவிதத்திலும் நீ பூரணமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். இது ஞானஸ்நானத்தின் அர்த்தம் அல்ல அப்படியானால் நாங்கள் பரிசுத்தர் என்று பொய் கூறத் துணியும் ஒரு சிலர் தவிர வேறுயாரும் ஞானஸ்நானமே எடுக்க முடியாது. புதிய விசுவாசிகள் முதிர்ந்தவர்களாக இருந்தாலும் இயேசுவை பெற்றுக்கொள்ளும் போது அவர்கள் தேவனுடைய பார்வையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் போலவே இருக்கிறார்கள். அவர்கள் பல தவறுகளைச் செய்கின்றனர். அவர்களுக்கு நமது உடனடி அன்பும், அக்கறையும், ஏற்றுக்கொள்ளுதலும் ஞானஸ்நானத்தின் மூலம் தேவைப்படுகிறது.''

## இயேசுவின் ஞானஸ்நானம்

தெபோரா அழுவதை நிறுத்துகிறாள். ''நான் மறுபடியும் பாவத்தில் விழுந்து விடுவேனோ என்று பயப்படுகிறேன். நான் மிகவும் பலவீனமுடையவள். என்னால் தேவனுக்கு எப்படி சேவை செய்யமுடியும்?'' சாரா அவளுக்கு மத்தேயு 3 ல் உள்ள **இயேசுவின் ஞானஸ்நானம்** பற்றிய கதையைச் கூறுகிறாள்.''

### பயிற்சி

**மத்தேயு 3ம் அதிகாரத்தில்** காண்க:

- ஒரு பாவியாக இருந்ததாலா அல்லது பாவிகளின் பக்கம் இருந்ததாலா இயேசுவுக்கு ஞானஸ்நானம் தரப்பட்டது?

**மத்தேயு 4ம் அதிகாரத்தில் காண்க:**

- இயேசுவை சோதித்து சாத்தான் செய்யும்படி தூண்டிய மூன்று காரியங்கள் என்ன?
- தன்னைத் தொழுதுகொண்டால், தான் என்ன செய்வதாக சாத்தான் இயேசுவுக்கு வாக்களித்தான்?

**இரண்டு அதிகாரங்களையும்** மீண்டும் ஞாபகப் படுத்துங்கள்: (மத்தேயு 3-4)

- தமது சீஷர்களைத் தெரிந்து எடுத்து பொது ஊழியத்தை ஆரம்பிக்கும் முன்னா அல்லது பின்னா இயேசு ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார்.

தெபோரா ஆச்சரியமாக "இயேசு ஒரு பாவியல்ல. என்னைப் போன்ற அல்லது அந்த விபச்சார ஸ்திரியைப் போன்ற பாவிகளை குற்றம் சாட்ட தாம் வரவில்லை என்பதை அவர் எல்லோருக்கும் எடுத்துக்காட்டினார். நான் இப்போது புரிந்து கொள்ளுகிறேன். அவர் ஞானதூனியரைப் போன்றவரல்ல. இயேசு நம் பக்கம் நிற்கவே வந்தார். இயேசுவின் ஞானஸ்நானம் இதையே உணர்த்துகிறது. அவர் ஞானஸ்நானம் எடுத்து அதன் பின் தேவனுடைய தூதுவராக தன் பணிகளைத் துவங்கினார். இயேசுவைப் போலவே, இப்போது நானும் ஞானஸ்நானம் எடுத்துவிட்டதால், தேவனுக்கு சேவை செய்வதை ஆரம்பிக்கலாம்."

"ஆம்! நிச்சயமா!" சாரா ஆமோதிக்கிறாள். "தாமதமாக வந்த வேலையாட்கள் என்ற கதையைக் கேள். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக தேவன் நமக்கு வேலைகளைத் தருகிறார்."



**மத்தேயு 20:1-16 ல்** காண்க:

- நேரத்தைக் கருதாமல் வீட்டெஜமான் ஒவ்வொரு வேலையாட்களுக்கும் கூறியது என்ன?
- முதலில் வந்தவர்கள் கடைசியில் வந்தவர்கள் மேல் ஏன் பொறாமை கொண்டனர்?

## நடைமுறைப் பணிகள்

- இந்தப் பகுதியில் உள்ள கதைகளைப் பயன்படுத்தி, சுவிசேஷத்தைத் தங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் கொண்டு செல்லுமாறு உங்கள் சபை மக்களை உற்சாகப்படுத்தவும்.
- இயேசு தங்களுக்கு செய்ததைப் பற்றி எளிய சாட்சிகளை ஆயத்தப்படுத்தவும், இயேசுவின் வாழ்க்கை, மரணம் உயிர்த்தெழுதல் குறித்து எளிய முறையில் சொல்லவும் உங்கள் சபை மக்களுக்கு உதவுங்கள்.
- பாவமன்னிப்புக்காக இயேசுவிடம் வருபவர்களுக்குக் கூடிய விரைவில் ஞானஸ்நானம் கொடுத்து அவர்களது மனந்திரும்புதலை உறுதிப்படுத்துங்கள். சபை வாழ்க்கைக்குள் அவர்களை வரவேற்று உபசரியுங்கள்.
- ஞானஸ்நானத்துக்கு புதிய ஏற்பாடு கூறுபவைகளே போதுமானவைகள் ஆகும். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, இயேசு தங்களை மன்னித்து மாற்றுவார் என்று அவரை நம்பும் பாவிகளுக்கு உரியதே ஞானஸ்நானம்.
- புதிய கிறிஸ்தவர்கள் தங்களுடைய நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் இயேசுவைப் பற்றிக் கூற, வளர்ந்த கிறிஸ்தவர்கள் உதவி புரியும் வகையில் சபையைத் திட்டமுடன் வளர்க்கவேண்டும்.

## III – 2- ஊழியம் 2

# ஆவியின் வரங்களை உபயோகித்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து சபையாகிய சரீரத்தைக் கட்டு.

தெபோரா கல்விநேசனுடனும் சாராவுடனும் அவர்கள் வீட்டில் பேசிக்கொண்டு இருக்கிறாள். அவள் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டே சொல்கிறாள், ''கிருபை என்ன என்பதை உணர்கிறேன். தேவனுடைய மந்தையில் உள்ள மற்றவர்களைப் போலவே தேவனுடைய அதே மன்னிப்பையும் இரக்கத்தையும் நான் பெறுவேன். கர்த்தராகிய இயேசு அவருக்காக சரியான முறையில் நான் உழைக்க உதவி செய்வார். என் முழு இருதயத்தோடு அவரை சேவித்து என் நன்றியறிதலைக் காட்ட விரும்புகிறேன்.'' அவள் சாராவின் கையைப் பிடித்து, ''என்னால் இப்போதே தொடங்க முடியும். நான் உங்களுக்கு வீட்டு வேலைகளில் உதவுகிறேன். அப்போது நீங்கள் சிறுவருக்கான வேதாகமக் கதைகளை உருவாக்க அதிக நேரம் கிடைக்கும் அல்லவா?''

கல்விநேசன் ஆச்சரியப்படுகிறார், ''இது அற்புதம்! புதிய கிறிஸ்தவர்கள் இவ்வளவு சீக்கிரமாக தேவனுக்கு சேவை செய்ய முடியும் என்று நான் நினைக்கவே இல்லை. சபையிலும் சமுதாயத்திலும் மற்றவர்களுக்காக சேவை புரிய ஏராளமான வழிகள் உண்டு என்று ஞானம் ஐயா என்னிடம் கூறினார். சபையில் உள்ள யாவருக்கும் பரிசுத்த ஆவியானவர் வேலைகளைத் தருகிறார்.''

தெபோரா கேட்கிறாள், ''தேவ ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையைத் தருகிறார் என்று விளக்குவீர்களா?''

ஞானம் ஐயா விட்டுச்சென்ற ஒரு வேத பாடக் குறிப்பை கல்விநேசன் அவளிடம் தருகிறார். அவள் வாசிக்கிறாள், ''பரிசுத்த ஆவியானவர் குறைந்த பட்சம் ஐந்து காரியங்களை நம் வாழ்க்கையில் செய்கிறார்:

> முதலாவதாக, யோவான் 3:1-18 வெளிப்படுத்துவது படி, பரிசுத்த ஆவி நம்மை மறுபடியும் பிறக்க வைக்கிறது. நாம் ஆவியிலே மறுபடியும் பிறந்தவர்கள். நமது உடல் பாவத்தால் மரித்ததாய் இருந்தாலும், நமது ஆவி கிறிஸ்துவுக்குள் பிழைத்து இருக்கிறது.
>
> இரண்டாவதாக, பரிசுத்த ஆவி நமக்கு முத்திரை போடுகிறது. எபேசியர் 1:12-13 ல் பவுல் நம்மை இரட்சிப்பதாக தேவன் அருளிய வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டுள்ளோம் என்று எழுதுகிறார்.
>
> மூன்றாவதாக, 1 கொரிந்தியர் 12:12-13 வெளிப்படுத்துவது போல, பரிசுத்த ஆவி கிறிஸ்துவின் சரீரத்துக்குள் நம்மை ஞானஸ்நானப்படுத்துகிறது. அவர் நம்மை தேவனுக்காக வாழும்படி செய்கிறார்.
>
> நான்காவதாக, ரோமர் 12ம் 1 கொரிந்தியர் 12ம் வெளிப்படுத்துவது போல, பரிசுத்த ஆவியானவர் நாம் ஒவ்வொருவருக்கும் ஆவியின் வரங்களைத் தருகிறார். கிறிஸ்துவுக்காக ஏதாவது ஒரு பணியை செய்யும்படி அவர் நமக்கு வல்லமை தருகிறார்.
>
> இந்த வரங்கள் நமக்கு நாமே பயன்படுத்திக் கொள்ள அல்ல. சபை முழுவதையும் கட்டி எழுப்பவே. சபையில் உள்ள ஒவ்வொருவரும் சபை முழுவதற்கும் சேவை செய்ய, தங்கள் வரங்களை உபயோகிக்க நல்ல தலைவர்கள் உதவி புரிகின்றனர்.
>
> ஐந்தாவதாக, கலாத்தியர் 5:22-23 ன் படி அவர் ஆவிக்குரிய கனிகளை நம்மில் விளைவிக்கிறார். நாம் அவரிடம் சேரும் போது அவர் நம்மை முற்றிலுமாக மன்னிக்கிறார். அவருக்கு என்ன பிரியமோ அதைச் செய்ய நாமும் விரும்புகிறோம். இருந்தாலும், இன்னும் நாம் நமக்குள் ஒரு போராட்டத்தை நடத்துகிறோம் என்று ரோமர் ஏழாம் அதிகாரம் கூறுகிறது. உள்ளிருக்கும் புதிய மனிதன் நல்லது எதுவோ அதைச் செய்ய விரும்புகிறான். ஆனால் சில வேளைகளில், இந்த உலகபூர்வமான மாம்சத்தில் வாழும் பழைய மனிதன் பாவத்திற்குள் நம்மை விழத் தள்ளுகிறான். சாகும் வரை நாம் தேவனைப் பின்பற்றப் போராடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பலப்படுத்தி நமக்குள் அவரது குணநலன்களை வலிமை ஆக்குகிறார்.

சிலர் ஆவிக்குரிய முதிர்ச்சியை விரைவில் அடைந்து விடுகின்றனர். மற்றவர்களுக்கோ பல வருடங்கள் பிடிக்கும். நாம் தேவனிடத்தில் விசுவாசத்தைக் காட்டும் போது மென்மேலும் இயேசுவைப் போல் ஆக கற்றுக்கொள்ளுகிறோம். மகிமையான பாவமே இல்லாத ஒரு வாழ்க்கைக்குள் உயர்த்தப்படும் நாளை நாம் எதிர்நோக்குகிறோம்.''

பின்னர் படிப்பதற்கு வசதியாக தெபோரா வேதாகம வசனங்களை எழுதி வைத்துக் கொள்ளுகிறாள். சாரா தொடர்கிறாள், ''பிறருக்கு சேவை செய்ய தேவன் உனக்கு ஆவிக்குரிய வரங்களைத் தருகிறார். உதாரணமாக நெகேமியாவைப் போன்ற நிர்வாக வரம் கல்விநேசருக்கு இருக்கிறது. நான் எஸ்ராவைப் போல ஓர் ஆசிரியர். சகாயர் எபேசு சபை மூப்பர்களைப் போன்ற மேய்ப்பர். நமது சபை மக்களை, மேய்க்க அவர் உதவி செய்கிறார். சபையில் உள்ள மற்றவர்கள் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போல இணைந்து பணியாற்றும் ஊழியர்கள். வேதாகமத்தில் உள்ள ஆவிக்குரிய வரங்கள் பற்றிய உதாரணங்களையும் அதை மக்கள் எவ்வாறு உபயோகித்தனர் என்பதையும் உனக்கு வாசிக்கிறேன். நம் சபையில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் பணிகளைக் கண்டறிய நாம் இந்த உதாரணங்களை உபயோகிக்கிறோம்.'' மற்றவர்களுக்கு போதிப்பதற்காக சாரா ஞானம் ஐயா விட்டுச் சென்ற பட்டியலைப் படிக்கிறாள்.



## பயிற்சி

### ரோமர் 12:3-8 ல் உள்ள ஆவிக்குரிய வரங்களின் பட்டியலை பயன்படுத்துதல்

சாரா தெபோராளுக்குக் காட்டும் ஆவிக்குரிய வரங்களின் பட்டியலைக் கீழே காண்க. நீங்கள் செய்வதற்கு வசதியாக, எந்த செயல்பாடுகளுக்கு தேவன் உங்களுக்கு ஆவிக்குரிய வரத்தை அளித்திருக்கிறாரோ அவற்றை அடையாளப்படுத்தலாம்.

- ☐ **சேவை,** சாமுவேலைப் போல, 1 சாமு. 1:20-23
- ☐ **தீர்க்கதரிசனம்,** யோவான் ஸநானகன் போல, யோவான் 1:26-34
- ☐ **கொடுத்தல்,** பர்னபா போல, அப். 4:36-37
- ☐ **போதனை,** எஸ்ரா போல, நெகேமியா 8
- ☐ **ஊக்கமளித்தல்,** (புத்திமதி) எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் போல, அப்.20:17-38
- ☐ **வழிநடத்துதல்,** மோசே போல, யாத்.18:13-26, அல்லது நெகேமியா போல, நெகே.அதி.2-3
- ☐ **இரக்கம் செய்தல்,** தாவீதைப் போல, 1 சாமு:24

### 1 கொரிந்தியர் 12:4-11 லிருந்து மேலும் வரங்கள்

- ☐ சாலொமோனைப் போல ஞானம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுதல், 1 இராஜா 3:5-28
- ☐ கட்டுப்படுத்தாத நாவுகளைப் பற்றிய அபாயத்தை எச்சரித்த யாக்கோபைப் போல அறிவு நிறைந்து பேசுதல், யாக்.3
- ☐ நட்சத்திரங்களைப் பார்த்து தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்த ஆபிரகாமைப் போல விசுவாசம் ஆதி 15:6 அல்லது மத்தேயு 8:1-13ல் வரும் குஷ்டரோகி மற்றும் நூற்றுக்கு அதிபதி போல.
- ☐ இயேசுவைப் போல குணமாக்குதல், மாற்கு 2:1-12 அல்லது பேதுருவைப் போல, அப் 3:1-16
- ☐ எலியாவைப் போல அற்புதம் செய்தல், 1 இராஜா. 18:16-46
- ☐ பவுலைப் போல ஆவிகளைப் பிரித்தறிதல் அப்.13:6-12
- ☐ கொர்நேலியுவும் குடும்பத்தாரும் போல பாஷைகள் பேசுதல் அப்.10:44-48
- ☐ 1 கொரி. 14:26-28 ல் அறிவரைக்கப்பட்டபடி கொரிந்து சபை மக்களைப் போல பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

### எபேசியர் 4:11-16 ன்படி மேலும் வரங்கள்

- ☐ பவுலையும் பர்னபாவையம் போல புறக்கணிக்கப்பட்ட களங்களுக்கு அப்போஸ்தலர்களாக செல்லுதல், அப்.அதிகாரங்கள் 13-14

- ☐ பிலிப்பைப் போல நற்செய்தியை சுவிசேஷகராக அறிவித்தல், அப். 8:26-40
- ☐ அப்.20:28-34ல் அறிவுறுத்தியபடி எபேசு சபை மூப்பர்களைப் போல போதகராக ஊழியம் செய்தல்

இந்தப் பட்டியலை படித்து முடித்த உடன் தெபோராள் சாராவுக்கு வீட்டு வேலைகளில் உதவுகிறாள். அடுத்த நாள் சாரா தெபோராளை பார்க்க போன போது, அவள் சகோதரனுக்கு, முதல் நாள் இரவு தான் கேட்டதை எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டாள். ஆவிக்குரிய வரங்களையும் அவற்றை உபயோசித்த மக்களைப் பற்றியும் வேதாகமத்தில் இருந்து நினைவுகூர்ந்து கூறினாள்.

தெபோராள் சாராவிடம் கூறுகிறாள், ''நீங்கள் கொடுத்த பாடம் முழுவதையும் வாசித்தேன்.''

அவர்கள் தங்கள் சபையில் ஆவிக்குரிய வரம் பெற்றவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள். சாரா கூறுகிறாள். ''என் கணவர் கல்விநேசனுக்கு நெகேமியாவின் ஆவிக்குரிய வரம் இருக்கிறது என்று நினைக்கிறேன். நெகேமியா பிறர் முடியாது என்று கூறிய ஒன்றைச் செய்ய தம் மக்களைத் திரட்டினார். யூத மக்கள் தேவனை மறந்தனர். விரோதிகள் அவர்களை மேற்கொள்ள தேவன் அனுமதித்தார். அவர்களது தலைநகரமான எருசலேம் பிடிபட்டது. அகதிகளாக அயல் தேசத்துக்குக் கொண்டு போகப் பட்டனர். பின்னர் தேவன் வாக்குரைத்தபடி திரும்பி வந்தனர். ஆனால் அவர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டவில்லை. நூறு ஆண்டுகளாக அலங்கம் பாழாய்க் கிடந்தது. நெகேமியா இதைக் கேள்விப்பட்டு உதவி செய்யச் சென்றார். அவர் ஓர் உண்மையான தலைவர்.''

தெபோராள் கேட்டாள், ''எனக்கு என்ன ஆவிக்குரிய வரம் இருக்கிறது?''

சாரா பதிலளிக்கிறாள், ''உறுதியாக அவ்வளவு சீக்கிரம் சொல்ல முடியாது. ஆனால் சாமுவேலைப் போல பிறருக்கு சேவை செய்யும் வரம் உனக்கு இருப்பதுபோல் தோன்றுகிறது. சாமுவேல் தானாகவே தேவாலயத்தைக் கவனிக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டார். அவரைப் போலவே நீயும் எனக்கு உதவி செய்ய ஆர்வமாய் இருக்கிறாய். எஸ்றாவைப் போல கற்பிக்கும் வரம் உனக்கு இருப்பதுபோல் தோன்றுகிறது. நீ உன்னுடைய சகோதரனுக்கு நன்றாக போதித்தாய். சேவை செய்யும் உனது திறனை தேவன் வளர்ப்பதைக் காண்பதே மகிழ்ச்சியாய் இருக்கும்.''

அதேநாளில் பின்னர் கல்விநேசன் தன் தம்பி சகாயருடன் திரும்பி வந்தார். அவரது மனைவி சாரா தெபோராளுடன் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி தான் நடத்திய கலந்துரையாடலைப் பற்றி கூறினாள். ''நான் அவளிடம் உங்களுக்கு நெகேமியா போன்று தலைமை தாங்கும் வரம் இருக்கிறது என்று கூறினேன்.''

கல்விநேசன் பதில் அளிக்கிறார், '' நானும் நினைக்கிறேன் சகாயா, நல்ல தலைவனின் பண்புகள் பற்றி அறிய ஞானம் ஐயா கொடுத்துச் சென்ற நெகேமியா பற்றிய பாடத்தை மீள்பார்வை செய்வோம்.''

## பயிற்சி

நெகேமியா புத்தகத்தைப் படித்து கீழ்வருவனவற்றை அறியவும் (இது ஒரு நீண்ட பயிற்சி. எனினும் பயனுள்ளது):

**நெகேமியா 1:1-11**

- தமது ஜனங்களின் துயரத்தைக் கேட்ட நெகேமியாவின் மனநிலை எவ்வாறு இருந்தது?
- தனது பாவங்களையும், தனது ஜனங்களின் பாவங்களையும் குறித்து நெகேமியா ஜெபித்தது என்ன?

**நெகேமியா 2**

- நெகேமியா இன்னும் இராஜாவின் சேவையில் இருக்கும் போதே நெகேமியாவின் ஜெபத்துக்கு பதிலளித்து தேவன் செய்தது என்ன?
- தனது திட்டங்களைப் பற்றி யாரிடமும் பேசுவதற்கு முன் எருசலேமில் நெகேமியா செய்தது என்ன?
- மக்களை அலங்கத்தை கட்டத்துவங்க வைப்பதற்காக நெகேமியா என்ன செய்தார்?

**நெகேமியா 3**

- வேலையாட்களை நெகேமியா எவ்வாறு திரட்டி ஒழுங்கு படுத்தினார்?

**நெகேமியா 4**

- வேலையாட்கள் சந்தித்த எதிர்ப்பு என்ன?
- எதிர்ப்பை முறியடிக்க வேலையாட்களை எவ்வாறுநெகேமியா திரட்டி ஒழுங்கு படுத்தினார்?
- மக்கள் பின்பற்றும்படி நெகேமியா கடைபிடித்த முன்னுதாரணம் என்ன?

**நெகேமியா 6: 15-17**

- எத்தனை நாட்களில் மக்கள் அலங்கத்தைக் கட்டி முடித்தனர்:.
- தமது ஜனங்களை எவ்வாறு தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதைக் கண்ட சுற்றி இருக்கும் நாடுகளின் உணர்வுகள் என்ன?

**நெகேமியா 8:1-6 ரூ 9:3**

- மாபெரும் மறுமலர்ச்சியையும் தேவ ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும் படி தலைவர்கள் மக்களுக்கு வாசித்துக் காட்டியது என்ன?

சாரா இருவருக்கும் காபி கொண்டு வருகிறாள். சகாயர் கல்விநேசரிடம் கூறுகிறார், “பல ஆண்டுகளாகப் பாழாய்க் கிடந்த மதிலை 52 நாட்களில் மக்கள் எடுத்துக் கட்டியது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. நெகேமியாவைப் போலவே என்னாலும் உறுதியான தளராத தலைவனாக முடியும் என்று நம்புகிறேன். தனது சபையிலும் சமுதாயத்திலும் இருந்த பிரச்சினைகளுக்கு அவர் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.”

“ஆமாம்” கல்விநேசன் பதிலளிக்கிறார், “நெகேமியா தனது சபைக்காகவும் தனது நாட்டின் தலைவர்களுக்காகவும் ஜெபித்தபோது, தனக்காகவும் அவர்களுக்காகவும் மன்னிப்பு கோரினார். மக்களுக்கு அன்போடு செவை செய்ய அவர் தேவனிடம் ஞானமான திட்டங்களைக் கேட்டார். அவர் பார்த்த பிரச்சினைகளைப்பற்றி உண்மையாக சபைக்குக் கூறினார். அவைகளைக் களைய அவர்கள் கவனமாகத் திட்டமிட்டனர்.” அவர் ஜெபத்தில் கலந்து கொள்ள சாராவை அழைத்துப் பின் ஜெபிக்கிறார், “கர்த்தாவே! உமது உதவி எனக்குத் தேவை. எதிர்ப்புகள் வரும்போது தொடர்ந்து பணியாற்றும் படி மக்களை உற்சாகப்படுத்த நான் நெகேமியாவின் உதாரணத்தைப் பின்பற்ற விரும்புகிறேன். எல்லோரும் தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தி பிறருக்கு சேவை செய்யும்படி விரும்புகிறோம்.”

சகாயர் கூறுகிறார், “பிற தலைவர்கள் நெகேமியாவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றும் படி உற்சாகப்படுத்த, நான் நெகேமியாவைப் பற்றி ஒரு பாடல் எழுதப் போகிறேன்.”

## நடைமுறைப் பணிகள்

சபையைக் கட்டி எழுப்ப, புதிய கிறிஸ்தவர்கள், சிறுவர்கள் உட்பட சபையின் ஒவ்வொரு மக்களும் தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்த உதவ, மேற்கண்ட ஆவிக்குரிய வரங்கள் மற்றும் வேதாகமம் முன்னுதாரண பட்டியலை உபயோகிக்கவும்.

நெகேமியாவைப் போல தாழ்மையோடு வழிநடத்தவும். முதலில் உங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை இடுங்கள். சபையை கர்த்தருடைய பெரிய காரியங்களை ஆற்றும்படி உற்சாகப்படுத்த ஞானமான திட்டங்களைத் தரும்படி தேவனிடம் வேண்டுங்கள்.

## III-3- ஊழியம் 3
# தேவனைத் துதித்து கர்த்தருடைய பந்தியை ஆசரி

கல்விநேசன் தனது வீட்டில் போதனை செய்கிறார். ஞானசூனியரும் ஒருசிலரும் தூங்குகின்றனர். கர்த்தருடைய பந்தியின் போது இரண்டு இளைஞர்கள் எதையோ சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றனர். பிள்ளைகள் சோர்ந்து போய் அங்கும் இங்கும் பார்க்கின்றனர். பின்னர், அவருடைய மனைவி சாரா கூறுகிறாள், ‘‘நான் இருப்பதை கவனிக்காத சிலர் பேசுவதைக் கேட்டேன். அவர்கள் யாரை பின்பற்றுவது என்று விவாதித்துக் கொண்டனர். ஞானம் ஐயாவையா? சகாயரையா? உங்களையா? ஒருவர் ஞானம் ஐயாவைப் பின்பற்றச் சொன்னார். ஒரு வாலிபர் இன்னொருவரிடம், ‘‘போரடிக்கிறது. கல்விநேசரே எல்லாவற்றையம் செய்கிறார். அது எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. சிந்தனை அற்ற வெறும் சடங்காச்சாரமாகவே உள்ளது. அதனால்தான் நான் எதையாவது சாப்பிடக் கொண்டு வருகிறேன்’’ என்று சொல்லிக்கொண்டிருந்தார்.’’

சபையில் என்ன நடக்கிறது என்பதைக் கல்விநேசன் ஞானம் ஐயாவிற்கு எழுதி விளக்குகிறார். சபையில் வாசிக்குமாறு ஞனாம் ஐயா ஒரு கடிதத்தை எழுதி அனுப்புகிறார். ‘‘ என் அருமை சகோதர, சகோதரிகளே. 1 கொரி. 11:17-34 ல் பவுல் அப்போஸ்தலர் கொரிந்து சபைக்கு சொன்னதையே உங்களுக்கு நான் கூறுகிறேன். நீங்கள் கூடி வரும்போது, நல்லது செய்வதற்குப் பதில் உங்களில் சிலர் தீமையே செய்வதாகத் தெரிகிறது. உங்கள் மத்தியில் பிளவுகள் இருக்கின்றன. கூடிவரும் போது கர்த்தருடைய பந்தியைப் பற்றிய கவனம் உள்ளவர்களாக நீங்கள் வரவில்லை. ஐக்கிய விருந்தின் போது பசியாய் இருக்கிறவர்கள் மத்தியில் உங்களில் சிலர் சாப்பிடுகிறீர்கள். சாப்பிடவும் குடிக்கவும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? கர்த்தருடைய பந்தியைக் கருத்தோடு ஆசரியாமல் இருப்பது பாவமாகும். சபையாக நீங்கள் துதிக்கும் போது தேவ பிரசன்னம் இருக்கிறது என்பதை மறந்து போய் விட்டீர்களா?’’



### பயிற்சி

**1 கொரி 11:17-34** ல் காண்க:

- தான் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவில் இயேசு அப்பம் பிட்டபோது கூறிய வார்த்தைகள் என்ன?
- கர்த்தரின் பந்தியின் போது இயேசுவின் சரீரத்தை கனம் செய்யாமற் போனால் நாம் யாருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறோம்?
- கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் முன் தேவனால் நியாயம் தீர்க்கப் படாமல் இருக்க நாம் நிதானித்து அறிய வேண்டியது என்ன?

ஞானம் ஐயாவின் கடிதம் தொடர்கிறது. ‘‘நான் அங்கிருந்து விடைபெறு முன் எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்று போதித்தேன். நாம் கூடி வரும்போது தேவன் பிரசன்னம் ஆகிறார் என்றும் கூறினேன். நாம் செய்யும் எல்வாவற்றிலும் தேவனை நாம் ஆராதிக்கிறோம்.’’

கல்விநேசன் கூறுகிறார், ‘‘நான் ஞானம் ஐயாவின் போதனைகளை நினைவு கூருகிறேன். ஜெபத்திலும், துதியிலும், தேவ வார்த்தைகளைப் போதிப்பதிலும், நமது பாவங்களை தேவனிடம் அறிக்கை இட்டு கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதிலும், கொடுப்பதிலும் ஐக்கியத்திலும் கர்த்தரை ஆராதிக்கிறோம். இவைகளை நாம் பொழுது போக்கிற்காக செய்யவில்லை. இவைகளைப் பல்வேறு வகைகளில் செய்ய தேவன் நமக்கு சுதந்திரம் அளித்துள்ளார். சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் செய்யுங்கள் என்று பவுல் எபேசு சபை மக்களுக்குக் கூறினார். பாடல்கள் என்பவை சங்கீதங்களோ, நாமே எழுதியவைகளோ அல்லது பிறர் எழுதியவைகளாகவோ இருக்கலாம். அவைகள்

தேவனுடைய மகத்துவமான கிரியைகளை சாட்சி கொடுப்பவைகளாகவோ அல்லது அவருக்கு நன்றி சொல்லுபவைகளாகவோ இருக்கலாம். அவைகள் தேவனுடைய மகத்துவத்தைப் புகழுகிறவைகளாகவோ அவரை தொழுது கொள்ளுகிறவைகளாகவோ இருக்கலாம்.''

சகாயர் மேலும் கூறுகிறார், ''பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்கள் பண்டிகைக் காலங்களில் சிறப்பான முறைகளில் தேவனை எப்படி ஆராதித்தார்கள் என்று ஞானம் ஐயா போதித்தார். பஸ்கா பண்டிகை ஏழு நாளும் கடைசி நாளும் விசேஷக் கூடுகை. சாலொமோன் தேவாலயத்தைக் கட்டிய போது ஜனக் கூட்டம் அதைக் கொண்டாட எருசலேமுக்கு வந்தது. அவர்கள் ஒன்றாகப் புசித்து கூடாரங்களில் தங்கினர். இசை வாணர்கள் எக்காளம் மற்றும் இசைக்கருவிகளை வாசிக்க அவர்கள் நின்று கேட்டனர். சாலொமோன் இராஜா நின்றும் பின் முழங்காலிட்டும் ஒரு விசேஷ ஜெபத்தை ஏறெடுத்தான். தேவ சமூகத்தில் நம்முடைய ஜெபங்கள் நறுமணம் வீசும் தூபவர்க்கமாக இருக்கிறது.''

கல்விநேசர் மீண்டும் அந்தக் கடிதத்தில் இருந்து வாசிக்கிறார். ''தேவனுக்கு நீங்கள் ஏறெடுக்கும் ஆராதனையை, அவர் சமூகத்தில் தூபவர்க்கம் போல அழகுள்ளதாக்க தலைவர்கள் செய்யவேண்டிய சில விஷயங்கள் இதோ:

- ஆயத்தப்படுத்தலில் ஜெபம்
- ஆராதனையின் வெவ்வேறு பகுதிகளிலும் உதவி செய்ய முன்கூட்டியே சபைமக்களைக் கேட்கவும்.
- ஒவ்வொருவரும் தங்கள் கடமையை ஆற்ற ஏதுவாக முன்கூட்டியே கவனமாகத் திட்டமிட உதவுங்கள்.
- சிறுவர்கள் உட்பட ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் ஆராதனையில் பங்கேற்க ஏற்பாடு செய்யவும்.
- கிறிஸ்துவின் பிறப்பு, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டாட பண்டிகைளை ஆசரியுங்கள்.''

இவைகளைக் குறித்து அவர்கள் சிறிது நேரம் விவாதித்த பின், கல்விநேசன் மீண்டும் கடிதத்தை வாசிக்கிறார், எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார், 'பூர்வகாலங்களில் தீர்க்கதரிசிகள் மூலம் நம் பிதாக்களிடம் தேவன் பேசினார். ஆனால் இந்த கடைசி நாட்களில் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் பேசினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாய் இருக்கிறார். நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி உன்னதத்தில் உள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.'

நாம் தேவனை ஆராதிக்கும் போது, இயேசுவின் நாமத்தினால் ஜெபித்தும், அவருடைய வார்த்தைகளைப் போதித்தும், கர்த்தருடைய பந்தியில் அவருடைய மரணத்தை அறிவித்தும் இயேசுவை கனப்படுத்துகிறோம். கொடுப்பதினாலும் ஐக்கியத்தினாலும் நாம் அவரது சரீரமாகிய சபையின் தேவைகளை கவனித்துக் கொள்ளுகிறோம்''

பலர் ''ஆமென்'' என்று கூற, கல்வி நேசர் கடிதத்தை வாசித்து முடிக்கிறார்.

''தேவனை ஆராதிக்கக் கூடி வந்து, கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளும் போது, நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்குள்ளவர்கள் ஆகிறீர்கள். அவருடைய மரணத்தை நீங்கள் அறிவிக்கிறீர்கள். நீங்கள் தேவ சமூகத்தில் நுழைகிறீர்கள். இதை உணர்ந்து கொள்ளவில்லை என்றால், நீஙகள் இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் அவ மரியாதை செய்கிறீர்கள். இயேசுவின் இரத்தம் சிந்தப்படுவது எவ்வளவு முக்கியம் என்று பழைய ஏற்பாடு காட்டுகிறது.

''எவ்வாறு தேவ சமூகத்தில் நுழைவது என்பது பற்றிய, நாம் சேர்ந்து படித்த பஸ்காவின் கதையைக் கூறு!'' என்று சகாயரிடம் கல்விநேசன் கூறுகிறார்.

**பயிற்சி**

எவ்வாறு தேவன் தமது மக்களை எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து விடுவித்தார் என்பதை யாத்.12:21-42ல் காண்க:

- நள்ளிரவில் மரித்தது யார்?
- இஸ்ரவேலர் தங்கள் தலைச்சாண்களை இழந்துவிடாமல் காத்தது என்ன?

- இஸ்ரவேல் அடிமைகள் விடுதலையாகும்படி எகிப்திய தலைச் சாண்கள் இறந்த பின் நிகழ்ந்தது என்ன?
- இந்த அடிமைத்தனத்தில் இருந்து பெற்ற விடுதலையை தலைமுறை தலைமுறையாக இஸ்ரவேல் எவ்வாறு ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்?

இந்தக் கூட்டத்திற்குப் பின், கல்விநேசனும் அவருடைய தம்பி சகாயரும், ஞானம் ஐயா கொடுத்துச் சென்ற வேத வசனபட்டியலில் இருந்து, பழைய ஏற்பாட்டு கூடாரத்தையும் ஆராதனையையும் பற்றி படிக்கின்றனர்.



சகாயர் பிரசங்கிக்க ஆரம்பித்த போது ஒவ்வொருவரும் கருத்தாய் கேட்கின்றனர். கதவின் இருபுறமும் பூசப்பட்ட பஸ்காவின் இரத்தத்தைக் குறித்த பாடலைப் பாடுகிறார். அவர் விவரிக்கிறார், ''பழைய ஏற்பாட்டில் தேவனிடத்தில் அன்பு கூர்ந்த யூதர்கள் ஒவ்வொரு வருடமும் பஸ்காவை ஆசரித்தனர். இரத்தத்தையும், தலைச்சாண்களின் சாவையும் கொண்டு எவ்வாறு தங்களை தேவன் விடுவித்தார் என்பதை அவர்கள் நினைவு கூர்ந்தனர். தேவனுடைய குமாரன் பாவத்தின் அடிமைத் தனத்தில் இருந்து தமது இரத்தத்தைக் கொண்டு நம்மை எவ்வாறு விடுவிப்பார் என்பதைக் காட்டும் ஓர் உதாரணமே இது. இது எபிரேயர் புத்தகத்தில் **பரலோக கூடாரத்தின் உலக சாயல்** என விவரிக்கப்பட்டுள்ளது.''

## பயிற்சி

சகாயர் போதிப்பதை **எபிரேயர் 9:1-26** ல் காண்க:

- கூடாரத்தின் முதல், வெளிப்பிரகாரத்தில் இருந்த பொருட்கள் யாவை?
- உள்ளே இருந்த, மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொருட்கள் யாவை?
- தன்னுடைய பாவத்தையும், ஜனங்களின் பாவத்தையும் நிவிர்த்தி செய்ய வருடத்திற்கு ஒருமுறை தலைமை ஆசாரியன் செய்தது என்ன?
- தேவ குமாரன் நமது நித்திய இரட்சிப்பை எவ்வாறு பெற்றார்?

சகாயர் மக்களை கேட்கிறார், ''உங்களுக்கு கேள்விகள் ஏதாவது உண்டா?''



ஒருவர் கேட்கிறார், '' பழைய ஏற்பாட்டு ஆராதனை முறை எவ்வாறு இருந்தது?'' ''ஞானம் ஐயா இதை விளக்கினார். பழைய காலத்தில் தொழுது கொள்ளப் போகும் போது ஜனங்கள் ஒரு ஆட்டுக் குட்டியையோ அல்லது காளையையோ எடுத்துச் சென்றார்கள். அதன் மேல் கைவைத்து தங்கள் பாவங்களை அறிக்கை இட்டார்கள். ஆசாரியன் அதன் கழுத்தை அறுப்பான். அது குழப்பமான ஒன்று. இந்த இரத்த பலி இயேசுவின் மரணத்தை முன்னறிவித்தது. இந்த உலகத்தின் ஒட்டுமொத்தப் பாவங்களுக்காகவும் அவரது இரத்தம் ஒரே முறை சிந்தப்பட்டது. அண்ணா, இதை விளக்க எனக்கு உதவ முடியுமா?''

கல்விநேசன் தொடர்ந்து கூறுகிறார், ''தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு குத்து விளக்கும், மேசையும், பரிசுத்த அப்பமும் இருந்தன. மகா பரிசுத்த ஸ்தலத்தில் திரைக்குப் பின் தூப வர்க்கமும் உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன. தனது பாவங்களை நிவிர்த்தி செய்ய தலைமை ஆசாரியன் இதற்குள் வருடத்திற்கு ஒரு முறை பிரவேசிப்பான். இயேசு மரித்த போது இந்த திரை கிழிந்தது. நமது தலைமை ஆசாரியராக இயேசு தேவ சமூகத்தில் பிரவேசித்தார். அவரது இரத்தம் நமது பாவத்தை சுத்திகரித்து நித்திய காலமாக நம்மை இரட்சித்தார். இப்போது நாம் மகா பரிசுத்த ஸ்தலமான தேவ சமூகத்தில் சுதந்திரமாக

பிரவேசிக்கிறோம். நமது ஜெபங்களை தூபவர்க்கமாக சமர்ப்பிக்கிறோம். கர்த்தரின் பந்தியில் அப்பத்தைப் பிட்கும் போது நாம் கிறிஸ்துவின் சமூகத்தில் இருக்கிறோம். புதிய உடன்படிக்கையின் அவரது இரத்தமான பானத்தைப் பருகும் போது அவர் இருக்கிறார். இரண்டு பேரோ மூன்று பேரோ அவர் நாமத்தில் கூடி வரும்போது அவர் அங்கே இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.''

தயாளர் கூறுகிறார், ''கர்த்தரின் பந்தி பரிமாறப்பட்ட போது நான் கிறிஸ்துவின் சரீரத்தை அறிந்து கொள்ளவில்லை என்பதை இப்போது நான் புரிந்து கொள்ளுகிறேன். கூடி ஆராதிக்கும் போது நாம் தேவ பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதை நான் மறந்து விட்டேன். ஆராதனையின் போது நாம் தமது மனநிலையை செம்மையாக்க வேண்டும்.''

கல்விநேசர் தன் கருத்தைத் தெரிவிக்கிறார், '' 1 கொரித்தியர் 12-14 அதிகாரங்களில், எல்லாவற்றையும் ஒரே தலைவர் செய்யக் கூடாது என்று, பவுலும், தெளிவு படுத்துகிறார். ஏதாவது ஒரு வகையில், விரும்புவோர் எத்தனை பேர் உண்டோ அவர்கள் அனைவரும் ஆராதனையில் நேரடியாக பங்கேற்க வேண்டும். இது முதல் நானும் எனது தலைமைப் பொறுப்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவேன். அவ்வாறு செய்ய, உங்களில் பங்கேற்க விரும்பும் அனைவருக்கும் உதவி செய்வேன். புதிய சபைகளை உருவாக்கக் கூடிய மேலும் புதிய தலைவர்கள் சபையில் பெருகுவர். சபையும் மேலும் வளரும்''

கல்விநேசர் சகாயரை நோக்குகிறார், ''உன் உதவி எனக்குத் தேவை. கர்த்தரின் பந்திக்கு சிறந்த முறையில் ஆயத்தப்படுத்த எதிர்காலத்தில் எனக்கு உதவி செய். நமது ஆராதனையின் வெவ்வேறு பகுதிகளையும், நமது பிற ஊழியங்களையும் சிறப்பாகச் செய்ய நீங்கள் எல்லோரும் எனக்கு உதவி செய்ய வேண்டும். இந்த ஊழியங்களை வளர்ப்பதின் மூலம் நாம் கிறிஸ்துவைக் கனப்படுத்துவோம். சகாயா, இசையில் எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'' தான் மட்டுமே ஆராதனையை நடத்தாமல் எல்லோரும் பங்கு பெறும் வகையில் கல்விநேசர் எல்லோருக்கும் வேலைகளைத் தருகிறார்.


ஆராதனைக்குப் பிறகு கல்விநேசன் சகாயரிடம் கூறுகிறார், ''நான் இந்த அறிவுரைகளை நமது சபையில் பின்பற்றப் போகிறேன். நான் சற்று கவனக்குறைவாக இருந்துவிட்டதை உணருகிறேன். கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கும் போது கிறிஸ்துவின் சரீரத்தைக் கனப்படுத்தாத கொரிந்து சபை மக்களை தேவன் கடுமையாகத் தண்டித்தார், என்று பவுல் 1 கொரிந்தியர் 11 ல் எழுதுகிறார். இயேசு செய்த மகா அர்ப்பணிப்பை அவர்கள் நினைவுகூரத் தவறி விட்டனர். சபையாகக் கூடிவரும் போது நாம் தான் கிறிஸ்துவின் சரீரம் என்பதை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டனர். இந்த இரகசியத்தை தேவன் மிகவும் கருத்தூன்றி நோக்குகிறார். சபையில் ஒவ்வொருவரும் அவ்வாறே இருக்க வேண்டும். இந்த ஆசரிப்பின் போது இதை ஒரு முழுவிருந்தாக்கிவிடக் கூடாது என்று 1 கொரிந்தியர் 10:16-17 ல் பவுல் கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கேற்பதை விட்டுவிட்டு மக்கள் உணவில் நாட்டம் உடையவர்களாக மாறிவிடுவார்கள்.

## நடைமுறைப் பணிகள்

- இசைத் திறமை உள்ளவர்களை அதை போதிக்குமாறும், ஆவிக்குரிய வரமுடையவர்கள் ஞான வார்த்தைகளை தருமாறும் கூறி ஆராதனையின் வெவ்வேறு பகுதிகளை வழி நடத்துமாறு கேட்கவும்.
- ஆக்கப் பூர்வமான வழிகளில் தேவன் மேல் தங்களுக்கு உள்ள அன்பை வெளிப்படுத்துமாறு மக்களை ஊக்கப்படுத்தவும். வட்டார இசைகளின் மூலம், இசைத் திறமை உள்ளவர்களை, தேவனைத் துதிக்கும் பாடல்களை எழுதப் பாட ஊக்குவிக்கவும்.
- அவரை ஆராதிக்கக் கூடி வரும் போது, தேவன் பிரசன்னம் ஆகிறார் என்பதை இந்தப் பகுதியில் உள்ள கதைகளைப் பயன் படுத்தி போதிக்கவும்.
- பாடுவதில் மட்டுமல்லாமல், சிறுவர்கள் உட்பட யாவரும், ஏதாவது ஒரு வகையில் ஆராதனையில் பங்கு பெறுமாறு திட்டம் இடவும்.
- ஆராதனையின் வெவ்வேறு பகுதிகளை வழிநடத்துபவர்கள் முன்கூட்டியே ஆயத்தமாக உதவி செய்யவும்.

## III - 4 - ஊழியம் 4

# தேவ வார்த்தைகளை கற்று கற்பித்து கைக்கொள்



சில கிலோ மீட்டர் தொலைவில் வாழும் தன் தம்பி சகாயரைப் பார்த்து ஆலோசனை வழங்கவும், அவரது பணிகள் எவ்வாறு செல்கின்றன என்று பார்க்கவும், அவரது வீட்டிற்கு கல்விநேசன் செல்கிறார். ஆசிரியராகப் பணிபுரியும் தயாளர் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறார். வீட்டுக்கு அருகில் இருப்பதால், முன்னர் கல்விநேசனின் சபைக்கு வந்து கொண்டிருந்த அவர் இப்போது சகாயரின் புது சபைக்குப் போகிறார்.

ஜெபத்திற்குப் பிறகு சகாயர் தன் திட்டங்களை விளக்குகிறார், ''அண்ணா! கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒரு சபையை ஸ்தாபிக்க நீங்கள் ஊக்கம் அளித்தீர்கள். உங்கள் உதவி எனக்குத் தேவை. இந்தப் புதிய சபை பின்பற்ற வேண்டும் என்று மக்கள் கூறும் வெவ்வேறு சட்டதிட்டங்களால் நான் குழப்பம் அடைந்துள்ளேன்.''

''நானும்தான்!'' தயாளர் கூறுகிறார்,'' என்னுடைய மைத்துனர் ஞானசூனியர் வந்து இந்த சபைக்குத் தலைமை தாங்க விரும்புகிறார். அவர், சகாயர் இளம் வயதுடையவர்; அவர் ஒரு வேதாகமப் பள்ளியில் பல ஆண்டுகள் பயின்ற பிறகே போதகர் ஆக முடியும் என்று வலியுறுத்துகிறார். எருசலேமில் உள்ள ஒரு வேத பள்ளியில் பவுல் அப்போஸ்தலர் படித்ததைச் சுட்டிக் காட்டுகிறார். இந்த சபையில் உள்ள ஏறத்தாழ எல்லா மக்களிடமும் அவர் இதைக் கூறிவிட்டார். மற்றவர்களும் நாம் காரியங்களை வேறு விதமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லுகின்றனர். சிலர் மெழுகு வர்த்திகளையும், வேறுசில பொருட்களையும் ஆராதனையில் பயன்படுத்த விரும்புகின்றனர். இந்த புதிய சபை என்ன செய்ய வேண்டும் என்று எல்லாருமே கூற விரும்புகிறார்கள்.''



‘‘எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவுக்குக் கீழ்ப்படியுங்கள்’’ கல்விநேசன் உறுதியாகக் கூறுகிறார். ‘‘அதுவே உங்கள் புதிய சபைக்கு அடித்தளம் ஆகும். கிறிஸ்துவின் கற்பனைகளைக் கொண்டு சபையின் அதிகாரத்தை நிறுவாவிட்டால், அந்த வெற்றிடத்தை சாத்தான் வந்து நிரப்பி விடுவான். அதன்பின் உங்களுக்கு குழப்பமே மிஞ்சும். மூன்றுகட்ட அதிகாரங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்:


- முதலாவதாக, எல்லாவற்றையும் விட, கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலரும் கட்டளை இட்டவைகளைச் செய்யுங்கள்.
- இரண்டாவதாக, அப்போஸ்தலர்கள் கைக்கொண்ட ஆனால் கட்டளையிடாத விஷயங்களை கடைபிடிக்க உங்களுக்கு சுதந்திரம் உண்டு. இந்த உலகம் முழுவதும் உள்ள முழு சபைக்கு தேவன் ஒருவரேசட்டத்தை உருவாக்க முடியும் என்பதால், இவைகளை எல்லா சபைகளிலும் திணிக்க வேண்டாம்.
- மூன்றாவதாக, புதிய சபைக்கு அறிவூட்டும் ஆனால் அதே நேரத்தில் கீழ்ப்படிதலுக்கு தடையில்லாத மனித சம்பிரதாயங்களை ஆய்ந்து தெரிந்து கொள்ளுதல்

தயாளர் கேட்கிறார், ‘‘இந்த மூன்று கட்ட அதிகாரத்தில் வேதாகமப் பள்ளியில் படித்தறிய வேண்டியது எது? கல்விநேசன் திருப்பிக் கேட்கிறார், ‘‘நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?’’

தயாளர் சிறிது நேரம் அமைதியாக இருக்கிறார். பின் சிந்தித்து கூறுகிறார், ‘‘ஒரு கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற வேண்டும் என்று கிறிஸ்து ஒருபோதும் கட்டளை இடவில்லை. சபையை விட்டு தனியாக இயங்கும் எந்த ஒரு பயிற்சி பள்ளிக்கும் அப்போஸ்தலர்கள் தங்கள் மேய்ப்பர்களை அனுப்பவில்லை. ஆகவே மனித சம்பிரதாயம் என்ற கடைசி நிலை அதிகாரத்துக்கே வேதாகம பள்ளி பயிற்சி அவசியம்.’’

‘‘சரியாகச் சொன்னீர்கள். அதற்காக நிறுவனப் பயிற்சி தவறு என்று அர்த்தம் ஆகாது. ஆனால் வேதாகமம் நமக்கு உணர்த்தும் வழி முறைகளுக்கு பதிலாக அதை நாடக் கூடாது. உங்களுக்கு இங்கே எந்த முறை சிறப்பான முறையில் பயன்படுமோ அதை தேர்ந்து கொள்ளும் சுதந்திரம் உண்டு. சபைகள் பலமாக இருந்து, போதுமான அளவுக்கு நன்றாகக் கற்ற போதகர்களும் இருக்கும்போது, சில சூழ்நிலைகளில், சபைகளோடு கூட, கல்வி நிறுவனங்களும் பயனுள்ளவைகளாக இருக்கும். ஆனால் நம்மைப் போன்ற புதிய இயக்கங்களுக்கு அது ஒத்து வராது.’’ தயாளர் கேட்கிறார், ‘‘இந்த மூன்று கட்ட அதிகாரங்களில் எதற்கு நாம் பவுல் செய்தது போல உதவிசெய்யும் புதிய தலைவர்களை நியமிக்கலாம்?’’

கல்விநேசன் பதில் அளிக்கிறார், ‘‘நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் தங்களுக்கு உதவியாளர்களை போதித்து உருவாக்கிய போதிலும் அதை கட்டளையாகக் கூறவில்லை. எனவே புதிய தலைவர்களுக்கு போதித்து உருவாக்குதலை இரண்டாம் கட்ட அப்போஸ்தலர்களின் நடைமுறை எனலாம். ஆனால் இது கட்டாயமல்ல. ஞானம் ஐயா என்னை பயிற்றுவித்தது போலவே நானும் சகாயரைப் பயிற்றுவிக்கத் தெரிந்து கொண்டேன். இயேசுவும் பவுலும் செய்தது போலவே நாமும் புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்க முயற்சி செய்கிறோம். பல புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவித்தப் பவுலைப் போலவே தாம் செய்வதாக ஞானம் ஐயா கூறினார். இவ்விதமாக உதவி செய்யும்படி பவுல் தன்னோடு கூட்டிச் சென்ற இளைஞரும் ஆனால் ஆவிக்குரிய வகையில் முதிர்ச்சி அடைந்தவருமான புதிய மேய்ப்பரே தீமோத்தேயு. பின்னர், வேறு நாடுகளில் புதிய சபைகளை அமைக்கப் பயணம் செய்யும் போதும், ரோமாபுரியில் ஒரு சிறையில் அமர்ந்திருக்கும் போதும், தீமோத்தேயுவை ஊக்கப்படுத்தவும், அவருக்கு எவ்வாறு ஒரு நல்ல மேய்ப்பனாகத் திகழ்வது என்று விளக்கவும் பவுல் அவருக்குக் கடிதங்களை எழுதினார். பிறருக்கு பயிற்சி அளிக்கும்படியாக அவருக்கு பவுல் கூறினார். அவர்கள் மேலும் பலருக்கு பயிற்சி அளித்து அதனால் ஒரு தொடரும் சங்கிலி உருவாகும் என்று பவுல் அறிவுறுத்தினார்.’’



“ஓகோ தொடரும் சங்கிலித் தொடர் என்றால் என்ன என்பது இப்போது புரிகிறது.” தயாளர் கூறுகிறார். “ஞானம் ஐயா கல்விநேசரையும் மற்றவர்களையும் பயிற்றுவித்தார். கல்விநேசன் உங்களுக்கு பயிற்சி தருகிறார். புதிய சபையில் நீங்கள் புதிய தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறீர்கள். ஞானம் ஐயா வேதாகமத்தை எவ்வாறு உபயோகித்தாரோ அவ்வாறு உபயோகிக்க நீங்கள் கற்றுத்தர வேண்டுமென விரும்புகிறேன். அப்போது நாம் அப்போஸ்தலர் பவுலின் முன்னுதாரணங்களைப் பின்பற்ற முடியும்.”

“நல்லது” கல்விநேசன் கூறுகிறார், “சகாயா! **வேதாகமத்தை உபயோகிப்பது குறித்து தீமோத்தேயுவுக்குப் பவுல் என்ன எழுதினார்** என்பதை கண்டு கொள்ள தயாளருக்கு உதவுவாயா?”

## பயிற்சி

சகாயர் தயாளர் கண்டுகொள்ள உதவியவற்றை **2 தீமோத்தேயு 3:10 – 4:5** ல் காண்க:

- இளம் மேய்ப்பரான தீமோத்தேயுவுக்குப் பவுல் கொடுத்தப் பணிகள் என்ன?
- வேதாகமம் தேவ வார்த்தைகள் என்று எவ்வாறு நம்மால் நம்பக் கூடும்?
- பிறருக்கு உதவி செய்ய எந்த வழிகளில் நாம் வேதாகமத்தைப் பயன்படுத்த வேண்டும்?
- தமது செய்கையாலும் வார்த்தைகளாலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எந்த வழிகளில் போதித்தார்?
- இயேசுவிடம் உள்ள விசுவாசத்தால் உண்டாகும் இரட்சிப்பின் நிச்சயத்தை நாம் பிறருக்கு போதிக்க உதவியாக தேவன் நமக்கு என்ன கொடுத்தார்?

கல்விநேசன் கவனித்துக் கேட்க சகாயர் தயாளருக்கு விளக்குகிறார். “உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் வேதாகமத்தை உபயோகிக்குமாறு பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார். வேதவசனங்கள் தேவனின் சுவாசம் என்று கல்விநேசர் எனக்கு போதித்தார். அவைகள் தேவனுடைய அதிகாரத்தை ஏந்திவந்து அவரது சத்தியத்தைப் போதிக்கின்றன. வேத வசனங்கள் சொல்லும் எல்லாவற்றிற்கும் நாம் கீழ்ப்படியும் போது நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிறோம். நாம் வேதாகமத்தைப் படித்து அதற்குக் கீழ்ப்படியும் போது பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்டுகிறார். நாம் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுள்ள சீஷர்கள் ஆக அவர் நமக்கு உதவுகிறார்.”

சகாயர் கல்வி நேசனை நோக்க, அவர், “ஞானம் ஐயா எனக்கும், நான் உனக்கும் கற்பித்தது போலவே நீயும் போதிக்கிறாய். தொடர்ந்து சொல்” என்று கூறுகிறார்.

“பவுல் தீமோத்தேயுவுக்கு தேவ வார்த்தைகளை மட்டுமல்லாமல் அவரது முன் உதாரணங்களைக் கொண்டும் போதித்தார். இருவருக்கும் இடையில் ஆழமான உறவு இருந்தது. பவுலின் வாழ்க்கை விசுவாசம் மற்றும் பாடுகளை தீமோத்தேயு கண்டார். தம்முடைய வார்த்தைகளையும் செய்கைகளையும் அப்படியே பின்பற்ற பவுல் தீமோத்தேயுவிடம் கூறினார். இயேசுவும் நமக்கு வார்த்தைகளாலும் செய்கைகளாலும் போதித்தார். தேவ வார்த்தைகளின் ஒவ்வொரு அம்சத்தையும் தமது வாழ்க்கையில் நிறைவேற்ற அவர் தவறவில்லை. தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்ததினாலேயே இயேசுவும் பவுலும் துன்புறுத்தப்பட்டனர். முடியும் எல்லாவகை-யிலும் சாத்தான் இயேசுவை எதிர்த்தான்.”

தயாளர் கேட்கிறார், “சாத்தான் இயேசுவை எவ்வாறு எதிர்த்தான்?”


கல்விநேசன் அதை விளக்கும்படி சகாயரிடம் கூறுகிறார் “நாம் **இயேசுவின் முதல் பெரும் சாத்தானின் சோதனை** யை மீள்பார்வை செய்வோம்.” சகாயர் சொல்லுகிறார்.

## பயிற்சி

**மத்தேயு 4:1-11 ல்** காண்க

- இயேசுவை எந்த மூன்று வழிகளில் சாத்தான் சோதித்தான்?
- ஒவ்வொரு சோதனைக்குப் பிறகும் சாத்தானுக்குப் பதில் சொல்ல இயேசு எதை மேற்கோள் காட்டினார்?
- சோதனை முடிந்த பிறகு இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வந்தது யார்?

சகாயர் விவரிக்கிறார், “தேவனையும், தேவ வார்த்தை-களையும் நம்புவதை இயேசு நிறுத்த வேண்டும் என்று சாத்தான் விரும்பினான். ஒவ்வொரு முறையும் சாத்தானின் சோதனைகளுக்கு இயேசு வேதவசனம் கொண்டு பதிலளிக்கிறார். சாத்தானின் வார்த்தைகளை பின்பற்றாமல் இயேசு தேவ வார்த்தைக்குக் கீழப்படிந்தார். சோதனைகளை எதிர்கொள்வது கடினமானது. தேவ வார்த்தைகளை உத்தமத்தோடு பின்பற்றி இயேசு தமது கடினமான சோதனையை மேற்கொண்டார். பின்னர் தேவதூதர்கள் வந்து அவருக்கு பணிவிடை செய்தனர்.”



## வேதாகமத்தை எவ்வாறு படிப்பது?

தயாளர் சகாயரிடம் கூறுகிறார், “நீங்கள் வேதாகமத்தை தேவ வார்த்தை என்று கூறுகிறீர்கள். அதற்கு என்ன அர்த்தம்? நான் அது மனிதனால் எழுதப்பட்டது என்று நினைத்தேன்.”

கல்விநேசன் கற்றுக் கொடுத்தவற்றை சகாயர் போதிக்கிறார், “பரிசுத்த ஆவியின் ஏவுதல் பெற்றவர்கள் எழுதிய 66 புத்தகங்களின் தொகுப்பே வேதாகமம். இவற்றில் பழைய நியாயப்பிரமாணங்கள், வரலாறு, பாடல்கள், தீர்க்கதரிசனங்கள், இயேசுவின் வாழ்க்கை வரலாறு, புதிய சபைகளுக்கான கடிதங்கள் ஆகியவை உண்டு. வேதாகமத்தின் ஒட்டு மொத்தமான கருத்து இயேசு கிறிஸ்துவே. யோவான் 3:16 இந்தச் செய்தியைத் தொகுத்துக் கூறுகிறது:
“தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுக் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16).”
“நான் பழைய, புதிய ஏற்பாடுகள் அடங்கிய இரு புத்தகமே வேதாகமம் என்று நினைத்தேன்.”
“வேதாகமம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது.” ஒரு வாரத்திற்கு முன் கல்வி நேசரிடம் இருந்து கற்றுக் கொண்டதை சகாயர் விவரிக்கிறார், “தேவன், தம்முடைய நியாயப் பிரமாணங்களை கைக்கொள்ளுகிறவர்களை ஆசீர்வதிப்பதாகவும், கீழ்ப்படியாதவர்களைத் தண்டிப்பதாகவும் பழைய இஸ்ரவேலிடம் செய்துகொண்ட உடன்படிக்கையைக் கூறுவதே பழைய ஏற்பாடு. இயேசு மரித்துப் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைப் பூரணமாக நிறைவேற்றி நம்மை விடுதலை செய்தார். ஏழாவது நாளாகிய சனிக்கிழமையில் வேலை செய்தால் கல்லெறியப்பட வேண்டும் என்பது போன்ற பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணங்களை இப்போது நாம் பின்பற்ற வேண்டியது இல்லை. புதிய ஏற்பாடு தேவன் மனிதனோடு செய்துகொண்ட புதிய உடன்பாடுகளாகும். அது நம்மை இயேசுகிறிஸ்துவினிடம் உள்ள விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கிறது. அது நாம் இயேசுவுக்கு அன்போடு சேவை செய்ய வேண்டும் என்று போதிக்கிறது. நாம் பழைய ஏற்பாட்டை கவனத்துடன் படிக்கிறோம். ஏனெனில் அது எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் தேவனின் குணநலன்களைப் பற்றிய வல்லமையான உதாரணங்களையும், கிறிஸ்துவின் பணிகளைப் பற்றியும் கூறுகிறது.

புதிய ஏற்பாடு, இயேசுவின் சீஷர்களாக இருப்பது எப்படி என்று நமக்கு சொல்லுகிறது. அதில் அடங்கி இருப்பவையாவன:

**சுவிசேஷங்கள்**, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், மற்றும் உயிர்த்தெழுதலை விவரிக்கின்றன. பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களான நியாயப் பிரமாணங்களுக்கு இவை நிகரானவை.

**அப்போஸ்தலருடைய நடபடிகள்,** இயேசு பரத்திற்கு ஏறிய பின்னர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அப்போஸ்தலர்கள் எவ்வாறு சபைகளை ஸ்தாபித்தனர் என்று கூறுகிறது. நியாயாதிபதிகளும், இஸ்ரவேலின் இராஜாக்களும் நடத்திய செயல்களைக் கூறும் பழைய ஏற்பாட்டின் சரித்திர புத்தகங்களுக்கு நிகரானது இது.

**கடிதங்கள்**, புதிய சபைகளுக்கும் விசுவாசிகளுக்கும் உதவ அப்போஸ்தலர்களும் அவர்களது உடன் ஊழியர்களும் எழுதியவை. நீதிமொழிகள், சங்கீதம் போன்ற பழைய ஏற்பாட்டு கவிதை நூல்களுக்கு நிகரானவை இவைகள்,

**வெளிப்படுத்தின விசேஷம்**, அப்போஸ்தலர் யோவான் எழுதிய இது எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம். எரேமியா, யோனா, ஏசாயா போன்ற பிற்கால பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களுக்கு இணையானது இது.'' தயாளர் கேட்கிறார், ''வேதாகமத்தைப் படிக்க சிறந்த வழி எது?'' சகாயர் கல்விநேசரைப் பார்க்கிறார். ஆனால் கல்விநேசர், சகாயரையே மீண்டும் பதில் கூறுமாறு சொல்கிறார், ''அவர் உனது மாணவர். ஏற்கனவே இந்த விஷயங்களை நீ படித்திருக்கிறாய். எனவே நீதான் போதிக்க வேண்டும்.''

சகாயர் தயாளருக்கு விவரிக்கிறார், ''வேதாகமத்தை ஜெபத்தோடு படிக்க ஆரம்பிக்க வேண்டும். பின்னர் வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தையோ, அல்லது ஜெபம், விசுவாசம் போன்ற ஒரு பொருள் குறித்தோ வாசித்துச் செல்லலாம். முடிப்பதற்கு எத்தனை நாள் வேண்டுமோ அத்தனை நாள் எடுத்துக் கொள்ளலாம். ஒரே வசனத்தில் கவனம் செலுத்தக் கூடாது. ஏனெனில் நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடும். அதற்குப் பதில் அந்த முழுப்பகுதியையும் வாசிக்க வேண்டும். ஒரு வசனத்திற்கு முன்னால் இருப்பவைகளையும் பின்னால் இருப்பவைகளையும் வாசித்தால்தான் சூழ்நிலை புரியும். அந்த குறிப்பிட்ட பகுதி விளங்காவிட்டால் அந்த அதிகாரம் முழுவதையும் படிக்கவேண்டும். அந்த அதிகாரமும் புரியவில்லை என்றால் அந்தப் புத்தகத்தையே முழுமையாக வாசிக்கவும்.''

''சூழ்நிலை என்றால் என்ன?''

''சூழ்நிலை என்பது சரித்திரப் பின்னணி. என்ன நடந்து கொண்டிருக்கிறது; என்ன பேசப்பட்டது அல்லது எழுதப்பட்டது; என்ன தொடர்கிறது என்பதே. யார் பேசியது அல்லது எழுதியது, யாரிடம் அல்லது ஏன் என்பவைகளை சூழலை ஆராய்ந்தே கண்டுகொள்ள முடியம்.இது மறைபொருள் கொண்ட தரிசனத்தை விளக்கும் ஓர் அதிகாரத்தில் இருக்கிறதா அல்லது நேரடியாக பொருள் கொள்ளக் கூடிய ஒரு சரித்திர சம்பவத்தின் அடிப்படையில் அமைந்ததா? சாத்தான் பேசுகிறானா அல்லது யாரோ ஒரு மோசமான மனிதன் பேசுகிறானா? அப்படி என்றால் அவர்கள் சொல்லுவதை நாம் நம்புவதில்லை.''

''சூழலை ஆராய்ந்தும் அவற்றில் சிலவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால்?''

''உங்களுக்குப் புரியாத எதையும் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டாம். முதலில் புதிய ஏற்பாட்டில் இருந்து ஆரம்பியுங்கள். பின்னர் முழு வேதாகமத்தையும் வாசிக்கலாம். நாம் வேதம் கூறுவதற்குக் கீழ்ப்படியாவிட்டால் படித்தும் பயன் இல்லை. நீங்கள் படித்ததைக் கைக்கொள்ள தேவனிடம் உதவி கேளுங்கள். ஒரு வேதாகமப் பகுதியைப் படிக்கும்போது கீழ் வருவனவற்றை கருத்தில் கொண்டால் நீங்கள் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்:

**புத்தகத்தை யார் யாருக்காக எழுதினார்கள்?**
**எங்கே எப்போது அந்த சம்பவம் நிகழ்ந்தது?**
**வாசிக்கிற பகுதியில் பேசுவது யார்?**
**நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்காக அப்பகுதி நம்மை ஆயத்தப் படுத்துகிறது?**

### கிறிஸ்துவின் சீஷர்களை உருவாக்க வேதாகமத்தை எவ்விதம் போதிக்க வேண்டும்?

சகாயர் கூறுகிறார், ''தேவ வார்த்தைகளைக் கற்பது எவ்வளவு பயனுள்ளது என்பதைப் பற்றி நான் ஒரு பாடல் எழுதப் போகிறேன். அந்தப் பாடல் எதை வலியுறுத்த வேண்டும்?''

தயாளர் ஆலோசனை தருகிறார், ''பரிசுத்த ஆவியின் வல்லமையோடு வேதவசனங்களை உபயோகிக்கும் போது அவர் நமது வாழ்க்கையை மாற்றுகிறார் என்பதை நீங்கள் குறிப்பிடலாம்.''

கல்விநேசன் மேலும் கூறுகிறார், ''நாம் நல்ல இராஜா யோசியாவும் மறுமலர்ச்சியும் குறித்துப் பாடலாம். அவன் தேவ வார்த்தையை வாசித்து கீழ்ப்படிந்து தமது மக்களுக்கு ஆவிக்குரிய மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தான்.''

## பயிற்சி

**2 நாளாகமம் 34:1-13** ல் காண்க:

- தேவனிடத்தில் யோசியா இராஜாவின் மனநிலை எவ்வாறு இருந்தது?
- தேவனைத் தேட யோசியா செய்த காரியங்கள் என்ன?

**2 நாளாகமம் 34:14-21** ல் காண்க:

- யோசியா இராஜா ஏன் திகில் அடைந்தான்? தானும் தன் மக்களும் செய்ததற்காக ஏன் அவன் மனம் வருந்தினான்?

**2 நாளாகமம் 34:22-32** ல் காண்க:

- யோசியா இராஜா மனம் வருந்தியதாலும், தேவ வார்த்தைகளைக் கீழ்ப்படிந்து கைக்கொண்டதாலும் என்ன நிகழ்ந்தது?

சகாயரின் வீட்டில் பேசிக்கொண்டு இருந்தபோது தயாளர் கல்வி நேசரிடம் கூறுகிறார், ‘‘உங்களைப் போலவே நானும் தேவ வசனங்களைப் போதிக்க விரும்புகிறேன். ஒரு நல்ல பிரசங்கத்தை எப்படி தயாரிப்பது?’’

ஞானம் ஐயா சொல்லிக் கொடுத்ததை தயாளருக்கும் சகாயருக்கும் கல்விநேசன் விவரிக்கிறார், ‘‘பிரசங்கத்தை ஆயத்தப்படுத்தும் போது இந்த அடிப்படைகளை கவனத்தில் கொள்ளுங்கள்: திட்டமிடுதல், படித்தல், விளக்குதல், கைக்கொள்ளுதல்.

**உங்கள் பிரசங்கத்தைத் திட்டமிடுங்கள்:** தேவ வழிநடத்தலுக்கு ஜெபிக்கவும். உங்கள் சபைக்குக் குறிப்பாகத் தேவைப்படும் சத்தியத்தைப் பற்றி யோசியுங்கள். பலப்படுத்தப்பட வேண்டிய ஊழியம் உண்டா? உங்கள் சபையின் அன்பையும் கிறிஸ்துவுக்கான சேவையையும் எந்த வேத பகுதி பலப்படுத்தும்?

**வேத வசனத்தைப் படியுங்கள்:** உங்கள் சபை மக்களுக்கு தேவையானதை எந்த வேத பகுதி போதிக்கிறது என்பதைக் கண்டறியுங்கள். வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தையோ, சிறிய பகுதி ஒன்றையோ, அல்லது ஒரு கருத்தையோ தெரிந்து கொள்ளுங்கள். கருத்து என்பது நீங்கள் போதிக்கத் திட்டமிடும் சத்தியத்தை உள்ளடக்கிய பகுதி. நாம் கலந்தாலோசித்த படியே வேதாகமத்தைப் படியுங்கள். ஒரு பொருள் குறித்தோ அல்லது ஒரு புத்தகத்தையோ போதிக்கும் முன் பல வாரங்கள் அதைப் படிக்க வேண்டும். நீங்கள் காணும் முக்கிய குறிப்புகளை எழுதி வைக்க வேண்டும். போதனைகளை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தும் வழிகளைக் கண்டறிய வேண்டும்.

**தேவ வார்த்தையை விவரித்துக் கூறுங்கள்:** உங்கள் பிரசங்கத்தின் நோக்கத்தை ஒரு கேள்வி அல்லது உதாரணத்தின் மூலம் அறிமுகப் படுத்த வேண்டும். அப்பகுதியை நீங்கள் படித்தபோது எழுதி வைத்த முக்கிய குறிப்புகளை விளக்கிச் சொல்ல வேண்டும். உதாரணங்கள், வேதாகமக் கதைகள் மற்றும் உங்கள் வாழ்க்கை சாட்சிகள் மூலம் போதனைகளை மக்கள் தங்கள் வாழ்க்கையில் கைக்கொள்ள உதவ வேண்டும்.

**தேவ வார்த்தையைக் கைக்கொள்ளுதல்:** வேதபகுதி அவர்களுடைய வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். முடிவாக கேட்டவற்றை உடனடியாக கைக்கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.

சகாயர் கல்விநேசனைக் கேட்கிறார், ‘‘எங்கள் புதிய குழுவிற்கு இன்று இரவு பிரசங்கம் செய்கிறீர்களா? எனக்கும் தயாளருக்கும் இன்று நீங்கள் போதித்த வேதாகமத்தின் அதிகாரம் குறித்து அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.’’

கல்விநேசன் மறுக்கிறார். ‘‘நன்றி... வேண்டாம். ஆனால் உங்கள் சபைக்காக வேதாகமத்தின் அதிகாரம் பற்றி ஒரு செய்தியை ஆயத்தம் செய்ய உதவுகிறேன். நாம் மீண்டும் 2 தீமோத்தேயு 3:16, 17 ஐ வாசிப்போம். நீங்கள் இயேசுவின் சோதனை, யோசியா செய்த சீர்திருத்தம் ஆகிய கதைகளை உதாரணமாக சேர்க்கலாம்.’’

அன்று இரவு சகாயர் தன் சபைக்கு சற்று நடுங்கியவாறே செய்தி தருகிறார். மூன்று கட்ட அதிகாரங்களைப் பற்றி அவர் விளக்குகிறார். முதலாம் கட்ட அதிகாரம் புதிய ஏற்பாட்டு கற்பனைகள். இரண்டாவது, கட்டளையாகச் சொல்லப்படாத புதிய ஏற்பாட்டு நடைமுறைகள். மூன்றாவது, மனிதன் வகுத்த சம்பிரதாயங்கள். அவர் அம் மூன்று கட்ட அதிகாரங்களை அழகுற விளக்குகிறார்.

முடித்தபின் சகாயர் குறிப்பிட்டது: ‘சில ஆண்டுகள் வேதாகமக் கல்லூரியில் நான் படிக்க வேண்டும் என்று உங்களில் சிலர் விரும்புகிறீர்கள். அது கிறிஸ்துவின் கற்பனையும் அல்ல, அப்போஸ்தலரின் நடைமுறையும் அல்ல என்று இப்போது நான் அறிகிறேன். அது போதகர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பொதுவான மரபு. நான் தொடர்ந்து தேவ வார்த்தையை கல்விநேசரிடம் இருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் அவர் சபை மக்களாகிய உங்களுக்கு சரியான முறையில் தேவ வார்த்தையை கொடுக்க எனக்கு உதவுகிறார். இருவாரங்களாக அவர் என்னை சந்தித்து இந்த புதிய சபைக்கு எவ்வாறு வேதவசனங்களை மேலும் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது என்று காட்டுகிறார்.’’ தயாளர் கூறுகிறார், ‘‘கல்விநேசரே, சகாயருக்கு போதிப்பது மூலம் தேவ வார்த்தையை நாங்கள் கைக் கொள்ள உதவுவதால் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம்.’’

## நடைமுறைப் பணிகள்

- வேதத்தின் அதிகாரம் பற்றி இப் பகுதி கதைகளின் உதவியோடு உங்கள் சபைக்குப் போதிக்கவும்.
- வேதாகமத்தில் உள்ள புத்தகங்களின் பட்டியலை உங்கள் சபையார் மனனம் செய்ய உதவுங்கள். ஒவ்வொரு புத்தகமும், கவிதை, வரலாறு, கடிதம், தீர்க்கதரிசனம் போன்ற எழுத்து வகைகளில் எதைக் கொண்டுள்ளது என்று அறிய உதவுங்கள்.
- உங்கள் சபை மூன்று கட்ட அதிகாரங்களின் வித்தியாசங்களை அறிந்து செயலாற்ற உதவுங்கள்.
- உங்கள் பிரசங்கங்களை ஆயத்தம் செய்ய நான்கு அடிப்படைகளை பின்பற்றுங்கள்: திட்டமிடல், படித்தல், விவரித்தல், கைக்கொள்ளுதல்.
- இயேசு கிறிஸ்துவின் மேல் அன்பும், அவருக்கான சேவையும் பலப்பட உதவும் பிரசங்கங்களை ஆயத்தம் செய்ய உங்கள் சபையில் உள்ள பிறருக்கும் உதவுங்கள்.

## III - 5 - ஊழியம் 5
# புதிய சபைகளைத் தொடங்கு

கல்விநேசனின் வீட்டில் நடந்த ஒரு துதி ஆராதனைக்குப் பின், இரு பெண்கள் அருகே நிற்க ஞானசூனியர் கல்விநேசனிடம் கூறுகிறார், ''நாங்கள் உங்களிடம் பேச வேண்டும். உங்கள் மாணவர் சகாயர் இன்னொரு சபை ஆரம்பிக்கக் கூடாது என்று நாங்கள் முடிவெடுத்து விட்டோம். நமது சபை மக்கள் பலர் இங்கிருந்து அங்கு சென்று விட்டனர். இது நமது சபையை பலவீனப்படுத்துகிறது. சகாயரின் குழுவில் உள்ள மக்கள் இங்கு வரும்படி நீங்கள் சொல்ல வேண்டும். அவர்கள் ஒரு பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள். சகாயர் உங்களோடு இணைந்து பணியாற்றி இந்த சபைக்கு சேவை செய்யட்டும்.''

''உங்கள் அக்கறை எனக்குப் புரிகிறது'' கல்விநேசன் பதிலளிக்கிறார், ''நானும், ஞானம் ஐயாவும் சொன்னதைத் தான் என் தம்பி சகாயர் செய்கிறான். அந்தப் பகுதியில் வாழும், அவன் மனைவி ராகேலின் சொந்தக்காரர்கள் பலரை அவன் சந்திக்கிறான். அவர்கள் சுவிசேஷத்திற்கு செவி கொடுக்கிறார்கள். அவர்கள் இங்கே வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது தேவனுடைய இராஜ்ய வளர்ச்சியைத் தடை செய்யும். நமது நாடு முழுவதும் பல்கிப் பெருகி கிறிஸ்துவின் இராஜ்யம் வளரட்டும்.''

''நான் இதை ஒத்துக்கொள்ள மாட்டேன்.'' ஒரு பெண் கூறினாள், ''ஒரு புதிய சபையை ஸ்தாபித்தால் அதன் தலைமைப் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும். சகாயர் புதிய விசுவாசியாக இருப்பதால் தலைமைப் பொறுப்பை அவரால் ஏற்க முடியாது.''

கல்விநேசன் பொறுமையாக கூறுகிறார், ''சகாயரின் புதிய சபைக்குழு பலமான சபையாக சீக்கிரம் வளரும். அது எனக்கு சொந்தமானது அல்ல. இயேசுவுக்கு சொந்தமானது. நாம் ஆரம்பிக்கும் ஒவ்வொரு சபையையும் தலைமை தாங்க எனக்கு நேரம் இல்லை. நான் சகாயருக்கு பயிற்சி தருகிறேன். அவன் சபையை தலைமை தாங்கி புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிக்கிறான். பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்தியது போலவே அவனையும் வழிநடத்துவார். பவுல் எவ்வாறு சபைகளை ஆரம்பித்தார் என்று அறிய விரும்புகிறீர்களா?'' ஒரு பெண் ஆம் என்கிறாள். சில ஆண்கள் கேட்கக் குமுமுகின்றனர். உட்காரும்படி கல்விநேசன் எல்லோரையும் அழைக்கிறார்.

### பயிற்சி

**அப்போஸ்தலர் 13-14 அதிகாரங்களில்** காண்க:

- அந்தியோகியாவில் உள்ள விசுவாசிகள் எவ்வாறு பவுலையும் பர்னபாவையும் தேர்ந்து புதிய சபைகள் ஸ்தாபிக்கப் பிரித்து எடுத்தனர்.
- பிசீதியா, அந்தியோகியா, லீஸ்திரா ஆகிய இடங்களில் இந்தப் பணிக்குழு எவ்வாறு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது?
- சில பட்டிணங்களில் இருந்து யூதர்கள் அவர்களை வெளியேற்றியபோது என்ன செய்தார்கள்?
- தங்கள் பிரசங்கத்தால் விசுவாசத்துக்குள் வந்த மக்கள் வாழும் பகுதிகள் வழியாகத் திரும்பி வந்தபோது பவுலும் பர்னபாவும் என்ன செய்தார்கள்?
- அந்தியோகியாவில் உள்ள தங்கள் சொந்த சபைக்கு திரும்பி வந்த பிறகு அவர்கள் என்ன செய்தார்கள்?

ஞானசூனியரிடம் என்ன சொல்லுகிறார் என்று கேட்கக் கூடிய சிறு கூட்டத்தாருக்கு கல்விநேசன் விளக்கம் அளிக்கிறார், ''சபை மக்கள் ஆராதித்து உபவாசம் இருந்த போது, பவுலையும் பர்னபாவையும் தேவன் ஒரு விசேஷப் பணிக்காக பிரித்து எடுத்துள்ளார் என்பதை அறிந்து கொண்டார்கள். தலைவர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்து, ஜெபித்து ஒரு குழுவாக அவர்களை அனுப்பினார்கள். எங்கெல்லாம் அவர்கள் சென்றார்களோ, அங்கெல்லாம் அவர்கள் செவி கொடுக்கும் மக்களைக் கண்டு அவர்களுக்கு இயேசுவைப் பற்றி போதித்தார்கள். அபிஷேகிக்கப்பட்டவரும் தேவனால் வாக்களிக்கப்பட்டவருமான இயேசு கொல்லப்பட்டு எழுந்ததையும் பலர் அவரைக் கண்டதையும் அவர்களுக்கு கூறினார்கள். பிணியாளிகளுக்காக அவர்கள் ஜெபித்தனர். சிலர் குணம் அடைந்தனர். லீஸ்திராவில் தங்களைக் கடவுள்கள் என்று வணங்க வந்த மக்களைத் தடுத்து, விக்கிரகங்களை விட்டுவிட்டு ஒரே மெய் தேவனிடம் திரும்புமாறு கூறினார்கள்.''



''புறஜாதி மக்களில் பலர் ஏற்றுக் கொண்டு விசுவாசித்தனர். ஆனால் யூதர்கள் பிரசங்கத்தை நிராகரித்தனர். வெளியேற்றப்பட்ட போது பவுலும் பர்னபாவும் காலில் உள்ள தூசியை உதறி விட்டு வேறு இடத்துக்குப் போனார்கள். இதே பட்டிணங்கள் வழியாக திரும்பி வரும் போது ஒவ்வொரு சபையையும் வழி நடத்த மூப்பர்களை நியமித்து அவர்களை ஜெபத்தாலும் உபவாசத்தாலும் கர்த்தருக்குள் உறுதிப் படுத்தினார்கள். அவர்களை அனுப்பிய சபைக்கு திரும்பி வந்து என்ன நடந்தது என்று அறிவித்தார்கள். இதையே நமது சபையும் செய்கிறது. ஆரம்பமே சகாயரின் புதிய சபை.'' ஞானசூனியர் ஒரு குதிரையைப் போல் கனைத்து விட்டு இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு போகிறார்.

**புதிய சபைகளை ஆரம்பித்தல்**

**கல்விநேசன் மறுபடியும் சகாயரிடம் சென்று அவருக்கு ஆலோசனை கூறி ஊக்கப்படுத்துகிறார். "சகாயா! அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்ட புறஜாதி மக்கள் போல, ராகேலின் உறவினர்களும், சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களிடம், மனந்திரும்பி, இயேசுவை விசுவாசித்து, அவரது நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்கக் கூறினாயா?"**

''ஆமாம். அடுத்து என்ன செய்ய வேண்டும்?''

''உன்னுடைய தாய் சபையிலே எங்களிடம் இருந்து கற்றுக்கொண்ட துதியின் அடிப்படைகளைக் கொண்டு தேவனை எவ்வாறு துதிப்பது என்று கற்றுக் கொடு. தயாளரை உதவிக்கு வைத்துக் கொள். அடிப்படை விஷயங்களை மறவாதே. ஜெபிக்கவும், தேவ வார்த்தையைப் படிக்கவும், பாவத்தை அறிக்கை இட்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெறவும், கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும், கொடுக்கவும், ஐக்கியமாக இருக்கவும் கற்றுக்கொடு. ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொருவரும் பங்கேற்கட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் ஏழு அடிப்படை கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய கற்றுக் கொடு. எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''

''அதைப் பாடலாக பாடுவேன்'' சகாயர் பதில் அளிக்கிறார். ''நான் மறக்க மாட்டேன்.'' அவர் பாடலைப் பாடுகிறார். மனந்திரும்பு, விசுவாசி, ஞானஸ்நானம் எடு, அன்புகூர், கர்த்தரின் பந்தியை ஆசரி, ஜெபி, கொடு, சீஷர்களை உருவாக்கு என்று பாடல் பட்டியல் இடுகிறது. ''தேவ ஆவியானவர் இவற்றை எல்லாம் செய்ய நமக்கு உதவுகிறார்.''

''நல்லது'' கல்விநேசன் கூறுகிறார். ''குழு தொடர்ந்து கூடும்போது, வேறு நல்ல தலைவர்களை தேர்ந்து, அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபியுங்கள். அப்போஸ்தலர்கள் செய்தது போல நீங்கள் உபவாசமும் இருக்கலாம். ஆனால் அவர்கள் அதை கட்டளையாகக் கூறவில்லை. தான் ஸ்தாபித்த புதிய சபைகளில் பவுல் செய்தது போல ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களை ஏற்படுத்துவது நல்லது. இந்தத் தலைவர்கள் தற்காலிகமாக முதலில் தெரிந்து கொள்ளப்படலாம். அதாவது முதலில் தற்காலிகமாக பெயர் கூறி, அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்று பார்க்கலாம். இந்த பொறுப்புக்கு ஏற்ற வரத்தை தேவன் யாருக்கு கொடுத்திருக்கிறார் என்று அறிய நாளாகலாம். இந்தத் தலைவர்கள் உடனடியாக கிறிஸ்துவின் ஏழு அடிப்படை கற்பனைகளை கைக் கொள்ள உதவ வேண்டும். என்னிடம் இருந்து கற்றதை அவர்களுக்கும் சொல்லிக் கொடு. உனக்கு தேவைப்படும் போது நான் உதவுவேன்.''

இரண்டு வாரங்கள் கழித்து சகாயரைக் காண கல்விநேசர் வருகிறார். சகாயர் கூறுகிறார், ''நீங்கள் எனக்கு போதித்ததை நான் நடைமுறைப்படுத்தினேன். இன்னும் பல ராகேலின் சொந்தக்காரர்களை சந்தித்தேன். அவர்களை அழைத்துக் கொண்டு அவர்களுடைய நண்பர்களைப் பார்க்கப் போனேன். பலர்

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். கற்றுக் கொடுக்குமாறு எனக்கு நீங்கள் போதித்தவைகளை சபையில் உள்ள ஒவ்வொருவரும் கைக்கொள்ளுகிறார்கள்.''

சில வாரம் கழித்து கல்விநேசன் மீண்டும் சகாயரை பார்க்க வருகிறார். சகாயர் கூறுகிறார், ''நாங்கள் இன்னொரு புதிய சபையை ஆரம்பித்து விட்டோம். அது என்னுடைய மாமனார் வீட்டில் கூடுகிறது. ராகேலின் இரண்டு உறவினர்கள் மேல் நான் கைகளை வைத்து தற்காலிக மூப்பர்களாக அவர்களை நியமித்து இருக்கிறேன்.''

''இங்கு பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைக் கண்டு நான் களிகூருகிறேன். நமக்கு இப்போது ஒரு பேத்தி சபை வந்துவிட்டது. நான் அப்போஸ்தலர்களின் நடபடி புத்தகத்தைப் படித்து வருகிறேன். எவ்வாறு முதல் சபை ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் பற்றிக் கூறுகிறேன். ராகேலின் உறிவனர்களுக்கு இதைக் கற்பித்து அவர்களைத் தொடர்ந்து பயிற்றுவிக்க இது உதவியாக இருக்கும்.''

## பயிற்சி

**அப்போஸ்தலர் 1 ல்** காண்க:

- பரத்துக்கு ஏறுமுன் சுவிசேஷத்தை எங்கு எடுத்துச் செல்லுமாறு இயேசு தமது சீஷர்களிடம் கூறினார்?
- வல்லமை எங்கு இருந்து வந்தது?

**அப்போஸ்தலர் 2 ல்** காண்க:

- சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவி வந்தபோது என்ன நடந்தது?
- இயேசுவைப் பற்றி கூடி இருந்த ஜனங்களுக்கு பேதுரு என்ன கூறினார்?
- முதல் சபை பிறக்கக் காரணமாக மனம் திரும்பிய மக்கள் செய்தவைகள் யாவை?

சகாயரின் வீட்டில் கல்விநேசன் சகாயருக்கு விளக்கிக் கூறுகிறார், ''பக்கத்தில் இருப்பவர்கள் தொடங்கி ஒவ்வொருவருக்கும் நற்செய்தியைக் கொண்டு செல்லுமாறு இயேசு தன் சீஷர்களுக்குக் கட்டளை இட்டார். பரத்தில் இருந்து பரிசுத்த ஆவியாகிய வல்லமை வரும் என்று வாக்குத்தத்தம் செய்தார். பெந்தெகொஸ்தே நாளில் அவர் வந்து சீஷர்களை நிரப்பினார். சிலர் இதை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அழைக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர் அவர்களை பலத்தால் நிறைத்தார். ஓர் உணர்ச்சிக்காகவோ அல்லது ஒரு தனிப்பட்ட அனுபவத்திற்காகவோ அவர் இதை நமக்குத் தருவதில்லை. தேவனை சேவிப்பதற்கும், இயேசுவைப் பற்றி வல்லமையோடு கூறவும் நம்மைப் பலப்படுத்தவே அவர் இதை நமக்குச் செய்கிறார். தாங்கள் படித்தறியாத மொழிகளான, கூடியிருந்த மக்களின் சொந்த பாஷைகளில் அப்போஸ்தலர்கள் நற்செய்தியைக் கூறினர். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் தாமே என்பதை இயேசு பல அற்புதங்களின் மூலம் நிரூபித்தார் என்று பேதுரு அறைகூவிக் கூறினார். நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்க மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்தார்.''

சகாயர் கூறுகிறார், ''மூவாயிரம் மக்கள் பேதுரு கூறியதைக் கேட்டு மனம் திரும்பினர் என்பதை ஞாபகம் வைத்துள்ளேன். அதே நாளில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அப்போஸ்தலர்கள் அவர்களை சபைக்குள் கொண்டுவந்தனர். புதிய விசுவாசிகள் தினந்தோறும் தங்கள் வீடுகளிலும் யூத ஆலயத்திலும் கூடி ஆராதித்தனர். உடனடியாக அவர்கள் இயேசுவின் ஏழு அடிப்படைக் கற்பனைகளையும் கைக்கொள்ள ஆரம்பித்தனர். முதல் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் ஒருவரில் ஒருவர் மிகவும் அன்பு கூர்ந்தனர்.''

### நடைமுறை வாழ்க்கையில் அன்புகூருதலும் ஒருவருக்கு ஒருவர் கொடுத்துதவுதலும் ஆகிய இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல்

தேவன் சகாயரின் சபையை ஆசீர்வதிக்கிறார். ஜனங்கள் இயேசுவைக் குறித்து நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கூறுவதால் அது இயல்பாக வளர்கிறது. சகாயர் கல்விநேசனின் தச்சுக்கூடத்திற்கு வந்து சொல்லுகிறார், ''என் சபை மிகவும் பெரிதாக வளர்ந்து விட்டது. அதனால் ஆதியில் இருந்தது போல் மக்கள் ஐக்கியத்தில் களிகூர்ந்து ஒருவருக்கு ஒருவர் சேவை செய்ய முடியாமல் போயிற்று. அவர்கள் வந்து அப்படியே கேட்டுச் செல்கிறார்கள். அவர்களுக்கு ஒருவருக்கு ஒருவரை தெரியவில்லை. என்னுடைய வீட்டிலும் நெருக்கடியாகிவிட்டது. குழு மிகவும் பெரிதாகி விட்டதால் ஒருவருக்கொருவர் இடையே உள்ள அன்பு தணிந்து போய்விட்டது. ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் இல்லை; பேசிக் கொள்ளுவதும் இல்லை. சிறுகுழுவாக இருக்கும்போது செய்தது போல சுவிசேஷமும் சொல்வதில்லை. ஐக்கியத்தை பலப்படுத்தி எவ்வாறு நாங்கள் இயேசுவுக்கு சாட்சியாய் திகழ்வது?''

கல்விநேசன் பதில் அளிக்கிறார், ''இது ஒரு சாதாரண பிரச்சினைதான். ஒரு சபைக்கு இரண்டு முக்கியமான வேலைகள் உண்டு: மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதும், அவர்களை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுள்ள சீஷராக உருவாக்குவதுமே அவை. இவைகளை சரியான முறையில் செய்ய உங்கள் சபை மக்களை சிறுசிறு குழுவாக பிரிக்க வேண்டும். ஒருசில குடும்பங்களாக தங்கள் குடும்ப இல்லங்களில் கூடும் சிறுகுழுக்களின் தலைவர்களுக்காக சிறு குழுக்களை அமைப்பது எவ்வாறு என்பதற்கு யோசனைகள் அடங்கிய பட்டியல் இதோ.'' அவர் எழுதுகிறார்.

**ஒவ்வொரு சிறுகுழு அல்லது 'செல்' (Cell) என்பது புதிய ஏற்பாட்டு சபையே. ஒரு பெரிய சபையின் சிறு பகுதியாக இருந்தாலும், ஒரு சபை செய்யும் எல்லா வேலைகளையும் அது செய்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகளில் அப்போஸ்தலர்கள் இவ்விதமாகவே சபைகளை அமைத்தனர்.**

**பட்டிணங்களில் இருந்த சபைகளில் ஏராளமான அங்கத்தினர்கள் இருந்தனர். ஆனாலும் அந்த சபை வீடுகளில் கூடும் சிறுசிறு குழுக்களால் கட்டப்பட்டவைகளே. அவைகள் ஜெபித்து, வார்த்தையைக் கற்று, கர்த்தரின் பந்தியை ஆசரித்தன.**

**கூடுமான வரையில் தலைவரின் வீட்டில் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். மக்கள் அந்தக் குழு அவருடையது என்று நினைத்துவிடலாம். மற்றவர்களின் வீடுகளுக்கு போகும்போது கிறிஸ்துவுக்காக மேலும் பலரை நாம் ஆதாயப்படுத்தலாம்.**

**குழுவில் பிரியும் காணிக்கைகளை தலைவர் கையாளக் கூடாது. வேறு ஒருவரை நியமிக்க வேண்டும். மந்தையை மேய்க்க தலைவர் வேறு பொறுப்பின்றி சுதந்திரமாக இருக்க வேண்டும்.**

**அந்த சிறு குழுவிற்கு பிரசங்கம் செய்வதை தவிர்த்து ஒன்றாக வேதாகமத்தை ஆராயலாம். வாசிக்கும் பகுதியில் இருந்து கேள்விகள் கேட்கலாம். எல்லோரும் அது குறித்துப் பேச வேண்டும். அவரவர்க்குள்ள வரத்தின்படி, போதிப்பதிலும், ஆராதனையில் பங்கு பெறவும் ஒவ்வொருவரையும் ஊக்குவிக்க வேண்டும்.**

**இந்த காரியங்களில் முழு குடும்பங்களையும் ஈடுபடுத்தவும்.**

**ஒவ்வொரு தடவை கூடும்போதும் ஒரு முழுவிருந்தை உண்ணக்கூடாது. இது அழைத்தவர்களுக்கு சுமை. 1 கொரிந்தியர் 11 ல் பவுல் எச்சரிப்பது போல கர்த்தரின் பந்தியின் முக்கியத்துவத்தை சிதறடிக்கும். இந்தக் குழுவிற்கு போதிக்க புதிதாக வந்தவர்களை அனுமதிக்கக் கூடாது. நீங்களும் பிற தலைவர்களும் முதலில் அவர்களுடைய வாழ்க்கையை ஆராய வேண்டும்.**

**அவர்களுக்கும் சொல்லிக் கொடுங்கள். அவர்களும் தங்கள் சொந்தக் குழுக்களை விரைவில் தொடங்க ஊக்கம் அளியுங்கள். இது, கிறிஸ்துவுக்கான இயக்கம் வளர்ந்து கொண்டே இருக்க உதவும்.**

இரண்டு மாதங்கள் கழித்து கல்விநேசனின் தச்சுக் கூடத்திற்கு வந்த சகாயர் அறிவிக்கிறார்: ''நானும் பிற தலைவர்களும் உங்கள் ஆலோசனைகளைப் பின்பற்றுகிறோம். அந்தப் பகுதி முழுவதும் வீடுகளில் சந்திக்கும் சிறு குழுக்களை ஏற்படுத்தியுள்ளோம். சில குழுக்கள் அவிசுவாசிகளின் வீடுகளுக்கும் செல்லுகின்றன. மற்ற குழுக்கள் ஜெபத்திலும், தூரமான புதிய இடங்களுக்கு ஊழியர்களை அனுப்புவதிலும் கவனம் செலுத்துகின்றன. அநேகமாக எல்லாக் குழுக்களும் சமுதாயத்தில் தேவையில் இருப்பவர்களிடம் கவனம் செலுத்துகின்றன. அவர்கள் எல்லோரும் தங்கள் ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து சபையையும் புதிய சிறு குழுக்களையும் கட்டும் வழிவகைகளை எதிர்நோக்குகின்றனர். சுவிசேஷத்தை அவர்கள் தங்கள் நண்பர்கள் வட்டாரத்துக்கு கொண்டு செல்லுகின்றனர். நான் தினமும் சிறு குழுக்களின் மேய்ப்பர்களை சந்தித்து ஜெபிக்கிறேன். அவர்கள் கூறுவதைக் கேட்டு பிரச்சினைகளைத் தீர்த்து ஊக்கப்படுத்துகிறேன்.''

“அற்புதம்!”

“வெகு தூரத்தில் வாழும் உறவினர்களை சந்திக்க ஒரு குழு செல்கிறது. புதிய சபைகளாக இக் குழுக்களை ஸ்தாபிக்க நானும் மூப்பர்களும் திட்டமிடுகிறோம். மாதத்துக்கு ஒரு முறை குழுக்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி ஆராதிக்கின்றன. அடுத்த முறை நீங்கள் வர வேண்டும்.”

கல்விநேசன் எச்சரிக்கிறார், “அவர்கள் எல்லாரும் ஒரு பெரிய குழுவாக கூடி வரும்போது கவனமாக இருக்க வேண்டும். இதனால் தான் ஞானம் ஐயாவை அதிகாரிகள் கட்டாயமாக வெளியேற்றினர். கிறிஸ்துவின் சபை வளரும் போது பாடுகளும் தொடர்ந்து வரும் என்பது உண்மை.”

சகாயர் பதில் அளிக்கிறார், “தேவன் அவர்களில் சிலரை தூர இடங்களுக்கு ஞானம் ஐயாவைப் போல சாட்சிகளாக அனுப்புவார். இதற்கு அதிக நாளும், பணமும், முயற்சியும் தேவைப்படும். ஆனால் நீங்கள் போதித்த தேவப் பணிகளின் ஒவ்வொரு பகுதியிலும் சபை பங்கு பெற விரும்புகிறேன்.”

“மிகவும் நல்லது” கல்விநேசன் ஒத்துக்கொள்கிறார். “இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை உலகத்தில் உள்ள ஒவ்வொரு மக்கள் குழுக்களும் கலாச்சாரங்களும் கேட்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.”



## நடைமுறைப் பணிகள்

- புதிய சபைகளை ஸ்தாபிக்கும் திறமை பெற்றவர்களை இனங்காண உதவுமாறு தேவனிடம் வேண்டுங்கள். ஜெபித்து, உபவாசித்து கைகளை வைத்து அவர்களைப் பிரித்து எடுங்கள்.
- இயேசுவை ஆராதித்து கீழ்ப்படிய கூடி வரும் புதிய விசுவாசிகள் குழுக்களை புதிய சபையாக அங்கீகரித்து தலைவர்களை நியமியுங்கள்.
- தங்களை நிலைநிறுத்தும் வரை, புதிய தலைவர்கள் விசுவாசத்திற்கு புதியவர்களாக இருப்பார்களேயானால் தற்காலிக மூப்பர்களாக மட்டுமே நியமியுங்கள்.
- இந்த தலைவர்களை போதித்து உருவாக்குங்கள். தேவன் யாருக்கு பொறுப்பை அளிக்கிறார் என்பது தெளிவாகும் வரை, அவர்கள் சில மாதங்கள் அல்லது ஒரு வருடம் வரை தற்காலிக தலைவர்களாகவே இருக்கட்டும்
- எல்லாவற்றையும் விட கிறிஸ்துவின் எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய இந்தப் புதிய தலைவர்களுக்கு போதியுங்கள். எவ்வாறு ஞானஸ்நானம் அளிப்பது, கர்த்தரின் பந்தியை ஆசரிப்பது, ஆராதனையின் அடிப்படைகளை நடைமுறைப் படுத்துவது என்று காட்டுங்கள்.
- தங்கள் வேலைகளை மேற்பார்வை பார்த்து போதிக்கும் அனுபவமுள்ள தலைவர்களின் கீழ் இருக்கும் வரை இவர்கள் இந்த வழிகளிலேயே சேவை செய்யட்டும்.
- சந்திக்கும் போது ஒருவருக்கொருவர் பேசிக் கேட்கவும், ஒருவருக்கொருவர் சேவை செய்யவும் கூடாத அளவுக்கு சபை பெரிதாக இருந்தால் சிறு குழுக்களை உருவாக்கவும். இந்த குழுக்கள் மிகச் சிறியதாக இருக்கட்டும். அப்போது தான் எல்லோரும் பங்கேற்று ஒருவருக்கொருவர் நடைமுறையுடன் சேவை செய்ய முடியும்.

## III - 6 - ஊழியம் 6
# மூப்பர்களையும் பிற தலைவர்களையும் பயிற்றுவி

ஒரு நாள் கல்விநேசனிடமும் பேச சகாயர் அவர் வீட்டுக்கு வருகிறார். ஆனால் கல்விநேசன் கூறுகிறார், ''இன்று நான் உன்னோடு பேச முடியாது. மன்னித்துக்கொள்.'' வியப்படைந்த சகாயர் என்ன நடந்தது என்று கேட்கிறார். ஆனால் கல்விநேசனோ இப்போது பேச முடியாது என்று மட்டுமே கூறுகிறார்.

என்ன பிரச்சினை என்று சகாயர் சாராவிடம் கேட்கிறார். அவள் கூறுகிறாள், ''எனக்குத் தெரியவில்லை. அவர் ஏதோ ஒரு காரணத்தால் அதைரியம் அடைந்திருக்கிறார். அதைப் பற்றி பேசமாட்டேன் என்கிறார்.''

சகாயர் வருத்தத்துடன் போகிறார். அவர் ஞானம் ஐயாவிற்கு செய்தி தருகிறார், ''நான் கல்விநேசரைக் குறித்து கவலைப்படுகிறேன். அவர் பணியில் உற்சாகம் இழந்து விட்டது போல் தோன்றுகிறது. ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது.''

ஒரு சில நாட்களில் ஞானம் ஐயா வருகிறார். நீண்ட நாட்களுக்குப் பிறகு இதுவே அவரது முதல் வருகை. அவர் சகாயரைப் பார்த்து அழைத்துக் கொண்டு கல்விநேசனிடம் பேச வருகிறார். அவர்கள் அவரை வீட்டில் சந்திக்கிறார்கள். ஆனால் அவர் பேச விரும்பவில்லை. அவர்கள் திரும்பிப் போக முற்படும்போது சாரா இருக்கும்படி கெஞ்சுகிறாள். அவள் சொல்லுகிறாள் ''ஞானம் ஐயா! நீங்கள் வந்ததினால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். என்ன தவறு நடந்தது என்று எனக்குத் தெரிகிறது. சபை மிகவும் வளர்ந்து விட்டது. கல்விநேசருக்கு ஓய்வு இல்லாத வேலை. களைத்துப் போய்விட்டார். அவர் குடும்பத்துக்கும் நேரம் ஒதுக்குவதில்லை. அவர் சேவை செய்யும் சில சபைகள் பொருளாதார ரீதியாக அவருக்கு உதவுகின்றன. அதனால் அவர் தச்சுக்கூடத்தில் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதிக பொறுப்பால் அவர் அமிழ்ந்து போகிறார். காரணம் இல்லாமலேயே எல்லோரிடமும் எரிந்து விழுகிறார், புது விசுவாசிகளிடம் கூட!''



ஞானம் ஐயாவும், சகாயரும் கல்விநேசனை ஜெபிக்கும்படி கூறுகிறார்கள். அவர் அவர்களோடு ஜெபிக்க விரும்பவில்லை. அவர்கள் நீண்ட நேரம் மௌனமாக அமர்ந்திருக்கிறார்கள். கடைசியில் கல்விநேசன் மெதுவாகப் பேசுகிறார். ''நான் மிகவும் களைப்பாக இருக்கிறேன். வேலைப் பளு அதிகமாகப் போய்விட்டது. ஞானம் ஐயா, இந்த சபையின் தலைமைப் பொறுப்பை மறுபடியுமாக நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது போலீஸ் கெடுபிடி இல்லை. இங்கே இப்போது பாதுகாப்புதான்.''

ஞானம் ஐயா மறுக்கிறார், ''மோசேக்கு இருந்த அதே பிரச்சினைதான் உங்களுக்கு. அவரே அதிகமான வேலைகளைச் செய்தார். அவர் மற்றவர்களுக்குப் பொறுப்பை பகிர்ந்து அளிக்கத் தவறினார். சகாயருக்கும் புதிய சபைக்கும் வேலைகளை ஒதுக்கி நல்ல காரியம் செய்தீர்கள். ஆனால் உங்கள் சொந்த சபையில் அதைச் செய்யத் தவறினீர்கள். உங்கள் மந்தையை மேய்க்க உதவி செய்யும்படி நான் இங்கு வர முடியாது. நான் ஆரம்பிக்க உதவிய இந்த சபையை மேய்க்க நானே மீண்டும் முயன்றால் பரிசுத்த ஆவியின் கிரியைகளை தடை செய்பவன் ஆவேன். தேவைப்படும் மக்களுக்கு உதவ முடியாமல் நானே களைப்படைந்து போவேன்.''

கல்விநேசன் அமைதியாக கவனிக்கிறார். ஞானம் ஐயா தொடர்கிறார். ''சீஷர்களை உருவாக்கி தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அவர்களுக்குப் போதிக்குமாறு இயேசு நமக்குக் கூறினார். ஊழியம் செய்யவும் புதிய சபைகளை ஸ்தாபிக்கவும் தேவையான யாவற்றையும் அவர் தமது சீஷர்களுக்கு வழங்கினார். அவர்களோடு இருக்கும் போதே அவர் அவர்களை இரண்டு இரண்டு பேராக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பினார். அவர் போன பிறகு அவர்கள் தம்மை விட பெரிய காரியங்களைச் செய்வார்கள் என்று அவர் கூறினார். அவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவரிடம் இருந்து தங்களுக்குக் கிடைத்த எல்லாவற்றையும் புதிய தலைவர்களுக்குத் தந்தனர். தேவன் அவர்களது அன்பான கீழ்ப்படிதலை ஆசீர்வதித்தார்.''

''ஆனால் நான் அவர்களைப் போல பலம் உள்ளவன் இல்லையே?''

''உங்களுக்கு தேவையான பலத்தை தேவன் தருகிறார். இப்போது, இயேசு என்ன செய்தாரோ அதை நீங்கள் செய்ய வேண்டும். ஊழியம் செய்வதற்கு தேவையான எல்லாவற்றையும் உங்கள் சபையில் உள்ள மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும். நான் உங்கள் மேல் கைகளை வைத்து தலைமைப் பொறுப்பை உங்களுக்குத் தந்தேன். வல்லமையின் ஆவி என்னில் வாழ்வது போலவே உங்களிலும் வாழ்கிறது. இப்போது நீங்கள் **அதிக வேலைப்பளுவோடு இருக்கிறீர்கள். அதிக வேலைப் பளு உள்ள தலைவர்களுக்கு எத்திரோவின் ஆலோசனை** குறித்து நாம் சேர்ந்து வாசிப்போம்.''

## பயிற்சி

- மோசேயின் மாமன் எத்திரோ அவருக்குக் கூறியவைகளை **யாத்திராகமம் 18 ம் அதிகாரத்தில்** காண்க:
- மோசேக்கு அறிவுரை கூறுமுன் மோசே என்ன தவறு செய்து கொண்டிருப்பதை எத்திரோ கவனித்தார்?
- காலை முதல் மாலை வரை மோசேயைச் சுற்றியிருந்த மக்கள் என்ன செய்து கொண்டு இருந்தனர்?
- மோசேக்கு எத்திரோவின் ஞானமான ஆலோசனை என்ன?
- எத்தகைய மனிதர்களை தலைவர்களாக நியமிக்க வேண்டும் என எத்திரோ மோசேயிடம் கூறினார்?
- தலைமைப் பொறுப்பை பகிர்ந்து கொண்டபோது மோசேயினால் மக்களுக்கு இன்னும் சிறப்பாக சேவை செய்ய முடிந்தது ஏன்?

சாரா தேனீர் கொண்டு வருகிறாள். ஞானம் ஐயா தொடர்ந்து விவரிக்கிறார், ''மோசே ஒரு பெரிய தலைவர். அவர் தேவ ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து வெளியே கொண்டு வந்தார். அவர் மிகவும் தாழ்மையான மனிதர் என்று வேதாகமம் கூறுகிறது. அவர் மனப்பூர்வமாக தன் ஜனங்களுக்காகப் பாடுபட்டார். ஆனால் அவரால் சரிவர செயலாற்ற முடியவில்லை. ஜனங்கள் காலை முதல் மாலை வரை தங்கள் வழக்கைச் சொல்ல அவருக்காகக் காத்திருந்ததை எத்திரோ பார்க்கிறார். இதனால் மோசே தொய்ந்து போகிறார். மோசமான தலைவர்கள் தலைமைச் பொறுப்பை பிறரோடு பகிர்ந்து கொள்வது இல்லை. இப்போது, கல்விநேசரே, இந்தக் கதையைக் குறித்து நீங்கள் ஞாபகப்படுத்துவது என்ன என்று எனக்குக் கூறுங்கள்.''

கல்விநேசன் ஒரு கணம் யோசிக்கிறார். ''பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் பக்குவப்பட்ட தலைவர்களை நியமிக்குமாறு எத்திரோ மோசேயிடம் கூறினார். இந்த மனிதர்கள் உண்மையுள்ளவர்களும், ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்றவர்களும், திறமை உள்ளவர்களுமாய் இருக்க வேண்டும். பிற தலைவர்கள் கொண்டு வரும் சிக்கலான வழக்குகளை மட்டும் தீர்க்குமாறு எத்திரோ மோசேயிடம் கூறுகிறார். அதிக எண்ணிக்கை மக்களை வழிநடத்தும் தலைவர்களையே மோசே நேரடியாக நிர்வாகிக்க வேண்டும். அவர்கள் அதற்கு குறைவான எண்ணிக்கை மக்களை வழிநடத்தும் தலைவர்களையும், இப்படியாகக் கடைசியில், பத்து பேரை நிர்வாகிக்கும் தலைவர்களில் வந்து இது முடியும். இவர்கள் இவ்வாறு சிறப்பாக ஜனங்களை மேய்க்க முடியும்.''

“ஆம்! மோசே இவ்வாறு தனது பொறுப்பை பகிர்ந்துகொண்ட போது அவருக்கு ஜெபிக்கவும் போதிக்கவும் நேரம் கிடைத்தது. அவர் மக்களுக்கு இன்னும் சிறப்பாக சேவை செய்தார். கல்விநேசரே, மோசேயைப் போலவே உங்களுக்கு மிக அதிகமான வேலைப் பளு இருக்கிறது. உங்களுக்கு அநேக புதிய தலைவர்களுடன் நல்ல உறவு இருப்பதால் அவர்கள் அதிக பொறுப்புகளை பகிர்ந்து கொண்டு சிறு குழுக்களில் பணி புரியட்டும்.”

கல்விநேசர் குற்றம் கூறுகிறார், “ஆனால் இந்த புதிய தலைவர்கள் தவறு செய்கிறார்கள். அவர்கள் தவறு செய்ய என்னால் விட முடியாது.”

“விட வேண்டும்.. என் சகோதரனே!” ஞானம் ஐயா கூறுகிறார், “முதன் முதலில் நீங்கள் தவறு செய்ய உங்களை அனுமதித்தேன். தமது சீஷர்கள் தவறுகள் செய்யட்டும் என்று இயேசு விட்டுவிட்டார். உங்களது புதிய மேய்ப்பர்கள் தவறு செய்வார்கள். ஆரம்பித்த போது நானும் நிறைய தவறுகள் செய்தேன். இயேசுவின் அப்போஸ்தலர்களும் முதன்முதலில் அநேக தவறுகள் செய்தனர்.”

கல்விநேசன் சிரிக்கிறார், “இதே ஆலோசனையை நான் சகாயருக்குக் கொடுத்தேன். ஆனால் நானே கைக் கொள்ளத் தவறி விட்டேன்.”

ஞானம் ஐயா பதில் தருகிறார், **“மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கத் தலைவர்களைப் பயிற்றுவிப்பது குறித்து பவுல் தீமோத்தேயுவுக்குப் போதித்தது** என்ன என்பதை நாம் சேர்ந்து பார்ப்போம்.”

## பயிற்சி


**2 தீமோத்தேயு 2:1-2 ல்** காண்க:

- பவுலுக்கும் தீமோத்தேயுவுக்கும் இடையில் இருந்த உறவின் ஆழம் எத்தகையது?
- அநேக சாட்சிகளுக்கு முன்பாகக் கேட்டவைகளை என்ன செய்ய வேண்டும் என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார்?
- இந்த பயிற்சி சங்கிலியில் எத்தனை இணைப்புகளை உங்களால் காண முடிகிறது? பவுலில் தொடங்கி மற்றவர்களை எண்ணவும்.

“ஞானம் ஐயாவை கல்விநேசனுடன் விட்டுவிட்டு சகாயர் செல்லுகிறார். 2 தீமோத்தேயு 2:2 ல் உள்ள சீடர்களின் சங்கிலித் தொடரைப் பார்த்தீர்களா? பவுல் தீமோத்தேயுவை ஒரு மகனைப் போல நேசித்தார். பவுல் அவருக்கும், தீத்துவுக்கும், மற்றவர்களுக்கும் போதித்தார். மற்றவர்களுக்கு போதிக்கும் திறன் பெற்ற தனியான தலைவர்கள் ஒவ்வொரு புதிய சபைக்கும் இருக்க வேண்டும் என்பதை அவர் உறுதி செய்தார். பவுலிடம் கேட்டதை தீமோத்தேயு நம்பகமான மனிதர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இவர்கள் பிறருக்கு போதித்தனர்.”

“2 தீமோத்தேயு 2:2 ல் நான்கு இணைப்புகள் இருக்கின்றன!”

“சீஷரத்துவம் என்பது மூன்று பக்கங்களுள்ள ஒரு முக்கோணத்தைப் போன்றது. ஒரு பக்கம் அன்பு. மற்றது வார்த்தை. அடுத்தது வேலை, அதாவது வார்த்தையை நடை முறைப்படுத்துவது. முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் முறையான இடத்தில் இல்லை என்றால் உடைந்து விடும். பவுல் சீஷரத்துவத்தின் இந்த மூன்று அம்சங்களையும் செயல்படுத்தினார். அவர் தமது சீஷர்களை நேசித்தார். தீமோத்தேயுவை தன் மகன் என்றார். அவர் தேவ வார்த்தையை உண்மையோடு போதித்தார். அவருக்கு கிடைத்தவற்றை எல்லாம் அளித்தார். தங்கள் வாழ்க்கையிலும், சபை மக்கள் வாழ்க்கையிலும் தேவ வார்த்தையை நடைமுறைப் படுத்த உதவினார். இப்போது, கல்விநேசரே, நீங்கள் என்ன செய்ய உத்தேசிக்கிறீர்கள்?”



“புதிய மூப்பர்களோடு கூடிய என் உறவு பலவீனமாகி விட்டது. அவர்கள் கூறுவதை அதிகமாகக் கேட்டு அவர்களோடு கூடிய என் உறவை பலப்படுத்த வேண்டும். போதிப்பதற்கு முன் அவர்களுடைய குழுவின் தேவையைக் கேட்டறிய வேண்டும். அவர்களது போதனையை அவர்களுடைய மந்தை கைக் கொள்ள உதவுவேன். பவுல் கூறியது போல், தங்கள் போதகத்தைப் பிறருக்கும் அவர்கள் மற்றவர்களுக்கும் எவ்விதம் கொடுப்பது என்பதைக் காட்டுவேன். நீங்கள் எனக்கு செய்தது போல, மூப்பர்களை சந்திக்கும் போது, ஜெபிப்பதிலும், கேட்பதிலும், இணைந்து திட்டம் இடுவதிலும் இன்னும் கவனமாக இருப்பேன்.” புதிய மூப்பர்களை சந்தித்து அறிவுரை கூறும் போது செய்ய வேண்டியவைகளைப் பற்றி கல்விநேசன் ஒரு பட்டியல் தயாரிக்கிறார்:

**போதனை நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்தும்படி ஜெபித்தல்**

**ஊழியங்களைக் குறித்து அறிக்கை தரும் உதவியாளர்களை கவனமாகக் கேட்டல்**

**அவர்கள் வேதாகமத்தில் இருந்து என்ன கற்றுக் கொள்ளுகிறார்கள் என்று தொகுத்துக் கூறும்போது கவனமாய்க் கேட்டல்.**

**தங்கள் சிறு குழுவில் காணப்படும் தேவைக்கும் வாய்ப்புக்கும் தகுந்தபடி புதிய செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.**

**தேவைக்கும் வாய்ப்புக்கும் தகுந்தபடி புதிய வேத வகுப்புகளை ஒழுங்கு படுத்துதல்**

**நமது திட்டங்களை ஜெபத்தோடு கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தல்.**

ஞானம் ஐயா கூறுகிறார், “ஒரு தலைவர் தன் பொறுப்புகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாவிட்டால் அவருக்குத் தாழ்மை இல்லை என்று அர்த்தம். அவர் ஒரு பணியாளர் தலைவர் ஆக வேண்டும். ஒரு பணியாளர் தலைவர் எவ்விதம் இருக்க வேண்டும் என்று இயேசு காட்டினார். நமது முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்த முயலாமல் தாழ்மையோடு மக்களுக்கு சேவை புரிய வேண்டும் என்று அவர் கூறினார். **தமது மாணவர்களின் கால்களைக் கழுவிய பணியாளர் தலைவர்** பற்றி என்னோடு சேர்ந்து வாசியுங்கள்.”

## பயிற்சி

**யோவான் 13:1-17 ல்** காண்க:

- ஓர் அடிமை செய்வது போல, எவ்வாறு தேவகுமாரன் தமது சீஷர்களுக்கு பணிவிடை செய்தார்?
- நமது கர்த்தரும் போதகருமானவர் இவ்வாறு தமது சீஷர்களுக்கு சேவை செய்வாரானால் நாம் பிறர்க்கு என்ன மனநிலையோடு சேவிக்க வேண்டும்?
- இயேசு வெறும் வார்த்தைகளால் தமது சீஷர்களை பணியாளர் தலைவராக பயிற்றுவிக்க-வில்லை. அவர் வேறு என்ன செய்தார்?

கல்விநேசன் ஞானம் ஐயாவிடம் கூறுகிறார், “இயேசு தேவனுடைய குமாரன். எல்லா துதியும் கனத்திற்கும் உரியவர். ஆனால் அவர் தமது சீஷர்களுக்குத் தாழ்மையுடன் பணிவிடை செய்தார். அக்காலத்தில் ஓர் அடிமை செய்வது போல, ஒரு துண்டை எடுத்து அவர்களுடைய தூசிபடிந்த பாதங்களைக் கழுவினார். அந்த மகா போதகர், தன் முன்னுதாரணத்தின் மூலம் நமக்குக் கற்பித்தார். அன்பால் நாமும் அதே தாழ்மையுடன் மற்றவர்களை வழிநடத்துகிறோம். நாம் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் போது அவர்களுக்கு தேவ சத்தியத்தை மட்டும் போதிப்பதில்லை. நமது தாழ்மையான முன்னுதாரணங்களால் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் காட்டுகிறோம்.”

அடுத்த நாள் தமது சபையின் தலைவர்களை அழைத்து கல்விநேசன் விளக்குகிறார், “நான் உங்களுக்கு மேலும் அதிக பொறுப்பு தரப் போகிறேன். நீங்கள் என்னோடு துணைப் போதகர்களாக இருப்பீர்கள்.”

அழைக்கப்பட வில்லை என்றாலும் ஞானசூனியர் வந்து குறுக்கிடுகிறார், “கல்விநேசரே! இணைப் போதகராக இங்கு யாருக்கும் தகுதி இல்லை. நீங்கள் பிறருக்கு உதவி செய்து ஆரம்பிக்கப்படும் புதிய சபைகளையோ அல்லது நமது சபையையோ இவர்கள் வழிநடத்த முடியாது. அவர்கள் தகுதி பெற நீங்கள் அவர்களை மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வேதாகமப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.”

ஞானம் ஐயா இன்னும் போகவில்லை. அவர் மறுக்கிறார். ‘‘அது முயற்சி செய்து பார்க்கப்பட்ட ஒன்றே. ஆனால் நமக்குள்ள சூழ்நிலைகளில் அது வேலைக்கு உதவாது. தலைவர்களின் தகுதி பற்றி அப்போஸ்தலர் பவுல் கூறுவதைப் பார்ப்போம். கல்விநேசரே! தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் பவுல் எழுதிய கடிதங்களில் நாம் காணும் ஒரு தலைவனின் தகுதியைக் குறித்து உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?’’

## பயிற்சி

**1 தீமோத்தேயு அதிகாரம் 3, தீத்து 1:5-9** காண்க:

- தீத்து 1:5 ன் படி, பவுல் தீத்துவை ஏன் கிரேத்தாவில் விட்டு வந்தார்?
- கிரேத்தாவில் உள்ள புதிய சபைக்கு தீத்து என்ன செய்ய வேண்டியதாய் இருந்தது?
- ஒரு கண்காணியான மூப்பன் எவ்வாறு இருக்க வேண்டும்? அவனுடைய குணநலன்களை விவரிக்கவும்.
- ஒரு கண்காணியான மூப்பன் ‘‘போதக சமர்த்தனாக’’ இருக்க வேண்டும். தேவன் ஏன் இதை ஒரு தேவையாகக் கேட்கிறார்?

கல்விநேசனின் வீட்டில் கூடிவந்த தலைவர்களை ஞானம் ஐயா தொடர்ந்து ஊக்குவிக்கிறார். ‘‘ஒவ்வொரு சபையும் தங்களுக்கு மூப்பர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பவுல் உறுதிப்படுத்தினார். அவர்கள் ஜனங்களை கண்காணித்தார்கள். அவர்கள் இணைப் போதகர்களாக வேலை செய்தார்கள். ஒரு புதிய சபை தனக்கென தலைவரைப் பெறும் வரை தன் பணி பூரணமாகிவிட்டது என்று பவுல் கருதவில்லை. ஒரு சமுதாயத்திற்குள் வாழாத வெளியாள் எவரும் அந்த சபைக்கு கண்காணியாக இருக்கக்கூடாது. சில சபைகளுக்கு மூப்பர்களை நியமிப்பதற்காகவே அவர் தீத்துவை விட்டுச் சென்றார். பவுலும் தீத்துவும் அந்தந்த சபையில் இருந்தே அதற்காக மூப்பனை தேர்ந்தெடுத்தனர். விசுவாசிகளாலும், அவிசுவாசிகளாலும், சொந்த குடும்பத்தாலும் மதிக்கப்பட்டவனையே அவர்கள் தெரிந்தெடுத்தனர். போதிக்கும் திறமையைப் போன்றே ஒரு தலைவரின் குணநலனும் மிக முக்கியமானதாகும்.’’

ஞானசூனியர் குற்றம் சாட்டுகிறார், ‘‘எனது மருமகனின் சபை தலைவருக்கு உரிய தகுதி இங்கு எவருக்கும் இல்லை.’’

ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், ‘‘சில சபைகள் ஒரு தலைவருக்கு தகுதிகளாக கூறுபவை வேதாகமத்தில் இல்லாதவை; கிறிஸ்துவோ அவரது அப்போஸ்தலர்களோ கட்டளை இடாதவைகளையும், நடைமுறைப்படுத்தாதவைகளையும் தேவைகளாகக் கூறுகின்றன. புதிய சபைகளுக்கு தலைவர்கள், மூப்பர்களை நியமிப்பதற்கு இந்த மனித சம்பிரதாயங்கள் தடையாய் இருக்கின்றன. இது பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளுக்கு இடைஞ்சல் செய்கிறது. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதை மனித சம்பிரதாயங்கள் தடைசெய்தால் அவைகளை நாம் கைவிட வேண்டும்.’’



கல்விநேசர் குழுவிடம் கூறுகிறார், ‘‘எத்திரோ மோசேக்கு சொன்ன அதே அறிவுரைகளை ஞானம் ஐயா நமக்குத் தருகிறார். அவர் கேட்டு கவனித்துத் தேவைகள் என்ன என்று அறிந்து கொண்டார். ஊழியத்தின் தேவைகளையும் வாய்ப்புகளையும் தெளிவாகப் பார்க்கும் வரை அவர் அறிவுரை தரவில்லை. ஞானம் ஐயா எப்போதும் இப்படியே செய்வார். அவர் கவனித்துக் கேட்கிறார்; அதன்பின் இணைந்து புதிய செயல்பாடுகளைத் திட்டமிட உதவுகிறார்; தேவைகளுக்குத் தொடர்புடைய வேத பகுதிகளைப் பாடங்களாகத் தருகிறார். நாமும் அவ்வாறே செய்வோம். இந்தத் திட்டங்களை தேவனுக்கு அர்ப்பணித்து ஜெபிப்போம்.’’

அடுத்த நாள் காலை ஞானம் ஐயா புறப்பட்டுப் போகிறார். ஒரு மாதம் கழிந்து கல்விநேசன் கடிதம் எழுதுகிறார். ‘‘கூடுதல் பொறுப்பு எடுப்பதற்காக நான்கு பேரை என் சபையில் இருந்து தீவிரமாகப் பயிற்றுவிக்க உடனே ஆரம்பித்துவிட்டேன். இந்தப் புதிய கண்காணிகளான மேய்ப்பர்களுடன் முற்றிலுமாக என்னுடைய தலைமைப் பொறுப்பை பகிர்ந்து கொள்ளுகிறேன். எத்திரோ மோசேக்கு என்ன சொன்னாரோ அதைச் செய்கிறோம். நான் இப்போது குடும்பத்தோடு இருக்க நேரம் ஒதுக்குகிறேன். ஓய்வு கிடைக்கிறது. புதிய மூப்பர்கள் புதிய தலைவர்களை பயிற்றுவிக்கின்றனர். சிறு குழுக்கள் பெருகுவதால் இந்தத் தலைவர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்துக்கும், ஜெபிக்கவும், போதிக்க ஆயத்தம் செய்வதற்கும் அவர்களுக்கும் அதிக நேரம் கிடைக்கிறது. பொறுப்புகளை பகிர்ந்தளிக்கவும், புதிய தலைவர்களை தெரிந்தெடுக்கவும் உதவிய உங்களுக்கு நன்றி. பரிசுத்த ஆவியானவர் பெரிய காரியங்களைச் செய்ய அதிகமான மக்களை பயன்படுத்தி வருகிறார்.’’

## நடைமுறைப் பணிகள்

- 1 தீமோத்தேயும் 3, தீத்து 1:5-9 கூறுகிறபடி ஒவ்வொரு புதிய சபைக்கும் மூப்பர்களை நியமிக்கவும்.
- நம்பகமானவர்களை கண்காணியான மூப்பர்களாக பயிற்றுவியுங்கள். பிற புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்க இவர்களுக்கு உதவுங்கள்.
- பெருமை மிக்க கட்டுப்பாட்டாளர்களாய் அல்லாமல் பணியாளர் தலைவர்களாக விளங்கும்படி புதிய தலைவர்களை உங்கள் வார்த்தையாலும் நடத்தையாலும் போதியுங்கள்.
- உங்களுக்கும் நீங்கள் பயிற்சி தரும் தலைவருக்கும் இடையில் உள்ள உறவைப் பலப்படுத்துங்கள்.
- நீங்கள் பயிற்றுவிக்கும் தலைவர்களை அடிக்கடி சந்தியுங்கள். ஜெபித்து அவர்களது அறிக்கையை கவனமாகக் கேளுங்கள். புதிய பாடங்களையும் செயல்பாடுகளையும் ஒருசேர திட்டமிடுங்கள். அவர்களோடு உடன் செல்லுங்கள். அவர்களையே பேச விடுங்கள்.
- நீங்கள் பயிற்றுவிக்கும் தலைவர்களின் சபைக்கு செல்லும் போது அவர்களையே பிரசங்கிக்க அனுமதியுங்கள். நமக்கு அவர்கள் தலைமையின் மேல் நம்பிக்கையும் மரியாதையும் உண்டு என்பதை அவருடைய சபை மக்களுக்கு இது எடுத்துக் காட்டும். அவர்கள் சிறப்பாக பிரசங்கிக்க அவர்கள் வளர எவ்வாறு உங்களால் உதவ முடியும் என்று அறிய அவர்கள் கூறுவதை கவனித்துக் கேட்க வேண்டும்.

## III - 7 - ஊழியம் 7

# சபைக்குள்ளும் சபைகளுக்குள்ளும் ஐக்கியத்தை வளர்

அடுத்த நாள் கல்விநேசன் சபையைச் சார்ந்த ஒரு கூட்டம் மக்கள் ஞானசூனியருடன் அவருடைய வீட்டிற்கு வருகின்றனர். ஞானசூனியர் அறிவிக்கிறார், ''கல்விநேசரே! எனது மருமகனின் சபையில் நடந்த ஒரு புகழ் பெற்ற பிரசங்கியின் கூட்டத்திற்கு சென்றோம். நான் இதுவரை பலமுறை சென்றுவிட்டேன். தேவனுக்காக ஒரு கூட்டம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று அறிய எங்களோடு வாருங்கள். நாம் எல்லாவற்றையும் தவறாகவே செய்கிறோம். அவர் செய்வது போல் நாம் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அவர், எப்படி பிரசங்கிக்க வேண்டும் என்று உண்மையிலேயே அறிந்திருக்கிறார். இவருடைய போதனையைப் பின் பற்றும் ஒரு புதிய குழுவை நான் இங்கு தொடங்கப் போகிறேன். சபையில் உள்ள மற்றவர்களும் நான் சொல்வதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். இதுவே நமது சபைக்கான தேவ சித்தம்.''



**ஒருவருக்கு ஒருவர் அன்புகூர வேண்டும் என்ற கிறிஸ்துவின் கற்பனைக்குக் கீழ்ப்படியுங்கள்.**

அந்த மனிதர்களின் முகங்களைப் பார்த்த கல்விநேசனுக்குக் கோபம் வருகிறது. அவர்கள் சென்ற பிறகு அவர் சாராவிடம் சொல்லுகிறார், ''ஞான சூனியர் தமது மருமகனின் சபையில் இருந்து கொண்டுவந்த கருத்து நமது சபையிலும் பரவுகிறது. ஏற்கெனவே வேதனையான பிரிவினையை அது உருவாக்கி விட்டது.''

அடுத்த தடவை சபை கூடிய போது மக்கள் ஒருவருக்கு ஒருவர் தர்க்கம் செய்கின்றனர். குழப்பம் பரவுகிறது. அவர் ஞானம் ஐயாவுக்கு செய்தி தர, அவர் சபைக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதை கல்வி நேசன் சபையாருக்கு வாசித்துக் காட்டுகிறார்:

சகோதர சகோதரிகளே, 1 கொரிந்தியர் புத்தகத்தில் உள்ள பவுலின் முன் மாதிரிகளை நீங்கள் பின்பற்ற வேண்டுகிறேன். ஒருவருக்கு ஒருவர் தர்க்கம் செய்வதை இயேசுவின் நாமத்தினாலே விட்டுவிடும்படி வேண்டுகிறேன். உண்மையான ஒற்றுமையோடு வாழ்ந்தால் மட்டுமே சபையில் பிரிவினை உண்டாகாது. ஒரே மனதுடனும், சிந்தனையிலும் செயலிலும் ஒற்றுமையாக இருக்கும் படியாகவும் கெஞ்சுகிறேன். குழந்தையைப் போன்ற விசுவாசத்தோடும் அன்போடும் இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைப் படித்தீர்கள். அதை இப்போது பின்பற்றுகிறேன் என்று சிலர் சொல்லுகிறீர்கள். மற்றவர்கள் ''நான் கல்விநேசனை பின்பற்றுகிறேன்'' என்று சொல்லுகிறீர்கள். வேறு சிலரோ, ஞானசூனியர் தன் மருமகனுடன் செல்லும் சபைப் பிரசங்கியைப் பின்பற்ற விரும்புகிறார்கள். இயேசு கிறிஸ்து என்ன துண்டுதுண்டாக உடைந்து போய்க் கிடக்கிறாரா? ஞானம் என்ற நானா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டேன்? இத்தகைய மனோபாவம் பெருமையில் இருந்து வருகிறது.

முதன் முதலில் நான் உங்களிடம் வந்தபோது பெரிய வார்த்தைகளையோ கற்பனை கருத்துக்களையோ உபயோகிக்கவில்லை. இயேசுவின் மேலும் அவரது சிலுவை மரணத்தின் மேலும் என் கருத்தைச் செலுத்தினேன். என்னுடைய செய்தியும் பிரசங்கமும் வெளிப்படையாக இருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதை பயன்படுத்தினார். நாம் உலக ஞானத்தை உபயோகிப்பதில்லை. உங்களில் அநேகம் பேர் உலகத்தின் கண்களில் ஞானம் உள்ளவர்களோ பலம் வாய்ந்தவர்களோ அல்ல என்பதை நினைத்துப் பாருங்கள். ஆனால்

தமது வல்லமையால் தேவன் உங்கள் வாழ்க்கையில் அற்புதமான காரியங்களைச் செய்தார். கல்விநேசன் என்னுடைய உதாரணங்களைப் பின்பற்றுகிறார். அவருக்கும் மற்ற கண்காணிகளான மூப்பர்களுக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் அவர்கள் தேவ வார்த்தையை உங்களுக்கு போதிக்கிறார்கள்.

ஞான சூனியர் குறுக்கிட முயலுகிறார். ஆனால் கல்விநேசன் தொடர்ந்து வாசிக்கிறார்.

> **நீங்கள் அனைவரும் ஒன்றாக தேவனுடைய ஆலயம் என்பதையும் தேவ ஆவியானவர் உங்களில் வாசமாய் இருக்கிறார் என்பதையும் மறந்து போய்விட்டீர்களா? ஓர் உலகத் தலைவரைப் பின்பற்றுவதில் பெருமை கொள்ள வேண்டாம். நாம் அனைவருமே கிறிஸ்துவின் பணியாளர்கள். தமது சபையில் ஒவ்வொருவருக்கும் அவர் வேலைகளைத் தருகிறார். ஒருவர் விதைக்கிறார்; மற்றொருவர் நீர்ப்பாய்ச்சுகிறார்; ஆனால் விதையை வளரச் செய்கிறவர் தேவனே. நீங்கள் தேவனின் நிலங்களும், தேவனின் கட்டிடமாகவும் இருக்கிறீர்கள். எங்களுடையவர்கள் அல்ல. இந்த உங்கள் பிரிவினை பெருமையால் வருகிறது.**

**மனிதனின் பெருமையும் முட்டாள்தனமும் எவ்வாறு எல்லா மனிதர்களையும் பிரித்தது** என்பதை ஞானம் ஐயாவின் கடிதம் மீள்பார்வை செய்கிறது.

## பயிற்சி

**ஆதியாகமம் 11:1-9** ல் காண்க:

- யாருடைய மகத்துவத்தில் மக்கள் நம்பிக்கை வைத்தனர்?
- தமக்கு எதிராக பெருமையினால் எழுந்த கிளர்ச்சியை தடுக்க தேவன் என்ன செய்தார்?

கல்விநேசன் தனது வீட்டில் கூடிய சபையில் ஞானம் ஐயாவின் கடிதத்தை விவாதிக்கிறார். ‘‘ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் தேசம், கலாச்சாரம், மொழி என்று பலவகையில் பிரிக்கப்பட்டுவிட்டனர். இப்போது தேவன் தமது ஞானத்தினால் கிறிஸ்துவின் ஆவிக்குள் நம்மை ஒன்றாகக் கொண்டு வருகிறார். இதுவே அவரது ஆதி நோக்கம்.’’

புதிதாக நியமிக்கப்பட்ட ஒரு மூப்பர் கூறுகிறார், நாங்கள் சமீபத்தில் இதை எங்கள் சிறு குழுவில் படித்தோம். யோவான் 17 ல் இயேசு நாம் எல்லோருக்காகவும் ஜெபித்தார்: ‘‘நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.’’ உலக சபையிலே இயேசுவின் ஜெபம் கேட்கப்பட்டது. ஏனெனில் நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறோம். அவரே நம் தலையாய் இருக்கிறார். பரிசுத்த ஆவி நம்மை இணைக்கிறது. அவர்கள் அந்தக் கூட்டத்தை இயேசுவுக்குள் ஆவிக்குரிய ஒற்றுமைக்காக ஜெபித்து முடித்தனர்.

அடுத்த நாள் கல்விநேசன் சகாயரிடம் வந்து சொல்லுகிறார், ‘‘ஞானசூனியரின் தலைமையில் ஒரு கூட்டம் எங்கள் சபையை உடைத்து விட்டது. வந்து எனக்கு உதவி செய்.’’ அதிகாரத்தையும் ஆட்சியையும் விரும்பும் மக்கள் எவ்வாறு வேதனையான பிரிவுகளை உண்டாக்குகிறார்கள் என்பது குறித்து அவர்கள் கலந்துரையாடுகின்றனர்.

சகாயர் கூறுகிறார், ‘‘நான் 1 கொரிந்தியரில், அவர்களுக்குள்ளும் பிரிவினை இருந்தது என்று படித்தேன். 13 ஆம் அதிகாரத்தில் நமக்கு உதவி கிடைக்கும். அன்பின் அதிகாரம்.’’

## பயிற்சி

**1 கொரிந்தியரின் 13 ஆம் அதிகாரத்தில்** காண்க.

- அன்போடு கைக்கொள்ளாவிட்டால் வரங்களின் மதிப்பு என்ன?
- அன்பு என்பதில் அடங்கி இருக்கும் விஷயங்கள் என்ன?
- அன்பு இல்லாத விஷயங்கள் என்ன?
- அன்பு செய்யும் காரியங்கள் என்ன?
- அன்பு செய்யாத காரியங்கள் என்ன?

அவர்கள் கல்விநேசன் வீட்டிற்கு திரும்பி வரும்போது அவர்கள் படித்ததைப் பற்றி சகாயர் கருத்து தெரிவிக்கிறார், ''நமது ஆவிக்குரிய வரங்களை அன்பிற்கு பெருமையோடு உபயோகித்தால் அதனால் பலன் எதுவும் இல்லை. மற்றவர்களுடைய விஷயங்களில் அக்கறை காட்டவே தேவன் நமது உள்ளத்தில் அன்பைப் பாய்ச்சுகிறார். அவர்களை மன்னிக்கும் வல்லமை தருகிறார். அன்பு என்பது நாம் உணர்வது அல்ல, செய்வது. நமக்கு மனமில்லை என்றால் கூட விசுவாசத்தால் பிறரை அன்போடு நடத்த முடியும். நாம் அன்பு செலுத்த வேண்டும் என்று மனதில் முடிவு எடுத்தாலும் நமது உணர்வுகள் அந்த முடிவோடு ஒன்றிப்போக நாள் ஆகலாம்.''

கல்விநேசன் ஜெபிக்கிறார், ''அன்பான தேவனே, பிரிவினை உண்டாக்குபவர்கள் மேல் உண்டான வெறுப்புக்காக என்னை மன்னியும். அன்போடும் உறுதியோடும் அவர்களைக் கையாள தேவையான துணிச்சலை தந்தருளும்.''

அடுத்த நாள் கல்விநேசனும் சகாயரும் ஞானசூனியரிடம் சென்று பிரிவினை உண்டாக்குவதை நிறுத்துமாறு வேண்டுகின்றனர். அந்த விஷயத்தை விட்டு விட்டு ஞானசூனியர் அவசரமாக வேறு விஷயத்துக்கு தாவுகிறார். ''கல்விநேசரே! நீர் சொன்னபடி சிலர் தேவையில் இருப்பவர்களுக்கு உதவுவதில்லை. அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள். ஒரு கூட்டம் போட்டு கீழ்ப்படியச் சொல்லுங்கள் அல்லது வெளியேறட்டும். அவர்களே சபையில் பிரிவினையை உண்டாக்குபவர்கள்.''

### சபையில் உள்ள கருத்து வேறுபாட்டை கையாளுவது எவ்வாறு?

கல்விநேசன் ஞானசூனியரிடம் கூறுகிறார், ''இப்படிப்பட்ட தீவிரமான முறைகளால் பிரிவினைகளை தவிர்க்க முடியாது. பிளவுபட்ட இராஜ்யத்தைப் பற்றிய கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன். தாவீது இராஜா தன் முழு இருதயத்தோடும் தேவனிடம் அன்பு கூர்ந்தான். தேவன் அவனுடைய சந்ததி இராஜாக்களாக என்றும் அரசாட்சி செய்வார்கள் என்று வாக்குத்தத்தம் செய்தார். அவனுடைய குமாரனாகிய சாலொமோன் இஸ்ரவேலை நல்ல முறையில் ஆட்சி செய்ய தேவனிடம் ஞானத்தைக் கேட்டான். அவன் எருசலேம் தேவாலயத்தைக் கட்டினான். ஆனால் சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாம் தேவனைப் பற்றியும் அவரது மக்களைப் பற்றியும் அவனது தகப்பனையும் தாத்தாவையும் போல அக்கறை எடுக்கவில்லை. அவன் தவறான ஆலோசனைக்கு செவிகொடுத்தான். ஒரு கூட்டத்தில் அவன் தவறான முடிவை எடுத்தான். **இஸ்ரவேல் இராஜ்யத்தைப் பிளவுபடுத்திய கூட்டத்தைப் பற்றி** பார்ப்போம்.''

## பயிற்சி

**1 இராஜா 12:1-19** ல் காண்க:

- இராஜா ரெகொபெயாமிடம் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்?
- ரெகொபெயாமுக்கு இரண்டு ஆலோசனைக் குழுக்கள் இருந்தன. எந்தக் குழு கூறியதை அவன் கேட்டான்?
- தங்களுடைய பாரத்தை குறைக்க ரெகொபெயாம் மறுத்த போது மக்கள் என்ன செய்தனர்?

பதில் எதுவும் பேசாமல் கல்விநேசனும் சயாயரும் கூறியதைக் கேட்ட ஞானசூனியர், ''என்னிடம் வந்து இவற்றை விளக்கியதற்கு நன்றி. நீங்கள் சொன்னவற்றைக் குறித்து நான் சிந்திப்பேன்.'' என்கிறார்.

சகாயர் வீட்டுக்குப் போகிறார். இவைகளைப் பற்றி சிந்தனை செய்ய கல்விநேசன் தச்சுக்கூடத்திற்குப் போகிறார். ஒரு வேலையைச் செய்து கொண்டே தேவ வார்த்தைகளை தியானிக்கிறார்.

''பிதாவே, இந்தப் பிரிவினையை நல்ல முறையில் சரிசெய்ய ஞானத்தைத் தாரும்.'' இரு சபைகள் எவ்விதம் ஒரு கருத்து வேறுபாட்டை தீர்த்தன என்று ஞானம் ஐயா போதித்தது அவருக்கு ஞாபகம் வருகிறது. அந்தியோகியாவில் ஒரு சபையைப் பிளவுபடுத்திய பிரச்சினையை பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் எவ்வாறு தீர்த்தனர் என்று யோசிக்கிறார்.


## பயிற்சி

இரு சபையின் தலைவர்கள் எவ்வாறு தங்கள் கருத்து வேறுபாடுகளை களைந்தனர் என்பதை **அப்போஸ்தலர் 15 ம் அதிகாரத்தில்** காண்க:

- தங்கள் பக்க நியாயத்தை எல்லோரும் பேசும்படியாக தலைவர்கள் அனுமதித்தார்களா?
- தன்னோடு கருத்து மாறுபாடு கொண்ட **பரிசேயருடன்** பேதுரு எவ்வாறு மரியாதையுடன் நடந்து கொண்டார்?
- கருத்து வேறுபாட்டிற்கு யாக்கோபு எங்கு பதிலை கண்டுபிடித்தார்?
- அவர்கள் முடிவை எல்லாரும் ஏற்றுக்கொள்ள தேவன் உதவி செய்தாரா? அப்படியானால் எவ்வாறு?
- தங்கள் சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் பின்பற்ற வேண்டும் என்று யூதக் கிறிஸ்தவர்கள் புறஜாதியாரை வற்புறுத்தினார்களா?
- பவுலும் பர்னபாவும் அடுத்த ஊழியப் பயணத்தை ஆரம்பித்த போது, ஒரு பணிக்குழுவிற்குப் பதிலாக இருபணிக்குழுவாகப் பிரிந்து பணியாற்ற காரணம் என்ன?

பிரிவினையைக் குறித்துப் பேச கல்விநேசன் வீட்டில் நடந்த அடுத்த கூட்டத்திற்கு உதவி செய்வதற்காக சகயாயர் வருகிறார். கல்விநேசன் கூறுகிறார், ''மக்கள் தேவனைப் பலவிதங்களில் சேவிக்கின்றனர் என்று அப்போஸ்தலர் 15 கூறுகிறது. கிறிஸ்துவின் சபையில் ஒற்றுமை என்பதற்கு, ஒவ்வொரு விசுவாசியும், ஒவ்வொரு சபையும், ஒரே ஆவிக்குரிய வரங்களையும், ஒரே எண்ணங்களையும், ஒரே நடைமுறைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தம் ஆகாது. ஒத்துப்போவதற்கு யாரையும் பலவந்தப்படுத்த முடியாது. ஒத்துப்போவது என்பது ஒற்றுமை இல்லை. கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் கற்பனைகளைக் கைக்கொள்ளுமாறு நாம் மக்களுக்கு கட்டளை இடுகிறோம். அந்தியோகியாவில் இருந்த சபையில் ஆழமான பிரிவினை இருந்தது. தேவனுக்கு பரிசேயர்கள் மேலும் பல கற்பனைகளை வலியுறுத்தினர். அந்த சபைக்கு வேறொரு சபையின் உதவி தேவைப்பட்டது.''

கல்விநேசர் அப்போஸ்தலர் 15 ன் சில பகுதிகளை வாசித்து விட்டு சகாயரிடம் விளக்கம் கூறச் சொல்கிறார். அவர் விவரிக்கிறார், ''பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் இருந்து எருசலேமுக்கு வந்தனர். யூத சம்பிரதாயங்களை பின்பற்ற வைக்காமலேயே எவ்வாறு தேவன் புறஜாதியாரை சபைக்குள் அனுமதித்தார் என்று இருவரும் இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் விளக்கினார்கள். எருசலேமின் முக்கிய தலைவர்கள் பேதுருவும் யாக்கோபும். மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியபோது குறுக்கிடாமல் கவனமாகக் கேட்டனர். அதன்பிறகு விமரிசனம் எதுவும் செய்யாமல், யூத சம்பிரதாயங்களில் இருந்து புறஜாதியாரை தேவன் விடுவித்தார் என்பதை வேதத்தில் உள்ள ஜனங்கள் மூலமும் மற்றும் பரிசுத்த ஆவியின் வல்லமையாலும் காட்டினர். தலைவர்கள் முதலில் கேட்டனர். பின் சத்தியத்தை அன்போடு பேசினர். பரிசேயர் கடைசியாக ஒத்துக்கொண்டு முடிவை ஏற்றுக்கொண்டனர். தேவன் அந்த பிரிவினையைக் குணமாக்கினார்.''



''ஆமென்'' என்று பலர் கூறுகின்றனர்.

சகாயர் தொடர்ந்து கூறுகிறார், ''ஆனால் பின்னர் ஊழியம் எப்படி செய்வது என்பதில் பவுலும் பர்னபாவும் மன வேறுபாடு கொண்டனர். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் தீர்த்துக் கொண்டனர். புறம் கூறவில்லை; ஒருவரை ஒருவர் விமரிசனம் செய்யவில்லை. அவர்கள் ஒருவருடைய எண்ணத்தை ஒருவர் மதித்தனர். தங்கள் ஆவிக்குரிய வரங்களை தனித்தனியாக நடைமுறைப்படுத்த ஒத்துக் கொண்டனர். தேவன் இருவருடைய ஊழியத்தையும் ஆசீர்வதித்தார். சபைகளை ஊக்கப்படுத்தவும், பல புதிய சபைகளை ஸ்தாபிக்கவும் அவர்கள் ஒன்றுக்குப் பதில் இரண்டு தனித்தனி வழிகளில் சென்றனர்.''

**கற்பனைகளுக்கும் முறைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு.**

கல்விநேசனின் சபை மக்கள் சரியான விஷயத்தை செய்ய விரும்பி அவர் விளக்குவதை அமைதியாகக் கேட்கின்றனர், ''அப்போஸ். 15 ல் உள்ள இரண்டு மன வேறுபாடுகளையும் காணலாம். ஒன்று தமது சபைக்கு கிறிஸ்து கட்டளை இட்ட அதிகாரத்தைக் குறித்தது. இரண்டாவது, இந்தக் கற்பனைகளைக் கையாளும் முறையில் ஏற்பட்ட வேறுபாடு. பவுலும் பர்னபாவும் ஸ்தாபன விஷயங்களில் கருத்து மாறுபாடு கொண்டனர். கிறிஸ்துவின் கற்பனைகளின் அதிகாரத்தைக் கொண்டு சபை இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்தவர்கள் தங்களுக்குரிய ஆவிக்குரிய வரங்களைப் பொறுத்து வெவ்வேறு ஊழியங்களுக்கு தகுந்தபடி வெவ்வேறு முறைகளை கடைபிடிக்கும் சுதந்திரம் பெற்று இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபைக்குரிய அதிகார நிலைகளை குழப்பிக் கொள்ளும் போது பிரிவினைகள் வருகின்றன. கிறிஸ்துவின் கற்பனைகளே முதலாம் நிலை ஆகும்; அதற்கு எப்போதும் நாம் கீழ்ப்படிகிறோம். ஆனால் இந்த கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய நாம் கைக்கொள்ளும் முறைகள் பெரிதும் வித்தியாசப் படலாம்.''

இந்த விவாதம் நீண்ட நேரம் தொடர்கிறது. ஞானசூனியரும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்க மறுக்கின்றனர். அவர்கள் தொடர்ந்து கல்விநேசனை விமரிசிக்கின்றனர். ஞானசூனியரே இதன் முக்கியக் குரல். அவர் தொடர்ந்து சொல்கிறார், ''கல்விநேசன் நல்ல மனிதரே. ஆனால் அவருக்குக் கல்வி அறிவு போதாது. இறையியல் கல்லூரி பட்டம் இல்லை. எனவே அவர் சத்தியத்தைதான் போதிக்கிறாரா என்பதில் நமக்கு உறுதி இல்லை.'' அவருக்கு அருகில் சிலர் அமர்ந்து அதையே திரும்பிச் சொல்லுகின்றனர்.

கல்விநேசன் கூறுகிறார், ''நாம் யாவரும் இன்னும் ஒருமித்த கருத்துக்கு வரவில்லை. பலர் களைப்படைந்து போய்விட்டீர்கள். அதனால் போக விரும்புபவர்கள் போகலாம்.''

பெண்களும் இளைஞர்களும் செல்கின்றனர். ஜேக்கப் என்ற ஒருவர் மட்டும் தொடர்ந்து ஞானசூனியர் கருத்தை ஒத்துக்கொள்ளுகிறார். அவர் ஞானசூனியரின் மருமகன் சபைக்கு சென்று கொண்டு இருந்தவர். சமீபத்தில்தான் கல்விநேசனரின் சபைக்கு வந்தார். மூன்றாவது முறையாக ஜேக்கப் கூறுகிறார், '' நான் முன்பு சென்று கொண்டிருந்த சபை செய்வது போலவே நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.''

கல்விநேசர் கூறுகிறார், ''நாம் இவ்வாறு மன வேற்றுமையுடன் இருப்பதால் கர்த்தரின் பந்தியை ஆசரிப்பது சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நாம் எல்லாருடைய கருத்துக்களையும் கேட்டுவிட்டோம். இந்தப் பிரிவினையைத் தீர்க்க, நான் மூப்பர்கள் யாவரையும் உபவாசித்து ஜெபித்து மறுபடியும் கூடலாம் என்று வேண்டுகிறேன்.''

சிலநாள் கழித்து மூப்பர்கள் ஞானசூனியரையும் அவரது சகாக்களையும் சந்திக்கின்றனர். அவர்கள் ஜெபித்து பாடுகின்றனர். கல்விநேசன் ஞானசூனியரை கெஞ்சிக் கேட்கிறார், ''சபையில், என்னை முக்கிய தலைவர் பதவியில் இருந்து நீக்குவது உட்பட என்ன மாற்றம் வேண்டும் என்பதைச் சரியாகச் சொல்லுங்கள்.''

ஞானசூனியர் பேச எத்தனிக்கிறார். ஆனால் ஜேக்கப் குறுக்கிட்டுச் சொல்லுகிறார், ''நான் நேர்மையாகக் கூறுகிறேன். ஞானசூரியர் வேண்டுவதை எங்களில் பலர் விரும்பவில்லை. கல்விநேசரை நீக்கி விட்டு இந்த சபையின் போதகராக அவர் விரும்புகிறார். ஆனால் அவருக்கும் இறையியல் கல்லூரி பட்டம் எதுவும் இல்லை. நாங்கள் விரும்புவது என்னவென்றால் என்னுடைய பழைய சபையின் முறைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பது தான். அவர்கள் ஆராதனை முறையை நாங்கள் விரும்புகிறோம். அவர்களிடம் பெரிய பெரிய ஒலிக்கருவிகள் இருக்கின்றன. புகழ் பெற்ற பாடகர்களையும், தொழில் ரீதியான இசைக்கலைஞர்களையும் கொண்டு அவர்கள் அரங்குகளை வாடகைக்கு எடுத்து அடிக்கடி பெரிய சுவிசேஷக் கூட்டங்களை நடத்துகின்றனர்.''

ஞானசூனியர் தொடர்கிறார், ''அத்தகைய உற்சாகம் இங்கு இல்லை. ஒற்றுமையைக் கருதி இந்தப் பகுதியில் உள்ள எல்லா சபைகளும் ஒரே கொள்கையையும் முறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என்பது என் கருத்து. நாம் எல்லாவற்றையும் ஜேக்கப்பின் பழைய சபையைப் போலவே செய்ய வேண்டும்.''

உடனே எல்லா மூப்பர்களும் எதிர்க்கின்றனர். அப்போஸ்தலர் 15 ல் உள்ள இரண்டு மனவேறுபாடுகளில் இருந்தும் தான் கற்றவற்றை கல்விநேசன் விளக்குகிறார். அவர் மென்மையாகக் கூறுகிறார், ''இது இயேசுவின் கற்பனை சம்பந்தப்பட்ட கருத்து வேறுபாடு இல்லை என்பதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது வெவ்வேறு

விதமாக ஊழியம் செய்வது குறித்த வேறுபாடு. நீங்கள் விரும்பும் அந்தப் பிரசங்கியார் சுவிசேஷம் கூற வேறொரு முறையைக் கையாளுகிறார். அவருடைய வரங்கள் எனக்கு இல்லை. அவர்களுடைய முறைகளை கையாளும் அளவிற்கு நமது சபைக்கு பணவசதி போதாது. நம்முடைய சமுதாயத்தில் நாம் கடைபிடிக்கும் முறை சிறப்பாக வேலை செய்கிறது. தேவன் ஆசீர்வதித்து வரும் இம் முறையையே பல மூப்பர்களும் சபை மக்களும் ஏற்றுக் கொள்ளுகின்றனர், அதுவே நமது மக்கள் பின்பற்ற எளிதாக இருக்கிறது. தங்களுடைய பிரசங்கியைப் பின்பற்றி அவரைப்போல விஷயங்களைச் செய்யும் ஜேக்கப்பின் பழைய சபை மக்களை நாங்கள் குறை கூறவில்லை. அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் கேட்கவில்லை. இதில் நாம் யாவருக்கும் ஏறக்குறைய கருத்து ஒற்றுமை இருக்கிறது. வெவ்வேறு முறைகளை விரும்பிய ஒன்றிற்காக மட்டுமே ஒருவரை ஒருவர் விமரிசித்துக் கொண்டதற்காக ஒருவருக்கொருவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவோம்.''

மூப்பர்கள் ''ஆமென்'' என்று கூறுகின்றனர்.

கல்விநேசன் விளக்குகிறார், ''எருசலேமில் இருந்த முதல் சபை தினமும் யூத தேவாலயத்திலும் வீடுகளிலும் கூடியது. அவர்கள் ஒன்றாக உணவருந்தி, உடைமைகளைப் பகிர்ந்து கொண்டு, தேவையில் இருப்போரை கவனித்துக் கொண்டனர். அவர்கள் அன்பான ஒரு குடும்பத்தைப் போல இருந்தனர். அப்போஸ்தலர் காலங்களில் இருந்த சபை பிற சபைகளை ஊக்கப் படுத்த ஆட்களை அனுப்பியது. அவர்கள் தங்கள் கருத்து மாறுபாடுகளை ஒருவரை ஒருவர் குறை கூறாமல் அன்பால் தீர்த்துக் கொண்டனர். புறஜாதி சபைகள் வேறு விதமான சம்பிரதாயங்களை பின்பற்றிய போதிலும், அவர்கள் யூத சபைகளோடு ஐக்கியமாக இருந்தனர். ஒருவரை ஒருவர் மதித்து இயேசுவின் கற்பனைகளை கைக்கொண்டு நடக்கும் வரை ஒவ்வொரு கலாச்சாரமும் தங்களுடைய சம்பிரதாயங்களை பின்பற்றுவதை அவர்கள் அனுமதித்தனர். நாமும் அதையே செய்யலாம்.'' அவர்கள் வேதாகமத்தைத் திறந்து அப்போஸ்தலர் 2, 10 அதிகாரங்களில் உள்ள, எருசலேமின் யூத சபைக்கும் செசரியாவில் இருக்கும் புறஜாதி சபைக்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். கலாத்தியாவில் உள்ள புறஜாதி சபை எவ்வளவு தூரம் யூத சபைகளை விட வேறுபட்டது என்பதையும் அவர்கள் கவனித்துப் பார்க்கின்றனர்.

ஞானசூனியர் போகிறார். ஆனால் ஜேக்கப் ஒத்துக் கொள்ளுகிறார், ''சபைகளுக்கு நடுவே இத்தகைய வேறுபாடுகள் இருப்பதை வேதாகமம் அனுமதிக்கிறது என்பது எனக்கு இதுவரை தெரியாமல் இருந்தது. மாறும் முறைமைகளுக்கும் மாறாத உலகம் தழுவிய கற்பனைகளுக்கும் இடையில் வித்தியாசம் உணராதவனாக இருந்து விட்டேன். எனவே மூப்பர்களின் ஆலோசனையை மனப்பூர்வமாக பின்பற்றவும், கல்விநேசரை என் தலைவராக ஏற்கவும் செய்கிறேன். எனது பழைய போதகரை விட இவர் பின்பற்றும் முறை வேறுதான். ஆனால் அது அவ்வளவு முக்கியமான விஷயம் இல்லை என்பதை இப்போது பார்க்கிறேன்.''

## நடைமுறைப் பணிகள்

- உங்கள் சபைக்குள்ளும் பிற சபைகளுக்கு இடையிலும் ஐக்கியத்தை பலப்படுத்தும் வழிவகைகளை திட்டமிடுங்கள்.
- சிறுச்சிறு குழுவாகவோ முழுச்சபையாகவோ ஐக்கியத்தை மகிழச்சியோடு கொண்டாடும் நேரத்தை முறையாக ஒழுங்குபடுத்தி நிர்ணயிக்க வேண்டும். இந்நேரத்தில் விளையாட்டு அல்லது வேறுவிதமான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.
- பிற சபைகளோடு ஐக்கியமாகக் கூடும் நேரத்தை ஒழுங்கு செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவி தேவைப்படும் போது வேலை செய்ய வேண்டும்.
- சபைக்குள் பிரிவினை உண்டாக்கும் கருத்து வேறுபாடுகள் எழும்போது ஒரு கூட்டத்தைக் கூட்டி பேச விரும்புவோர்களை எல்லாம் பேச அனுமதிக்க வேண்டும். பின் மூப்பர்கள் கூடி சிந்தித்து, ஜெபித்து, என்ன செய்ய வேண்டும் என்ற தங்களது ஆலோசனைகளைத் தர வேண்டும்.
- பிறரை கண்காணிக்கும் பணியை ஆற்றாத வரை யாரையும் மூப்பர்களாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.இவர்கள் ஒரு சிறு குழுவின் தலைவர்களாக இருக்கலாம். (1 பேதுரு 5:1-4).
- ஒவ்வொருவர் கூறுவதையும் கவனத்தோடு கேட்டு, ஜெபத்தோடு ஒரு உடன்பாட்டுக்கு கொண்டு வருவதின் முக்கியத்துவத்தை மூப்பர்களுக்கு போதிக்க வேண்டும்.
- பிரச்சினையை தீர்க்க நீங்கள் தரும் ஆலோசனை அதற்குரிய இயேசுவின் கற்பனைக்கு உடனடியாக கீழ்ப்படிவதாக அமைய வேண்டும் என்பதில் உறுதியாய் இருங்கள். அதிக அதிகாரம் கொடுத்து சிலரை கட்டுப்படுத்துவதாக மட்டும் அது இருக்கக் கூடாது.

## III - 8 ஊழியம் 8
# சென்று ஆலோசனை கூறு

தான் பயிற்சி அளிக்கும் தலைவர்களை முறையாக சந்திக்கும் ஞானம் ஐயாவின் முன்னுதாரணத்தைக் கல்விநேசன் பின்பற்றுகிறார். சகாயரை அவர் வீட்டில் சந்தித்து கேட்கிறார், ''உங்கள் சபையின் வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது?''



சகாயர் பதில் அளிக்கிறார், ''எனக்குக் கொஞ்சம் கவலையாக இருக்கிறது. தயாளரின் குடும்பம் மீண்டும் மலேரியாவால் கஷ்டப்படுகிறது. அவர் அதைரியம் அடைந்திருக்கிறார். அவரது மகனின் காலில் முறிவு ஏற்பட்டுள்ளது. அவரது மனைவி மன அழுத்தம் காரணமாக அழுது கொண்டே விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்கிறார். நீங்கள் அவர்களோடு பேச முடியுமா?''

அவர்கள் தயாளர் வீட்டிற்கு போகிறார்கள். அங்கே ஞானசூனியர் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைகிறார்கள். அவர் கல்விநேசனிடம் கூறுகிறார், ''தயாளரின் மனைவி கார்மென் என்னுடைய சகோதரி. நான் என் மைத்துனரிடம் கடன் கேட்க வந்தேன். என்னுடைய விற்பனை மிகவும் குறைவாக உள்ளது. ஆனால் அவர் தமது ஆசிரியர் வேலையை நோயின் காரணமாக இழந்து விட்டார். ஒரு வேளை உங்களால் எனக்கு உதவ முடியும்.''

கல்விநேசன் உறுதியாகக் கூறுகிறார், ''நான் கடன் கொடுப்பதில்லை என்று பலமுறை உங்களுக்கு சொல்லிவிட்டேன். தயாளருக்கும், கார்மெனுக்கும் தான் உதவி தேவைப்படுகிறது.''

ஞானசூனியர் தயாளரிடம் அவரது மனைவி கார்மென் முன்னிலையில் கூறுகிறார், ''நீங்களும் உங்கள் குடும்பமும் அதிகமான பாவம் செய்து விட்டீர்கள்! அதனால் தான் உங்களுக்கு இந்தப் பிரச்சினை. நீங்கள் இயேசு கிறிஸ்துவால் உண்மையில் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் உண்மை கிறிஸ்தவர்களாக இருந்தால் இவ்வளவு தூரம் கஷ்டப்பட மாட்டீர்கள்.'' கார்மென் அறைக்குள் ஓடி சத்தமாக அழுகிறாள்.

''நான் இதைக் கேட்க மாட்டேன்'' தயாளர் கத்துகிறார். அவர் வீட்டை விட்டு வெளியே போகிறார். கல்விநேசரும் சகாயரும் அவர் பின்னே போகிறார்கள். அவர் அவர்களிடம் கூறுகிறார், ''ஞானசூனியர் என் குடும்பத்தை மிகவும் தொந்தரவு செய்து விட்டார். நாங்கள் சபையை விட்டு வெளியேறுகிறோம்.''



சகாயர் அவரை சபைக்கு வரும்படி வற்புறுத்துகிறார். அவர் கேட்க மறுக்கிறார். கல்விநேசன் வீட்டிற்கு திரும்பி சாராவுடன் ஜெபிக்கிறார். அவர் ஞானசூனியரின் வீட்டிற்கு விரைந்து சென்று அவரை கடிந்து கொள்ளுகிறார், ''நீங்கள் அதைரியப்படுத்தியதால் உங்கள் சகோதரியின் குடும்பம் சகாயரின் சபையை விட்டு வெளியேறிவிட்டது.''

''சந்தோஷம்'' ஞானசூனியர் பதிலளிக்கிறார். ''அந்த கஞ்சன் இல்லாவிட்டால் சபை இன்னும் நன்றாக இருக்கும். கார்மென் அந்த ஆளை கல்யாணமே செய்திருக்கக் கூடாது.''

கல்விநேசனுக்குக் கோபம் வருகிறது. ஆனால் ஒன்றும் பேசாது இருக்கிறார். அடுத்த நாள் சகாயரிடம் சென்று அவருக்கு தைரியமூட்டுகிறார். அதைரியம் அடைந்த கிறிஸ்தவர்களுக்காக ஞானம் ஐயா கொடுத்துச் சென்ற ஒரு வேதபாடம் கிடைக்கிறது. சகாயர் தமது கிட்டாரில் ஒரு சோகப்பாடலை இசைப்பதை கேட்கிறார்.

கல்விநேசர் அவருக்கு வாசித்துக் காட்டுகிறார். ''மக்களை சந்தித்து ஆலோசனை கூறுவது ஓர் அடிப்படை ஊழியம் ஆகும். வாழ்க்கை வேதனை உள்ளதாக இருக்கும் போதும் தேவனிடம் நம்பிக்கையாயிருந்து களிகூரும்படி ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய இதோ சில நடைமுறைக்கு உகந்த வழிகள். தேவ ஆவியானவரை நமது தேற்றரவாளன் என்று அழைக்கிறோம். அதைரியம் அடைந்த தீர்க்கதரிசியை தேவன் எவ்வாறு தேற்றினார் என்பதைக் காண்போம்.''

## பயிற்சி

**1 இராஜா. 19:1-18** ல் காண்க

- எலியா ஏன் அதைரியம் அடைந்தார்? முழுக்கதையையும் அறிய 18 ஆம் அதிகாரத்தையும் வாசிக்கவும்.
- 19 ஆம் அதிகாரத்தில், எலியாவுக்கு உதவ முதலில் தேவன் என்ன உதவியை அனுப்பினார்?
- கெபியில் எலியாவுக்கு தேவன் கூறிய முதல் வார்த்தைகள் என்ன?
- தேவன் அவனோடு பேசிக்கொண்டிருப்பதை எலியா எவ்வாறு அறிந்தான்?
- எலியாவை தைரியப்படுத்த தேவன் எலியாவை என்ன செய்யும்படி கூறினார்?

ராகேல் தேனீர் கொண்டு வருகிறாள். சகாயர் பாடத்தை வாசிக்கிறார், ''தைரியம் மிகுந்த தேவ தீர்க்கதரிசிகளும் அதைரியம் அடைந்ததுண்டு. மாபெரும் அற்புதங்களைச் செய்ய தேவன் எலியாவுக்கு வல்லமை அளித்தார். ஆனால் அவனைக் கொல்லப் போவதாக யேசபேல் மிரட்டியதும் அவன் பயந்து ஓடிப் போனான். அவன் வெகுதூரம் ஓடி களைப்படைந்தான். தனது வேலைக்காரனை விட்டுவிட்டு தனியே போனான். அது ஒரு தவறு. அவனுக்கு துணை தேவையாய் இருந்தது. அவன் சாக விரும்பினான். அவனது அதைரியத்துக்கு அவன் களைப்படைந்ததும் பாதி காரணமாகும். உணவும் தண்ணீரும் கொடுத்து தேவன் ஒரு தேவதூதனை அனுப்பினார். அவனது உடல் களைப்பு தீரும் வரை உறங்க அனுமதித்தார். அதன் பின் தேவன் அவனோடு பேசினார். தேவனின் முதல் வார்த்தை ஒரு கேள்வியாக வந்தது. ''இங்கே உனக்கு என்ன காரியம்?'' முதலில் எலியா பேசுவதை தேவன் கேட்டார். ஒரு கோபமான புயலை அல்ல, தேவன் எலியாவோடு பேச ஒரு மெல்லிய அமைதியான சத்தத்தை உபயோகித்தார். இறுதியில், எலியா வாழ்வதற்கு தேவன் ஒரு காரணத்தைக் கொடுத்தார். எலியா செய்துமுடிக்க ஒரு பணியையும், தமது வல்லமையால் புதிய நம்பிக்கையையும் தேவன் அளித்தார்.''

அவர்கள் 1 இராஜாக்கள் 19 ஆம் அதிகாரத்தை மீண்டும் வாசிக்கிறார்கள். கல்விநேசன் கூறுகிறார், ''நாம் மகா ஆலோசனைக்காரரின் உதாரணத்தைப் பின்பற்றுவோம். மக்கள் அதைரியம் அடைந்திருக்கின்றனர் என்று அறியும்போது அவர்களை சந்திப்போம். அவர்களுடைய பிரச்சினைக்கு உடல் ரீதியான காரணம் உண்டா என்று முதலில் கண்டறிவோம். அவர்கள் களைப்பாக, பசியாக, நோயின் துன்பத்தோடு இருக்கிறார்களா? குணமாக ஜெபித்து உடல் ரீதியான தேவைகளை சந்திப்போம். பின் என்ன தவறு என்று கண்டறிய கேள்விகள் கேட்போம். மக்கள் ஏன் அதைரியமாக அல்லது கலக்கத்தோடு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய பொறுமையோடு கேட்க வேண்டும். மென்மையாகக் கையாள வேண்டும் தேவன் வேதனை யடைந்த மக்களோடு நமது இரக்கத்தின் மூலமாகப் பேசுகிறாரே அல்லாமல் நமது கோபத்தின் மூலமாக அல்ல.''

''இதை நான் தயாளரின் குடும்பத்துக்குச் செய்ய வேண்டும். தேவன் எலியாவிடம் பேசியது போல அமைதியாக அவரோடு பேச வேண்டும்'' சகாயர் கூறுகிறார்.

சகாயர் வேத பாடத்தில் இருந்து வாசிக்கிறார், ''உண்மை என்றும் மிகைப்படுத்தப்பட்டது இல்லை என்றும் நிச்சயமாக தெரியாவிட்டால் மோசமான செய்திகளைப் பிறரிடம் சொல்லக் கூடாது. புறங்கூறுதலை தவிர்க்க வேண்டும். அதைரியம் அடைந்த விசுவாசிகளை, கிறிஸ்துவுக்குள் அவர்கள் யார் என்பதை நினைவூட்டி நம்பிக்கை அளிக்க வேண்டும். எபேசியர் 1:3-14 ல் உள்ள ஊக்கமளிக்கும் வசனங்களை உரக்க கூறச் சொல்லி ஒவ்வொரு அற்புதமாக வாக்குத்தத்தங்களையும் கேட்கச் செய்ய வேண்டும். அவர்களாகவே வாசிக்கலாம் அல்லது நீங்கள் வாசிக்க அவர்கள் திரும்பச் சொல்லலாம். அவர்கள் அறிக்கை இடாமல் இருப்பதனால் பாவம் அவர்களுக்குள் இருக்க வாய்ப்புண்டு. அவர்கள் பாவத்தை அறிக்கை இட உதவி செய்ய வேண்டும். யாராவது, குறிப்பாக குடும்பத்தினர், அவர்களுக்கு தீங்கு இழைத்திருந்தால் அவர்களை மன்னிக்க உதவி செய்ய வேண்டும். தேவனிடம் மன்னிப்பு உண்டு என்பதை உறுதி செய்ய வேண்டும். இறுதியாக, கஷ்டமான நேரங்களிலும் தேவனுக்கு நடைமுறையில் சேவை செய்ய அவர்களுக்கு உதவ வேண்டும்.''

சகாயர் பாடத்தை முடித்துவிட்டு ஆச்சரியப்படுகிறார், “இதை நான் செய்வேன். என் சபையில் சென்று ஆலோசனை கூறும் ஊழியத்தை ஆரம்பிப்பேன். இன்று எனது ஊழியக்காரர்களை சந்திக்கிறேன். அண்ணா, இருந்து எனக்கு உதவி செய்யுங்கள்.”

## பயிற்சி

**எபேசியர் 1:3-14** ல் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களுக்கு அற்புதமான ஊக்கம் அளிக்கும் வாக்குத்தத்தங்களை காண்க:

அன்றிரவு சகாயர் தன் புதிய சபையின் ஊழியர்களுக்கு விளக்குகிறார், “விசுவாசிகள் வீட்டிற்கு நாம் சென்று கையாளக்கூடிய பிரச்சினைகள் உண்டு. பொதுவாக குடும்பத்துக்குள்ளேயே இன்னொருவருடன் முரண்பாடு கொண்டவர்கள் இருக்கிறார்கள். சிலர் நோயாளிகள், வயதானவர்கள், நலிந்தவர்கள், வேலையற்றவர்கள். சிலர் குடியாலும், போதை மருந்தாலும், பாலியல் பிரச்சினைகளாலும் கஷ்டப்படுகின்றனர். சில புதிய விசுவாசிகளுக்கு இரட்சிப்பைக் குறித்த அவநம்பிக்கையும், கிறிஸ்துவின் சபையில் தங்களுக்குரிய இடம் குறித்த தடுமாற்றமும் உண்டு. இயேசுவை அறியாத நண்பர்களும், உறவினர்களும் சில விசுவாசிகளுக்கு இருப்பார்கள். யாராவது ஒருவர் புதிய விசுவாசிகளை முறையாக சந்திக்கும்படி நாம் திட்டமிட வேண்டும். அண்ணா! என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள்.”

கல்விநேசர் ஞானமாக அறிவுறுத்துகிறார், “நீதான் இங்கே தலைவர் என்ன செய்ய வேண்டும் என்பது உனக்குத் தெரியும். அவர்களுக்கு நீயே சொல்.”

குழுவுக்கு சகாயர் கூறுகிறார், “இரண்டு பேராகச் செல்லுங்கள். ஆண்கள் ஆண்களையும் பெண்கள் பெண்களையும் சந்தியுங்கள். புறங்கூறுதலை தவிர்க்கவும். கணவனும், மனைவியும் சேர்ந்து குடும்பங்களை சந்திக்கலாம். சந்திக்கும் மக்களோடு சேர்ந்து ஜெபிக்கவும். இயேசுவைப் பற்றி கூறவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும். நான் கூறிய கதைகளை உபயோகிக்கவும். வளர்ச்சி அடைந்த விசுவாசிகள் புதியவர்களை அழைத்துக் கொண்டு அவர்களது இரட்சிக்கப்படாத நண்பர்களை சந்திக்கலாம். இதனால் புதிய விசுவாசிகள் என்ன சொல்ல வேண்டும் என்பதைத் துரிதமாக கற்றுக் கொள்வார்கள். நமது மாபெரும் மேய்ப்பரான இயேசுவைப் போல நாமும் மேய்ப்பர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. நாம் அவரது மந்தையை அன்புடனும் இரக்கத்துடனும் கவனித்துக் கொள்ளுகிறோம். பிறர் உணர்வுகளை மதிக்க வேண்டும். மக்கள் சாப்பிடும்போதோ, வேலை செய்து கொண்டு இருக்கும் போதோ குறுக்கிடக் கூடாது. சுத்தமாகவும், மதிக்கத்தக்கவரும், பெருந்தன்மையோடும் இருக்க வேண்டும். இயேசு எப்படி இருக்கிறார் என்பதை நாம் நம்மூலம் வெளிக்காட்ட வேண்டும்.”

சபையை விட்டு விலகிய கல்விநேசனும் சகாயரும் போகின்றனர். சகாயர், கல்விநேசனை பேசச் சொல்கிறார். கல்விநேசன் மறுக்கிறார், “நீதான் அவர்களது மேய்ப்பன்.”

யோபு எவ்வாறு துன்பம் அடைந்தார் என்பதை சகாயர் தயாளருக்கும் குடும்பத்துக்கும் கூறுகிறார். “யோபு நோயுற்று, பிள்ளைகளை இழந்து, வேதனையோடு இருக்கும் போது அவருடைய நண்பர்கள் அவரை தேற்ற முற்படுகின்றனர். ஆனால் அவர்கள் இன்னும் அவரை துயரப்படுத்தி விடுகின்றனர். யோபு மோசனமானவர் ஆதலால்தான் அவர் கஷ்டப்படுகிறார் என்று அவர்கள் கூறிக்கொண்டே இருக்கிறார்கள். மோசமான மனிதர்கள் நன்றாக வாழ்வதைப் பார்த்த யோபு, தான் ஏன் துன்பமடைய வேண்டும் என்று தேவனை கேட்க விரும்புகிறார். வேதனையில் இருப்போர் எவ்வாறு ஆறுதலைப் பெறுகின்றனர் என்பதை விளக்குகிறேன்.”

## பயிற்சி

**யோபு அதிகாரம் 1&2** ல் காண்க:

- தேவன் யோபுவின் விசுவாசத்தை எவ்வாறு சோதித்தார்?
- ஏன் தன்னை தேவன் சோதிக்கிறார் என்பதை யோபு புரிந்து கொண்டானா?

**யோபு அதிகாரம் 38 மற்றும் 42** ல் காண்க:

- யோபுவுக்கு தேவன் எவ்வாறு பதிலளித்தார்?
- கடைசியில் அவனுக்கு என்ன நடந்தது?

தயாளர் வீட்டில் சகாயர் அவரையும் கார்மென்னையும் தேற்றுகிறார், “துன்பம் நமக்கு பல காரணங்களால் வருகிறது. நாம் முட்டாள்தனமான காரியங்களை செய்து நமக்கு நாமே துன்பத்தைக் கொண்டு வருகிறோம். நோயை உபயோகித்து தேவன் நம்மை சீராக்குகிறார், அவரை நினைக்க உதவுகிறார், அல்லது நமது வீடான பரலோகத்திற்கு கொண்டு செல்கிறார். துன்பத்தின் மூலம் நமது விசுவாசத்தை சோதிக்கிறார். தமது வல்லமையால் சில வேளை நம்மை குணமாக்குகிறார். பவுல் கொரிந்து சபைக்குக் கூறுவது போல, சில சமயங்களில் நமது பலவீனத்தில் தமது வல்லமையை விளங்கப் பண்ணுகிறார்.” கார்மெனும் குழந்தைகளும் தூங்கச் செல்லுகின்றனர். ஆனால் தயாளர் மேலும் அறிய விரும்புகிறார். துன்பத்தின் மீது பவுலின் மனநிலை என்ன என்பதை சகாயர் விளக்குகிறார்.

## பயிற்சி

- 2 கொரிந்தியர் 1:3-7 ல் நமது ஆறுதலுக்கான முக்கிய ஆதாரம் காண்க
- 2 கொரிந்தியர் 4:7-12 ல் ஒரு விசுவாசியின் உடல் துன்பம் சித்தரிப்பது என்ன?
- 2 கொரிந்தியர் 12:7-10 ல் பவுல் துன்பப்பட தேவன் ஏன் அனுமதித்தார்?

சகாயர், தயாளருடன் சேர்ந்து தொடர்ந்து ஜெபித்து அவரை தேற்றுகிறார், “தேவன் நம்மை துன்பப்பட வைக்க விரும்பவில்லை. நமது துன்பத்தை தமது தோளில் சுமக்கவே இயேசு வந்தார். இயேசு, பவுல், யோபு ஆகியோரின் துன்பத்திலிருந்து தேவன் நன்மையைக் கொண்டு வந்தது போல் நமது துன்பத்தில் இருந்தும் நன்மையைக் கொண்டு வருவார். **யாரும் நம்பாத குருடன்** என்பதைப் பற்றி விளக்குகிறேன்.”

## பயிற்சி

- **யோவான் அதிகாரம் 9** அந்த மனிதனின் குருட்டுத்தனத்தால் விளைந்த சில நன்மைகள்
- **யாக்கோபு 5:13-20** நன்மையானதும் மோசமானதுமான காலங்களை சந்திக்கும் மக்களுக்கு ஆலோசனை வார்த்தைகள்
- **எபிரேயர் 12:5-12** பாவத்தை தொடர்ந்து செய்யும் விசுவாசிகளை தேவன் ஏன் தண்டிக்கிறார் என்பதற்கு ஒரு முக்கிய காரணம்.

தயாளர் வீட்டில் இருந்து வரும்போது, கல்விநேசன் சகாயரிடம் கூறுகிறார், “நீ நன்றாக ஆலோசனை கூறினால் கூறுவாய் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் நான் அமைதியாக இருந்தேன்.”

அடுத்த நாள் சகாயர் தன் மனைவி ராகேலை அழைத்துக் கொண்டு தயாளர் மனைவி கார்மென்னை பார்க்கப் போகிறார். ராகேலும் சந்தித்து ஆலோசனை கூறுவதைப் பற்றிய பாடங்களை படித்திருந்தாள். அவள் கார்மென்னுக்கு விளக்கம் அளிக்கிறாள். “உனது துன்பங்களுக்கு தேவன் உன்னை கைவிட்டு விட்டார் என்பது காரணம் அல்ல.”

பின்னர் அவர்கள் சந்தித்து அதைரியம் அடைந்ததற்கான அடிப்படை காரணத்தை அறிய முயற்சி செய்கின்றனர். தயாளர் கூறுகிறார், “இதற்கு அடிப்படை என்ன என்பதை நான் அறிவேன். தேவன் உண்மை உள்ளவர் என்பதை என் குடும்பம் மறந்து போகும்படி விட்டுவிட்டேன். நாங்கள் குடும்பமாக ஜெபிக்கத் தவறி விட்டோம். இப்போது நாம் சேர்ந்து ஜெபிப்போம். யோபுவுக்கு செய்ததுபோல, நமது துன்பத்தில் இருந்து நன்மையைக் கொண்டு வரும்படி தேவனைக் கேட்போம்.”

சகாயரின் சபையைச் சேர்ந்த சிலர் இந்த குடும்பத்துக்கு உணவு கொடுத்துப் பலநாட்கள் ஆதரிக்கின்றனர். அவர்கள் மீண்டும் சபைக்கு திரும்பி வருகின்றனர். அந்தக் குடும்பத்தின் விசுவாசம் வளர்ந்து பலப்படுகிறது. விரைவில் தேவன் அவர்களுடைய சரீர வேதனைகளையும் குணமாக்குகிறார். தயாளர் மற்றவர்களை சந்தித்து இயேசுவைப் பற்றிக் கூற தேற்றுகிறார். “தேவன் துன்பத்தில் இருந்து எங்களுக்கு நன்மை கொண்டு வந்தார்” என்று விருப்பத்துடன் சாட்சி கூறுகிறார்,

ஒரு துதி ஆராதனையின் போது சகாயர் அறிவிக்கிறார், “தயாளரும் கார்மெனும் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஊழியத்தை செய்கின்றனர். சபை அவர்களைப் பாராட்டுகிறது. அப்போஸ்தலர் 6 ஆம் அதிகாரத்தில் உள்ளது போல, நாங்கள் இப்போது அவர்கள் மேல் கைகளை வைத்து மூப்பர்களாக நியமிக்கிறோம். சபையார் கைதட்டி மகிழ்கின்றனர்.

## நடைமுறைப் பணிகள்


- பிரச்சினை உள்ளவர்களை சந்தித்து ஆறுதல் கூறும் ஊழியத்தை வளர்க்கவும். மற்றவர்களுக்கு ஆறுதல் கூற விரும்பும் சபைமக்களை இனம் காணவும் இந்த பகுதியில் உள்ள கதைகளை உபயோகித்து, ஊக்கப்படுத்தவும் புத்திமதி கூறவும் அவர்களுக்கு பயிற்சி அளியுங்கள்.
- பிரச்சினை இருந்தாலும் இல்லாவிட்டாலும் முறையாக யாவரையும் சந்திக்க திட்டமிடுங்கள்.
- பகுதி 1 ல் பட்டியல் இடப்பட்டிருக்கும் இயேசுவின் அடிப்படை கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய புதிய விசுவாசிகளுக்கு போதிக்கவும்.
- புதிய விசுவாசிகளுடன் அவர்களுடைய இரட்சிப்படையாத நண்பர்களிடம் சென்று சாட்சி பகர உதவி செய்யுங்கள்
- பலவீனமான முதியோர்கள், நோயாளிகள், பிற தேவைகளில் இருப்போரின் மேல் தனியான கவனம் செலுத்தவும்.

## III - 9 - ஊழியம் 9

# திருமணங்களையும் முழுக்குடும்பங்களின் விசுவாசத்தையும் பலப்படுத்து

ஒரு விற்பனை வண்டியை தள்ளிக்கொண்டு ஞானசூனியர் கல்விநேசன் வீட்டிற்கு வருகிறார். விற்பனைக்கு உரிய பொருட்களைச் சுட்டிக் காட்டி, ''இதைப் பாருங்கள். ஒரு புதிய வகை பேட்டரி. ஒருபோதும் தீராது. உங்கள் பிளாஷ் லைட்டிற்கு ஒரு டஜன் வாங்குங்கள்!'' என்று கூறுகிறார்.

கல்விநேசன் கேட்கிறார், ''அது ஒருபோதும் தீராது என்றால் நான் ஏன் அத்தனை வாங்க வேண்டும்? அந்தத் துணியின் கீழ் எதை மறைத்து வைத்திருக்கிறீர்?''



''சொந்த சாமான்!''. கல்விநேசன் துணியை விலக்க அங்கே சில மக்கள் விக்கிரகமாக வணங்கும் சிலைகள் இருக்கின்றன.

''அவைகள் வீட்டை அலங்கரிப்பதற்கே'' ஞானசூனியர் உறுதியாகக் கூறுகிறார்.

''பின் ஏன் அதை மறைத்து வைத்தீர்?''

''நீர் ஏற்றுக்கொள்ள மாட்டீர் என்று எனக்குத் தெரியும். நீர் குறுகிய புத்தி உடையவர். உமக்கு திடமான விசுவாசம் இருக்குமானால் உண்மையில் சிலைகளில் ஒன்றுமில்லை என்று அறிவீர். அதைக்குறித்து பெரிது படுத்தவும் மாட்டீர். எனக்கு பெரிய விசுவாசம் உண்டு. அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இந்த சிலைகளை விற்க முடிகிறது.''

''உமது தத்துவத்தை புரிந்துகொள்ள முடியவில்லை.'' கல்விநேசன் கூறுகிறார். ''இதை வாங்கும் புறஜாதி மக்கள் அவற்றை வணங்குகிறார்கள் அல்லவா?''

''உமக்கு உண்மையான விசுவாசம் இல்லை. இந்த சபையில் என்னைத் தவிர யாருக்குமே உண்மையான விசுவாசம் இல்லை. உங்கள் சபை மக்கள் நன்றாக வாழ்ந்தாலும் எல்லா குடும்பங்களிலும் பிரச்சினை இருக்கிறது. கணவர்கள் மனைவியுடன் சண்டை இட்டு குழந்தைகளைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுக்கு விசுவாசம் இல்லை. நான் என் குடும்பத்தை ஒழுங்குமுறையாக வைத்திருக்கிறேன். நான் சொல்லுவதை கேட்காவிட்டால் என் மனைவியை அடிக்கிறேன்.''

கல்விநேசன் பதில் அளிக்கிறார், ''எங்கள் குடும்பங்களில் பிரச்சினைகள் இருப்பது உண்மைதான். உமது குடும்பத்தில் கூட இருப்பதாகத்தான் தெரிகிறது. நாம் ஒட்டு மொத்தக் குடும்பங்களின் விசுவாசத்தையும் பலப்படுத்த வேண்டும் என்று ஞானம் ஐயாவிடம் கூறினேன். விசுவாச மனிதனாகிய ஆபிரகாமைக் குறித்த இந்த வேதபாடத்தை அவர் கொடுத்துச் சென்றார். நாம் அதை வாசிப்போம். ஆனால், முதலில், இந்த சிலைகளை விற்க மாட்டேன் என்று வாக்குறுதி கொடுங்கள்.''

ஞானசூனியர் முனகுகிறார், ''நீர் சொன்னபடி நான் இனிமேல் இந்தச் சிலைகளை விற்க மாட்டேன். நான் என் சபையோடு தகராறு எதுவும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை.''

கல்விநேசன் தொடர்கிறார், ''நல்லது. இப்போது நாம் **விசுவாச மனிதனாகிய ஆபிரகாம்** குறித்துப் படித்து, உண்மை விசுவாசம் என்ன என்பதை அறிந்து கொள்வோம். அவனுடைய சந்ததியில் ஒருவர் மூலம் இந்த உலக தேசங்களை எல்லாம் ஆசீர்வதிப்பேன் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தார். அவரே இயேசு. ஆபிரகாம் இந்த வாக்குத்தத்தை விசுவாசித்தான்.''

## பயிற்சி

முதிர் வயது உள்ளவளும் மலடியுமான ஆபிரகாமின் மனைவி சாராளுக்கு குழந்தைப் பேறு உண்டான அதிசயத்தை நிகழ்த்தியது யார் என்பதை **ஆதியாகமம் 27:1-7** ல் காண்க.

**ஆதியாகமம் 22:1-18**

- ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் எவ்வாறு சோதித்தார்?
- ஆபிரகாமின் மகனை தேவன் எவ்வாறு காப்பாற்றினார்?
- ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததால் தேவன் அவனுக்கு செய்த வாக்குத்தத்தம் என்ன?

ஞானசூனியர் கல்விநேசனின் வீட்டிற்கு முன்னால் தனது வண்டியில் சாய்ந்தவாறு சில நிமிடம் மௌனமாக நிற்கிறார். பின் அவர் குறிப்பிடுகிறார், ‘‘இன்று, எந்த மனிதனுக்கும் உள்ள விசுவாசத்தை விட மேலான விசுவாசம் ஆபிரகாமுக்கு இருந்தது. அவனும் அவனது மனைவியும் இவைகளை வெகு காலத்திற்கு முன் செய்தனர். ஆனால் இன்று நாம் சந்திக்கும் பிரச்சினைகள் வேறு.’’

கல்விநேசன் பதிலளிக்கிறார், ‘‘ஆபிரகாமின் முன் உதாரணம் இன்று நமக்கும் பொருந்துகிறது. தேவன் அவனுக்கு ஒரு மகனைக் கொடுத்தார். அவன் மூலமாய் தேவன் இந்த உலகத்தின் தேசம் முழுவதையும் ஆசீர்வதிப்பேன் என்று கூறிய வாக்குத்தத்தம் நிறைவேறும். அது நமக்கும் சேர்த்தே. ஒரு பலிபீடத்தில் தன் மகனை பலியிடக் கூறி தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதித்தார். ஆபிரகாம் அதற்குக் கீழ்ப்படியும் அளவுக்கு தேவனை விசுவாசித்தான். தேவன் ஈசாக்குக்குப் பதிலாக ஓர் ஆட்டுக்கடாவை அனுப்பி அவனை விடுவித்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இயேசு நமக்குப் பதிலாக மரிப்பார் என்பதற்கு இது ஒரு தீர்க்கதரிசனமான முன்னுதாரணம். ஆபிரகாமின் சந்ததியான இயேசுவின் மூலம், இந்த உலகத்தின் குடும்பங்களை எல்லாம் ஆசீர்வதிப்பேன் என்ற வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றினார்.’’



‘‘இன்னும் அதிக விற்பனையின் மூலம் அவர் என்னையும் ஆசீர்வதிக்க முடியும்.’’

‘‘உங்கள் மனைவியை நீங்கள் அடிப்பது சரியல்ல. தேவன் திருமணத்தை நன்மைக்காக உண்டாக்கினார். நமக்கு குழந்தைகளைத் தந்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவரது வழிகாட்டுதலை பின்பற்றும் போது நாம் ஒற்றுமையாக வாழ முடியும்.’’

## பயிற்சி

**எபேசியர் 5:21-33 ஐ** வாசித்துக் காண்க:

- கிறிஸ்தவ மனைவிகள் யாருக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும்?
- தனது மனைவி தனக்குக் கீழ்ப்படியத் தன்னைத் தகுதிப் படுத்தும்படியாக கிறிஸ்தவக் கணவன் என்ன செய்ய வேண்டும்?
- ஒரு மனிதன் தன் மனைவியிடம் எவ்வளவு தூரம் அன்புகூர வேண்டும்?
- கிறிஸ்தவத் திருமணம் எதற்கு ஒரு முன்னுதாரணம்?

**எபேசியர் 6:1-3 ஐ** வாசித்துக் காண்க:

- ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் குழந்தைகளின் கடமை என்ன?
- பெற்றோர்களின் கடமை என்ன?

கல்விநேசன் வீட்டிற்கு முன்னால் வண்டியின் அருகில் நின்றவாறே கல்விநேசன் ஞானசூனியருக்கு விளக்கம் அளிக்கிறார், ‘‘ஓர் ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோரை விட்டு திருமணத்தில் ஒன்றிணைய வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு ஒருவர் உண்மையாய் இருக்க வேண்டும். கணவன் தன்னை நேசிப்பதைப் போலவே மனைவியையும் நேசிக்க வேண்டும். மனைவி கணவனை மதித்து அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். கணவன் மனைவியை கடும் சொற்களால் மிரட்டவோ அடக்கி ஆளவோ கூடாது. ஒருவருக்கு ஒருவர் கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார். ஒரு கணவன் மனைவியை நேசித்து குடும்பத்தை நல்ல முறையில் கவனித்தால் மனைவி அவனை மகிழ்ச்சியோடு பின்பற்றுவாள்.’’

ஞானசூனியர் குறுக்கிடுகிறார், ‘‘கணவன் மனைவி இருவருமே கிறிஸ்தவர்களாக இருந்தால்தான் மட்டுமே இது சரிவரும். என் மனைவி கிறிஸ்தவள் அல்ல. அவள் ஒரு முட்டாள். நான் அவளை விவாகரத்து செய்துவிட்டு ஒரு இளம் கிறிஸ்தவப் பெண்ணை மணந்து கொள்ளப் போகிறேன். அப்போதுதான் என் பிள்ளைகள் நன்கு வளருவார்கள்.’’

கல்விநேசன் விளக்குகிறார், ‘‘இல்லை. 1 கொரிந்தியர் 7:10-16 ல் பவுல், வாழ்க்கைத் துணை ஓர் அவிசுவாசியாய் இருந்தாலும் அவர் விரும்பினால் வாழலாம் என்று கூறுகிறார். திருமணமாகாத விசுவாசி ஒரு கிறிஸ்துவைப் பின்பற்றும் விசுவாசியையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவர் எழுதுகிறார். குழந்தைகளை எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும் என்றும் பவுல் கூறுகிறார்.’’ கல்விநேசர் அப் பகுதியை வாசிக்கத் தொடங்குகிறார். ஆனால் ஞானசூனியர் போகிறார்.

## கிறிஸ்துவை விசுவாசிக்கப் பிள்ளைகளுக்கு எவ்வாறு போதிப்பது

அடுத்த கூட்டத்தில் சபையாருக்குக் கல்விநேசன் கூறுகிறார், ‘‘நாம் நமது குடும்ப வாழ்க்கையைப் பலப்படுத்த வேண்டும். எபேசியர் 6:1-4 ல் பவுல், பிள்ளைகளைக் கர்த்தருக்குள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும்படி கூறுகிறார். இதனால் அவர்கள் நீண்டநாள் நன்றாக வாழ்வார்கள். அவர் பிள்ளைகளை நன்றாக போதித்து வளர்க்கும்படி பெற்றோருக்குக் கூறுகிறார். அவர்கள் கீழ்ப்படிய இயலாத கட்டளைகளைப் போட்டு அவர்களைக் கோபப்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்துகிறார். ஜெபிக்கவும், இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்படியவும் வேதாகமக் கதைகளை உபயோகித்து போதிக்கலாம். நல்ல பெற்றோர்கள் குழந்தைகள் தங்களுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொடுக்கின்றனர். ஒவ்வொரு குடும்பமும் குடும்ப ஆராதனைக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கத் திட்டம் இட வேண்டும். ஆசாரியனாகிய ஏலியின் நல்ல மற்றும் கெட்ட குமாரர்களைப் பற்றி படிப்போம்.’’

### பயிற்சி

**1 சாமுவேல் 3 ஆம் அதிகாரத்தில்** காண்க:

- ஏலி அழைப்பதாக எண்ணிய சாமுவேல் எவ்வளவு சீக்கிரமாகக் கீழ்ப்படிந்தான்?
- தனது அடங்காத குமாரர்களைப் பொறுத்தவரையில் ஏலி என்ன செய்யத் தவறினான்?

தனது வீட்டில் நடந்த சபைக் கூட்டத்தில் கல்விநேசன் தொடர்ந்து விவரிக்கிறார், ‘‘ஏலி தன் குமாரர்களைத் திருத்த வேண்டும் என்று தேவன் விரும்பினார். இஸ்ரவேலின் தலைமை ஆசாரியனாகிய ஏலி நாட்டிற்கு ஒரு மோசமான முன் உதாரணமாக விளங்கினான். அவனுடைய குமாரர்கள் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, மக்களைக் கொள்ளையடித்து அவர்களை மோசமாக நடத்தினார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த ஏலி எதுவும் செய்யவில்லை. ஏலி தன் குமாரர்களைத் திருத்தாத காரணத்தால் அவர்கள் எல்லோரும் செத்தார்கள். இதற்கு நேர்மாறாக சாமுவேலின் பெற்றோர்கள் உடனடியாகவும் மகிழ்ச்சியோடும் கீழ்ப்படிய அவனுக்குக் கற்றுத்தந்தனர். அவனது கீழ்ப்படிதலுக்காக தேவன் அவனை அவனது வாழ்நாள் முழுவதும் ஆசீர்வதித்தார்.’’

தங்கள் குடும்ப வாழ்க்கையைப் பலப்படுத்த திட்டம் இட்டு என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் கூறும்படி கல்விநேசன் தன் சபைமக்களைக் கேட்கிறார். இப்போது கல்விநேசருக்கு உண்மை உள்ளவர் ஆகி கிறிஸ்துவுக்குள் அதிவேகமாக வளரும் ஜேக்கப் பதில் அளிக்கிறார், ‘‘ஆவிக்குரிய அபாயத்தில் இருந்து நமது பிள்ளைகளைக் காக்க அவர்கள் இளமையாய் இருக்கும் போதே பெற்றோர்களாகிய நாம் பயிற்சி தர வேண்டும். நாம் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். சாமுவேலைப் போல அவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அவர்கள் உடனடியாக மகிழ்ச்சியோடு கீழ்ப்படியாவிட்டால் நாம் அவர்களைத் திருத்த வேண்டும். தாய்மார்கள் இதை ஒத்துக் கொள்ளுகிறீர்களா?’’

சில விநாடி மௌனத்திற்குப் பின் சாரா பதிலளிக்கிறாள், "நான் ஒத்துக் கொள்ளுகிறேன், ஜேக்கப்! மிகவும் இளம் சிறுவர்கள், உடனடியாகவும், தண்டித்தும் திருத்தும் போது சீக்கிரமாகக் கற்றுக் கொள்ளுகிறார்கள். நீதி மொழிகள் 13:24 இதையே கூறுகிறது. பெரிய குழந்தைகள் கீழ்ப்படியாத போது, சிறிது நேரம் எதையாவது ஒன்றை அவர்களிடம் இருந்து பிடுங்கி வைக்கும்போது, கீழ்ப்படிய கற்றுக் கொள்ளுகின்றனர். நாம் நம் குழந்தைகளுக்கும் அவர்களுக்கு உரிய மதிப்பைத் தர வேண்டும். அவர்களைப் பார்த்துக் கத்தவோ, கழுதை, நாய் என்று திட்டவோ கூடாது. கோபத்தோடு திருத்த முனையும் போது அவர்களை உள்ளத்தாலும் உடலாலும் காயப்படுத்த நேரிடலாம். பெற்றோர் இருவருமே ஒரே சட்ட திட்டங்களை கற்பித்துக் கொடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும்."

இப்படிப்பட்ட கூட்டத்தில் தொபோராள் முதன் முறையாகப் பேசுகிறாள்."நமது முன்னுதாரணங்களை நாம் நமது பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும். குடிப்பது, போதைப் பொருள் எடுப்பது போன்றவற்றை தவிர்க்குமாறு போதனை தர வேண்டும். தீமைக்கு வழிகாட்டாத நல்ல நண்பர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதைக் காட்ட வேண்டும். கடினமாக உழைக்கக் கற்றுத் தர வேண்டும். கர்த்தருக்காக எப்படி வேலை செய்வோமோ அதுபோலவே எல்லாவற்றிலும் சிறந்த முறையில் பணியாற்ற சொல்லித்தர வேண்டும். தேவ வார்த்தையை வாழ்க்கையில் கைக்கொள்ளுவது எவ்வாறு என்று காட்ட வேண்டும்."

"அற்புதம்" கல்விநேசன் பாராட்டுகிறார், "வேதாகமத்தில் உள்ள சில குடும்பங்களைப் பற்றிய கதைகள் இதோ. குழந்தைகளுக்குப் போதிக்க அவைகள் எளிமையானவை. பெற்றோர்களாகிய நீங்கள் அவைகளில் இருந்து விலைமதிக்க முடியாத சத்தியத்தை உங்கள் பிள்ளைகளுக்கு போதிக்க முடியும். அவைகளை உங்கள் குழந்தைகளுக்கும் அவிசுவாசிகளின் குழந்தைகளுக்கும் கூறுங்கள்."

## பயிற்சி

தேவன் ஈசாக்குக்கு ஒரு மனைவியைத் தந்தார் என்பதை **ஆதியாகமம் 24 ஆம் அதிகாரத்தில்** காண்க. ராகேலிடம் தனக்குள்ள அன்பை நிரூபிக்கும்படி யாக்கோபு செய்தது என்ன என்பதை **ஆதியாகமம் 29:1-30 ல்** காண்க.

**அப்போஸ்தலர் 7:9-14** ல் காண்க:

- தன்னை அடிமையாக விற்றுப்போட்ட சகோதரர்களை மன்னித்து விட்டதைக் காட்ட யோசேப்பு என்ன செய்தான்?
- யோசேப்பின் துன்பத்தை உபயோகித்து அவனது குடும்பத்தை தேவன் எவ்வாறு பட்டினியில் இருந்து காப்பாற்றினார்?

எத்தகைய குடும்பத்தில் இயேசு பிறந்தார் என்பதை **லூக்கா அதிகாரம் 1, 2 ல்** காண்க

கல்விநேசன் வீட்டில் நடந்த கூட்டம் முடிந்ததும் சாரா தாய்மார்களை ஒரு நிமிடம் தாமதிக்கக் கேட்கிறாள். அவள் கூறுகிறாள், "நான் சிறுவர்களுக்கு போதிக்க ஓர் ஆசிரியர் ஆகும்படி கல்விநேசன் எனக்கு உதவினார். அவர் குழந்தைகளுக்கான ஒரு கதைப்பட்டியலை தயாரிக்கும்படி நம்மிடம் வேண்டுகிறார். ஒவ்வொரு வாரமும் அவற்றை சிறு நாடகமாக சபைக்கு நடித்துக் காட்டலாம்."

கல்விநேசன் மேலும் கூறுகிறார், "அவர்களுடைய தந்தைகளையும் நாடகத்தில் பங்கேற்கக் கேட்கலாம். பெரியவர்களும் சிறுவர்களும் பங்கேற்கும் போது கதைகள் வலுவாக மாறும்."

சாரா தாழ்மையாகக் கேட்கிறாள், "குழந்தைகளுக்கு சொல்லித்தர விருப்பம் உடையவர்கள் தயவுசெய்து உதவுங்கள். நாம் சேர்ந்தே ஒவ்வொரு வாரமும் ஆயத்தம் செய்வோம். அவர்கள் படிக்கும் போதே மகிழ்ச்சியோடு கீழ்ப்படிபவர்களாக மாறவே நாம் விரும்புகிறோம். ஆண்களும் பங்கேற்றால் நல்லது. அதற்கு கல்விநேசனின் உதவி தேவை."

ஜேக்கப்பின் மனைவி தன் குழந்தைகளிடம் கூறுகிறாள், "நாளையில் இருந்து நீங்கள் பள்ளிக்குப் போகு முன்னர் நாம் குடும்பமாக ஜெபிக்க வேண்டும்."

## நடைமுறைப் பணிகள்

- குடும்பத்தில் தேவன் வகுத்த அதிகார அமைப்பைப் பின்பற்ற உங்கள் சபையில் உள்ள குடும்பங்களுக்கு உதவுங்கள்.
- தேவ வார்த்தையைப் படிக்க, பாட, ஒன்றாக ஜெபிக்க உங்கள் சபைக் குடும்பங்கள் நேரத்தை திட்டமிட உதவுங்கள்.
- குழந்தைகளை அன்பால் திருத்த பெற்றோருக்கு போதிக்கவும்
- குழந்தைகளுக்கு வேதாகமக் கதைகளைக் கூறவும். நடிக்க வைக்கவும் பின் ஆராதனை-யில் பங்கு கொள்ளச் செய்யவும்.
- பெரியவர்களையும் வேதாகமக் கதை நாடகங்களில் பங்கு ஏற்று நடிக்க வையுங்கள். அவர்கள் தாங்களாகவும் குழந்தைகளுடன் சேர்ந்தும் அவர்கள் நடிக்கலாம்.

## III - 10 - ஊழியம் 10


# பிணியாளிகள், புறக்கணிக்கப்பட்டோர், மற்றும் தேவையில் இருப்போரை ஆதரி

அதிகாலையில் கல்விநேசரின் வீட்டருகே வசிக்கும் தெபோராள் வந்து அவரிடம் கூறுகிறாள் ''எனது ஒன்றுவிட்ட சகோதரன் ஜோசப் சிறையில் இருக்கிறான். அவரது நகரில் ஒரு சபை அமைக்க உதவினீர்களே. அவன் வீட்டில்தான் சபை கூடுகிறது. அந் நகரில் உள்ள அதிகாரிகள் கிறிஸ்தவர்களுக்கு எதிரானவர்கள். அவருக்கு ஒன்பது குழந்தைகள் உண்டு. பட்டினியில் வாடுகிறார்கள்.''

கல்விநேசரும் சாராவும் ஒரு பையில் அரிசியும் பிற பொருள்களையும் எடுத்துச் சென்று ஜோசப்பின் மனைவி லிசாவிடம் கொடுக்கிறார்கள்.

''ஜோசப் ஜெயிலில் இருக்கிறார்'' லிசா அவர்களிடம் கூறுகிறாள், ''அவர்கள் விசாரண நடத்தி அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்தியதற்காக தண்டனை கொடுக்கப் போகிறார்களாம். கல்விநேசரே ஒரு வக்கீலைப் பார்க்க எனக்கு உதவுவீர்களா? எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது. கொஞ்சம் இருங்கள். நான் தேநீர் தயாரித்து கொண்டு வருகிறேன்.''

லிசா சிறிய சமையலறைக்குள் போகிறாள். சாரா கிசுகிசுக்கிறாள், ''இது போன்ற வேலைகளை பிறருக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னீர்களே. நம்முடைய சபையில் பலர் ஏழைகள். சிலர் கல்வி அறிவு இல்லாதவர்கள். நீங்களும் நானும் மட்டுமே அவர்களை எல்லாம் கவனிக்க முடியாது.''



கல்விநேசர் பெருமூச்சு விடுகிறார், ''நீ கூறுவது சரிதான். இது மாதிரி விஷயங்களில் கவனம் செலுத்த நாம் சபையில் உள்ள பிறரையும் கேட்க வேண்டும். ஒரு விதவைக்கு அவளுடைய வீட்டை பழுது பார்க்க வேண்டும். இந்தப் பெண்ணுக்கு ஜோசப்புக்காக வழக்காட ஒரு வக்கீல் தேவை.''

அவர்கள் திரும்பி வந்தபோது சகாயரும் ஞான சூனியரும் கல்விநேசன் வீட்டில் காத்திருக்கின்றனர். ஞானசூனியர் பல்லை இளிக்கிறார், ''கல்விநேசரே! என் பொருட்களை கூவி விற்க எனக்கு ஒலிபெருக்கி தேவை. அதற்கு தேவையான பணத்தை கடனாகக் கொடுங்கள். அது எனது வியாபாரத்தை அதிகரிக்கும். அடுத்த மாதம் பணத்தை திருப்பி தந்து விடுவேன்.''

''கடனுக்காக கெஞ்சுவதை விட்டுவிடுங்கள் என ஏற்கனவே கூறி விட்டேன்.''

''ஒரு பாஸ்டரின் கடமை ஏழைகளையும் தேவையில் இருப்போரையும் கவனிப்பது தான். நீங்கள் எங்களை புறக்கணிக்கிறீர்கள்.''

''தேவையில் இருப்பவர்களை நான் மிகவும் அதிகமாக கவனிக்கிறேன். ஒரு சோம்பேறிக்கு செய்யும் மோசமான விஷயம் பணத்தை சும்மா அவன் கையில் கொடுப்பது தான். உங்களுக்கு ஒரு வேலை கிடைக்க உதவுவதில் நான் மகிழ்ச்சி அடைவேன். அப்போது நீங்களும் தேவையில் இருப்போர்களுக்கு உதவி செய்யலாம் - அந்தப் பட்டியலில் இருப்பதற்கு பதிலாக.''

சகாயர் கூறுகிறார், ''தேவையில் இருப்போருக்கு உதவும்படி நான் என் சபை மக்களுக்குப் போதிக்கிறேன். செம்மறிகளும் வெள்ளாடுகளும் பற்றிய உவமையைக் கூறி ஆரம்பித்தேன்.''

## பயிற்சி

**மத்தேயு 25:31-46** ல் காண்க

- தேவையில் இருப்போர்களுக்கு உதவும்போது நாம் யாருக்கு சேவை செய்கிறோம்?
- தேவையில் இருப்போர்களுக்கு உதவாத அவிசுவாசிகளுக்கு இறந்த பின் என்ன நடக்கிறது?

சாரா தேனீர் பரிமாறுகிறார். சகாயர் விவரிக்கிறார், ''ஏழைகள், பசியாய் இருப்பவர்கள், அழுகிறவர்கள், குற்றமற்றவர்கள் ஆகிய துன்பப்படும் மக்கள் தேவனிடம் இருந்து சிறப்பான ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று இயேசு கூறினார். இந்த மக்களுக்கு சேவை செய்யும்போது தேவனுக்கே சேவை செய்கிறோம். இந்த ஜனங்களை புறக்கணிக்கும்போது தேவனை புறக்கணிக்கிறோம்.''

### தம்முடைய மக்களின் தேவைகளை தேவன் எவ்வாறு பூர்த்தி செய்கிறார்

கல்விநேசர் தொடர்ந்து சொல்லுகிறார், ''ஏழைகள் எல்லோரையும் போல தங்கள் அன்றாடக அப்பத்திற்கு ஜெபிக்க வேண்டும். பிச்சை கேட்கக் கூடாது. திரும்பிக் கொடுக்கும் எண்ணம் இல்லாமல் கடன் கேட்பதை விட பிச்சை எடுப்பது மேல். அது கொள்ளையிலே மோசமான கொள்ளை. நமது தேவைகளுக்காக தேவனை நம்ப வேண்டும்.''

ஞானசூனியர் முனகுகிறார், ''உங்கள் மேசையில் உணவு இருக்கும் போது இப்படி கூறுவது உங்களுக்கு எளிதானதே!''

கல்விநேசர் கூறுகிறார், ''யாத்திராகமம் புத்தகத்தில் தேவன் தமது மக்களாகிய இஸ்ரவேலர் மேல் எவ்விதம் கவனம் எடுத்துக் கொண்டார் என்பதைக் கூறுகிறேன். பல ஆண்டுகளாக அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தனர். மோசே என்ற தீர்க்கதரிசியை தேவன் அவர்களிடத்தில் அனுப்பினார். மோசே அந்த நாட்டு அரசனான பார்வோனிடம் தேவன் அவரது மக்களை விடுதலை செய்யக் கூறுகிறார் என்று சொன்னான். பார்வோன் மறுத்த போது தேவன் பத்து கொடுமையான வாதைகளை எகிப்திற்குள் அனுப்பினார். இறுதியாக தேவன் தூதனை அனுப்பி எல்லா முதற்பேறான பிள்ளைகளையும் கொன்றார்.

ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தைத் தங்கள் வீட்டுக் கதவுகளில் பூசுமாறும், அல்லது தூதன் தீங்கு செய்யக்கூடும் என்றும் இஸ்ரவேலரை மோசே எச்சரித்திருந்தான். பார்வோனின் சொந்த மகனே மாண்டான். அதன் பிறகு அவன் மக்களைப் போக விட்டான். யாத்திராகமத்தின் முதல் சில அதிகாரங்கள் இதைக் கூறுகின்றன. சகாயா, இந்த கதையை முடிப்பாயா?''

சகாயர் கூறுகிறார், ''நான் முயற்சி செய்து பார்க்கிறேன்.'' ஜனங்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு போய் செங்கடல் வரை சென்று அங்கே நிறுத்தப்படுகிறார்கள். அதற்கு மேல் எங்கும் போக முடியவில்லை. பார்வோன் மனது மாறுகிறது. அவர்களுக்கு பின்னே இராணுவத்தை அனுப்புகிறான். தேவன் இஸ்ரவேலருக்காக செங்கடலுக்கு உள்ளாக ஒரு காய்ந்த பாதையைத் திறக்கிறார். அதன் வழி கடக்க முற்பட்ட எகிப்திய படையை கடல் மூடி கவிழ்த்துப்போடுகிறது. பின்னர் இஸ்ரவேலர் தங்கள் தேசத்தை அடையுமுன் நாற்பது ஆண்டுகளை வானந்தரத்திலே கழிக்கின்றனர். அவர்களுக்கு வனாந்தரத்தில் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் தேவன் கொடுத்தார். தேவன் அவர்களுக்கு அற்புத மன்னாவைக் கொடுத்தார்.

## பயிற்சி

**யாத்திராகமம் 16:11-35 ல்** காண்க:

- தமது மக்களை தேவன் எவ்வாறு போஷித்தார்?
- தேவனுக்கு எதிராக முணுமுணுத்து கீழ்ப்படிய மறுப்பதில் இருந்து மன்னாவாகிய பரிசு மக்களை விலக்கியதா?

சகாயர் கல்விநேசன் வீட்டில் இருந்து தேனீர் அருந்தியவாறே இன்னொரு கதை கூறுகிறார். ''இவ்வாறே, தேவையில் இருப்பவர்களுக்கு இயேசு உதவுகிறார். **இயேசு எவ்வாறு சரீரத்தைப் புசிக்கக் கொடுத்தார்** என்பதைப் பற்றி கூறுகிறேன்.''

## பயிற்சி

**யோவான் 6 ஆம் அதிகாரத்தில்** காண்க

வசனங்கள் 2-13 ல்,

- பசியாய் இருப்பவர்களுக்கும் பிணியாளிகளுக்கும் இயேசு என்ன செய்தார்?

வசனங்கள் 14-27 ல்,

- இயேசு செய்ய வேண்டும் என்று ஜனங்கள் விரும்பிய இரண்டு விஷயங்கள் எவை?

வசனங்கள் 17-21 ல்,

- அவர் இயற்கையின் மேல் அதிகாரம் உள்ளவர் என்பதைக் காட்ட இயேசு என்ன செய்தார்?

வசனங்கள் 28-40 ல்,

- வானத்தில் இருந்து வந்த அப்பம் யார்? அதை நாம் எப்படி பெற்றுக் கொள்ளுகிறோம்?

வசனங்கள் 41-69 ல்,

- நமக்கு நித்திய ஜீவனை அளிக்கும் அப்பத்தை நாம் என்ன செய்வதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்?

சகாயர் தொடர்கிறார், ‘‘இயேசு அநேகம் பிணியாளிகளை சொஸ்தமாக்கினார். தமது பிரசங்கத்தை கேட்க வந்த மக்கள் பசியாய் இருந்த போது அவர்களை போஷித்தார். ஜனங்கள் அவர் அரசராகி எப்போதும் தங்களுக்கு இலவசமாய் உணவு தர வேண்டுமென்று விரும்பினர். இயேசுவால் எளிதாக அதை செய்திருக்க முடியும். அவரே எல்லாவற்றையும் ஆளுகிற உண்மையான இராஜா. அவர் இயற்கையை ஆள்கிறார். அவர் புயலை அடக்கி தண்ணீர் மேல் நடந்தார். உடலுக்கு உரிய ஆகாரம் மக்கள் மனதை மாற்றாது என்பதை இயேசு அறிவார்; அவர்கள் தேவனை விட்டு நீங்கியே இருப்பார்கள். எப்போதும் திருப்தி அளிக்கும் உணவை அவர்களுக்கு அளிக்க இயேசு விரும்பினார். அந்த உணவு இயேசுவே. நித்திய ஜீவனைப் பெற அவர்கள் தமது சரீரத்தைப் புசிக்க வேண்டும் என்று யோவான் 6 ஆம் அதிகாரத்தில் அவர் கூறினார். ஆவிக்குரிய சத்தியத்தைக் கேட்க விரும்பாதவர்களை இது புண்படுத்தியது. எல்லோரும் இயேசுவை விசுவாசித்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார். இயேசுவின் சரீரமாகிய சபையில் நாம் ஓர் அங்கம் ஆகும்போது அவர் நமக்கு இந்த ஜீவனைத் தருகிறார்.’’

ஞானசூனியர் பதிலளிக்கிறார், ‘‘இது ஒரு நல்ல கதை. ஆனால் அது என் குடும்பத்துக்கு உணவு தராது. வணக்கம்.’’

### இயேசுவின் அன்பைக் காட்டும் மூப்பர்கள்.

ஞானசூனியர் போன பிறகு சகாயர் கல்விநேசனிடம் கேட்கிறார், ‘‘என்னுடைய வேலை சபையை வழி நடத்துவதும் போதிப்பதும் ஆகும். இந்தக் கடமையைப் புறக்கணிக்காமலேயே எனது சபையிலும் மற்றும் புதிய சபையிலும் உள்ள ஏழைகள் மேல் எவ்வாறு அக்கறை செலுத்துவது?’’

‘‘தேவையில் இருப்போர்களைப் புறக்கணியாமலேயே, போதிக்கும் உனது ஆவிக்குரிய வரத்தை அனல் கொள்ளச் செய்ய வேண்டும். எருசலேமில் இருந்த சபைத் தலைவர்களுக்கும் இதே பிரச்சினை இருந்தது. பல விதவைகளுக்குக் கவனிப்பு தேவைப்பட்டது. ஆனால் அவர்களோ இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறுவதில் அதிக மும்முரமாய் இருந்தனர். **முதல் மூப்பர்களைப்** பற்றி உனக்குக் கூறுகிறேன்.

## பயிற்சி

**அப்போஸ்தல் 6-7:54-60** ல் காண்க:

- புறஜாதி விதவைகள் புறக்கணிக்கப்படாதவாறு அப்போஸ்தலர்கள் எவ்வாறு உறுதிப் படுத்தினர்?
- தேவையில் இருப்பவர்களை கவனிக்க யாரை நியமிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் எவ்வாறு அறிந்தனர்?
- விதவைகளை கவனிக்க தெரிந்து கொள்ளப்பட்ட ஏழு பேரில் ஒருவனான ஸ்தேவான் எப்படிப்பட்ட மனிதன்?

கல்விநேசர் சகாயருக்கு விளக்குகிறார், “தேவையில் இருப்போருக்கு சேவை செய்வதற்காக அப்போஸ்தலர்கள் தங்களுடைய பொறுப்பான எருசலேமில் உள்ள சபையை வழிநடத்துவதையும் போதிப்பதையும் விட்டுவிட முடியவில்லை. ஆகவே, மதிப்பும், ஞானமும், பரிசுத்த ஆவியும் உள்ள ஏழு பேரை தேர்ந்தெடுக்குமாறு அவர்கள் மக்களை கேட்டுக் கொண்டனர். அப்போஸ்தலர் அவர்களுக்காக ஜெபித்து கைகளை வைத்தனர்.

இவ்வாறு தேவையில் இருப்பவர்களை கவனித்துக்கொண்ட ஆண்களையும் பெண்களையும் மூப்பர்கள் என்று அழைத்தனர். மூப்பர்கள் என்பவர்கள் தேவ மக்களுக்குப் பணிவிடை செய்பவர்கள். மூப்பர்களில் ஒருவரான ஸ்தேவான் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவிசுவாசிகளான யூதர்களுக்கு பிரசங்கித்தார். அவரது முகம் பிரகாசித்தது. இயேசு பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைக் கண்டார். யூதர்கள் அவரை கல்லெறிந்து கொன்றனர்.”

சகாயர் பதில் அளிக்கிறார், “மூப்பர்களைப் பற்றி நீங்கள் எனக்கு ஏற்கனவே போதித்தது ஞாபகம் வருகிறது. தீமோத்தேயுவுக்குப் பவுல், மூப்பர்கள் நல்ல பெற்றோர்களாகவும், உண்மையுள்ள கணவன் மனைவிகளாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார். அவர்கள் மதிப்புள்ள கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். பணத்தாசை உள்ளவர்களாகவும் குடிகாரர்களாகவும் இருக்கக்கூடாது. இரண்டு பெண்கள் தேவையில் உள்ளவர்களுக்காக சேவை புரிந்தனர். தோற்காள் ஏழைகளுக்காக துணி தைத்தாள். லிதியா பவுலின் ஊழியக் குழுவுக்குத் தங்கும் இடம் தந்தாள்.”

சகாயர் கூறுகிறார், “தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்து கொண்டே எனது சபையையும் எவ்வாறு வழிநடத்துவது என்பது இப்போது எனக்குப் புரிகிறது. ஆதிவிசுவாசிகள் செய்தது போலவே, நான் ஒரு கூட்டத்தைக் கூட்டி சேவை செய்யும் மூப்பர்களை தேர்ந்தெடுப்பேன்.”

ஒருவாரம் கழித்து சகாயர் கல்விநேசரிடம் கூறுகிறார், “எனது சபை தயாளரையும் அவரது மனைவி கார்மெனையும் மூப்பர்களாக தேர்ந்தெடுத்துள்ளது. நாங்கள் கைகளை வைத்து ஜெபித்து அவர்களை ஏழைகளுக்கு சேவை செய்த ஸ்தேவானைப் போல் ஆக்குமாறு வேண்டினோம்.”

**“மூப்பர்கள் எவ்வாறு பிணியாளர்களுக்கு சேவை செய்தனர்** என்பதை யாக்கோபில் வாசித்து அறிந்து கொள்.”

## பயிற்சி

**யாக்கோபு 5:13-17 ல்** மூப்பர்கள் பிணியாளர்களுக்கு செய்தது என்ன என்று அறிக.

## நடைமுறைப் பணிகள்

- உங்கள் சபையிலும் சமுதாயத்திலும் உங்கள் உதவி தேவைப்படுவோரின் ஒரு பட்டியலை தயாரிக்க.
- இந்த தேவையில் இருக்கும் மக்களுக்காக சேவை செய்ய சபையாக சேர்ந்து ஜெபிக்கவும்
- சபையின் சார்பாக தேவையில் இருக்கும் மக்களுக்கு சேவை செய்ய மூப்பர்களாகும் தகுதி உடையவர்கள் யார் என்பதை கணிக்கவும்.
- பவுல் கூறிய தகுதி கொண்டவர்களை கைகளை வைத்து ஜெபித்து மூப்பர்களாக நியமிக்கவும்.

கல்விநேசர் சகாயரிடம் கூறுகிறார், “துன்பப்படும் மக்களிடம் இயேசுவும் இவ்வாறே துன்பப்பட்டார் என்று ஞாபகப்படுத்துவதின் மூலம் அவர்களுக்கு ஆறுதல் தரலாம். அவரும் நம்மைப் போல ஒரு மனிதனாகவே இருந்தார்.”

“நான் அவர் தேவன் என்று நினைத்தேன்.”

“அவர் தேவனே. ஆனால் அவர் கன்னி மரியாளிடத்தில் பிறந்த போது மனிதனாகவே இருந்தார். தேவ குமாரன் என்ற அவரது தேவ மகிமையைத் துறந்து, நம்மைப் போலவே பலவீனமுள்ள உண்மையான மனிதன் ஆனார். ஒரே வேற்றுமை என்னவென்றால் அவர் பாவம் செய்யவில்லை. பிலிப்பியர் 2:1-11 இதை விளக்குகிறது. எபிரேயர் 2:17-18 விளக்குவது போல, நமது தலைமை ஆசாரியராக சேவை செய்ய அவர் மானிட உறவை எடுத்தார். பாடுபடுபவர்களுக்கு உதவவே அவரும் பாடுபட்டார்.”

## III - 11 - ஊழியம் 11

# இயேசுவைப் போலாகி சபையில் கட்டுப்பாட்டைப் பேணு

ஜேக்கப் கல்விநேசன் வீட்டிற்கு வந்து சொல்லுகிறார், ''சகோதரரே! என்னுடைய ஒரு பணியாளராகிய ஸபையர் என்னிடம் இருந்து திருடுகிறாள் என்பதைக் கண்டுபிடித்து விட்டேன். அவள் ஒரு கிறிஸ்தவ சகோதரி. இது பற்றி அவளிடம் பேசியபோது கோபப்படுகிறாள். சபையில் குழப்பம் நேராமல் இருக்க இதை நான் பெரிசு படுத்தாமல் விட்டு விடவா?''

கல்விநேசன் பதில் அளிக்கிறார், ''சபையில் இருக்கும் பாவத்தை நாம் அலட்சியமாக விட்டுவிடக் கூடாது. உடனடியாக அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. நான் சாராவையும் அழைத்துக் கொண்டு, இயேசுவின் அறிவுரைப்படி அவளிடம் நேரடியாகவே பேசுவோம். நாங்கள் இருவரும் சேர்ந்து ஸபையரை மனம் திரும்பும்படி செய்யலாம். கலாத்தியர் 6:1 கூறுவது போல் நாங்கள் அன்போடும் மென்மையாகவும் அவளைக் கையாளுவோம்.''



அவர்கள் ஸபையரின் வீட்டிற்குச் சென்று தனியாக அவளிடம் பேச வேண்டும் என்று கேட்கின்றனர். ஜேக்கப் அவளிடம் கூறுகிறார், ''சமையலுக்கும், வீட்டை சுத்தம் செய்யவும் என் மனைவிக்கு உதவியாக உன்னை வேலைக்கு அமர்த்தினேன். நான் உனக்கு நல்ல சம்பளம் கொடுத்தேன். ஆனால் நீ டவல் போன்ற பல பொருட்களை எங்களிடம் இருந்து திருடி இருக்கிறாய்.''

ஸபையர் பயத்தால் நடுங்குகிறாள். சாரா அவளை தனியாக அழைத்துக் கொண்டு போய் உறுதி கூறுகிறாள். ''நாங்கள் உன்னை அவமானப்படுத்த வரவில்லை. நீ தேவ மன்னிப்பையும் அவருடைய முழு ஆசீர்வாதத்தையும் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.''

நீ செய்ததைப் பற்றி பேசுவதற்கு முன்னால் நீ புரிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உண்டு. இயேசுவைப் போல வாழ்பவர்களுக்கே தேவ ஆசீர்வாதங்கள் வருகின்றன என்று இயேசு போதித்தார். மகிழ்ச்சியின் ஆதாரங்கள் என்பது குறித்து நாம் வாசிப்போம்.''

### பயிற்சி

ஆசீர்வாதத்தைக் குறித்த தேவ வாக்குத்தத்தங்-களைப் பற்றி **மத்தேயு 5:1-16ல்** காண்க:

- தேவனிடத்தில் இருந்து மகிழ்ச்-சியைப் பெற்றுக் கொள்ளும் மக்களை எந்தெந்த வகைகளில் இயேசு விவரித்தார்?
- இயேசுவைப் பின்பற்றும்போது நம்மை துன்புறுத்தும் மக்களுக்கு நாம் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும்?
- நமது கிரியைகளின் மூலம் தேவனுக்கு எவ்வாறு மகிமையைக் கொண்டு வரலாம்?



கட்டுப்பாட்டைப் பற்றி சாரா, ஸபையருக்கு விளக்கிக் கூறுகிறாள். "நாம் இப்போது கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களாய் இருப்பதால் அவரது ஆவி கிறிஸ்துவைப் போல் ஆக நமக்கு விருப்பத்தையும் வல்லமையையும் தருகிறது. நாம் தவறு செய்ய இப்போது விரும்புவதில்லை. ஆனால் நமது பழைய பாவ சுபாவம் தீமை செய்ய நம்மைத் தள்ளுகிறது. நாம் நமது பழைய சுபாவத்தின் ஆசைக்கும் புதிய சுபாவத்தின் விருப்பத்திற்கும் இடையில் கிடந்து போராடுகிறோம். நாம் பாவத்திற்குள் விழும்போது, பரிசுத்த ஆவியானவர் பாவத்தை உணர்த்தி நம்மை மனம்திரும்புதலுக்குள் கொண்டு வருகிறார். அவர் பிற சகோதர சகோதரிகள் மூலம் நம்மை நன்மை செய்ய ஊக்கப்படுத்துகிறார்; மனம்திரும்புதலுக்குள் அழைக்கிறார்; தேவ மன்னிப்பை உறுதி செய்கிறார்." "ஆனால் நான் மோசமானவள். உங்களைப் போல நல்லவள் அல்ல."

"நீ தேவனுடைய பிள்ளை. அவர் உன்னை மாற்றுகிறார்" சாரா உறுதி அளிக்கிறாள். "தேவன், ஒரு தாய் தன் பிள்ளைகளை அன்போடு திருத்துவது போல நம்மைத் திருத்துகிறார். திருத்துவது நம்மை அபாயத்தில் இருந்து காக்கிறது. திருத்தாவிட்டால் ஒரு குழந்தை தீ அல்லது விஷத்தோடு விளையாடும்; ஓடும் காரின் முன்னால் ஓடும். தேவன் அபாயத்திலிருந்து விலக்க நம்மைத் திருத்துகிறார். இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்வதைத் தடுக்க பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் 17 புத்தகங்களை எழுதினார்கள். இஸ்ரவேல் மக்கள் தேவனின் குரலுக்கு செவிகொடுக்காமல் பயங்கரமான உலகப்பூர்வமான மற்றும் ஆவிக்குரிய அபாயங்களில் விழுந்தனர். இப்போது நமக்கு பரிசுத்த ஆவியானவர் உண்டு. கிறிஸ்துவுக்குள் இருக்கும் புதிய வாழ்க்கையை வாழ அவர் நமக்கு உதவுகிறார். கிறிஸ்து மனம் திரும்பி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள நமக்கு கட்டளை இடும்போது, இந்த புதிய வாழ்க்கையைத் தொடரவே கட்டளை இடுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை பரிசுத்தமாக்கும் விதம் பற்றி நான் உனக்குக் கூறுகிறேன்."

## பயிற்சி

**கலாத்தியர் 5:16 – 6:3** ல் காண்க:

- கிறிஸ்துவை அறியாத போது என்ன தவறான விஷயங்கள் நமது பழக்க தோஷத்தால் நாம் செய்கிறோம்?
- பரிசுத்த ஆவியின் வல்லமையால் தேவன் நமக்குள் விளைவிக்கும் ஒன்பது நற்பண்புகளாகிய கனிகள் எவை?
- உலகத்தின் பாவங்களை தவிர்க்க நமது பழைய பாவ சுபாவத்திற்கு நாம் என்ன செய்கிறோம்?
- பாவத்தில் விழுந்தவர்களை விடுவிக்க நாம் எவ்வாறு உதவ முடியும்?

சாரா, ஸபையரிடம் தொடர்ந்து பேசும்படி ஆண்கள் விட்டு விடுகிறார்கள். அவள் விவரிக்கிறாள், "இயேசுவின் சீஷர்களாகிய நாம் அவருக்கு கீழ்ப்படிவதை ஒரு தினசரி பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இது நமக்கு சந்தோஷத்தையும் தேவ ஆசீர்வாதத்தையும் கொண்டு வருகிறது. ஆவிக்குரிய அபாயத்திலிருந்து நம்மை பாதுகாக்கிறது. தினமும் ஜெபித்து தேவ வார்த்தையை வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும். நமது கிரியைகளில் இயேசுவின் உதாரணங்களைப் பின்பற்றி ஆவியின் கனிகளை பயிற்சி செய்ய வேண்டும். நமக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆவிக்குரிய அபாயத்தைத் தவிர்க்க நாம் வளர்க்க வேண்டிய கட்டுப்பாட்டுக்குரிய வழிகள் இவைகளே. இந்த பழக்க வழக்கங்களை வளர்க்கும் போது பரிசுத்த ஆவியானவர் பாவத்தை மேற்கொள்ள நமக்கு பலம் தருவார்."

"என்னுடைய விஷயத்தில் அது ஒரு மிகப் பெரிய அதிசயமாக இருக்கும்."

"நீ தனியாக இல்லை. நாம் ஏதாவது ஒரு வகையில் நம்முடைய பழைய ஆசைகளை சிலுவையில் அறைந்தே ஆக வேண்டும். தேவன் எப்போதும் நமக்கு உதவி செய்கிறார். புதிய ஏற்பாட்டில் கீழ்வரும் தவறுகளை செய்யும்போது நாம் உலக மற்றும் ஆவிக்குரிய அபாயங்களை சந்திக்க நேரும் என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார்.

பகை அல்லது பிரிவினை உண்டாக்குதல், சோம்பேறித்தனம் அல்லது புறங்கூறுதல், ஒழுக்கக் கேடான செயல்கள் அல்லது குடி பேராசை அல்லது களவு விக்கிரக ஆராதனை கொள்கைத் தவறு."

சாரா மென்மையாக ஸபையருக்கு உறுதி கூறுகிறாள், "தேவன் உனது கெட்ட பழக்கத்தில் இருந்து உன்னை விடுவிப்பார். இப்போதே செய்யும்படி அவரை வேண்டிக்கொள்."

ஸபையர் கொஞ்ச நேரம் அழுகிறாள். பின் தன்னை மன்னிக்கும்படி தேவனை வேண்டுகிறாள். அவள் சாராவுடன் கல்விநேசன் வீட்டிற்கு செல்கிறாள். தனது முதலாளியான ஜேக்கப்பிடம் கூறுகிறாள், ‘‘என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களிடம் திருடியதை கொடுத்து விடுகிறேன். நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.’’

அடுத்த கூட்டத்தில் சபையார் முன் ஸபையர் அறிக்கை இடுகிறாள், ‘‘என் வாழ்க்கையில் பாவம் இருந்தது. அவற்றை நான் மறைக்க முயன்றேன். நான் திருடியதும் உண்டு. ஆனால் இவற்றை எல்லாம் நான் அறிக்கை இட்டு தேவ மன்னிப்பையும் பெற்றுக்கொண்டேன். நீங்கள் யாவரும் என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்.’’

சபையார் அவளை மன்னிப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் பின்னர் ஞானசூனியர் கல்விநேசனிடம் வந்து கருவுகிறார், ‘‘அவள் மிகவும் சுலபமாக சொல்லிவிட்டாள். ஆனால் களவு ஒரு பெரும் பாவம். அவளை சபைக்குகள் சேர்த்துக் கொள்ளும் முன் அவள் தண்டனை அனுபவிக்க வேண்டும். அவள் காத்திருந்து தன் மனம் திரும்புதலை நிரூபிக்க வேண்டும்.’’

கல்விநேசன் இதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார், ‘‘அப்படி அல்ல ஞானசூனியரே! நாம் அவளது இருதயத்தை நியாயம் தீர்க்கவில்லை. இயேசுவைப் பின்பற்ற அவளுக்கு இப்போது நமது உதவி தேவைப்படுகிறது. பாவத்தை விலக்க அவளுக்கு தேவனுடைய பலம் தேவைப்படுகிறது. அவள் பலமடைந்து தன்னம்பிக்கை பெறும் வரை, ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும் முன், அவளோடு சேர்ந்து ஜெபிக்க சாரா ஒத்துக்கொண்டாள். எத்தனை தடவை நாம் மன்னித்தோம் என்று எண்ணிப் பார்க்கக் கூடாது என்று இயேசு கூறினார். மாறாக, சோதனையில் இருந்து தப்பிக்க நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய வேண்டும். தேவன் நம்மை எவ்வளவோ தூரம் மன்னித்து விட்டார். நாம் அந்த நன்றியுணர்வோடு ஒருவரை ஒருவர் மன்னிக்க மிகுந்த விருப்பம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் மன்னிக்கவில்லை என்றால், தேவனின் மாபெரும் மன்னிப்பில் இருந்து நமது இருதயங்களை அடைத்துக் கொள்ளுகிறோம். தேவன் நம்மை இரட்சிப்பது அவரது கிருபையினாலேயே தவிர, நமது நற்குணத்தை நிரூபிக்க நாம் செய்யும் எதையும் வைத்தல்ல.’’

ஞானசூனியன் கிண்டல் செய்கிறார், ‘‘நாம் செய்ய விரும்பும் எல்லா பாவங்களையும் செய்யலாம். ஏனெனில் தேவன்தான் நம்மை மன்னித்துவிடுவாரே.’’

‘‘இல்லை! இல்லை! இத்தகைய எண்ணங்கள் நாம் உண்மையில் மனம்திரும்பவில்லை என்பதையே காட்டும்.’’

### சபைத்தலைவர்களை திருத்துதல்

ஞானசூனியர் ஜேக்கப்பிடம் சென்று கல்விநேசனை விமரிசனம் செய்கிறார், ‘‘அவர் ஸபையரிடம் மிகவும் இளகிய மனது உள்ளவராய் இருக்கிறார். ஏனெனில் அந்த சின்னத் திருடி அழகாக இருக்கிறாள் அல்லவா?’’ ஜேக்கப் சிரிக்கிறார். ஞானசூனியர் இதே போல் பலரிடமும் கூறுகிறார். விரைவில் இந்த விமரிசனம் விசுவாசிகள் மத்தியில் அம்மை நோய் போல் பரவுகிறது.

அடுத்த கூட்டத்தில், எல்லோரையும் போல் கர்த்தரின் பந்தியை ஆசரிக்க ஸபையர் மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கிறாள். ஞானசூனியர் எழுந்து சொல்கிறார், ‘‘இந்த சபை நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இந்தப் பெண் ஐக்கிய விருந்தில் கலந்து கொள்ள ஆயத்தமாய் இல்லை. அவள்....’’

கல்விநேசர் குறுக்கிடுகிறார். ‘‘தவறு செய்யும் விசுவாசிகள் மேல் நடவடிக்கை மேற்கொள்ளுவது பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை நான் ஞானம் ஐயாவுடன் படித்தேன். நாம் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டால், கர்த்தரின் பந்தியை எடுப்பதற்கு முன் சமரசம் ஆகிக் கொண்டு ஒருவரை ஒருவர் மன்னித்து விட வேண்டும்.’’

ஞானசூனியர் கேட்கிறார், ‘‘சபைத் தலைவர் தவறு செய்தால்...’’?

ஜேக்கப் பதில் சொல்லுகிறார், ‘‘நமது தலைவர்கள் எல்லாருக்கும் மிகுந்த பொறுப்புகள் உண்டு. அவர்கள் பாவத்தில் விழுந்தால் அநேகர் துன்பம் அடைவார்கள்.

அவர்களில் யாருக்கு விரோதமாகவாவது குற்றச்சாட்டுகள் இருந்தால் அதை நாம் மிகவும் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று தேவ வார்த்தை கூறுகிறது. இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படை புறங்கூறுதலாகவோ, பொறாமை அல்லது அகந்தையின் காரணமாகவோ இருந்தால் அதைப் புறக்கணிக்குமாறு வேதாகமம் கூறுகிறது. ஒரு மோசமான தவறுக்கு ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு தலைவர் வெளியரங்கமாக பாவம் செய்தால் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக முழு சபைக்கு முன் அவரைத் திருத்த வேண்டும். ஒரு தடவை பேதுரு தவறு செய்தார். எல்லோர் முன்னிலையிலும் பவுல் அவரை திருத்தினார். தலைவர்கள் பிறரை பாவத்துக்குள் வழிநடத்தும் போது பொதுசபையில் அவர்களைத் திருத்துவது தேவையாகும். அல்லது அவர்களது தவறுகள் பெரிய பிளவுகளை ஏற்படுத்தும். இயேசுவுக்காகத் தலைவராக இருப்பது ஓர் எளிமையான வேலை அல்ல.

## பயிற்சி

**காலத்தியர் 2:11-21 ல் பேதுருவின் மாய்மாலம்** பற்றிய கதையைக் காண்க:

- பேதுரு விசுவாசிகளை பாவத்திற்குள் வழிநடத்தியபோது பவுல் எவ்வாறு அவரைத் திருத்தினார்?
- பேதுருவின் நடவடிக்கை எவ்வாறு கிறிஸ்துவின் கிருபையைப் பற்றிய நற்செய்திக்கு விரோதமாகப் போனது?
- பேதுரு ஏன் ஒரு மாய்மாலக்காரரைப் போல நடந்து கொண்டார்?
- கடுமையான சட்டங்களைப் பின்பற்றுவதாலா அல்லது இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கையாலா நாம் இரட்சிக்கப்படுகிறோம்?
- திருத்தப்பட்டபோது பேதுரு அதை ஏற்றுக்கொண்டார். நாமும் அவ்வாறே செய்வோம்

**2 சாமுவேல் 11:1-12:25 ல் தாவீதின் மறைமுகப் பாவம்** பற்றிய கதையைக் காண்க:

- தன்னுடைய பாவத்தை மறைக்க விரும்பியதால் தாவீது மேலும் பாவத்தை எவ்வகையில் செய்தான்?
- தலைவனின் இரகசிய பாவத்தை தீர்க்கதரிசி எவ்வாறு திருத்தினான்?
- தாவீதை மன்னித்து விட்டதை தேவன் எவ்வாறு வெளிப்படுத்தினார்?

ஜேக்கப் விளக்கம் தருகிறார், “இந்தக் கதைகளில் இரண்டு தலைவர்கள் திருத்தப்படுகின்றனர். தவறான பெருமையால் புறஜாதி விசுவாசிகளைப் புறக்கணித்த அப்போஸ்தலர் பேதுருவை அப்போஸ்தலர் பவுல் திருத்துகிறார். தனது நடவடிக்கையால் இயேசுவின் நற்செய்தியை மறுதலித்தப் பேதுரு மற்ற ஜனங்களையும் பாவத்துக்குள் வழிநடத்தினார். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் நாம் இரட்சிக்கப்பட்டோம் என்றும் பேதுரு நினைத்தாலும் தான் யூத சட்டங்களுக்குக் கிழ்ப்படிந்ததாலேயே இரட்சிக்கப்பட்டோம் என்பது போல் நடந்து கொண்டார். பவுல் அவரை எல்லோர் முன்னிலையிலும் திருத்தியதால் முழுச்சபையும் அந்த தவறைப் புரிந்து கொண்டது. தீர்க்கதரிசி நாத்தானும் தாவீது இராஜாவை பொதுமன்றத்தில் திருத்தியதால் இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பரிசுத்தத்தை பயபக்தியோடு எண்ண வழிபிறந்தது.”

ஜேக்கப் ஞானசூனியரை திரும்பிப் பார்த்துக் கேட்கிறார், “சபையில் திருத்தப்படும் அளவுக்கு நமது தலைவர் ஒருவர் பாவம் செய்தார் என்பதற்கு உரிய ஆதாரம் உம்மிடம் உண்டா?”

ஞானசூனியர் கூறுகிறார், “ஓ! எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்!”

ஜேக்கப் அவரைக் கண்டிக்கிறார், “அவதூறைக் கிளப்பியது நீர்தான்!”

தெபோராள் ஒத்துக்கொள்கிறாள்,”அந்த வதந்தியை நம்பி மற்றவர்களிடமும் கூறியதற்காக நான் வெட்கப்படுகிறேன். ஓர் ஆதாரம் இல்லாத வதந்திக்காக நான் நமது போதகர் கல்விநேசரை விமரிசனம் செய்தேன்.”

ஜேக்கப் பதிலளிக்கிறார், “ஒரு வெறிபிடித்த ஓநாய், ஒரு கழுதைப்புலி நமது தலைவருக்கு விரோதமாக வதந்தியைப் பரப்பி நமது மந்தையை உடைக்கப் பார்த்தது. கல்விநேசரே, வதந்தியைக் கேட்டு எங்களில் கண்ணிக்குள் விழுந்தவர்களை தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்.”

அவர்கள் திரும்பக் கிடைத்த ஒற்றுமைக்காக தேவனைத் துதித்தார்கள். தொடர்ந்து மகிழச்சியுடன் கர்த்தரின் பந்தியை ஆசரித்தனர். பின்னர் ஸபையர் சாராவிடம் கூறுகிறாள், ‘‘நமது சபையின் அன்பினையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையையும் கண்டு நான் ஆச்சரியம் அடைகிறேன். என்னுடைய குடும்பத்தில் இப்படிப்பட்ட மன்னிப்பை நான் கண்டதில்லை. தேவ கிருபை எவ்வளவு மகத்துவமானது.’’

ஒருமாதம் கழித்து ஸபையர் சபைக்கு சாட்சி கூறுகிறாள், ‘‘கல்வி நேசரின் அன்பான மனைவி, தினமும் ஜெபிக்கும் பழக்கத்தை நான் கைக்கொள்ளுவதற்கும், பழைய என்னுடைய திருடும் பழக்கத்தைக் கைவிடுவதற்கும் உதவி புரிந்து வருகிறார். என்னுடைய இருதயத்தில் இருந்து தேவன் அந்தப் பொல்லாத ஆசையை எடுத்துப் போட்டார். அதை நினைத்தாலே இப்போது எனக்குக் குமட்டுகிறது. தேவன் என்னை சுத்திகரித்து எனக்கு தூய இருதயத்தைத் தந்தார் என்பதை அறிய பெரிய மகிழ்ச்சியாக இருக்கிறது.’’

## நடைமுறைப் பணிகள்

- ஜெபம் மற்றும் மற்றவர்களை மன்னித்தலாகிய ஆவிக்குரிய கட்டுப்பாட்டை தினசரி பழக்கமாக வளர்க்க சபை மக்களுக்கு உதவவும்.
- இப்பகுதியில் உள்ள கதைகளை பயன்படுத்தி மக்களை அன்பால் திருத்துவது எப்படி என்று போதிக்கவும்.
- இத்தகைய திருத்தல்கள் எவ்வாறு நம்மை ஆவிக்குரிய மற்றும் உலகபூர்வமான அபாயங்களில் இருந்து பாதுகாக்கிறது என்பதை மக்களுக்கு விளக்கவும்.
- பாவம் செய்தவர்களைத் தண்டிக்காமல் நாம் ஏன் தேவ கிருபையால் மன்னித்து, திருத்தி, நல்ல நிலைக்கு கொண்டு வருகிறோம் என்பதை விளக்கவும்.
- பாவம் செய்தவர்களை அன்பால் திருத்தவும். மத்தேயு 18:15-17, கலாத்தியர் 6:1 மற்றும் 1 தீமோத்தேயு 5:19-20 ல் உள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
- மனம் திரும்புவர்களை ஐக்கியத்துக்குள் மீண்டும் ஏற்றுக்கொண்டு, தேவ கிருபை, சுத்திகரிப்பு மற்றும் பாவமன்னிப்பை உறுதிப்படுத்திக் கூறுங்கள்.

## III - 12 - ஊழியம் - 12

# தேவனோடு பேசு

அடுத்த நாள் காலை போலீஸ் கல்விநேசன் வீட்டிற்கு வந்து அவரைக் கைது செய்து போகின்றனர். நீதிபதி கூறுகிறார், ''நகராட்சியின் விதிகளுக்கு மாறாக அதிகாரபூர்வமற்ற கூட்டங்களை நீங்கள் நடத்தினீர்களா என்று விசாரிப்பேன். இந்த மாதிரியான இரகசிய நடவடிக்கைகளுக்கு தண்டனை கூடுதல். உங்கள் மனைவியைத் தவிர வேறு யாரும் உங்களைப் பார்க்க முடியாது.''

மதியம் சாரா கல்விநேசரை சிறையில் சந்திக்கிறாள், ''அநேகம் ஜனங்கள் கர்த்தரிடத்தில் வந்து கொண்டு இருப்பதால் தான் இது நடைபெற்றிருக்கிறது. நாம் பாவிகளுக்காக தினமும் ஜெபித்து, அவர்களிடம் இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கான வாய்ப்புகளையும் கேட்கிறோம். கர்த்தர் நமது ஜெபங்களுக்குப் பதில் அளித்தார். ஆனால் அது கிறிஸ்தவர்களை வெறுப்பவர்களின் கவனத்தையும் கவர்ந்துவிட்டது.''

கல்விநேசர் ஜெபிக்கிறார், ''கர்த்தாவே! இந்த சிறையில் இருக்கும் மற்ற கைதிகளுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகளைத் தாரும்.''

தேவன் அந்த ஜெபத்துக்குப் பதில் அளிக்கிறார். ஒரு வாரத்திற்குப் பின் ஆறு கைதிகள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.



மூன்று வாரத்திற்குப் பின் நீதிபதி விசாரணை நடத்துகிறார். இதற்கு முன் கைதுசெய்யப்பட்ட ஜோசப் என்ற மூப்பருக்கும் ஒரே நேரத்தில் விசாரணை. இருவரும் ஒரே வக்கீலையே வைத்திருந்தனர். ஆனால் அவர் இவர்களுக்காக வாதாட மிகச் சிறிய அளவுக்கே முயற்சி எடுக்கிறார். அரசாங்க வக்கீல் அழைத்த சாட்சிகள் சமுதாயத்தின் பண்பாட்டையும் நல்ல பழக்கவழக்கங்களையும் விசுவாசிகள் புறக்கணித்ததாகக் குற்றம் சாட்டுகின்றன. ஞானசூனியரும் கல்விநேசருக்கு எதிராக சாட்சி அளிக்கிறார். சபையை உளவு பார்க்க யாரோ அவருக்கு பணம் கொடுத்தது தெளிவாகிறது. ''நான் உங்களுக்கு தண்டனையை நிர்ணயிக்கும் வரை நீங்கள் இருவரும் சிறையில் இருப்பீர்கள்'' என்று நீதிபதி கூறுகிறார்.

ஜேக்கப் வீட்டில் இரகசியமாக கல்விநேசனின் சபை மூப்பர்களை சந்தித்து சகாயர் கூறுகிறார், ''என் அருமை சகோதர, சகோதரிகளே, நீங்கள் கோபமும் பயமும் அடைந்திருக்கிறீர்கள். ஆனால் அதைரியம் அடைய வேண்டாம். நம்மைத் துன்பப் படுத்துகிற மக்களிடம் நாம் கோபம் அடையக் கூடாது என்று வேதாகமத்தில் இருந்து ஞானம் ஐயா கூறினார். தன்னை சிலுவையில் அறைந்த மக்களுக்காக தேவனிடம், அவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று அறியாது இருக்கிறார்கள் என்று வேண்டினார். தேவன் இதை நன்மைக்காக உபயோகிப்பார். கல்விநேசருக்கும் ஜோசப்பிற்கும் ஜெபியுங்கள். நமது போராட்டம் மக்களுக்கு எதிரானது அல்ல; தீய சக்திகளுக்கு எதிரானதே. வேதாகமத்தில் உள்ள ஜெபவீரர்களாகிய ஆபிரகாம், எஸ்தர், விடாப்பிடியான விதவை ஆகியோரின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். **ஆபிரகாமின் தைரியமான விண்ணப்ப ஜெபத்தைப்** பற்றி கூறுகிறேன்.''



## பயிற்சி

**ஆதியாகமம் 18:16-33ல்** காண்க

- சோதோமின் பொல்லாத மக்களுக்காக பரிந்து பேசிய ஆபிரகாம் எவ்விதம் விடாமுயற்சியோடு போராடினார்?
- ஜெபித்த போது ஆபிரகாம் அகந்தையோடு இருந்தாரா? அல்லது தாழ்மையோடு இருந்தாரா?
- ஆபிரகாமின் பிரிவுக்கும் விடாமுயற்சிக்கும் தேவன் எவ்வாறு பதிலளித்தார்?

ஜேக்கப்பின் வீட்டில் குழுமி இருந்த மூப்பர்களிடம் சகாயர் விவரிக்கிறார், ‘‘ஆபிரகாம் சோதோமின் பொல்லாத மக்களுக்காகப் பரிந்து பேசினார். அவர்கள் ஆபிரகாமுக்கு அந்நியர்களே. ஆனால் அவர்களுக்காக இரக்கப்பட்டான். இரக்கம் காட்ட வேண்டும் என்ற அவனது கோரிக்கையில் ஒரு பகுதியை தேவன் ஏற்றுக் கொண்டார். ஆபிரகாம் தாழ்மையுடன் தேவனை வேண்டினான். நம்முடையதும் நமக்கு தூரமாய் இருக்கிறதுமான பட்டிணங்கள், நாடுகள் அரசாங்கங்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். கல்விநேசர் இல்லாத போது சபையார் இவ்விதமாக ஜெபிக்க உதவுங்கள்.

‘‘உங்களுக்காவும், உங்கள் குடும்பத்துக்காகவும் மட்டுமல்லாமல் முழு சபைக்காகவும் ஜெபிக்க மறக்க வேண்டாம். உங்கள் தலைவர்களுக்காக ஜெபியுங்கள். தேவனுக்கு சேவை செய்யும்படி அவர் உங்களை ஒற்றுமைப்படுத்தவும், பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பவும் கேளுங்கள். சிறையில் தேவைகளோடு இருப்பவர்களுக்காக ஜெபியுங்கள். தூர இடங்களில் இருக்கும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பை நாம் எல்லோருக்கும் தரும்படியாக தேவனிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். தேவன் ஓர் அனாதைப் பெண்ணைக் கொண்டு எவ்வாறு ஒரு தேசத்தைக் காத்தார் என்பதைப் பற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.’’

## பயிற்சி

**எஸ்தர் 3:13-5:3 மற்றும் 7:1-8 ல்** காண்க:

- மொர்தெகாய் எந்த பெரிய அபாயத்தை எண்ணி துக்கப்பட்டுக் கொண்டிருந்தான்?
- எஸ்தர் ராணி இராஜாவை சந்திக்க ஆயத்தமாகும்படி யூதர்கள் என்ன செய்தனர்?
- தன் மக்களிடத்தில் தான் கொண்ட அன்பையும், தன்னுடைய தைரியமான விசுவாசத்தையும் காட்ட எஸ்தர் ராணி என்ன செய்தாள்?
- தன்னுடைய ஜனங்களின் ஜெபத்தால் எஸ்தர் ராணி எப்படி ஒரு நாட்டைக் காத்தாள் என்பதைக் காண எஸ்தர் புத்தகத்தை சுருக்கமாக மீள்பார்வை செய்யவும்.

ஜேக்கப்பின் வீட்டில் சகாயர் மூப்பர்களுக்குத் தொடர்ந்து விளக்குகிறார், ‘‘தன்னுடைய மக்களை அழிவில் இருந்து காக்க தேவன் எஸ்தரை ராணியாக உயர்த்தினார். அவள் ராஜாவைப் பார்க்க போகுமுன் அவளும் அவளுடைய மக்களும் மூன்று நாள் உபவாசித்து ஜெபித்தனர். அவள் தன் உயிரைப் பணயம் வைத்து ராஜாவைப் பார்க்கப் போனாள். அவளது விசுவாசத்தினால் அவளுடைய மக்கள் இரட்சிக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் தம்முடைய ஜனங்களின் எதிரிகளை தண்டித்து தேவன் தமது பரிசுத்தத்தை வெளிப்படுத்தினார்.

தேவன் மொர்தெகாயின் எதிரிகளை மரணத்தால் தண்டித்தார். புதிய ஏற்பாட்டில் தம்மை வெறுத்தவர்களுக்கும் தேவன் தமது கிருபையை வெளிப்படுத்தினார். அவர்களுக்காக ஜெபிக்குமாறு நம்மிடம் இயேசு கூறுகிறார். நமது ஜெபத்தின் மூலமாகவே மக்களை அழிவில் இருந்து இரட்சிக்க தேவன் கிரியை நடத்துகிறார். நமது இருதயத்தில் நாம் எப்போதும் ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜெபம் செய்வதில் ஒரு போதும் களைப்படைந்து விடக் கூடாது. ஆவிக்குரிய போராட்டத்தில் ஜெபமே நமது முக்கிய ஆயுதம். **விடப்பிடியான விதவையைப்** பற்றி இப்போது நான் உங்களுக்குக் கூறுகிறேன்.''

## பயிற்சி

**லூக்கா 18:1-8 ல்** பார்க்கஃ

- பொல்லாத நியாயாதிபதியை தனக்கு இரங்குமாறு அந்த விதவை எவ்வாறு வற்புறுத்தினாள்?
- தேவன் நமது நல்ல நியாயாதிபதியாக இருப்பதால், நாம் நமது ஜெபத்தில் விடாப்பிடியாக இருக்கலாமா? ஏன்?
- இயேசு திரும்பி வரும்போது நம்மில் எதைக் பார்க்க விரும்புகிறார்?

ஜெபத்தைப் பற்றி இந்த வார்த்தைகளுடன் சகாயர் தன் பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறார், ''பொல்லாத நீதிபதி அந்த விதவை விடாது நச்சரித்ததால் அவளுக்கு உதவி செய்தான். அவன் எதுவும் தன்னைத் தடுக்க அனுமதிக்கவில்லை. தேவன் ஒரு நல்ல நியாயாதிபதி. நீதியின் நிமித்தம் அவர் உங்களது ஜெபங்களுக்கு பதில் அளிப்பார். உங்களது உண்மையான ஜெபத்தை எதுவும் தடுத்துவிட அனுமதிக்காதீர்கள். குழுவாக ஜெபிக்கும்போது கூட இருப்பவர்களை மறக்காதீர்கள். பொய் தெய்வங்களை நோக்கி ஜெபிப்பவர்களைப் போல, நீண்ட, சொன்னதையே சொல்லும் ஜெபங்களால் மற்றவர்களை சோர்வடைய வைக்க வேண்டாம். விமரிசனங்கள், புறங்கூறுதலின் இருந்து விலகி இருங்கள். மற்றவர்களை மோசமாக நடத்துதல் நமது ஜெபங்களை தடை செய்யும். எதிரி குறுக்கிட்டு நம்மை திசைதிருப்ப விரும்புகிறான் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இயேசு இரவில் அடிக்கடி தனியாக ஜெபம் செய்யப் போனார். இந்த உலகத்தின் திசைதிருப்பங்களில் இருந்து விலகி இயேசுவைப் போல நேரம் ஒதுக்கி தனித்து ஜெபம் செய்யுங்கள்.''

சகாயர் வீட்டை விட்டு வெளியே வரும்போது மூன்று போலீஸ்காரர்கள் அவருக்காக காத்திருப்பதைக் காண்கிறார். அவரைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போகிறார்கள். தம்மை கல்விநேசன் இருக்கும் அறையில் போடச் சொல்லுகிறார். அவர்கள் மறுத்து விடுகின்றனர்.

விசுவாசிகள் தங்கள் வீடுகளில் உபாவாசித்து ஜெபிக்கின்றனர். சிலர் மிகச் சிறு குழுக்களாக கல்விநேசனுக்காகவும், சகாயருக்காகவும் முழு இரவும் ஜெபிக்கின்றனர். ஜேக்கப்பின் கடையில் நடந்த ஒரு கூட்டத்திற்கு ஞானசூனியர் வருகிறார். அவர் சொல்லுகிறார், ''நமது ஜெபங்களை தேவன் உண்மையிலேயே கேட்க வேண்டுமானால் நாம் முழங்கால் ஊன்றி ஜெபிக்க வேண்டும். நின்று கொண்டோ, உட்கார்ந்தோ, விழுந்து கிடந்தோ ஜெபிக்கக்கூடாது. முழங்காலில் நின்று மட்டுமே ஜெபிக்க வேண்டும். சாலொமோன் ராஜா முழங்காலில் நின்று தன் கைகளை வானத்துக்கு நேராக விரித்து ஜெபித்தான் என்று வேதாகமம் கூறுகிறது. அதுவே ஒரே வழி.''

ஜேக்கப் பதில் தருகிறார், ''ஜெபத்தின் உண்மையான நோக்கத்தில் இருந்து நீர் எல்லோரையும் திசைதிருப்புகிறீர். இரண்டு பேர் சிறையில் இருக்கிறார்கள். நீரோ ஜெபிக்கும்போது நமது ''உடல் நிலை'' எப்படி இருக்க வேண்டும் என்று கவனத்தை செலுத்துகிறீர். நமது இருதயத்தின் நிலை எப்படி இருக்கிறது என்றே தேவன் நோக்குகிறார். வேதாகமத்தில் மக்கள் பல வழிகளில் தேவனோடு பேசுகிறார்கள். சில வேளைகள் மௌனமாக ஜெபிக்கிறார்கள். இன்றும் சில நேரங்களில் சத்தம் போட்டு ஜெபிக்கின்றனர். சில சமயம் நின்றும் சில சமயம் முகங்குப்புற விழுந்தும் ஜெபிக்கின்றனர். சிலர் வேதாகமத்தில் உள்ள சங்கீதங்களைப் பயன்படுத்துகின்றனர். சிலர் தங்கள் ஜெபத்தைப் பாடுகின்றனர். 2 கொரிந்தியர் 3:1) சொல்லுகிறது ''எங்கு தேவனுடைய ஆவி உண்டோ அங்கு விடுதலை உண்டு.''

ஞானசூனியர் போகிறார். சபை இன்னும் தீவிரமாக ஜெபிப்பதற்கு உதவும் வழிகளைக் குறித்து அவர்கள் பேசுகிறார்கள். தனியாகவும் குடும்பத்தோடும் எல்லோரும் ஜெபிப்பதாக ஒத்துக் கொள்ளுகிறார்கள். இரண்டு வயதான பெண்மணிகள் அதிகாலையில் சேர்த்து ஜெபிப்பதாக உறுதி கூறுகின்றனர். ஜேக்கப் ஒரு ஜெப சங்கிலி உருவாக்குமாறு (Prayer Chain) விசுவாசிகளை கேட்டுக் கொள்ளுகிறார். ''யாராவது ஒரு ஜெப தேவை பற்றி

அறிந்தால் அவர் அடுத்தவருக்கு சொல்லட்டும். அவர் இன்னொருவருக்கும், இப்படியாக அந்த சங்கிலித் தொடரில் உள்ள யாவரும் அதற்காக ஜெபிப்பார்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையில் வெவ்வேறு நேரத்தில் ஜெபிப்பார்கள்.

## இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கும் போது கிடைக்கும் வல்லமை

அடுத்த நாள் ஜேக்கப்பும் மூப்பர்களும் ரூத் என்ற புதிதாக திருமணம் செய்து கொண்ட பெண்ணுக்காக ஜெபிக்கப் போகிறார்கள். அவள் மிகவும் சுகவீனமாய் இருக்கிறாள். அவள் கூறுகிறாள், ‘‘என்னுடைய கணவர் தொபியாஸ் அடித்ததால் நான் கீழே விழுந்துவிட்டேன். அவர் போதை மருந்து எடுக்கிறார். எனக்கு இப்போது உடலில் மிகவும் வலியாய் இருக்கிறது. ஞானசூனியரும் வந்து பெரிய வார்த்தைகளைப் போட்டு பிரசங்கம் செய்கிறார். அவர் மூப்பர்களிடம் சொல்லுகிறார், ‘‘இப்போது கல்விநேசன் சிறையில் இருப்பதால், நான்தான் சபையை வழிநடத்த வேண்டும்.’’

ஜேக்கப் உறுதிபட கூறுகிறார், ‘‘நீங்கள் நடத்த முடியாது. உங்களுடைய ஆவிக்குரிய வல்லமையால் பெரிய வார்த்தைகளைப் போட்டு இந்த மக்களை கவர நினைப்பதை முதலில் நிறுத்துங்கள். யாக்கோபு 5ல் உள்ள வழிகாட்டுதலை மூப்பர்கள் பின்பற்றட்டும். அவர்கள் அவள் தலையில் கொஞ்சம் எண்ணெய் வைத்து இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தோடும் தாழ்மையோடும், எளிமையான வார்த்தைகளால் ஜெபிக்கிறார்கள்.’’

ரூத் கேட்கிறாள், ‘‘இது என்னுடைய தவறா? நான் நிறைய பாவம் செய்து விட்டேனா?’’

ஞானசூனியர் எதையோ சொல்ல வாயெடுக்கிறார். ஆனால் ஜேக்கப்பை முந்திக்கொண்டு ‘‘ஏதாவது பாவங்கள் உன்னை வருத்துகிறது என்றால், அறிக்கை இட்டு, தேவன் உன்னை மன்னிப்பார் என்று நம்பு.’’

அவர்கள் ஜெபித்துக்கொண்டு இருக்கும் போது, அவருடைய கணவன் தொபியாஸ் கதவை தள்ளிக்கொண்டு வருகிறார். அவர்கள் இயேசுவின் நாமத்தினால் ஜெபிப்பதைக் கேட்டு சாபம் இடுகிறார். அவர் ஜேக்கப்பை அடிக்க எத்தனித்து கீழே விழுந்து விட அவரின் மணிக்கட்டு சுளுக்கிக் கொள்கிறது. அவர் விடாது சாபம் இடுகிறார். ஜேக்கப் மூப்பர்களிடம் கூறுகிறார், ‘‘போதைப் பொருள் உட்கொண்டதால் தொபியாசின் மனம் பலவீனமாகி விட்டது. எனவே தீய ஆவிகள் அவரது சிந்தனைகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டன.’’

ஞானசூனியர் கத்துகிறார், ‘‘ஓடுங்கள். இந்த சக்திகளுக்கு நாம் ஈடு கொடுக்க முடியாது.’’ ரூத் கெஞ்சுகிறாள், ‘‘போக வேண்டாம். நான் உங்களை இருக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.’’ கல்விநேசர் தீய ஆவிகளுக்கு மேல் இயேசுவுக்குள்ள வல்லமையைப் பற்றி போதித்திருக்கிறார். அவர் பிசாசுக்கு எதிர்த்து நின்றால் அவன் ஓடிவிடுவான் என்று கூறி இருக்கிறார்.’’

ஜேக்கப் பதில் சொல்லுகிறார், ‘‘ஆமாம். யாக்கோபு 4:7 அப்படி கூறுகிறது. நாம் இந்த பிசாசுக்குப் பயந்து ஓட வேண்டாம். நாம் இங்கு இருந்து அவனை எதிர்ப்போம். இயேசுவின் நாமத்தினால் அவன் நம்மை விட்டு ஓடும்படி விரட்டுவோம்.’’ அவர் **பிசாசால் அலைக்கழிக்கப்பட்ட பையனைப்** பற்றிய கதையைக் கூறுகிறார்.

### பயிற்சி

**மாற்கு 9:14-29 ல்** காண்க

- இயேசு தம் சீஷர்களைக் கண்டபோது அவர்கள் என்ன செய்து கொண்டு இருந்தனர்?
- அந்த அசுத்த ஆவிகளை சீஷர்களால் ஏன் விரட்ட முடியவில்லை?
- அந்தத் தகப்பனை என்ன செய்யும்படி இயேசு கேட்டுக் கொண்டார்?
- அந்த ஆவிகளை விரட்டுவதற்கு இயேசு என்ன செய்தார்?

ஜேக்கப் விளக்குகிறார். ‘‘ஜெபிப்பதற்கு பதில், இயேசு வந்த போது, அவருடைய சீஷர்கள் வாதம் புரிந்து கொண்டு இருந்தனர். அவர்கள் தேவனுடைய வல்லமையை சார்ந்து இருக்காமல் இருந்ததால் அவர்களால் ஆவிகளை விரட்ட முடியவில்லை. இயேசு அவர்களுடைய அவிசுவாசத்தின் காரணமாக அவர்களைக் கடிந்து கொண்டார். அவர் அந்த தகப்பனை விசுவாசிக்கும்படி கூறினார். பின் அவர் அந்த ஆவிகளை வெளியேறும்படியாகவும், திரும்பி வரக் கூடாது என்றும் கட்டளை இட்டார். அவர் அந்தப் பையனை முற்றிலுமாக

குணமாக்கினார். இயேசு செய்ததைப் போலவே தொபியாசுக்கும் நாம் செய்வோம். வாருங்கள்! நாம் அவருக்காக ஜெபிப்போம்.''

ஞானசூனியர் ஜேக்கப்பைப் பார்த்து குற்றம் சாட்டுகிறார், ''நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள் எங்களிடம் அதிகமாகக் கூறவேண்டாம். நீங்கள் ஒரு புதிய விசுவாசியே. கல்விநேசன் இல்லாத போது நான்தான் பொறுப்பு. தயாளரும் இந்த சபை மக்களுக்கு அதிகமாக வழிகாட்டிக் கொண்டு இருக்கிறார்.''

இன்னொரு மூப்பர் ஞானசூனியரை கடிந்து கொள்கிறார், ''நீங்கள் சொல்வது சரியல்ல. எங்களோடு சேர்ந்து பணியாற்ற ஜேக்கப்புக்கு எல்லாவித உரிமையும் உண்டு. இன்னொரு சபையைச் சார்ந்தவராக இருந்தாலும் தயாளரின் துணையும் எங்களுக்குத் தேவை. புதிய ஏற்பாட்டில் தலைவர்கள் வெவ்வேறு சபைகளில் சேவை செய்துள்ளனர். அவர்கள் பயணங்கள் மேற்கொண்டு உதவி தேவைப்படும் சபைகளுக்கு சேவை செய்துள்ளனர். சபைகளுக்கு இடையில் இந்த ஒன்றிணைந்த செயல்பாடு தேவை என்பதை வேதாகமமும் வலியுறுத்துகிறது. அவைகள் தனித்தனி குழுவாக இருக்க உருவாக்கப் படவில்லை. ஒவ்வொரு சபையும் அந்தந்தப்பகுதியில் உள்ள மாபெரும் கிறிஸ்துவின் அங்கத்தின் ஒரு பாகமே.'' மற்றவர்களைப் பார்த்து அவர் கூறுகிறார், ''வாருங்கள்! இந்த அசுத்த ஆவி பிடித்த மனிதன் மேல் கைவைத்து நாம் ஜெபிப்போம்.''

ஞானசூனியர் கத்துகிறார், ''வேண்டாம்! இந்த அசுத்த ஆவிகளை நாம் எதிர்க்க வேண்டாம். அவை நம்மைத் தாக்கும்'' மூப்பர்கள் அவரை அலட்சியம் செய்கின்றனர். அவர் அறையை விட்டு ஓடி கதவின் அருகில் நின்று உள்ளே பார்த்துக்கொண்டு இருக்கிறார். மூப்பர்கள் இயேசுவின் நாமத்தினால் அந்த அசுத்த ஆவியை அதட்டுகிறார்கள். அடுத்த ஒரு மணிநேரம் அவர்கள் இயேசுவின் நாமத்தினால், தொபியாஸ் தன் பாவங்களை அறிக்கை இடவும், பொல்லாங்கனிடம் இருந்து காக்க பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளவும் உதவுகின்றனர். இறுதியாக தொபியாஸ் தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கிறார். அவர் தனது பாவத்தை அறிக்கையிட்டு தன்னை இரட்சிக்குமாறு இயேசுவிடம் வேண்டுகிறார். சில விநாடி மௌனத்திற்கு பின் அவர் ஆச்சரியத்தோடு கூறுகிறார், ''அசுத்த ஆவிகள் போய் விட்டன!''

அவர்கள் தேவனைத் துதிக்கின்றனர். தொபியாஸ் ஜேக்கப்பிடம் கூறுகிறார், ''நான் அறிக்கையிட வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. நான் அதிகாரிகளுக்குத் துணையாக இருந்து உங்கள் தலைவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம் கூறினேன். உங்கள் இரகசியக் கூட்டங்கள் நடக்கும் இடங்களை ஞானசூனியர் எனக்கு அறிவித்து வந்தார். அவரது குப்பைப் பொருட்களை வாங்கினால் போதும், அவர் எதை வேண்டுமானாலும் கூறிவிடுவார்.''

பிசாசின் பிடியில் இருந்து விடுபட்ட தொபியாஸ், அடுத்த நாள் உண்மைகளை அதிகாரிகளிடம் கூறுகிறார். அவர்கள் கல்விநேசனையும் சகாயரையும் விடுவிக்கின்றனர். அவர்கள் கல்விநேசன் வீட்டிற்கு வந்தபோது ஒரு சிறு கூட்டம் அவர்களது விடுதலைக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தேவனைத் துதிக்கின்றனர்.

### உணரமட்டுமே கூடிய அவமானத்திற்கும் உண்மையிலேயே தேவனுக்கு முன்பான குற்றத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை அறிதல்

அதே நாளில் பின் தெபோராள் மூச்சிரைக்க கல்விநேசனின் வீட்டிற்கு ஓடிவருகிறான். அவள் அழுகிறாள், ''எனக்கு உதவி செய்யுங்கள்! என் தம்பி தற்கொலை செய்து கொள்ளப் போகிறான்! அவனோடு வந்து பேசுங்கள்! நான் இயேசுவைப் பற்றி அவனிடம் கூறினேன்! அவனோ கேட்க மறுக்கிறான்!''

கல்விநேசரும், சாராவும் தொபோராள் வீட்டடிற்கு ஓடிப் போகின்றனர். அவன் விவரிக்கிறான்.

சாமுவேல் ஒரு சவரக்கத்தியை கையில் வைத்துக் கொண்டு அழுதுகொண்டே இருந்தானாம். தெபோராள் ஓடிப்போய் அந்தக் கத்தியை அவனிடம் இருந்து பிடுங்குகிறாள். சாமுவேல் விம்முகிறான், ''நான் அதிக அவமானம் அடைந்து விட்டேன்! இனி வாழ முடியாது! போய்விடு!''

சாரா அவனிடம் அவன் ஏன் சோகமாக இருப்பதாக கேட்கிறாள். நீண்ட நேர மௌனத்திற்குப் பின் அவன் கூறுகிறான், ''ஒரு முட்டாள் பல்கலைக்கழகப் பேராசிரியர் எனக்கு ஃபெயில் மார்க் அளித்துவிட்டான். இனி என்னால் படிப்பைத் தொடர முடியாது. இந்த அவமானத்தோடு என்னால் வாழவும் முடியாது. என்னால்

முடிந்தவரை நான் கஷ்டப்பட்டுப் படித்தேன். ஆனால் படித்ததை என்னால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. அதிக மார்க் எடுத்தவர்களை விட நான் மிகவும் கஷ்டப்பட்டு படித்தேன். நான் எனக்கும் என் குடும்பத்துக்கும் அவமானத்தைக் கொண்டு வந்து விட்டேன்.''

சாரா கல்விநேசனின் காதில் கிசுகிசுக்கிறாள், ''ஞானம் ஐயா சாமுவேலுக்கு எப்படி ஆறுதல் கூறி இருப்பார்?''

கல்விநேசன் ஞானத்திற்காக அமைதியாக ஜெபிக்கிறார். பின் மென்மையாக சாமுவேலை தேற்றுகிறார், ''நீ அவமானப்பட்டிருக்கிறாய். ஆனால் நீ தவறு ஏதும் செய்யவில்லை. நீ பல்கலைக்கழக தேர்வில் தோற்றுவிட்டதற்காக தேவன் உன்னை குற்றவாளி என்று தீர்க்கமாட்டார். உன்னால் செய்ய முடிந்ததை நீ செய்தாய்.நீ தற்கொலை செய்யவேண்டிய அவசியம் இல்லை. இயேசு கிறிஸ்து உள்ளத்திற்குள் வந்து உனது அவமானத்தைத் துடைப்பார்.''

''நான் சாகவில்லை என்றால் அந்தப் பேராசிரியரைப் பழிவாங்க வேண்டும். அவரிடம் வேதியியல் பொருட்களை (Chemicals) ஆராய விலை உயர்ந்த கருவிகள் உண்டு. அதை நான் அவரிடம் இருந்து திருடுவேன். அதை நான்தான் செய்தேன் என்று அவருக்கு நிரூபிக்க முடியாது.''

''இல்லை! கூடாது!'' கல்விநேசன் உறுதியாகக் கூறுகிறார், ''அது தவறு! இரண்டு விதமான அவமானங்களுக்கு இடையில் நீ வேறுபாட்டை அறியவேண்டும். ஒன்று வெறும் உணர்ச்சி. இன்னொன்று தேவ தண்டனைக்குரிய உண்மையான குற்றத்தில் இருந்து வருவது. ஒரு பட்டப்படிப்பில் தோற்றுப் போவது முதல் வகை. அது தீமை அல்ல. ஆனால் திருடுவது உண்மையில் பாவம். அது உண்மையான குற்றம். அதற்கு தேவ தண்டனை உண்டு.''

''வேறுபாட்டை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.''

''**சவுல் இராஜாவும் இரண்டு வகையான அவமானங்களும்** பற்றிய வேதாகமக் கதையை உனக்கு விளக்குகிறேன்.''

## பயிற்சி

சாமுவேல் அறிந்து கொள்ள உதவுமாறு கல்விநேசன் கூறியதை **1 சாமுவேல் 20:27-34 ல்** காண்க:

- யோனத்தான் தன் குடும்பத்தை வெட்கப்படுத்தியதாக சவுல் இராஜா ஏன் கூறினான் என்பதை 30 ஆம் வசனத்தில் காண்க.
- சவல் எவ்வாறு தாவீதை அவமானப்படுத்தினான் என்பதை 34 ஆம் வசனத்தில் காண்க.
- யாருடைய அவமானம் (சவுலுடையதா யோனத்தானுடையதா) தேவனுக்கு முன்பான உண்மையான குற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது?

கல்விநேசன் சாமுவேலுக்கு விளக்குகிறார், ''யோனத்தான் அவமானம் அடைந்தான். ஆனால் அது தேவனுக்கு முன்பான குற்றம் இல்லை. அவன் தவறு ஏதும் செய்யவில்லை. ஒரு தீமையான குற்றத்தை செய்ய விரும்பிய அவனது பொறாமையும் பழிவாங்கும் உணர்வும் கொண்ட தகப்பனாகிய சவுல் அதைக் குற்றமாக உணரவில்லை. அவன் ஒரு குற்றமற்ற மனிதனைக் கொல்ல விரும்பவில்லை. அவன் தேவனுக்கு முன்பாக அகந்தையும் பாவமுள்ள இருதயம் உள்ளவனாக இருந்தான். இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு தெரிகிறதா?''

''ஆமாம். இந்தக்கதை புரிந்துகொள்ள உதவுகிறது. பல்கலைக்கழகப் படிப்பில் தோற்பது அவமானம்தான். ஆனால் அது உண்மையில் தீமையானது அல்ல. ஆனால் பேராசிரியரிடம் இருந்து திருடுவது தேவனுக்கு விரோதமான குற்றம். தீமை அல்லாத ஒன்றிற்காக நான் அவமானம் அடைந்தேன். ஆனால் பாவகரமான ஒரு குற்றத்தை நான் அவமானகரமாக எண்ணவில்லை. அந்த பேராசிரியருக்கு ஏதாவது ஒரு வகையில் துன்பம் விளைவிக்க உதவுமாறு நேற்று தேவனை வேண்டினேன். நான் தவறாக எண்ணியுள்ளேன். ஆனால் என் பெற்றோர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன். அவர்கள் என்னை பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப நிறைய பணம் செலவழித்தார்கள்.''

“தேவன் உனக்கு உதவி செய்வார். முதலில் உன் பாவங்களை அறிக்கை இட்டு தேவ மன்னிப்பைக் கேள். பாவத்திற்காக கிறிஸ்து செய்த தியாகத்தை நீ அறிவாய். அது ஏன் தேவை என்பதை இப்போது நீ அறிந்திருக்கிறாய். பாவத்தை அறிக்கை செய்வது ஜெபத்தின் ஒரு முக்கிய பகுதி. பேராசிரியரிடம் திருட நினைப்பது உண்மையில் ஒரு பாவமும் தேவனுக்கு முன்பாக அவமானத்தைக் கொண்டு வருவதும் ஆகும். அதை நீ ஒத்துக்கொண்டு அறிக்கையிட வேண்டும்.”

“தேவனிடம் பாவத்தை எப்படி அறிக்கை இடுவது என்று எனக்குத் தெரியாது. இதற்கு முன் நாம் அப்படி செய்ததில்லை.”

“உண்மையான அவமானத்தை ஒத்துக்கொள்வது, தேவனுக்கு முன்பான உண்மையான குற்றத்திற்கும் நாம் மனதளவில் உணரும் அவமானத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள உதவுகிறது. பெற்றோரோ, ஆசிரியரோ, அதிகாரியோ வெளிப்படையாக நம்மை கடிந்து கொள்ளும்போது வெட்கம் அடைகிறோம். நம்மைக் கெட்டவர்கள் என்று மக்களை எண்ண வைக்கும் சில காரியங்களை செய்யும் போதோ, நமது குடும்பம் தாழ்ந்தது என்று பிறர் நினைக்கும் போதோ நாம் அவமானகரமாக உணர்கிறோம். இத்தகைய உணர்ச்சி சில வேளைகளில் தேவையற்ற ஒன்றாகும். தேவனுக்கு முன்பாக நாம் எந்தக் குற்றமும் செய்யாதபோதும் சூழ்நிலைகள் சில சமயம் நம்மைக் கெட்டவர்களாகக் காட்டும். நாம் இப்போது ஜெபித்து உன்னுடைய உண்மையான பாவத்தை அறிக்கை இடுவோம். நீ விரும்பினால் நான் இயேசுவின் நாமத்தினால் ஒரு பாவ அறிக்கையான ஜெபத்தை சொல்லுகிறேன். அந்த வார்த்தைகளை எனக்குப் பின்னால் நீ சொல்லலாம்.”

கல்விநேசன் கூறக் கூற சாமுவேல் பாவ மன்னிப்புக்கான ஜெபத்தை ஏறெடுக்கிறான். தேவனோடு பேச ஆரம்பித்தவுடன் தொடர்ந்து ஜெபிப்பது அவனுக்கு எளிதாகிறது. தன்னுடைய சொந்த வார்த்தைகளாலேயே பாவத்தை அறிக்கை இடுகிறான். சில நாட்களில் அவனது விசுவாசமும், மனந்திரும்புதலும் ஞானஸ்நானத்தால் உறுதி ஆக்கப்படுகிறது.

## நடைமுறைப் பணிகள்

- இப்பகுதியில் உள்ள கதைகளை உபயோகித்து சபை மக்கள் குடும்பமாகவும் தனியாகவும் உத்தமத்தோடு ஜெபிக்க போதியுங்கள்.
- ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், தேவையில் இருப்பவர்களுக்காக ஜெபிக்கவும் சபைக்கு உதவுங்கள். இதை ஆரம்பித்து வைக்க, வீடுகளுக்கு சென்று அவர்களோடு ஜெபிக்க வேண்டி இருக்கும்.
- பிணியாளிகளுக்கும், அசுத்த ஆவி பிடித்தவர்களுக்கும் ஜெபிக்க சபையாரை ஆயத்தப்-படுத்தவும்.
- ஆராதனையின் போது, பட்டிணங்கள், நாடுகள் மற்றும் உலகளாவிய அரசுகளுக்காகவும் சபை ஜெபிக்கும்படி வழி நடத்தவும்.
- அவமானம் அடைந்துள்ள மக்கள் தங்கள் உண்மையான குற்றத்தை அறிக்கையிட உதவுங்கள். அவர்கள் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் விசுவாசித்து பாவமன்னிப்புக்குள்ளும், நித்திய ஜீவனுக்குள்ளும் வர உதவுங்கள்.

## III - 13 - ஊழியம் 13

# தேவன் தரும் ஆதாரங்களின் நல்ல பராமரிப்பாளனாக இரு

தயாளரும் அவர் மனைவி கார்மெனும் கல்விநேசன் வீட்டிற்கு வந்து அவரிடம் கூறுகின்றனர், ''நாட்டின் வேறு பகுதியில் உள்ள சில மக்கள் இங்கு வந்து கொண்டு இருக்கின்றனர். ஆற்றின் கரையோரமாக கிராமத்துக் குடிசைகளில் அவர்கள் தங்கி இருக்கின்றனர். வெகு தூரமல்ல. அவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.''

''நாம் அவர்களைப் பார்க்க வேண்டும்.'' கல்விநேசன் பதிலளிக்கிறார்.

மக்கள் வாழும் பரிதாபகரமான குடிசைகளை அவர்கள் பார்வை இட்டு வரும்போது ஒரு மணி ஒலிப்பதைக் கேட்கிறார்கள். ஞானசூனியர் தமது வண்டியை அவர்களை நோக்கி வேகமாகத் தள்ளிக்கொண்டு வருகிறார். மூச்சிறைக்க அவர் கூறுகிறார், ''வெகு சீக்கிரத்தில் போலீசார் இவர்களை விரட்டி விடுவார்கள். அவர்கள் அரசாங்க இடத்தில் இருக்கிறார்கள்.''

தயாளர் கூவுகிறார், ''எவ்வளவு அவமானம்! நான் இவர்களுக்காக அதிகாரிகளிடம் மன்றாடுவேன்.''

ஞானசூனியர் ஒத்துக் கொள்ள மறுக்கிறார், ''இல்லை! இந்த மக்கள் போகட்டும்! இங்கே வாழ்ந்து வரும் மக்களின் வேலை வாய்ப்புகளை இவர்கள் பறிக்கின்றார்கள். அவர்களுக்கு வித்தியாசமான பழக்கவழக்கம் இருக்கிறது. அவர்கள் வித்தியாசமாக உடை அணிகிறார்கள். அவர்களுக்காக பரிந்து பேசினால் நீங்கள் மீண்டும் பிரச்சினையில் மாட்டிக் கொள்வீர்கள். அவர்கள் உங்கள் பிரச்சினை அல்ல. ஏழைகளுக்கு உதவ வேண்டுமானால் எனக்கு உதவுங்கள். எனக்கு ஒரு சைக்கிள் வேண்டும். அப்போது நான் சுற்றி அலைந்து நமது சபைக்கு இன்னும் ஆட்களை அழைப்பேன்.''



''இதோ பாருங்கள் கல்விநேசரே!'' ஞானசூனியர் ஒரு சிறு வெள்ளைப் பொடி அடங்கிய பாட்டிலைக் காட்டுகிறார். ''இந்த யானைக் கழிவை வாங்குங்கள். ஒரு சிட்டிகை நாளொன்றுக்கு சாப்பிட்டால் பெரிதாக வளருவீர்கள்!''

தயாளர் கூறுகிறார், ''என் மாமா இதை சாப்பிட்டுப் பார்த்தார். அவருக்கு மூக்கு கூட பெரிதாகவில்லை. கல்விநேசரே. நாம் மிகவும் ஏழையான இந்த மக்களுக்கு உதவ வேண்டும். தேவையில் இருப்பவர்களும் உதவும் படியாக வேதாகமத்தில் தேவன் கூறுவதை வாசித்தேன். அவர்களுக்கு பணம் தருவது நன்மை பயக்காது. வேறு விதத்தில் உதவ வேண்டும்.'' அவர் தொற்காளின் கதையைக் கூறுகிறார்.

## பயிற்சி

**அப்போஸ்தலர் 9:36-43** ல் காண்க:

- தொற்காளைப் பற்றி மக்கள் என்ன கூறினார்கள்?
- தொற்காள் யாருக்கு உதவி செய்தாள்?
- தொற்காளும் பேதுருவும் என்ன மனநிலையோடு மற்றவர்களுக்கு சேவை செய்தனர்?

புதிதாக வந்த குடும்பங்களின் ஏழ்மையான குடிசைகளை நின்று பார்த்துக் கொண்டு இருந்த போது தயாளர், கல்விநேசனுக்கும் ஞானசூனியருக்கும் விவரிக்கிறார், ''உதவி செய்ய யாருமற்ற ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் தொற்காள் உதவி செய்தாள். அவளும் பேதுருவும் மற்றவர்களுக்குத் தாழ்மையோடு உதவி செய்தனர். பேதுரு வந்து, எல்லோரையும் அறையை விட்டு வெளியே அனுப்பி விட்டு, முழங்காலிட்டு ஜெபித்தான். தேவன் தொற்காளை உயிரோடு எழுப்பினார்.''

கார்மென் மேலும் கூறுகிறாள், ''இயேசு கிறிஸ்துவுக்காக நாம் அநேகம் நன்மைகளைக் செய்ய இங்கு வாய்ப்பு இருக்கிறது. அவர் ஏழைகளுக்கு கொடுத்து அவர்களை கவனிக்கும் படி கட்டளை இடுகிறார்.''

ஆமாம்! ''கல்விநேசன் பதிலளிக்கிறார்.'' அவர் மத்தேயு 25:31-46, அன்போடு அந்த ஏழைக் குடும்பங்களுக்கு எதைச் செய்கிறோமோ அதை அவருக்கே செய்ததாகக் கூறுகிறார். இயேசுவின் மேல் உள்ள அன்பால் ஏழை மக்களுக்கு உதவுகிறவர்களுக்குப் பரலோகத்தில் ஈவுகள் உண்டு என்று தேவன் வாக்களிக்கிறார். இவர்களை நிராகரித்தால் நமது இருதயத்தில் தேவனிடம் அன்பு இல்லை என்று 1 யோவான் 3:17 சொல்கிறது. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று நமது அன்பே வெளிக்காட்டுகிறது.

### நேரத்தையும் பணத்தையும் கொள்ளையடிப்பவர்கள்

கல்விநேசன் தொடர்ந்து கூறுகிறார், ''பிறருக்கு கொடுக்கவும் சேவை செய்யவும் தேவன் நமக்கு வாய்ப்புகளைத் தருகிறார். நமது பணத்தையும், நேரத்தையும், திறமைகளையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும். சில வேளைகளில் தேவனுக்குக் கொடுக்கும்படியான சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விடுகிறோம். நாம் பணத்தை மடத்தனமாக செலவு செய்கிறோம். அறிவற்ற வாய்ப்பேச்சுகள், வாதங்கள், கவலை, ஒன்றுக்கும் உதவாத செயல்கள் ஆகியவற்றால் நாம் நமது நேரத்தை வீணாக்குகிறோம். அவைகள் நம் நேரத்தையும் பணத்தையும் கொள்ளை அடிக்கின்றன. நாம் நமது நேரத்தையும், ஆவிக்குரிய வரங்களையும், நமது பணத்தையும் தேவனுக்காக எப்படி பயன்படுத்துவது என்று திட்டமிட வேண்டும். நமது திட்டங்களை நிறைவேற்ற நாம் ஜெபத்துடனும் விசுவாசத்தோடும் கொடுக்க வேண்டும்.''

''சரியாகச் சொன்னீர்கள்.'' கல்விநேசன் உறுதிப்படுத்துகிறார். ''லூக்கா 14:28.30 ல் வரும் வீடு கட்டிய முட்டாளாக நாம் இருக்கக் கூடாது. அவன் முதலில் திட்டம் இடாததால் அவன் தனது வீட்டைக் கட்டி முடிக்க இயலவில்லை.''

''இந்தப் புதிதாக வந்த ஏழை மக்களுக்கு நமது உதவி தேவைப்படுகிறது.'' தயாளர் கூறுகிறார், ''போரிலிருந்தும், பஞ்சத்திலிருந்தும், அடக்குமுறைகளில் இருந்தும் தப்பி வந்தவர்களுக்கு உதவிய மக்களை தேவன் ஆசீர்வதித்தார் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இந்த மக்களுக்கு எப்படி உதவி செய்வது என்பதைப் பற்றி நாம் இப்போது திட்டமிடுவோம். விசுவாசமுள்ள இளம் விதவையான ரூத்தைப் பற்றிய கதை ஓர் உதாரணமாகும்.''

## பயிற்சி


**ரூத்தின்** புத்தகத்தில் காண்க:

- அத்தியாயம் 1, தேவனிடத்தில் தனக்கிருந்த தைரியத்தையும் விசுவாசத்தையம் ரூத் எவ்வாறு காண்பித்தாள்?
- அத்தியாயம் 2, ஓர் அந்நிய தேசத்து விதவைக்கு போவாஸ் எவ்வாறு இரக்கம் காட்டினான்?
- அத்தியாயம் 3, தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க இரண்டு விதவைகளும் எவ்வாறு முன் முயற்சி எடுத்தனர்?

- அத்தியாயம் 4, தனது சொத்தைப் பணயம் வைத்துப் போவாஸ் எவ்வாறு பிறருக்கு உதவி செய்தான்?
- அத்தியாயம் 5, போவாசின் இரக்கத்தின் விளைவாக ரூத்துக்கு என்ன நன்மைகளை தேவன் உருவாக்கிக் கொடுத்தார்?

கார்மென் ஆச்சரியத்தோடு கூறுகிறார், ‘‘ரூத்தின் புத்தகம் ஏழைகளும் பணக்காரர்களும் எவ்விதம் நடக்க வேண்டும் என்று போதிக்கிறது. ரூத்திற்கு வருமானமும் இல்லை; அடக்கு முறைகளில் இருந்து காப்பாற்ற யாரும் இல்லை. அவள் மிகவும் ஏழை. இருந்தாலும் அவள் தேவனுக்கும் தனது மாமியாருக்கும் உண்மையுள்ளவளாக இருந்தாள். அவள் சோம்பேறி அல்ல. போவாசின் நிலத்தில் இருந்து தானியங்களைப் பொறுக்க அவள் கடினமாக உழைத்தாள். அவள் தைரியம் மிக்கவள். அவள் நவோமியன் ஆலோசனைப் படி இஸ்ரவேலின் விதவையாக தனது உரிமையைக் காக்க போவாசை வேண்டினாள்.’’

கல்விநேசன் கூறுகிறார், ‘‘அதே சமயம் போவாசோ பெரும் செல்வந்தன். அவன் ரூத்தை அலட்சியம் செய்திருக்கலாம். மாறாக அவன் அவளிடம் இரக்கம் காட்டினான். அவள் சுதந்திரமாக தானியத்தைச் சேகரிக்க அவன் அனுமதித்தான். அவளைத் தடுக்காதபடி வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டான். ஒரு ஏழையான அந்நிய விதவைக்கும், உறவுக்கார சுதந்திரவாளியாகத் தன் கடமையை ஆற்றி-னான். தனது சொத்தையும் பணத்தையும் வைத்து ரூத்தை மனைவியாக ஏற்றுக்-கொண்டான். தேவன் அவனது இரக்கத்தை ஆசீர்வதித்தார். இயேசு தமது மணவாட்டியாக எல்லா விசுவாசிகளையும் எவ்வாறு விடுவித்தார் என்பதற்கு ரூத்தின் கதை ஓர் உதாரணம். அவரே நமது இரட்சகர். நமது தேவைகளின் போது அவர் நம்மை விடுவிக்கிறார். போவாஸ் ரூத்திற்காக பரிந்து பேசி உதவியது போல் ஏழைகளுக்கு துணையாக நிற்கும் போது நாமும் இயேசுவைப் போலாகிறோம்.



## சபையின் முக்கிய பணிகள்

கல்விநேசர் தொடர்கிறார், ‘‘கிறிஸ்துவின் மக்கள் உலகத்தை எவ்வாறு மாற்றுகிறார்கள் என்பதை நான் வாசித்தேன். அதற்கு இரண்டு முக்கிய பணிகள் உண்டு. அவை நம்மை சுமந்து செல்லும் இரண்டு கால்களைப் போன்றவை. ஒன்று இயேசுவுக்கு சீஷர்களை உருவாக்குதல். அடுத்தது அன்போடு மக்களுக்கு சேவை செய்தல். வறுமை, துன்பம், போர் போன்ற பயங்கரமான காரியங்கள் இந்த உலகத்தில் பாவத்தின் காரணமாக வந்தவைகளே. அவை தொடர்வதற்குக் காரணம் பாவம் நம் வாழ்கையைத் தொடர்ந்து ஆளுவது தான். நாம் மனம்திரும்பி தேவனிடத்தில் வரும்போது அவர் பாவத்தின் பிடியை உடைத்து, பாவத்தின் விளைவுகளில் இருந்து நம்மை குணமாக்குகிறார்.’’

அவர்கள் இரண்டு மனிதர்கள் சண்டை போடுவதைக் காண்கின்றனர். ஒருவன் மற்றவன் மேல் குற்றம் சாட்டுகிறான், ‘‘நீ என் பீர் பாட்டிலைத் திருடி விட்டாய்.’’

‘‘நாம் இந்த மக்களுக்கு இயேசுவைப் பற்றியும் சொல்ல வேண்டும்’’ கார்மென் கூறுகிறான்.

‘‘நாம் இரண்டையும் செய்வோம்;’’ கல்விநேசன் கூறுகிறார், ‘‘நாம் சபையாக பணியாற்றுவோம். இயேசு, வன்முறை, வறுமை, ஊழல் ஆகியவற்றின் பிடிகளை உடைப்பார். மக்கள் தேவனிடத்தில் திரும்பும்போது, அவர்கள் அவருக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறார்கள்: தங்களுடைய நேரம், வேலை, குடும்பம் எல்லாம். நாம் நமக்காக வாழ்வதில்லை.

நாம் மற்றவர்களிடத்தில் இருந்து திருடுவதையும் அவர்களை புண்படுத்துவதையும் நிறுத்திவிடுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் அன்போடு சேவை செய்யத் தொடங்குகிறோம். நாம் ஏழையாக இருந்தாலும், ரூத்தைப் போல உண்மையுள்ளவர்களாய் கடினமாக உழைக்கிறோம். பணமும் அதிகாரமும் உடையவர்கள் தங்களுக்காக சேவை செய்யக்கூடாது. அவர்கள் போவாசைப் போல மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். அப்போது ஒவ்வொருவரும் நல்லமுறையில் நடத்தப்பட்டு அமைதியோடு வாழ்வார்கள். அந்த மனிதர்கள் ஒருவருக்கொருவர் சொல்லும் முன் நாம் அவர்களோடு பேசுவோம். அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளை அறிந்து அதைத் தீர்க்க நாம் எவ்வாறு உதவுவது என்பதைப் பார்ப்போம்.''



ஞானசூனியர் கூறுகிறார், ''அவர்கள் பக்கத்திலேயே நான் வரமாட்டேன். அவர்களுக்கு நோய் இருக்கும்'' அவர் மணியை ஒலித்தவாறே, தெருவில் வண்டியைத் தள்ளிக் கொண்டு போகிறார்.

அடுத்தநாள், கல்விநேசரும் பிற மூப்பர்களும் புதிய குடும்பங்களுக்கு எவ்வாறு உதவி செய்வது என்பதை திட்டம் இடுகின்றனர். அவர்கள் தேவ உதவிக்காகவும், அந்த ஏழைக் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கின்றனர். அவர்கள் பலமுறை அவர்களை சந்தித்து அவர்களது முக்கிய தேவைகள் என்ன என்பதை அறிகின்றனர். ஆற்றுத் தண்ணீரில் அமீபா கிருமிகள் இருப்பதால் அவர்கள் தங்களுக்கு ஒரு கிணறு தோண்ட உதவுகின்றனர். சகாயர் அவர்களில் சிலருக்கு வேலை கிடைக்க உதவுகிறார். அவர்களது குழந்தைகளை பள்ளியில் சேர்க்கவும் உதவுகிறார். கார்மென் வித்தியாசமான அவர்களது மொழியைக் கற்று அவர்கள் அப்பகுதி மொழியைப் பேச கற்றுக் கொடுக்கிறாள். டாக்டரிடமும், அரசு அதிகாரிகளிடமும் அவர்கள் பேச மொழி பெயர்ப்பாளராக உதவுகிறார்.

புதிய குடும்பங்கள் நன்றியோடு இவர்களை ஏற்றுக் கொள்ளுகின்றனர். அவர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை ஏற்கின்றனர். சகாயரும் தயாளரும் அங்கு ஒரு சபை ஏற்படுத்தி, அதற்கும் அவர்களில் இருந்தே தலைவர்களையும் உருவாக்குகின்றனர். சகாயர் அவர்களது விசுவாசத்தைக் குறித்து பாடல் எழுத உதவி, அவர்களது சொந்த இசைவடிவில் பாடவும் உதவுகிறார். மற்ற சபைகளை விட இச்சபை அதிக விசுவாசிகளைப் பெற்று வளர்கிறது.

## நடைமுறைப் பணிகள்

- இந்தப் பகுதியில் உள்ள கதைகளை பயன்படுத்தி இயேசுவின் நாமத்தால் உங்கள் சபை மக்கள் ஏழைகளுக்கு சேவை செய்ய உதவுங்கள்.
- உங்கள் சமுதாயத்தில் மற்றவர்கள் யாரும் உதவ விரும்பாத மக்கள் இருப்பார்கள். உங்கள் சபை மக்களில் இரக்கம் என்ற ஆவிக்குரிய வரம் உள்ளவர்கள் இத்தகைய மக்களுக்கு உதவும் ஊழியங்களை ஆரம்பிக்க உதவுங்கள். இந்த மக்கள், குடிபெயர்ந்தோர், அகதிகள், விதவைகள், அனாதைகள், குடிகாரர்கள், போதைப் பொருள் உட் கொள்ளுபவர்கள், சிறையில் இருப்போர், பொருளாதார நெருக்கடி மிக்கவர்களாக இருக்கலாம்.
- தேவை இருப்போர்களுக்கு உதவி செய்யும் வழிவகைகளை காணுங்கள். அவர்கள் பிரச்சினையைத் தீர்க்கும், முன்முயற்சிகளை எடுங்கள்.
- நமக்கு ஏற்படும் துன்பங்களை பொருட்படுத்தாமல் சமுதாயத்தால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க உழைக்கவும்.
- சபையில் வரும் காணிக்கைகளுக்கு நேர்மையானவர்களே பொறுப்பாக இருக்கட்டும். சரியாக கணக்கு வைக்க அவர்களுக்கு உதவவும்.
- மூப்பர்களின் அனுமதி இல்லாமல் யாருக்கும் கடனாகவோ மற்ற வழிகளிலோ கொடுக்கக் கூடாது என்று பொருளாளரை வலியுறுத்துங்கள்.


# III - 14 - ஊழியம் 14
# ஊழியர்களை அனுப்பு

பல மாதங்களுக்குப் பிறகு ஞானம் ஐயா மீண்டும் கல்விநேசரை சந்திக்க வருகிறார். கல்விநேசர் அவரிடம் கூறுகிறார், ''எப்படி போதிக்க வேண்டும் என்பதை நீங்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தீர்கள். நான் உங்களுக்கு நன்றி சொல்லுகிறேன். புதிய சபை மக்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதை அறிய, போதிக்கும் முன் கேட்கும்படி நீங்கள் போதித்தீர்கள். கதைகள் மூலமாக எப்படி போதிப்பது என்று சொல்லிக் கொடுத்தீர்கள். இதனால் எங்கள் உதவியாளர்கள் தேவ சத்தியத்தை ஞாபகம் வைத்து மற்றவர்களுக்கு கூற எளிதாய் இருக்கிறது. நாங்கள் நன்றாக சிந்திக்கவும், சபையில் போதித்ததை நடைமுறைப்படுத்த வசதியாகவும், சொல்லிக் கொடுத்தவைகளை பற்றி கேள்வி கேட்கவும் கற்றுக் கொடுத்தீர்கள்.''

''இயேசு என்ன செய்தாரோ அதையே நான் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தேன்.''

ஞானம் ஐயாவும், கல்விநேசரும் சகாயர் வீட்டிற்கு செல்கின்றனர். அங்கு ஞானசூனியர் இருக்கிறார். அவர் ஞானம் ஐயாவிடம் கூறுகிறார், ''கல்வி நேசர் என்னை மிகவும் மோசமாக நடத்தினார். எனவே நான் இப்போது சகாயர் சபைக்குச் செல்கிறேன்.''

ஞானம் ஐயா அவர்களிடம் கூறுகிறார், ''இந்த நாட்டின் வேறொரு பகுதிக்கு நான் போகிறேன். அங்கு ஆலயங்களே இல்லை. அங்கு தேவ பணியை ஆரம்பிக்கப் போகிறேன். நான் ஒரு பணிக்குழுவை அமைத்துக் கொண்டு இருக்கிறேன். அதில் சேரும்படி சகாயரை அழைக்கவே வந்தேன். நீங்கள் வேறொரு கலாச்சார மக்கள் மத்தியில் ஒரு சபையை உருவாக்கி, தலைவர்களையும் ஏற்படுத்தினீர்கள். சபையை ஸதாபிக்கும் வரத்தையும் விருப்பத்தையும் தேவன் உங்களுக்கு அளித்துள்ளார். நீங்கள் அனுப்பப்பட்டவர். அப்போஸ்தலர் என்பதற்கு அதுவே அர்த்தம். நாம் ஒரு புதிய மொழியையும், ஒரு புதிய கலாச்சாரத்தையும் கற்கலாம்.''



''நீங்கள் சகாயரை அழைத்துச் செல்ல முடியாது'' ஞானசூனியர் எதிர்க்கிறார், ''அவருக்கு இங்கு பொறுப்பு உண்டு. செய்ய வேண்டிய வேலையும் அதிகம். அடுத்து, அவரது சபை மிகவும் ஏழை சபை. ஓர் ஊழியரால் அதை தாங்க முடியாது. நாங்கள் சபையாக நன்கு ஸ்தாபிக்கப்ட்ட பின் ஊழியர்களை அனுப்புவது குறித்து சிந்திப்போம். நாங்கள் கவலைப்பட அவிசுவாசிகள் இங்கு நிறைய உண்டு.''

கல்விநேசர் மறுக்கிறார், ''இதுவரை சுவிசேஷத்தை கேட்காதவர்களுக்கு அதை எடுத்துச் செல்ல சகாயருக்குக் கிடைத்திருக்கும் பெரிய வாய்ப்பு இது. ஆபிரகாமுக்கு தேவன் அவரது சந்ததி மூலமாக உலக தேசங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் அளித்தார். இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமின் சந்ததியில் வந்த இயேசுவால் உண்மையாயிற்று. எல்லா தேசத்துக்கும் சவிசேஷம் அறிவித்து முடிக்கப்பட்ட பின்னர் தனது இரண்டாம் வருகையும் உலகத்தின் முடிவும் இருக்கும் என்று இயேசு மத்தேயு 24:10 ல் கூறுகிறார். அவர் அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தேசங்களைக் குறிப்பிடவில்லை. அது இனக்குழுக்கள். அதாவது ஒரே கலாச்சாரத்தை உடைய மக்கள்.''

''ஆமாம்!'' ஞானம் ஐயா உறுதிப்படுத்துகிறார். ''அப்போஸ்தலர் 1:8 ல் இயேசு, அருகிலும் தூரத்தில் உள்ள இடங்களிலும், நமது சொந்த மற்றும் பிற கலாச்சார மக்கள் மத்தியிலும் நாம் அவருக்கு சாட்சிகளாக இருப்போம் என்று கூறினார். மத்தேயு 28:18-20 ல் அவர் நமக்கு கொடுத்த கடைசி கட்டளையில், உலகெங்கும் தமக்கு சீஷர்களை உருவாக்கக் கூறினார். அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் சபைகளை அவர் ஆசீர்வதிக்கிறார். தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறார். தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மக்கள் தம்மை அறிந்து கொள்ள அவர் விரும்புகிறார். ஞானசூனியரைப் போலவே, மற்ற கலாச்சார மக்களிடம் போவதைக் குறித்து எண்ணிய, **போகத்தயங்கிய ஊழியன் யோனா**வைப் பற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.

## உலகத்தில் உள்ள எல்லா தேசத்து மக்களையும் தேவன் இரட்சிப்பார்.

### பயிற்சி

**யோனாவின்** புத்தகத்தில் காண்க.

- ஓர் எதிரி தேசத்துக்கு தேவன் ஒரு செய்தியைத் தன்னிடம் கொடுத்த போது இஸ்ரவேலின் தீர்க்கதரிசி என்ன செய்தான்?
- அனுப்பப்பட்ட இடத்துக்கு ஊழியக்காரன் போக மறுத்த போது கூட தேவன் தம்முடைய சித்தத்தை எவ்வாறு நிறைவேற்றினார்?
- உலகின் மிகவும் பாவம் நிறைந்த தேசத்தின் மீதும் கூட தேவன் காட்டிய அன்பை இக் கதை எவ்வாறுவெளிப்படுத்துகிறது?

கல்விநேசனின் வீட்டில், ஞானம் ஐயா, கல்விநேசன், சகாயர் ஆகியோர் பேசுவதைக் கவனித்த ஞானசூனியர், ''இது மிகவும் ஆபத்தான பேச்சு! தங்கள் பாவத்திலிருந்து மனம் திரும்ப வேண்டிய மக்களைத் தேடி நாம் தூரதேசத்துக்குப் போக வேண்டியது இல்லை,'' என்று கூறுகிறார்.

ஞானம் ஐயா தொடர்ந்து விளக்குகிறார், ''யோனா ஓர் எதிரி தேசத்துக்குப் பிரசங்கிக்க மறுத்தான். அவன் எதிர் திசையில் செல்லும் ஒரு கப்பலில் ஏறினான். தேவன் ஒரு புயலையும், பின் ஒரு மீனையும் அவனைத் திருப்பிக் கொண்டு வர அனுப்பினார். தேவ சித்தத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதை யோனா கஷ்டமான வகையில் அறிந்து கொண்டான். உலக மக்கள் அனைவர் மேலும் அக்கறை செலுத்துவதைப் போலவே தேவன் பாவிகளான நினிவே மக்கள் மேலும் அக்கறை காட்டினார். அவர்கள் மனந்திரும்பிய போது, மனந்திரும்பும் யாவரையும் மன்னிப்பது போல அவர்களையும் மன்னித்தார். தம்மை விட வித்தியாசமான மக்கள் மேலும் காட்டுவதற்காக தேவன் நமக்கு அன்பைத் தருகிறார். சுவிசேஷத்தை அவர்களுக்குக் கொண்டு செல்ல தேவன் நம்மை அனுப்புகிறார். நாம் விருப்பத்தோடு செல்லும்போது நம்மை ஆசீர்வதிக்கிறார். நாம் அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து போகாவிட்டாலும் அவர் வேறு வழிகளில் அந்த மக்களை அடைவார். ஆனால் நமக்கோ அவரது விசேஷித்த ஆசீர்வாதம் கிடைக்காமல் போகும்.''



ஞானம் ஐயா சகாயரின் மனைவி ராகேலிடம் கூறுகிறார், ''வேறு கலாச்சார மக்களோடு பேசவும் அவர்கள் மேல் அன்பு செலுத்தவும் தேவன் உங்கள் இருவருக்கும் ஆவிக்குரிய வரத்தைத் தந்துள்ளார். தயவுசெய்து என்னோடு வாருங்கள். சகாயரே, நீங்கள் ஏழை. உங்கள் சபையும் ஏழைச் சபை. அதனால் உங்கள் சபை உங்களுக்கு சம்பளம் தர வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இந்தப் பகுதியில் தேவன் எழுப்பிய எல்லா சபைகளையும் போலவே, உங்கள் சபையும் உதவ வேண்டும். எனது திட்டம் என்னவென்றால், ஒரு வியாபார ஸ்தாபனம் அப்பகுதியில் அவர்களுக்கு ஏஜெண்டுகளாக வேலை செய்ய நமக்கு தந்த ஒரு வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ளுவதே. அப்போஸ்தலர் 18 ல் அப்போஸ்தலர் பவுல் செய்தது போலவே நாமும் நமது பிழைப்புக்கு தேவையானதை சம்பாதித்துக் கொள்ளலாம். கூடாரம் செய்யும் வேலையை பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் அவருக்குத் தந்தனர். பிரிஸ்கில்லா ஆக்கில்லாவைப் போலவே கிறிஸ்தவ நண்பர்கள் நமக்கும் உண்டு. நாம் சபை ஸ்தாபிக்கும் இடங்களில் அவர்கள் நமக்கு வேலை தருவார்கள்.''

## வேறொரு காலச்சார மக்களுக்கு சுவிசேஷத்தை எவ்வாறு எடுத்துச் செல்வது

ராகேல் கூறுகிறாள், “மிகவும் வேறுபட்ட கலாச்சார மக்களுக்கிடையே எவ்வாறு பணிபுரிவது என்பது எனக்குத் தெரியாது!”

ஞானம் ஐயா விளக்குகிறார், “நமது கலாச்சாரத்திற்குள் தேவன் எவ்வாறு வந்தாரோ அவ்வாறே நாம் செய்வோம். இயேசுவின் அவதாரத்தை எண்ணிப்பாருங்கள். நற்செய்தியைக் கூற தேவன் இயேசுவை ஓர் ஊழியராக அனுப்பி வைத்தார். எல்லாருடைய துதிக்கும் பாத்திரம் உள்ளவராய் இருந்தாலும் அவர் ஒரு இராஜாவாக வரவில்லை. அவர் பரலோகத்தில் உள்ள தமது மகிமையான இடத்தை விட்டு ஓர் குழந்தையாக வந்தார். சிறு பையனாக வளரும்போது யூதக்கலாச்சாரத்தைக் கற்றுக் கொண்டார். அவர் போதித்தபோது மக்கள் கவனித்துக் கேட்டனர்: அவர் அதிகாரம் உடையவர், புகழ்பெற்றவர் என்றல்ல; அவருடைய வார்த்தைகள் தேவனிடத்தில் இருந்து வருகின்றன என்று அறிந்து கொண்டபடியால்தான் கேட்டனர். அவர் சொல்வதை விரும்பாதவர்கள் அவரைக் கொன்றனர். நம்மேல் வைத்த அன்பால் அவர் இவற்றை எல்லாம் சகித்துக் கொண்டார். வேறு எந்தவகையிலும் அவர் நம்மை இரட்சித்து இருக்க முடியாது.”

“ஆனால் அவர்கள் அதை எப்படி செய்ய முடியும்? ஞானசூனியர் கேட்கிறார்.” அவர்கள் குழந்தைகளாக மறுபடியும் மாறி ஒரு புதிய கலாச்சாரத்தில் வளர முடியாதே!”

ஞானம் ஐயா பதில் அளிக்கிறார், “நம்மால் குழந்தைகள் ஆக முடியாது. ஆனால் குழந்தைகளைப் போல இன்னொரு கலாச்சார மக்களிடையே போக முடியும்.. இயேசுவைப் போல நாம் தாழ்மை உள்ளவர்களாகி, அந்த மக்களிடம் அவர்களது மொழியையும், கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்ள முடியும். அவர்கள் நமக்கு போதிக்க நாம் அனுமதிக்க வேண்டும். இஸ்ரவேல் என்ற புதிய ஒரு கலாச்சாரத்திற்குள் நுழைந்தபோது ரூத் செய்தது போல நாம் நம்பிக்கையையும் உறவையும் வளர்க்க வேண்டும். தனது மாமியாகிய நகோமியில் தொடங்கி அவள் இஸ்ரவேல் மக்களை நேசித்து அவர்களோடு ஐக்கியமானாள்.”

சகாயர் தொடர்கிறார், “மக்களை நாம் நன்கு அறிந்து கொண்டால், அவர்கள் புரிந்து கொள்ளுகிற மொழியில் சுவிசேஷத்தை எப்படி கூறுவது என்பதையும் நம்மால் அறிந்து கொள்ள முடியும். 1 கொரிந்தியர் 9:19-23 ல் பவுல் தாம் யூதருக்கு யூதனாகவும், மற்ற ஜாதியாருக்கு அவர்களைப் போலவும் ஆனதாகக் கூறுகிறார். முடிந்த அளவுக்கு மற்றவர்களைப் போலானார்: எதற்கு என்றால் அவர்களை கிறிஸ்துவுக்காக வென்றெடுக்கவே இது மிகவும் சுவையாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.”

ஞானம் ஐயா கூறுகிறார், “நான் உங்களுக்காக ஒரு பாடத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஊழியர்கள் எவ்வளவு தூரம் பவுலைப் போல் கிறிஸ்துவின் அவதாரங்கள் ஆக முடியும் என்பதை அது பட்டியல் இடுகிறது.

( அ ) மக்களோடு மக்களாகப் போய் வாழுங்கள்; பாவத்தை தவிர மீதி விஷயங்களில் அவர்கள் வாழ்வதைப் போல வாழுங்கள்.
( ஆ ) அவர்களது மொழியைக் கற்க உதவும்படியாக ஓர் உதவியாளரை தெரிந்து கொள்ளுங்கள்
( இ ) அவர்கள் மொழியில் இருந்து சில வாக்கியங்களைத் தேர்ந்தெடுத்து தினமும் படியுங்கள்
( ஈ ) நடந்து சென்று அந்த நாளில் நீங்கள் காணும் ஐம்பது மக்களோடு அந்த வாக்கியங்களைப் பேசி பயிற்சி எடுங்கள்
( உ ) அவர்கள் மொழியை நன்கு அறிந்தவுடன் தேவனைப் பற்றியும், அவரது குமாரனான இயேசுவைப் பற்றியும் வேதாகமக் கதைகள் மூலம் கூறுங்கள்.
( ஊ ) முதலில், செவி கொடுப்பவர்களை கருத்தில் கொள்ளவும். எதிர்ப்பாளர்களிடம் இன்னொரு சமயம் பேசிக் கொள்ளலாம்.
( எ ) வீட்டுத் தலைவரிடம் பேசுங்கள். முழுக்குடும்பமும் கிறிஸ்துவினிடத்தில் வர இது உதவியாயிருக்கும்.

ஞானம் ஐயா தொடர்ந்து சகாயருக்கும் ராகேலுக்கும் விளக்குகிறார், “இன்னொரு கலாச்சார மக்கள் கிறிஸ்துவினிடத்தில் வரும் போது, கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலரும் கூறிய கற்பனைகளை போதிப்பதில் கவனமாய் இருக்க வேண்டும்; நமது சொந்த சம்பிரதாயங்களை அவர்களுக்கு கற்பிக்கக்கூடாது. அவர்கள் வளரவளர தங்கள் சொந்த சம்பிரதாயங்களை வளர்த்துக் கொள்ளட்டும். வேதாகமத்தைத் தவிர வேறு

எதையாவது நாம் அறிமுகப் படுத்தினால் அது அவர்களைக் குழப்பமடையச் செய்யும். கிறிஸ்துவை விட்டுவிட்டு அவர்கள் நமது சம்பிரதாயங்களைத் தொடர்வார்கள். அநேகமாக எல்லா சம்பிரதாயங்களும் நல்லவைகளே. ஆனால் ஒரு கலாச்சாரத்தில் இருந்து இன்னொரு கலாச்சாரத்திற்கு சம்பிரதாயங்களை எடுத்துச் செல்லும்போது அவைகள் எப்போதும் தீங்கையே விளைவிக்கும். நாம் அவர்களுக்கு இயேசுவைப் பற்றி மட்டும் கூறி, மனந்திரும்பி இயேசுவின் நாமத்தினால் தேவனிடம் பாவமன்னிப்பைக் கேட்பவர்களுக்கு ஞானஸ்நானமும் கொடுக்க வேண்டும். பின் நாம் அவர்களை தேவனைத்துதித்து அன்போடு அவருக்கு சேவை செய்யும் சபை அங்கமாக ஒன்று சேர்க்க வேண்டும்.''

''எவ்வளவு சிக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஆரம்பிப்போம்.'' சகாயர் மகிழ்ச்சியோடு கூறுகிறார், ''ஞானஸ்நானம் பெற்ற ஒரு கூட்ட விசுவாசிகள் சேர்ந்த உடன், துதி, ஜெபம், பாவத்தை அறிக்கை இடுதல், கர்த்தரின் பந்தி, வார்த்தை, கொடுத்தல், ஐக்கியம் ஆகிய ஆராதனையின் அடிப்படைகளை நாம் அவர்களுக்கு போதிப்போம். அவர்களது பாரம்பரிய இசையின் மூலமாக துதிப் பாடல்களைப் பாட நான் அவர்களுக்குப் போதிப்பேன். இயேசுவின் எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய நாம் அவர்களுக்கு உதவி செய்வோம். நீங்கள் எங்களுக்கு செய்தது போல, வேதத்தைப் படித்து வாழ்க்கையில் கடை பிடிக்கத் தேவையான பாடங்களைத் தருவோம். தங்கள் குடும்பங்களை மேய்க்கக் கற்றுக்கொண்டவர்களை புதிய சபையின் மூப்பர்களாக நியமிப்போம்.''

ராகேலும் இதற்கு உற்சாகமுடன் ஒத்துக் கொள்கிறாள். ஞானம் ஐயா முடிக்கிறார், "புதிய மூப்பர்களைப் பயிற்றுவித்த பின் நாம் வந்து விடலாம். அவ்வப்போது நாம் சென்று அவர்களது மூப்பர்களுக்கு தொடர்ந்து அறிவுரை கூறலாம். ஆனால் அவர்கள் சபையை நாம் வழிநடத்தக் கூடாது. அப்போஸ்தலரின் நடபடிகளில் செய்தது போல அவர்கள் மத்தியில் இருந்தே சீக்கிரமாக தேவன் தலைவர்களை எழுப்புவார். நாம் அவர்களைப் பயிற்றுவிக்கலாம்.''

## புதிய சம்பிரதாயங்களை எதிர்கொள்ளும் ஊழியக்காரர்கள்

ஞானசூனியர் கிண்டல் செய்கிறார், ''ஓர் ஆலயத்தைக் கட்டவும், போதகர்களுக்குக் கொடுக்கவும் பணம் இல்லாதவரை உங்களால் சபைகளை ஸ்தாபிக்க முடியாது.''

''இது குறித்து பல முறை நாம் விவாதித்து உள்ளோம்'' ஞானம் ஐயா பதில் அளிக்கிறார். ''பணப் பற்றாக்குறை தேவனுடைய காரியங்களை நிறுத்திவிட நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் வீடுகளில் தொடர்ந்து சந்திப்போம். பிலோமோனின் வீட்டில் கூடியது போல இன்று உலகெங்கும் லட்சக் கணக்கில் சிறுசிறு ஆனால் ஆரோக்கியமாக வீட்டு சபைகள் இருக்கின்றன.பிலோமோன் 2ல் பவுல் இவைகளை வாழ்த்துகிறார்.''

''இவ்வளவு சீக்கிரமாக நீங்கள் புதிய சபைகளை ஸ்தாபிக்க முடியாது!'' ஞானசூனியர் தொடர்ந்து விவாதம் செய்கிறார். ''இந்த மக்கள் நம்மை விடவும் மிகவும் வேறுபட்டவர்கள். ஆற்றங்கரையோரமாக வாழும் வெளிப்பிரதேசத்து மக்களைப் போல அவர்களும் புதிய சபைகளில் தங்கள் புதிய சம்பிரதாயங்களை புகுத்தி விடுவார்கள். அவர்கள் புதுவிதமான பாடல்களைப் பாடுகின்றனர். அது என் காதுகளைப் புண்படுத்துகிறது. அவர்கள் சாப்பிடும் உணவை நான் தொடக்கூட மாட்டேன். நமது சடங்காச்சாரங்களையும், விழாக்களையும் அவர்கள் கடைபிடிப்பதில்லை. வேறு கலாச்சார மக்கள் கிறிஸ்தவர்கள் ஆகும் முன் நமது பழக்கவழக்-கங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஞானம் ஐயா வருத்தத்துடன் பெருமூச்சு விடுகிறார், ''தேவனுடைய கிருபையை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன். பழக்கவழக்கங்களையும் பாரம்பரியங்களையும் நாம் ஆராதிக்கவில்லை. நாம் கிறிஸ்துவை ஆராதித்து அவரது கற்பனையின் படி அன்போடு அவருக்கு சேவை செய்கிறோம். **முதல் சபைக் குழுவைப்** பற்றிய கதையை இப்போது நாம் மீள்பார்வை செய்வோம்.''

## பயிற்சி

**அப்போஸ்தல் 15 ஆம் அதிகாரத்தில்** காண்க:

- அந்தியோகியா கலாச்சாரத்தில் தேவ கிருபையை மறுதலிக்கும் படியாக சில யூத விசுவாசிகள் போதித்தது என்ன?
- நாம் இரட்சிக்கப்படும் படியாக தேவன் வேண்டுவது என்ன?

- தங்கள் கலாச்சாரத்தை விட்டுவிடாமலேயே எல்லா மக்களும் இரட்சிக்கப்படலாம் என்று தேவன் எவ்வாறு வெளிப்படுத்தினார்?
- நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாத புறஜாதி கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டு சட்டத்தைப் பின்பற்றும் தங்கள் விசுவாசிகளான யூத சகோதரர்களைப் புண்படுத்தாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?
- சபைக்குழு விசுவாசிகளை எவ்வாறு ஊக்கப்படுத்தியது?

ஞானசூனியர் போகிறார். அவர் அதற்குப்பின் எந்த ஒரு சபைக்கும் வருவதில்லை.

ஊழிய வேலைகள் குறித்து ஞானம் ஐயா தொடர்ந்து சகாயருக்கும் ராகேலுக்கும் அறிவுரை கூறுகிறார். ‘‘அப்போஸ்தலர் பவுலின் மூன்று ஊழியப் பயணங்களை அப்போஸ்தலர் நடபடிகள் பதிவு செய்கிறது. பவுலின் சொந்த ஜனங்களாகிய யூதர்கள் இயேசுவைக் குறித்து பவுல் கூறியதை நிராகரித்ததனால், அதை ஏற்றுக் கொண்ட புறஜாதி மக்களிடம் அவர் சென்றார். சில யூத விசுவாசிகள், புறஜாதியார் இரட்சிக்கப்பட வேண்டுமானால் யூத பாரம்பரியத்தைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினர். பவுலும் பர்னபாவும் இதைத் திட்டவட்டமாக ஒத்துக்கொள்ளவில்லை. இரட்சிக்கப்படுவதற்கு சட்டம் அல்லது பாரம்பரியம் எதையும் பின்பற்றும் படி தேவன் கூறவில்லை என்றனர். நாம் எவ்வாறு இருக்கிறோமோ அவ்வாறே இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தைக் கொண்டு தமது கிருபையால் தேவன் நம்மை இரட்சிக்கிறார். நாம் நமது கலாச்சாரத்தை மாற்றிக் கொள்ளத் தேவை இல்லை.’’

சாரா கூறுகிறாள், ‘‘ஞானம் ஐயா! நாங்கள் ஊழியம் செய்யும் இடங்களில் உள்ள கலாச்சாரத்தை மகிழ்ச்சியோடு மதிப்போம்.’’

‘‘நீங்கள் செய்வீர்கள் என்று நான் அறிவேன். கொர்நெலியுவையும் அவனது குடும்பத்தையும் சந்தித்ததை பேதுரு எருசலேமில் உள்ள சபைக்குழுவுக்கு ஞாபகப் படுத்தினார். அவர்கள் புறஜாதியார். ஆனால் அவர்கள் தேவனிடத்தில் திரும்பிய போது அவர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரத்தை அளித்தார். இது, தேவன் அவர்களை இருக்கின்றவாறே அங்கீகரித்தார் என்பதையும், அவர்கள் யூத பழக்கவழக்கங்களை சுவீகரிக்கத் தேவையில்லை என்பதையும் அப்போஸ்தலர்களுக்கு நிரூபித்துக் காட்டியது. பேதுருவும் அவரது யூத உதவியாளர்களும் அகமகிழ்ந்து அன்றையத் தினமே அவர்களுக்கு ஞானஸநானம் அளித்தனர். சபைக்குழு மோசேயின் பழைய ஏற்பாட்டை புறஜாதியார் மேல் சுமத்த வேண்டாம் என முடிவெடுத்தது. அதே சமயத்தில் அவர்கள் புறஜாதியார் தங்கள் யூத அயலாரை புண்படுத்தக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டனர். கிறிஸ்துவின் சபை ஒன்று பட்டதால் எல்லா விசுவாசிகளும் உற்சாகமடைந்தனர். எல்லோரும் ஒரே பாரம்பரியத்தை பின்பற்றியதால் சபையார் ஒன்றாகவில்லை. ஆனால் எல்லோரும் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டதாலும், வெவ்வேறு கலாச்சாரத்தை சுதந்திரமாக பின்பற்றும் உரிமை இருந்ததாலுமே ஒற்றுமை பிறந்தது. பேதுருவின் தரிசனத்தை ஞாபகம் வைத்திருக்கிறீர்களா?’’

## பயிற்சி

**அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரத்தில்** காண்க:

- அவனது பாரம்பரியத்தில் விலக்கப்பட்டிருந்த விலங்குகளை எழுந்து கடித்துப் புசிக்குமாறு எத்தனை முறை தேவன் பேதுருவுக்குக் கூறினார்?
- இந்த தரிசனம் பிற கலாச்சார மக்களைக் கையாளும் வழியை அறிய பேதுருவுக்கு உதவியது. வந்தவர்களை பேதுரு எவ்வாறு நடத்த வேண்டும் என்று தேவன் விரும்பினார்?
- வெவ்வேறு கலாச்சார மக்களை ஏற்றுக் கொள்வது குறித்து பேதுருவின் தரிசனமும் நடவடிக்கைகளும் நமக்கு என்ன கூறுகின்றன?

சகாயர் கூறுகிறார், ‘‘தமது ஊழியப் பயணங்களில் பிற கலாச்சார மக்களுக்கு அப்போஸ்தலர் பவுல் வழங்கிய அதே சுதந்திரத்தை நாமும் தர வேண்டும். நமது மொழியை கற்க வேண்டும், நமது பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும், தமது இசையை அவர்கள் உபயோகிக்க வேண்டும் என்றெல்லாம் அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடாது. அவர்கள் இருக்கும் நிலையிலேயே, ஏற்றுக்கொள்ளும் தேவனிடத்தில் திரும்புமாறு அவர்களுக்குப் போதிக்க வேண்டும். நாம் அவரிடத்தில் திரும்பிய போது நமக்கு அளித்த மாதிரி அவர்களுக்கும் அவர் பரிசுத்த ஆவியின் வரத்தை அளிப்பார். பரிசுத்த ஆவியானவர் சத்தியத்துக்குள்

அவர்களை வழி நடத்துவார். பாவத்தை அவர்களுக்கு உணர்த்துவார். எந்த பழக்கவழக்கம் உதவிகரமானது. எந்த பழக்கவழக்கம் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை மறுக்கிறது என்பதை அவர் அவர்களுக்குக் காட்டுவார்.''

''நாங்கள் உன்னையும் ரேச்சலையும் அனுப்புவோம்'' கல்விநேசர் சகாயரிடம் கூறுகிறார். ''நாங்கள் உங்கள் மேல் கைகளை வைத்து எங்கள் ஆசீர்வாதத்தோடு உங்களை அனுப்புவோம். உங்களுக்காக ஆராதனையிலும் சிறு குழுக்களிலும் உண்மையாக ஜெபிப்போம். அன்பின் பரிசுகளால் உதவி செய்து முடியுமானால் வந்து சந்திப்போம். நீங்கள் அந்த மக்களுக்கு தேவனின் தூதுவர்கள். நாங்கள் தேவனுடைய வேலையில் உங்களுக்கு பங்காளர்கள், அவ்வப்போது அறிக்கைகளை அனுப்புங்கள். அதனால் கர்த்தர் செய்யும் காரியங்களை அறிந்து மகிழ்வோம். பிரச்சினைகள் வரும்போது உதவிக்காக ஜெபிப்போம். நீங்கள் ஆரம்பிக்கும் புதிய சபை வெளிப்பிரகாரமாக இந்த சபை போல் இருக்காது. ஆனால் கிறிஸ்துவுக்குள் நாமெல்லாரும் ஒரே சரீரமாக இருக்கிறோம். அவர் நம்மை இணைக்கிறார். மொழியால், கலாச்சாரத்தால், பாரம்பரியத்தால் அல்ல. ஆனால் நமக்குள் இருக்கும் அவரது பரிசுத்த ஆவியால்.''



அதிகாரிகளின் கண்களுக்குப் படாமல் அந்தப் பகுதியில் உள்ள அனைத்துப் புதிய சபைகளும் ஓர் இரவு ஒரு தனித்த இடத்தில் இரகசியமாக சந்திக்கின்றன. தூர தேசத்தில், ஞானம் ஐயாவுடன் சென்று, கிறிஸ்துவுக்கு சீஷர்களை உருவாக்குமாறு, அவர்கள் ஜெபித்து கைகளை வைத்து சகாயரையம், ரேச்சலையும் நியமிக்கின்றார்.

அனுப்பப்பட்ட மூவரும் புதிய பகுதிக்கு வந்து சில குடும்பங்களுடன் தங்கி அவர்கள் உதவியுடன் புதிய மொழியைக் கற்கின்றனர். தங்கள் வாழ்க்கைக்கு தேவையானவற்றை கடுமையாக உழைத்து சம்பாதிக்கின்றனர். அப்போஸ்தலர்களைப் பற்றிய கதைகளில் இருந்து கற்றவற்றை அவர்கள் கடைபிடிக்கின்றனர். அவர்கள் கடுமையாக உழைத்து, தங்கள் வாழ்க்கையில் இயேசுவைப் பிரதிபலித்ததால் அந்த மக்கள் அவர்களை நம்புகின்றனர். சகாயர் ஓர் அறிக்கையை சபைக்கு அனுப்புகிறார்.

''பல மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இன்று பலருக்கு ஞானஸ்நானம் அளித்தோம். அவர்கள் கலாச்சாரம் முற்றிலும் வேறுபட்டது. ஆனால் அவர்களது கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் நாங்கள் மதிக்கும் போது தேவன் எங்கள் பணியை ஆசீர்வதிக்கிறார்.''

சகாயரையும் ராகேலையும் அனுப்பிய சபைக்கு அந்த அறிக்கை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. ஞானம் ஐயா கல்விநேசனை தேவ மக்களை வழிநடத்தும் தலைவராக பயிற்சி அளித்தபோது பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டது போலவே இப்போதும் சபைகள் இல்லாத இடத்தில் புதிய பல சபைகளை உருவாக்க செயலாற்றுகிறார்.

## நடைமுறைப் பணிகள்

- உலகில் எந்த இன மக்களுக்கு ஆரோக்கியமான சபைகள் இல்லை என்று கண்டறியவும். இந்த மக்களுக்காக தொடர்ந்து ஜெபிக்குமாறு உங்கள் சபையாரை ஆயத்தப்படுத்தவும்.
- உங்கள் சபை மக்களில் யாருக்கு பிற கலாச்சார மக்கள் மத்தியில் பணிபுரியும் ஆவிக்குரிய வல்லமையை தேவன் அருளியிருக்கிறார் என்பதைக் காட்டுமாறு மன்றாடுங்கள்.
- ஊழியர்களை ஜெபத்தாலும் பணத்தாலும் தாங்கும் திட்டங்களைத் தீட்டுங்கள்.
- புதிய கலாச்சார மக்களிடையே செல்லும் ஊழியர்களை, அவற்றை குழந்தைகளைப் போல் பயிலவும், மக்களோடு மக்களாகவும் பழகி கிறிஸ்துவின் அவதாரம் போல் மாற பயிற்சி அளியுங்கள். அருகில் வாழும் இன்னொரு கலாச்சார மக்களோடு பழகி இதை பயிற்சி செய்யலாம்.

- கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை மறுதலியாத பிற கலாச்சாரங்களின் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்ள ஊழியர்களுக்கு பயிற்சி அளியுங்கள்.
- உங்கள் ஊழியர்களுக்கு ஆரோக்கியமான சபைகளை ஸ்தாபிக்கவும், தலைவர்களை உருவாக்கவும் பயற்சி அளியுங்கள்.
- அப்போஸ்தலர் 13:1-3ல் பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியா சபை பிரித்து எடுத்தது போல இவர்களை ஊழியர்களாக பிரித்தெடுங்கள். இதன் மூலம் சபை உருவாக்க சுழற்சி தொடரும்.

**மூன்றாம் பகுதி முற்றியது.**

# பகுதி IV
# பழைய, புதிய ஏற்பாட்டு வேதாகமக் கதைகளும் தொடர்புடைய கொள்கைகளும்

கதைகள் வரும் வேத பகுதிகள் **தடித்த எழுத்தில்** தரப்பட்டுள்ளன.

## புராதான ஆதிபிதாக்களின் காலத்து சரித்திர சம்பவங்களும், பிற்காலத்து அது போன்ற நிகழ்ச்சிகளும் தொடர்புடைய கொள்கைகளும்.

**IV - I சிருஷ்டிப்பு** (தொடர்புடையவை : புதிய சிருஷ்டிப்பு, புத்துருவாக்கம், மறுபிறப்பு)

(பழைய ஏற்பாடு) - **தேவன் பௌதீக, தற்காலிகமான வானங்களை சிருஷ்டித்தல்,** ஆதி 1-2

(புதிய ஏற்பாடு) - **ஆவிக்குரியதும், நித்தியமானதும், பாவம் அற்றதுமான தமது புதிய சிருஷ்டிப்பை தேவன் தொடங்குகிறார்.**

- விசுவாசிகள் பங்குகொள்ளும், இயேசுவின் உயிர்த்தெழுதலில் புதிய சிருஷ்டிப்பு தொடங்குகிறது. மத். 28.
- வர இருக்கும் புதிய வானம் புதிய பூமியோடு இது முடிவடையும். வெளி. 21.22
- இதற்குள் ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்கிறோம் (இயேசு நிக்கொதேமுடன்), யோவான் 3:1-7

(நமது பதில்) - **பழைய சிருஷ்டிப்பில் நமக்காக தேவன் படைத்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.**

- இயேசுவே புதிய சிருஷ்டிப்பின் முதற்பலன். அவரது உயிர்த்தெழுதலில் பங்கேற்பதன் மூலம் நாம் தேவனின் புதிய, ஆவிக்குரிய, நித்தியமான சிருஷ்டிப்புக்குள் நுழைகிறோம். இதைக் களிகூர்ந்து அறிவிப்போம். (1 கொரி. 15; 2 கொரி 5:17). வேறு வழி இல்லை (யோவான் 14:6).

**IV-2 சோதனை** (தொடர்புடையது: ஆதி பாவம், மரணம், ஆதாம், சாத்தான், மரணத்தையும் சாத்தானையும் இயேசு தோற்கடித்தல்)

(ப.ஏ) **முதல் ஆதாம், சாத்தானின் சோதனைக்குள் விழுந்து, தேவனுக்குக் கீழ்ப்படியாமல், மனிதகுலத்திற்கு மரணத்தையும், பரிசுத்தமான தேவனிடத்தில் இருந்து பிரிவையும் கொண்டு வருகிறான் (ஆதி பாவம்): ஆதி. 3.**

(பு.ஏ) **கடைசி ஆதாமாகிய இயேசு, சாத்தானின் சோதனையை முறியடித்து, ஜீவனையும் மனிதகுலத்துக்குதேவனோடு ஒப்புரவையும் கொண்டு வருகிறார்:**

- கடைசி ஆதாமாகிய இயேசு (1 கொரி. 15:45) சாத்தானின் சோதனையை எதிர்க்கிறார், மத். 4
- நமக்குள் வாழும் இயேசு, சாத்தானை எதிர்க்கவும், உலகத்தை மேற்கொள்ளவும் நமக்கு பலம் தருகிறார், யோவான் 16-17.
- கெத்செமனேயில், மரிப்பது உட்பட (அதி மேலான சோதனை) தேவனுடைய சித்தம் அனைத்திற்கும் இயேசு கீழ்ப்படிகிறார், மத் 26:36-42.

(நமது பதில்) **தேவனிடத்தில் பாவங்களை அறிக்கை இட்டு மனம் திரும்புதல் ( 1 யோவான் 1:8-10).**

- பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் தேவன் தந்த சர்வாயுதவர்க்கத்தை உபயோகித்து சாத்தானை எதிர்த்தல் (யாக். 4:7; எபே. 6).

**IV - 3 காயீனும் ஆபேலும்** (தொடர்புடையவை : இரத்த பலி, இயேசுவின் இரத்தம்).

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டு ஆராதனையில் குற்றமற்ற பலியின் இரத்தம் சிந்துதல் அவசியம்:**

- தேவன் இரத்தமற்ற காணிக்கையை நிராகரித்து ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்த போது, காயீன் ஆபேலைக் கொன்ற முதல் கொலை, ஆதி. 4.
- தமது சமூகத்தில் இரத்தம் இன்றி வந்த தலைமை ஆசாரியனின் குமாரர்களை தேவன் கொன்றார், லேவி. 10.

(பு.ஏ) **புதிய ஏற்பாட்டு ஆராதனை நித்திய "தேவ ஆட்டுக்குட்டியான" கிறிஸ்துவின் இரத்தத்தை உள்ளடக்கியதாய் இருக்கிறது:**

- நாம், தமது சரீரத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ணவேண்டும் என்று கூறி இயேசு யூதர்களை அதிர்ச்சி அடைய வைத்தார், யோவான் 6:26-59.
- நாம் தேவனை உண்மையோடும் ஆவியோடும் ஆராதிக்க வேண்டும் என்று இயேசு சமாரியப் பெண்ணிடம் கூறுகிறார், யோவான் 4.

(நமது பதில்) **நமது பாவங்களுக்காக இயேசு இரத்தம் சிந்தியதை நினைவு கூர்ந்து, உத்தம இருதயத்தோடு தேவனை ஆராதிக்க வேண்டும் (மத். 26:26-28).**

- இயேசு கூறியபடி கர்த்தரின் பந்தியை ஆசரிக்க வேண்டும் (1 கொரி 10:16-17; 11:27-32).
- குரல் கம்மிப் போகும் வரை தேவனை நாம் துதிக்கலாம். ஆனால் அவருக்குக் கீழ்ப்படியாவிட்டால் நமது துதி வீணானதே (மத். 15:6-9).

**IV - 4 நோவா** (தொடர்புடையவை : ஜலப்பிரளயம், மனம்திருந்துதல், தண்டனை, நியாயத் தீர்ப்பு, இரண்டாம் மரணம்)

(ப.ஏ.) **தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்பி பொல்லாத மனித குலத்தை சரீரபூர்வமான சாவால் தண்டித்தார் (நோவா), ஆதி. 6-9.**

(பு.ஏ) **நாம் மனம்திரும்பாவிட்டால் நிகழும் "இரண்டாம் மரணத்தைக்" குறித்து தேவன் எச்சரிக்கிறார் - நித்தியமாக தேவனிடம் இருந்து நீக்கப்பட்டு நரகத்தில் கிடப்பது:**

- வாக்களிக்கப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்துவுக்கு ஆயத்தமாகும்படி யோவான் ஸ்நானகன் மனிதர்களை மனம்திரும்பும்படி அழைக்கிறான், மத். 3.
- மனம்திரும்பாத பாவிகளை தேவன் நெருப்பு ஏரியில் தண்டிக்கிறார் (இறுதி நியாயத் தீர்ப்பும் "இரண்டாம் மரணமும்"), வெளி. 20:11-15.

**(நமது பதில்) நமது பரலோகப் பிதாவின் பரிவும் இரக்கமும் நம்மை மனந்திரும்புதலுக்குள் வழிநடத்தட்டும் (ரோமர். 2:4).**

- பாவத்தை விட்டு மனம்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்தல் (மாற்கு 1:15).

**IV - 5 பாபேல்** (தொடர்புடையவை : இனங்கள், கலாச்சாரங்கள், மொழிகள்)

**(ப.ஏ) பாபேல் கோபுரத்தருகில் தேவன் இனங்களையும் வெவ்வேறு கலாச்சாரங்களையும் படைத்தல்:**

- மனிதன் ஒரே அகந்தை மிகுந்த சமுதாயமாக இணைந்து இருக்க முயற்சி செய்கிறான். ஆனால் தேவன் அவர்களைப் பல மொழி பேசுபவர்களாகப் பிரித்தார், **ஆதி.10.**

**(பு.ஏ) எல்லா ஜாதி மற்றும் கலாச்சார மக்களும் தேவனை அவரது மகிமை நிறைந்த சிங்காசனத்தின் முன்பாகத் துதித்தல்,** வெளி 7:9-17.

(நமது பதில்) **மனிதனின் அரசியல் பலத்தை நம்பாமல் தேவனை நம்புதல் (சகரியா 4:6).**

- நித்திய காலமாக பரலோகத்தில் அங்கீகரிக்கப்படுகிற வெவ்வேறு கோத்திரங்களையும் கலாச்சாரங்களையும் மதிக்க வேண்டும். எல்லா ஜாதிகளுக்கும், கோத்திரங்களுக்கும், பாஷைக்காரர்களுக்கும் தேவன் தந்துள்ள வேறுவேறான தன்மைகள் கிறிஸ்துவின் மணவாட்டியான அவர்களை அழகுபடுத்துகின்றன (வெளி. 7:9-12).
- எல்லா ஜாதிகளில் இருந்தும் சீஷர்களை உருவாக்குக (கலாச்சார மக்கள் கூட்டம், மத். 28:18-20).

## IV - 6 ஆபிரகாமுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தம் (தொடர்புடையவைகள்: வாக்குத்தத்தம், விசுவாசம், உடன்படிக்கை).

**(ப.ஏ) விசுவாசியான ஆபிரகாமின் வம்சத்தில் வரும் ஒருவர் மூலம் எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்தார்:**

- ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அதை அவனுக்கு அவர் நீதியாக எண்ணினார். ஆபிரகாமின் வித்தாக வம்சத்தில் வரும் ஒருவர் மூலமாக ஆசீர்வாதத்தை தேவன் வாக்குத்தத்தம் செய்து, அதை ஓர் உடன்படிக்கை மூலமாக முத்திரை இட்டார், ஆதி. 12:1-7; ஆதி. 15.
- ஓர் அற்புதமான பிறப்பின் மூலம் தேவன் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனை வாக்கருளினார். ஆபிரகாம் அவரை விசுவாசித்தான், **ஆதி 15:1-6.**

**(பு.ஏ) எல்லா தேசத்தையும் ஆசீர்வதிப்பேன் என்ற வாக்குத்தத்தத்தை ஆபிரகாமின் வம்சத்தில் வந்த கிறிஸ்துவின் மூலம் தேவன் நிறைவேற்றினார். இயேசு பாவத்தில் இருந்து இரட்சித்து குணமாக்குகிறார்:**

- தனது குமாரனாகிய இரட்சகரை ஓர் அற்புத வழியில் பெற்றெடுக்க மரியாள் ஒத்துக் கொள்ளுகிறாள், **லூக்கா 1:26-56.**
- விசுவாசம் உள்ளவர்களாய் இருந்ததால் இயேசு ஓர் அசுத்த ஆவி பிடித்த மனிதனையும் இன்னும் பலரையும் சொஸ்தமாக்குகிறார், **மாற்கு 1:21-34.**
- ஒரு திமிர்வாதக்காரனை, அவனது அக்கறையுள்ள நண்பர்களின் விசுவாசத்தின் காரணமாக குணமாக்கி, அவனது பாவங்களை மன்னிக்கிறார், **மாற்கு 2:1-12.**
- இயேசுவை ஏற்றுக்கொண்டு பல தேசத்து யூதர்களின் மேல் தேவன் தமது பரிசுத்த ஆவியைப் பொழிகிறார் (பெந்தெகொஸ்தே), **அப்போஸ்தலர் 2.**
- எல்லா ஜாதி மக்களும் இரட்சிக்கப்படுவதற்காக தேவன் தமது பரிசுத்த ஆவியை புறஜாதி மக்கள் மேல் பொழிந்து வழி திறக்கிறார், **அப்போஸ்தலர் 10:44-48.**

**(நமது பதில்) நாம் விசுவாசத்தின் மூலமாகவே தேவ மன்னிப்பைப் பெறுகிறோம்; நமது தகுதிகளை வைத்து அல்ல (எபே. 2:8-10).**

- நாம் ஆபிரகாமின் சந்ததிகள். அவனைப் போல விசுவாசிக்கும் போது அவனுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெறுகிறோம் (கலா. 3:6-12, 4:21-31).
- எல்லா ஜாதி மக்களுக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்கிறோம் (அப். 1:8).
- இயேசுவின் நாமத்தினால் சரீர சுகத்திற்காக நாம் ஜெபிக்கிறோம் (யாக். 5:14-16).
- தேவன் குணமாக்க அனுமதிக்க வேண்டும். அல்லது அவர் பவுலுக்கு செய்தது போல இன்னொரு விதமான கிருபையை நமக்குத் தரும்போது ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரி. 12:7-10 - தேவன் எல்லோரையும் சொஸ்தமாக்குவதில்லை, அவரோடு பரலோகத்தில் இருக்கும் பாக்கியத்தை பெற்றுக் கொள்ளும்படிக்கு ஒருவரும் மரிக்கமாட்டார்களே).

## IV - 7 ஆபிரகாமின் விசுவாசம் (தொடர்புடையவை: விசுவாசம், இஸ்லாம், ஈசாக்கு)

**(ப.ஏ) ஆபிரகாமின் விசுவாசம் நல்ல காரியங்களுக்கும் தேவ வாக்குத்தத்தங்களுக்கும் வழிநடத்தியது. அவையே பழைய புதிய ஏற்பாடுகளுக்கு அடிப்படையைத் தந்தன.**

- ஆபிரகாம் தனது சுயநலவாதியான அண்ணன் மகனாகிய லோத்து வளமான விளைச்சல் நிலங்களைத் தேர்ந்து கொள்ள விட்டுவிட்டான், **ஆதி. 13.**
- லோத்தை ஐந்து இராஜாக்களுக்கு எதிராக சண்டையிட்டு விடுவிக்க ஆபிரகாம் விசுவாசத்தோடு தன் வேலைக்காரர்களை அழைத்துச் சென்றான் **(ஆதி 14).**
- ஆபிரகாமினுடைய விசுவாசத்தின் விளைவாகப் பிறந்தவனே ஈசாக்கு. அவன் மூலமாகவே அவர் தமது கிருபையின் உடன் படிக்கையை ஏற்படுத்தினார், **ஆதி 21.**
- வாக்குத்தத்தத்தின் வாரிசான ஒரே மகன் ஈசாக்கை தகனபலியாக பலியிடுமாறு கூறி ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் சோதித்தார், **ஆதி 22.**
- ஒரு தற்காலிக விசுவாசக் குறைச்சலினால் ஆபிரகாம் தேவ கிருபையின் உடன்படிக்கையை தன் சொந்த முயற்சியால் நிறைவேற்ற முனைந்தான், **ஆதி 16-17.** ஆகாரின் சட்டபூர்வமற்ற வாரிசான இஸ்மவேலின் அரபு-முஸ்லீம் வழித்தோன்றல்கள் இன்னும் சாராவின் மூலமாக வந்த ஆபிரகாமின் சந்ததியாரோடு சண்டையிட்டு வருவது இதன் விளைவே ஆகும்.

**(பு.ஏ) மறுபடியும் பிறக்கவும், சுகமாகவும், தேவ ஆசீர்வாதங்களைப் பெறவும் விசுவாசம் நமக்கு தேவை என்று இயேசு கூறினார்:**

- இயேசு நிக்கோதேமுவிடம் விசுவாசத்தின் மூலம் நாம் ஆவியினால் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கூறினார், **யோவான் 3.**
- விசுவாசித்த நூற்றுக்கதிபதியின் மகனை இயேசு சொஸ்தமாக்குகிறார், **மத் 8:5-17.**
- இரண்டு குருடர்களை அவர்களது விசுவாசத்தின் காரணமாக இயேசு சொஸ்தமாக்குகிறார், **மத். 9:27-38.**

**(நமது பதில்) விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு நற்செயல்களை விளைவிக்கிறது. இல்லை-யெனில் நமது விசுவாசம் உண்மையானதல்ல (எபே. 2:8-10; யாக். 1:22-24).**

- தனது சொந்த முயற்சியினால் தேவனுடைய கிருபையின் உடன்பாட்டை நிறைவேற்ற முயன்ற ஆபிரகாமுக்கு உண்டானது போன்ற சந்தேகத்தை எதிர்க்க வேண்டும். ஏனெனில் அது இஸ்மவேலின் பிறப்பிற்கும், அவனது அரபு வம்சத்தின் மூலமாக உலகின் மிகவும் சட்டதிட்டங்கள் நிறைந்த இஸ்லாம் எழுவதற்கும் வழிவகுத்தது. (கலா. 3:6-12; 4:21-31).
- தினசரி புத்துருவாக்கத்தை நாட வேண்டும் - தினமும் ஜெபித்து தேவ வார்த்தையை தியானிக்க வேண்டும் - ஒவ்வொரு நாளும் தேவனின் பரிசுத்த ஆவி நம்மை புதிதாக்க அனுமதிக்க வேண்டும் (2 கொரி. 4:16).

## IV - 8 ஆபிரகாமின் பராமரிப்பு (தொடர்புடையது : கொடுத்தல்)

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் தான் அளித்தவற்றின் நல்ல பராமரிப்பாளர்களுக்கு தேவன் ஈவுகளை அளித்தார்:**

- கொள்ளை அடித்துச் சென்ற பொருட்களை திரும்பவும் கைப்பற்றிய ஆபிரகாம் கிறிஸ்துவைப் போன்ற ஆசாரியன் மெல்க்கிசேதேக்குக்கு தசம பாகம் அளித்தான். ஆனால் அப் பொருட்களிலும் எதையும் தான் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டான், **ஆதி. 14:11-24**
- ஏழையான தானியம் சேகரிப்பவருக்கு சில தானியங்களை விட்டு விடும்படி போவாஸ் தன் வேலைக்காரருக்குக் கட்டளை இட்டான், **ரூத் 2.**

(பு.ஏ) **தமது வேலைக்காகவும், தேவையில் இருப்போருக்கும் தாராளமாய் கொடுப்பவர்களுக்கு தேவன் பரலோகத்தில் பொக்கிஷத்தை வாக்களிக்கிறார்:**

- ஏழை விதவை தன் ஜீவனத்துக்கு வைத்திருந்த காசுகளையும் கொடுத்தாள், **லூக்கா 21:1-4.**
- பர்னபா தன் சொத்துக்களை விற்று தேவை இருப்போருக்கு அளித்தான், **அப். 4:33-37.**
- நல்ல சமாரியன் தன் எதிரியின் மீது அக்கறை காட்டுகிறான், **லூக் 10:25-37.**
- உண்மையுள்ள ஊழியர்காரர்களின் உவமையின் வாயிலாக இயேசு நல்ல ஊழியக்காரனை சித்தரிக்கிறார், **லூக் 19:11-27.**
- பொய் ஊழியக்காரனைப் பற்றிய உவமையின் வாயிலாக இயேசு மோசமான ஊழியக்காரனை படம்பிடித்துக் காட்டுகிறார், **லூக் 16:1-8.**

**(நமது பதில்) நல்ல ஊழியக்காரர்களாக இருந்து தேவன் நமக்கு தந்தவைகளை நன்றாக பராமரியுங்கள். அது பணமாகவோ பொருளாகவோ இருக்கலாம் (1 கொரி. 4:2).**

- சந்தோஷமாகக் கொடுங்கள். முறுமுறுப்போடு கொடுப்பதை தேவன் விரும்புவதில்லை (2 கொரி. 9:6-15).

## IV - 9 ஆபிரகாமின் மன்றாட்டு ஜெபம் (தொடர்புடையவை: விசுவாசம், மன்றாட்டு, சொஸ்தமாக்குதல்).

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் விசுவாச ஜெபங்களுக்கு தேவன் பதில் அளித்தார்:**

- லோத்தின் குடும்பத்திற்காக ஆபிரகாம் ஏறெடுத்த மகத்துவமான மன்றாட்டு ஜெபம் (சோதோம் கொமோரா), **ஆதி. 18-19.**
- தேவ ஆலயத்தையும் தனது மக்களையும் அர்ப்பணித்து சாலொமோன் ஆற்றிய மகத்தான ஜெபம், **2 நாளா. 6;7:1-4.**
- தனது மக்கள் சார்பாக எஸ்றா ஏறெடுத்த மகத்தான பால அறிக்கையான ஜெபமும் அதன் விளைவுகளும் (மறுமலர்ச்சி), **எஸ்ரா 9;10:1-19.**

(பு.ஏ) **நமது விசுவாச ஜெபத்துக்கு தேவன் பதிலளிக்கிறார்.**

- பேதுருவும் யோவானும் இயேசுவின் நாமத்தினால் ஜெபித்து ஒரு முடவனை சுகமாக்கி அதனால் சிறையில் தள்ளப்படுகிறார்கள், **அப். 3-4.**
- ஒரு தகப்பனின் எளிய விசுவாச ஜெபமும், அசுத்த ஆவி பிடித்த மகன் சுகமாதலும், **மாற்கு 9:14-29.**
- பாவியான ஆயக்காரனின் சுருக்கமான ஜெபம், **லூக். 18:9-14.**
- எப்படி ஜெபிக்க வேண்டும் என்று இயேசு நமக்குச் சொல்கிறார் (கர்த்தரின் ஜெபம் உட்பட), **மத் 6:1-15.**
- இயேசு தமது அப்போஸ்தலர்களுக்காகவும் நமக்காகவும் ஜெபிக்கிறார், **யோவான் 17.**
- இயேசு தமது ஜெபத்தில் பிதாவின் சித்தத்துக்கு இணங்கி, நமக்காக தம் ஜீவனை கொடுக்க ஒப்புக் கொடுக்கிறார், **மத்தேயு. 26:36-46.**

**(நமது பதில்) இயேசு தமது நாமத்தில் ஜெபிக்கச் சொல்கிறார். இதன் மூலம் நமது சந்தோஷம் பரிபூரணம் ஆகும் (யோவான் 16:24).**

- இடைவிடாது ஜெபிக்குமாறு அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார் (1 தெச. 5:17).
- அப்போஸ்தலர் யோவான் நமது பாவங்களை தேவனிடம் அறிக்கையிட கூறுகிறார் (1 யோவான் 1:8-10).

**IV - 10 ஈசாக்கின் மணப்பெண் ரெபேக்கா** (தொடர்புடையவை: ஈசாக்கு, பெந்தெகொஸ்தே, பரிசுத்த ஆவியானவர்)

(ப.ஏ) **ஆபிரகாம் தனது மகன் ஈசாக்குக்காக தூர தேசத்திற்குத் தன் வேலைக்காரனை அனுப்பி ஒரு விசுவாசியான மணமகளை - ரெபெக்கா - தேடச் சொல்கிறான், ஆதி 24.**

(பு.ஏ) **தேவன் தமது மகன் இயேசுவுக்காக பரிசுத்த ஆவியானவரை அனுப்பி விசுவாசியான மணவாட்டியை - சபை - தேடச் சொல்லுகிறார்:**

- இயேசு ஒரு தேற்றவாளனை வாக்களிக்கிறார். அவர் நமது பாவத்தை உணர்த்தி, நமக்கு இயேசுவை வெளிப்படுத்துவார், **யோவான் 14:15-26; 16:7-16.**
- பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார். யூதர்கள் மத்தியில் முதல் சபை ஆரம்பிக்கப்பட்டது, **அப். 2.**
- பரிசுத்த ஆவி புறஜாதிகள் மேல் இறங்குகிறது. கொர்நேலியு வீட்டில் புறஜாதியாரின் முதல் சபை பிறக்கிறது, **அப். 10.**

**(நமது பதில்) விசுவாசியான, தேவன் தெரிந்து கொண்ட மணவாட்டியைத், தேடு, தூர தேசங்களில் கூட (மத். 28:19-20).**

**IV - 11 யாக்கோபு தேவ கிருபையைப் பெறுகிறான்** (தொடர்புடையவை: யாக்கோபு, ஏசா, விசுவாசம், விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பு).

(ப.ஏ) **எல்லாம் வல்ல தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களுக்கு கிருபை அளித்தார், அவர்களுடைய நற்பணிகளுக்காக அல்ல**

- யாக்கோபு ஏசாவை ஏமாற்றினான். இருந்தாலும் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றான், **ஆதி. 27-33.**
- எபிரேய மக்கள் தேவனுடைய நியாயப் பிரமாணத்தைப் பெறுமுன் இருந்த எபிரேய கலாச்சாரத்தைப் பற்றி அறிய இந்த நீண்ட கதை உதவுகிறது.
- யாக்கோபு வஞ்சகமாக ஏசாவின் பிறப்புரிமையைக் களவாடுகிறான், **ஆதி.27**
- யாக்கோபு தேவனை ஆராதித்தான். பரலோகத்தைத் தொடும் ஓர் ஏணியைக் கண்டான். ஆபிரகாமுக்கு தந்த வாக்குத்தத்தங்களை மறுபடியும் யாக்கோபு கூறுகிறார், **ஆதி 28.**
- யாக்கோபின் வஞ்சகத்தை தேவன் தண்டிக்கிறார் - லாபான் அவனை ஏமாற்றினான், **ஆதி. 29.**
- யாக்கோபு மோசமான காரியங்களைச் செய்த போதிலும், அவனது விசுவாசத்தின் காரணமாக அவனை சொத்துக்களாலும் குழந்தைகளாலும் தேவன் ஆசீர்வதித்தார், **ஆதி. 30.**
- லாபான், ஏசா ஆகிய இருவரின் கோபத்தில் இருந்தும் தேவன் யாக்கோபை பாதுகாத்தார். யாக்கோபு ஒரு தூதனோடு போராடுகிறான், **ஆதி 31-33.**

(பு.ஏ) **வேலைகளின் காரணமாக அல்ல - விசுவாசத்தின் காரணமாக இயேசு மோசமான மனிதர்களையும் மன்னித்து ஆசீர்வதிக்கிறார்:**

- ஒரு பாவியான பெண்ணை இயேசு மன்னிக்கிறார், லூக். **7:36-50.**
- தேவன் கெட்டவர்களையும் நல்லவர்களையும் விருந்துக்கு அழைக்கிறார் என்பதை இயேசு ஓர் உவமையின் மூலமாக விளக்குகிறார், **மத். 22:1-10.**
- இயேசு பாவிகளோடு உணவருந்தி பானம் பண்ணுகிறார். இவர்களையே அவர் இரட்சிக்க எண்ணினார். இதற்காக விமரிசிக்கப்பட்டார், **லூக் 5:27-32.**

(நமது பதில்) **நமது கிரியைகளுக்காக அல்ல, நமது விசுவாசத்திற்காக நம்மை மன்னித்து தேவனுக்கு நன்றி செலுத்துவோம். (ரோமர் 8:28-30; 9:10-18).**

- இழந்து போனவர்களைத் தேடவே இயேசு வந்தார். அதனால் இரட்சிப்பின் நற்செய்தியை மோசமானவர்களுக்கும் நல்லவர்களுக்கும் எடுத்துச் சொல்வோம் (லூக்.5:32).

**IV - 12 யோசேப்பின் மன்னிப்பு** (தொடர்புடையவை : மன்னிப்பு, மன்றாட்டு, நமக்காகப் பரிந்து பேசும் இயேசு)

(ப.ஏ) **தனக்கு தீமை செய்த இஸ்ரவேலின் குமாரர்களுக்காக பரிந்து பேசுபவனாக யோசேப்பு சேவைசெய்தான்:**

- யோசேப்பு அதிகாரம் படைத்தவனானான். தன்னை அடிமையாக விற்ற தன் சகோதரர்களுக்காகப் பார்வோனிடம் மன்றாடினான், **ஆதி. 37; 39-45.**
- இது ஒரு பெரிய கதை. சிறுசிறு பகுதிகளாக இதை நீங்கள் வாசிக்கலாம். இதில், மன்னிப்பு, தூய்மை, குடும்ப பந்தம், மன்றாட்டு மற்றும் தேவன் நமது தேவைகளைத் தருதல் ஆகியவற்றைப் பற்றிய பாடங்களைக் காணலாம். இயேசுவை தீர்க்கதரிசனமாக முன்காட்டும் ஒரு மனிதனே யோசேப்பு:
அவன் ஒரு மேய்ப்பன்,
தகப்பனால் நேசிக்கப்பட்டவன்,
இஸ்ரவேலின் குமாரர்களாகிய தனது சகோதரர்களால் விற்கப்பட்டவன்,
சோதனையை எதிர்த்து நின்றவன்,
அநீதியாக சிறைப்பட்டவன்,
மறுபடியும் மகிமையான ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டு
இராஜாவின் வலதுபக்கம் அமர்ந்தவன்,
தன் சகோதரர்களுக்காக மன்றாடியவன்,
சிறப்பான விருந்தில் அவர்களோடு மீண்டும் ஒன்றிணைந்தவன்.

(பு.ஏ) **நாம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தவர்களாய் இருந்தாலும், இயேசு நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசுகிறார்.**

- காணமற் போன ஆட்டைத் தேடும் நல்ல மேய்ப்பரே இயேசு, **லூக் 15:1-10,**
- தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படி இயேசு பிதாவிடம் ஜெபிக்கிறார், **லூக் 23.**
- நாம் ஏன் பிறரை மன்னிக்க வேண்டும் என்று இயேசு தன் சீஷர்களுக்குக் கூறுகிறார், **மத். 18:15-35.**

**(நமது பதில்) இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கவும் - அவர் நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசுகிறார் (யோவான் 16:24; ரோமா. 8:33-39).**

- நமக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும் **(மத்: 6:14-15; எபே. 4:32).**

## நியாயப்பிரமாணத்தை எழுதிய மோசேயின் காலத்து நிகழ்ச்சிகளும், அதுபோன்ற பிற்கால நிகழ்ச்சிகளும்.

**IV - 13 தேவன் விடுவிப்பவனாக மோசேயை உருவாக்குதல்** (தொடர்புடையவை: விடுதலை, பாவம், மீட்பு, ஐக்கிய ஆராதனை, கர்த்தரின் பந்தி, இயேசுவின் இறுதி விருந்து)

(ப.ஏ) **எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து தமது மக்களை வழிநடத்திச் செல்லவும் ஒரு பரிசுத்த ஜாதியை எழுப்பவும் ஓர் இரட்சகனை தேவன் ஆயத்தப்படுத்தினார்:**

- மோசேயின் பிறப்பை சூழ்ந்த அற்புத நிகழ்வுகள்; அவனைக் கொல்ல நடந்த முயற்சி, **யாத். 1-2.**
- தமது மக்களின் தலைவனாக தேவன் மோசேயை மீதியான் தேசத்திலே உருவாக்கினார்; ஓர் எரியும் முட்செடியில் இருந்து அவனை எகிப்துக்குத் திரும்பும்படி அழைத்து, அதிசயமான வல்லமைகளை அவனுக்கு அளித்து தமது மக்களை விடுவிக்கிறார், **யாத். 2-4.**
- எகிப்தின் பொய் தெய்வங்களின் மேல் ஒரு சாபமாக, தண்ணீரை இரத்தமாக மாற்றிய மோசேயின் முதல் அற்புதம், **யாத். 7:13-25.**

**(பு.ஏ) பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து தமது மக்களை வழிநடத்த தேவன் ஓர் இரட்சகரைத் தருகிறார்.**

- இயேசுவின் பிறப்பை சூழ்ந்த அற்புத நிகழ்வுகள்; அவரைக் கொல்ல நடந்த முயற்சி, மத். 1:18-25;2.
- இயேசு ஆயத்தமாதலும், ஞானஸ்நானமும். தம்முடைய நேச குமாரன் என்று பிதா அறிவித்தல்,மத். 3:13-17.
- இயேசுவின் முதல் அற்புதம் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றுதல் - ஓர் ஆசீர்வாதம், யோவான் 2

**(நமது பதில்) நமது இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை பாவங்களை மன்னிப்பார், தேவ ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவார் என்று விசுவாசித்தல் (யோவான் 3:16).**

**IV - 14 பஸ்காவின் ஆட்டுக்குட்டி** (தொடர்புடையவை: இயேசுவின் இறுதி விருந்து, திருவிருந்து, ஆட்டுக்குட்டியின் இரத்தம், இரத்தம், பலி, உயிர்த்தெழுதல்)

**(ப.ஏ) இஸ்ரவேலருக்கு வருஷந்தோறும் கொண்டாடும் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை (பஸ்கா) கொண்டாடும்படி தேவன் விதித்தல், யாத் 12.கவனிக்கவும்:**

- தேவன் தமது மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டதை காலங்காலமாக அவர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள இது உதவும்.
- சங்காரத் தூதன் கதவு நிலைகளில் இருந்த இரத்தத்தைப் பார்த்து தேவனை விசுவாசித்த மக்களின் வீடுகளைக் கடந்து போனான்.

**(பு.ஏ) தமது இரத்தத்தினால் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையை உறுதிப்படுத்த இயேசு கர்த்தரின் பந்தியை உருவாக்கினார், லூக். 22**

- தமது இரத்தத்தை சிந்தி நம்மை பாவத்தில் இருந்து விடுவித்ததை காலங்காலமாக நாம் நினைவில் வைத்துக் கொள்ள இது உதவுகிறது.

**(நமது பதில்) இந்தப் புதிய பஸ்காவை நாம் ஆசரிக்கும் போது இயேசுவின் சரீரத்திலும் இரத்தத்திலும் நாம் பங்கு கொள்ளுகிறோம் (1 கொரி. 10:16-17).**

**IV - 15 அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை** (தொடர்புடையது: அடிமைத்தனம், உயிர்த்தெழுதல், சாவாமை, செங்கடல்)

(ப.ஏ) **தேவன் இஸ்ரவேலரை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து செங்கடல் வழியாக நடத்தினார் - இதுவே பழைய உடன்படிக்கைக்கு அடிப்படை, யாத் 12-13.**

(பு. ஏ) **இயேசு மரித்தோரிடத்தில் இருந்து உயிர்த்தெழுந்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்தும் மரணத்தில் இருந்தும் வழி நடத்துகிறார், லூக் 24:**

- இயேசுவின் உயிர்த்தெழுதலில் விசுவாசிகள் ஒன்றிணைவதால், இயேசு நமக்கு நித்திய வாழ்வைத் தருகிறார், யோவான் 11.

**(நமது பதில்) ஜீவனை அளிக்கும் வல்லமையுள்ள ஒரே ஒருவராகிய கிறிஸ்து நமக்கு நித்திய வாழ்வை அளிப்பார் என்று அவரை மட்டுமே விசுவாசிக்கிறோம் (1 கொரி. 15).**

**IV - 16 தேவன் மன்னாவையும் தண்ணீரையும் தருகிறார்** (தொடர்புடையவை: ஜீவ தண்ணீர், நித்திய வாழ்வு, மன்னா, சாகாமை, ஜீவ அப்பம்).

(ப.ஏ) **தேவ அற்புதத்தின் மூலம் வனாந்தரத்தில் மோசே உணவும் தண்ணீரும் அளிக்கிறான்:**

- வானத்தில் இருந்து உணவாக தேவன் மன்னாவைத்த தருகிறார், யாத். 17:1-17.
- கன்மலையில் இருந்து தேவன் தண்ணீரைத் தருகிறார், எண். 20:1-12.

(பு.ஏ) **இயேசு ஜீவ அப்பத்தையும் (தமது சொந்த சரீரம்), ஜீப தண்ணீரையும் (பரிசுத்த ஆவி) விசுவாசிகளுக்குத் தருகிறார்:**

- இயேசு அற்புதமாக 5000 பேரை போஷிக்கிறார். நித்திய வாழ்விற்காக வான அப்பமாக தமது சரீரத்தை அளிக்கிறார். இது பலருக்கு கோபத்தை வருவிக்கிறது, யோவான் 6.
- நமக்குள் வாழ்ந்து (யோவான் 7:37-39) நமக்கு ஆலோசனை கூற (யோவான் 14:15:26) இயேசு பரிசுத்த ஆவியை தருவதாக வாக்களிக்கிறார்.

**(நமது பதில்) உலகப் பொருளை அல்ல, உண்மையான வான அப்பத்தைத் தேடி, தேவ ஆவியைப் பெற்றுக் கொள் (மத் 6:31-34; யோவான். 20:21-23).**

**IV - 17 தேவன் தமது ஜனங்களுக்கு மேய்ப்பர்களைத் தருகிறார்** (தொடர்புடையவை: மூப்பர்கள், எத்திரோ)

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் தேவன் தமது ஜனங்களை கண்காணிக்க மேய்ப்பர்களைத் தந்தார், யாத். 8:12-27.**

(பு.ஏ) **தேவன் தமது சபையைக் கண்காணிக்க மூப்பர்களைத் தருகிறார், அப். 14 (23 ஆம் வசனத்தை கவனிக்கவும்)**

**(நமது பதில்) அனுபவம் மிக்க தலைவர்கள் இல்லாத களங்களில் சபை ஸ்தாபகர்கள் மூப்பர்களை நியமிக்கின்றனர் (தீத்து 1:5-9).**

- தேவ சபைகளில் நம்மைக் கண்காணிக்கும் தலைவர்களுக்கு நாம் கீழ்ப்படிகிறோம் (எபி. 13:17).

**IV - 18 பத்து கற்பனைகள்** (தொடர்புடையவை: பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை, இயேசுவின் கற்பனைகள், நியாயப் பிரமாணம்)

(ப.ஏ) **ஒரு கற்பலகையில் தேவன் பத்து கற்பனைகளை எழுதுகிறார் - இஸ்ரவேலர் நடந்து கொள்ள வேண்டிய அடிப்படை, யாத். 19-20; 31:18.**

- தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை வாக்களிக்கிறார் - அவரது உடன்படிக்கை கல்லுக்குப் பதில் மனிதனின் இருதயத்தில் எழுதப்படும், எரேமியா 31:31-34.
- பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தை மீறுகிறவர்கள் கொலை செய்யப்படுவார்கள், **எண்: 25:1-11.**

(பு.ஏ) **இயேசு தமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுமாறு கூறுகிறார் - புதிய உடன்படிக்கையின் படி நாம் நடக்க வேண்டிய அடிப்படை, மத். 28:18-20. நாம் செய்ய வேண்டியவை:**

- இயேசுவே கன்மலையாகிய அஸ்திபாரம்; அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதே அதன் மேல் கட்டும் ஒரே வழி, **மத். 7:24-29.**
- ஆதி சபை இயேசுவின் கற்பனைகளுக்கு அப்படியே கீழ்ப்படிந்தது, **அப் 2:37-47**
- அவர்கள் மனந்திரும்பி, விசுவாசித்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர், மாற்கு 1:15; யோவான். 3:16; 20:22.

- அவர்கள் ஞானஸ்நானம் பெற்று அது ஆரம்பித்து வைத்த புதிய மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கையைத் தொடங்கினார்கள், மத். 2:18-20.
- அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்தனர். இது அவர்களது ஐக்கியத்தினாலும், தேவை உள்ளவர்களுக்கு உதவிய அவர்களது அக்கறையினாலும் புலனாகியது. அன்பு என்பது - நடை முறையில் - தேவன் மீதும், நமது அயலார் மீதும், உடன் சீஷர்கள் மேலும், ஏழைகள் மீதும் - எதிரிகள் மீதும் (மன்னிப்பு) காட்டப்படுவது, மத் 22:36-40; யோவான் 13:34-35, லூக். 10:25-37; மத். 5:43-48.
- அவர்கள் அப்பம் பிட்டனர் (ஐக்கிய ஆராதனை, நமது ஆராதனையோடு சம்பந்தப்பட்டது) மத். 26:26-28; யோவான் 4:24.
- அவர்கள் ஜெபித்தனர் (தனிப்பட்ட, குடும்ப ஜெபம், மன்றாட்டு, ஆவிக்குரிய போர்), யோவான் 16:24.
- அவர்கள் கொடுத்தனர் (இது நமது நேரத்தையம், பொருளையும், தாலந்துகளையும் பராமரித்தல்) லூக் 6:38.
- அவர்கள் சீஷர்களை உருவாக்கினர் (இது, இயேசுவுக்கு சாட்சியாக வாழ்தல், கண்காணிப்பு,வார்த்தையை போதித்தல், தலைவர்களை பயிற்றுவித்தல், ஊழியர்களை அனுப்புதல்), மத். 28:18-20.

- இயேசுவின் பிரதான கற்பனை தேவனையும் மனிதனையும் நேசித்தல், இது பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணங்களின் ஒரே தொகுப்பு, மத் 22:33-40.
- மனித கட்டளைகளை நிறைவேற்றி, தேவ கட்டளைகளைப் புறக்கணித்த பரிசேயர்களை இயேசு கண்டித்தார், **மாற்கு 7:1-23; மத். 23.**

**(நமது பதில்) நாம் இப்போது பரிசுத்த ஆவியானவரால் நடத்தப் படுகிறோம்.அவர் நமக்குள்பரிசுத்தத்தின் கனிகளை விளைவிக்கிறார் (ரோமர். 8:3-16; கலா. 5:14-26).**

- மரணத்தைத் தரும் பழைய நியாயப்பிரமாணத்தின் சட்டத்தை விட்டு நாம் விலகி, ஜீவனையும் சுதந்திரத்தையும் அளிக்கும் புதிய உடன்பாட்டை தழுவிக் கொள்ளுகிறோம் (2 கொரி. 3:3-18).
- பரிசுத்த ஆவியானவர் நமது பாவத்தை நமக்கு உணர்த்துவாராக (யோவான் 16:5-15).

## IV - 19 ஏழாம் நாள் ஓய்வு (தொடர்புடையவை: சட்டம், நியாயப் பிரமாணம்)

(ப.ஏ) **தேவனின் படைய உடன்பாட்டில் ஓய்வு நாளாகிய ஒரு சிறப்பு தினமும் ஆராதனையும் உண்டு.**

- சிருஷ்டிப்புக்குப் பின் தாம் ஓய்ந்திருந்த நாளை திரும்பிப் பார்க்கும் முகமாய் தேவன் ஏழாம் நாளை தனியாகப் பிரித்து வைத்தார், யாத் 20:8-11.
- ஏழாம் நாளில் விறகு சேகரித்த ஒரு மனிதனைக் கொல்லும்படி தேவன் கட்டளை இட்டார், எண். 15:30-36.

(பு.ஏ) **தேவனின் புதிய உடன்படிக்கையில் ஆராதனைக்கு என ஒரு சிறப்பான நாள் உண்டு.**

- இயேசு உயிர்த்தெழுந்த முதல் நாளில் விசுவாசிகள் ஆராதித்தனர். இது புதிய, நித்திய சிருஷ்டிப்பை எதிர்நோக்குவது ஆகும், அப். 20:7.
- இயேசு புதிய உடன்படிக்கையை அறிவிக்கிறார், லூக். 22:13-20.

**(நமது பதில்) நாம் புதிய உடன்படிக்கையை பின்பற்றுகிறோம். இது நாம் நிறைவேற்ற முடியாத பழைய மரண சட்டத்தில் இருந்து நம்மை விடுவிக்கிறது (2 கொரி. 3:6-9).**

- விருத்த சேதனம், சிறப்பு நாட்களை கடைபிடித்தல் ஆகியவற்றை வலியுறுத்தும் பழைய நியாயப் பிரமாணத்தின் சட்டங்களை நாம் விலக்குகிறோம் (கலா. 4:8-10; கலா. 5:5-14).
- எந்த நாளிலும் ஆராதனை செய்யும் சுதந்திரம் நமக்கு உண்டு (ரோமர் 14:1-18).

**IV - 20 விக்கிரக ஆராதனை தண்டிக்கப்பட்டது** (தொடர்புடையவை: பொன் கன்றுக்குட்டி, பேராசை)

(ப.ஏ) **பொன் கன்றுக்குட்டியை வணங்கியவர்களை தேவன் தண்டித்தார், யாத். 32.**

(பு.ஏ) **காலத்தின் முடிவில், விக்கிரகங்களை வணங்குவோரை தேவன் கொடிய வாதைகளால் தண்டிப்பார் (வெளி. 9).**

**(நமது பதில்) பேராசை உட்பட சகலவிதமான விக்கிரக ஆராதனையில் இருந்தும் விலகி ஓடு (1 கொரி. 10:14; கொலொ: 3:5).**

**IV - 21 அவிசுவாசம் இஸ்ரவேலரை அலைந்து திரிய வைத்தது** (தொடர்புடையவை: கீழ்ப்படியாமை, வாக்களிக்கப்பட்ட தேசம், அகிரிப்பா)

(ப.ஏ) **தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தின் ஆசீர்வாதங்களைக் கொடுத்தார்; ஆனால் அவிசுவாசத்தினால் அவர்கள் அதை சுதந்தரித்துக் கொள்ளத் தவறினார்கள்.**

- 12 உளவாளிகள் தேசத்தை சுற்றிப் பார்த்தனர். ஆனால் மக்கள் அதை செய்யப் பயந்து 40 வருஷம் வனாந்தரத்தில் அலைந்தனர், எண். 13-14.

(பு.ஏ) **அப்போஸ்தலர் பவுல் இரட்சிப்பு பற்றிய செய்தியை அகிரிப்பா இராஜாவுக்கு அளித்தார், ஆனால் அவன் விசுவாசிக்க மறுத்தான், அப். 26.**

**(நமது பதில்) கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், ஏசாயா 55:6-7.**

**IV - 22 கூடாரம்** (தொடர்புடையவை: கூடாரம், பரிசுத்த ஸ்தலம், ஆசாரியத்துவம், தலைமை ஆசாரியன், இயேசு நமது தலைமை ஆசாரியர்).

(ப. ஏ) **தேவன் தம்முடைய ஜனங்களை மகா பரிசுத்த ஸ்தலத்தில் சந்திக்கும் படியாக ஒரு பரிசுத்த ஸ்தலத்தை எழுப்பும்படி மோசேக்கு கட்டளை இட்டார்.**

- கூடாரத்தையும், ஆசாரியர்களுடைய ஆடைகளையும் செய்வதற்கு தேவன் திட்டவட்டமான அறிவுரைகளை வழங்கினார், யாத் 25-31 ; 35-40.
- எண்ணாகமத்தின் புத்தகம் முழுவதும், பரிசுத்த ஸதலத்தில் நடைபெறும் பலிகளையும், ஆசாரிய சேவைகளையும் பற்றி விளக்குகிறது.
- இந்தப் பரிசுத்த ஸ்தலம் மூன்று பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொன்றிற்கும் ஏற்ற உபயோகப் பொருட்கள், கீழே பட்டியலிடப்பட்டுள்ளன, யாத். 40.

1) வெளிப்பிரகாரம் ஆராதிப்பவர்களுக்காக. அதில் தகனபலிக்கான பலிபீடமும், ஆசாரியர்கள் கழுவ ஒரு தண்ணீர்த் தொட்டியும் உண்டு (யாத். 38). இந்த பலிபீடம் கிறிஸ்துவின் சிலுவையையும், நித்திய இரட்சிப்பை அளித்து மிருக பலியை ஓயவும் செய்த கிறிஸ்துவின் தியாகபலியையும் குறிக்கிறது. (எபி. 9-10). தண்ணீர்த் தொட்டியை ஞானஸ்நானத்தோடு ஒப்பிடலாம். எல்லா விசுவாசிகளும் தங்களை கழுவி சுத்திகரித்து புதிய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் ஆகலாம்.

2) பரிசுத்த ஸ்தலம் ஆசாரியர்களுக்கு மட்டுமே. அங்கு ஒரு மேசை உண்டு. அதன் மேல் தேவ சமூகத்து அப்பம் இருக்கும். (கர்த்தரின் பந்தியை உணர்த்துகிறது). ஒரு பொன் குத்துவிளக்கு, எப்போதும் எண்ணெயினால் எரிந்து கொண்டிருக்கும் (பரிசுத்த ஆவியை உணர்த்துகிறது). ஒரு தூப பீடமும் இருந்தது (ஜெபத்தை குறிக்கிறது).

3) மகா பரிசுத்த ஸதலம். வருடத்துக்கு ஒரு முறை தலைமை ஆசாரியன் மட்டுமே நுழைய முடியும் ஒரு பெரிய சிவப்பு திரை அதைப் பிரித்தது. இது கிறிஸ்துவின் சரீரத்ததை குறிக்கிறது. இங்கு மகா பரிசுத்தமான உடன்படிக்கைப் பெட்டி இருந்தது. இது பொன் தகட்டால் மூடப்பட்டது. இதன் மேல் கேருபீன்கள் (பரிசுத்த தேவ தூதர்) இருந்தன. இதன் மேல் தேவ மகிமை காணப்பட்டது. தேவன் தமது மக்கள் மத்தியில் இருப்பதை இது உணர்த்தியது. இது இயேசுவைக் குறிக்கிறது.

- கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில் மக்கள் இரத்த பலியை செலுத்தினர். இது அவர்களின் பாவத்திற்கு தற்காலிக பரிகாரமே ஆகும், **யாத் 29:36-41.**
- தலைமை ஆசாரியனின் குமாரர்கள் ஆற்றிய அக்கினியை (இரத்த மற்றது) மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவந்தனர். தேவன் அவர்களை கொன்று போட்டார், **வேலி 10.**
- தேவ மக்களின் பாவ நிவிர்த்திக்காக வருடத்திற்கு ஒரு முறை தலைமை ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் இரத்தத்துடன் நுழைவான், **லேவி 16.**
- நூற்றாண்டுகள் கழித்து, எடுத்து செல்லும் மகா பெரிய ஆசரிப்பு கூடாரத்துக்குப் பதில் ஒரு மகத்துவமான ஆலயத்தைக் கட்டினான். **1 இராஜா 5-6.**

(பு.ஏ) **இயேசு, தமது மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும், பரத்துக்கேறுதலாலும், நமது தலைமை ஆசாரியராகப் பரலோகக் கூடாரத்திற்குள் நுழைந்தார்:**

- இயேசு, மனிதனாக வந்து, சோதிக்கப்பட்டு, பாடுபட்டு, நமது பரிபூரணமான தலைமை ஆசாரியர் ஆனார், எபி. 2:14-18.
- இயேசு, எப்போதும் வாழ்ந்து, பழைய தலைமை ஆசாரியனையும், அதோடு கூடிய பலிகளையும் பணிகளையும் ஓயப் பண்ணினார், எபி. 7-9.

**(நமது பதில்) மன உறுதியுடன் தேவனை நெருங்கி சேருவோம். விடாமுயற்சியுடன் மற்ற விசுவாசிகளை ஊக்கப்படுத்துவோம் (எபி. 10).**

**IV - 23 மாபெரும் கற்பனை – ஒரே மெய்தேவனில் அன்புகூரு** (தொடர்புடையவை: குழந்தைகள் திருமணம்)

(ப.ஏ) **தேவன் ஒருவரே – நாம் முழு இருதயத்தோடு அவரில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுமாறு நம் குழந்தைகளை அறிவுறுத்த வேண்டும், உபா. 6:1-9.**

(பு.ஏ) **இயேசு திருமணம் குறித்த அறிவுரைகளைக் கூறி, சிறு பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார், மத். 5:31-32; 19:13-15.**

**(நமது பதில்) கணவர்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும். மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே. 5:21-33).**

- தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுமாறு பவுல் குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறார். தகப்பன்கள் விசுவாசத்தோடு குழந்தைகளுக்கு புத்திமதி கூற வேண்டும் (எபே. 6:1-4).

**IV சூனியம் விலக்கப்பட்டது** (தொடர்புடையவை: ஆவிகள், மந்திரவாதம், இயேசு அசுத்த ஆவிகளை அடக்குகிறார், பிசாசுகள், சாத்தானின் அழிவு)

(ப.ஏ) **சூனியம், இறந்தவரோடு தொடர்பு கொள்ளுதல், ஆவிகளோடு பேசுதல் ஆகியவற்றை விலக்கும்படி மோசேக்கு தேவன் கூறினார், உபா. 18:9-12.**

- சவுல் இராஜா ஒரு போரைக் குறித்து ஓர் அஞ்சனம் பார்க்கும் ஸ்திரியோடு ஆலோசிக்கிறான்; தேவன் அவனது அரசாட்சியை முடிவுக்குக் கொண்டு வருகிறார், 1 சாமு. 28:6-25; 1 சாமு. 31

(பு.ஏ) **சாத்தான் உட்பட எல்லா அசுத்த ஆவிகளையும் கிறிஸ்து மேற்கொள்ளுகிறார்:**

- கெர்கெசேனர் நாட்டு மனிதனில் இருந்தப் பல அசுத்த ஆவிகளை இயேசு பன்றிக் கூட்டத்துக்குள் விரட்டுகிறார். இதுபோல அநேக அசுத்த ஆவிகளை அவர் துரத்துகிறார், மத். 8:28-34; 12:22-32
- கடைசி நாட்களில் இயேசு சாத்தானையும் அவனது ஆளுகையையும் நிரந்தரமாக அழிப்பார், வெளி. 12; 20:1-10.

**(நமது பதில்) எல்லா சூனியங்களையும் விலக்கு. அசுத்த ஆவி பிடித்தவர்களுக்காக இயேசுவின் நாமத்தினால் ஜெபி (கலா. 5:19-21; லூக் 10:9).**

**IV-25 அக்கினி பரிசோதனை** (தொடர்புடையவை: பரலோகத்தில் பொக்கிஷம், பரலோகம்)

(ப.ஏ) **தமது பரிசுத்த முகாமில் பரிசுத்தமற்ற யுத்தக் கொள்ளைப் பொருளுக்கு தேவன் தடைவிதித்தார்: பொன்னும், விலைமதிப்பற்ற உலோகங்களும் அக்கினி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன, எண்.31.**

(பு.ஏ) **பரலோகத்துக்குள் சட்ட பூர்வமற்ற பொருட்களை எடுத்துச் செல்ல முடியாது என்று தேவன் எச்சரிக்கிறார்: நமது வேலைப்பாடு அக்கினியால் சோதிக்கப்படும் 1 கொரி. 3:10-15.**

- தமது அறிவற்ற பணக்காரனைப் பற்றிய உவமையில் இயேசு, பேராசை மற்றும் பணத்தைப்பற்றிக் கொண்டு இருப்பது ஆகியவற்றுக்கு எதிராக எச்சரிக்கிறார், லூக்.12:14-31.

**(நமது பதில்) உலகத்தில் பணத்தை சம்பாதிப்பதை விட்டு பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்க்க வேண்டும் (மத். 6:19-21).**

**IV - 26 பிலேயாம் அதிருப்தியான ஆசீர்வாதம்** (தொடர்புடையவை: பிலேயாம் பேராசை, பொருளாசை, பொருளுடைமை, சொத்துவளம்)

(ப.ஏ) **சிலர் தங்கள் சொத்தை தேவனுக்கு சேவை செய்ய செலவிட்டனர்: சிலர் தவறாக அதில் பேராசை கொண்டனர் அல்லது சுயநலமாக செலவிட்டனர்:**

- இஸ்ரவேலை சபிக்கும்படி பாலாக் பிலேயாமுக்குக் கூலி பேசினான். தேவன் ஒரு கழுதையையும் பிற வழிகளையும் உபயோகித்து இஸ்ரவேலை ஆசீர்வதிக்கும் படி அவனை வலிந்து மாற்றினார், **எண்.22-24.**
- பணக்காரனாகிய நாபால் சுயநலமாக தாவீதின் பசியில் வாடும் வீரர்களுக்கு உணவளிக்க மறுக்கிறான். ஆனால் தேவன் சூழ்நிலையை மாற்றுகிறார், **1 சாமுவேல் 25.**
- பாபிலோனில் இருந்து வந்த தூதுவர்களுக்கு எசேக்கியா இராஜா இராஜாங்க சொத்துக்களைக் காட்டி அதை இழந்து போகிறான்! **2 இராஜா 20:12-19.**
- சாலொமோன் இராஜாவுக்கு ஏராளமான சொத்து இருந்தது. அவனுக்குப் பல மனைவியர். அவன் எல்லா இன்பங்களையும் அனுபவித்ததை எல்லாம் மாயை என்று காண்கிறான் **பிர.2:1-11**

(பு.ஏ) **இயேசு சொத்துக்களை குவிப்பது குறித்து எச்சரிக்கும் ஓர் உவமையில் மரித்து நரகத்தில் விழிக்கும் ஒரு சுயநலமான பணக்காரனைப் பற்றி கூறுகிறார், லூக் 16:19-31.**

**(நமது பதில்) சொத்துக்கள் உள்ள விசுவாசிகள் அல்லது அது நாடுவோர், சொத்து நமக்கு வேதனை உண்டாக்கும் என்ற இயேசுவின் எச்சரிக்கையைக் கேட்க வேண்டும் (யாக்.5:1-6)**

**இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் காலத்து நிகழ்ச்சிகளும், அது போன்ற பிற்கால நிகழ்ச்சிகளும்**

**IV-27 வாக்குத்த்தம் செய்யப்பட்ட தேசத்தை யோசுவா சுதந்தரிக்கிறான்** (தொடர்புடையவை: யுத்தம், சபை ஸ்தாபித்தல், ஊழியக்கரார்கள்.)

(ப.ஏ) **வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை ஆக்கிரமித்து இருந்த புற ஜாதி மக்களை யுத்தத்தில் தோற்கடித்து யோசுவா தேவனுக்காக தேசத்தை சுதந்தரித்தான்:**

- தைரியமாய், விக்கிரக வழிபாட்டு ஜாதிகளை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் இருந்து விரட்டுமாறு யோசுவாவுக்கு தேவன் ஆணையிட்டார், யோசுவா 1:1-11.
- புறஜாதிப் பட்டிணம் எரிகோ விழுகிறது, யோசுவா 6.
- ஒரு துரோகியின் விக்கிரக வழிபாட்டினால் தற்காலிகமாக யோசுவாவின் சேனை தோல்வி அடையும்படி தேவன் அனுமதிக்கிறார், யோசுவா7-8.
- நிலத்தைக் கைப்பற்ற படையெடுத்து பல வலிமையான இராஜாக்களை யோசுவா தோற்கடிக்கிறான், யோசுவா 9.11.

(பு.ஏ) **சுவிசேஷத்தைப் புறஜாதி மக்களிடம் எடுத்துச் சென்று சாத்தானைத் தோற்கடித்து தேவனுக்காக அப்போஸ்தலர்கள் சுதந்தரிக்கிறார்கள்.**

- அந்தியோகியா சபை முதன் முதலாக முழுநேர ஊழியர்களை நியமித்து அனுப்புகிறது, அப் 13:1-3.
- தூர தேசங்களுக்கும், பிற கலாச்சார மக்களிடையேயும் பவுலும் பர்னபாவும் நீண்ட ஊழியப் பயணங்களை மேற்கொள்ளுகின்றனர், அப். 13-14:16-21.
- சிறைக்கு அஞ்சாமல், யூத தலைவர்களுக்கும் அவிசுவாச ஆட்சியாளர்களான இபஸ்து, அகிரிப்பா ஆகியோருக்கும் பவுல் இயேசுவை அறிவிக்கிறார், அப் 20-26.

**(நமது பதில்) புறக்கணிக்கப்பட்ட இடங்களுக்கு அப்போஸ்தலர்களை அனுப்பவும். தேவன் மந்தைகளைத் தருகிறார். (எபே.4:11-12:அப்1:8)**

- இன்றைய அப்போஸ்தலர்கள் தொடர்ந்து சாத்தானை முறியடிக்கின்றனர். தேவ ராஜ்யம் உலகெங்கும் பரவுகிறது(வெளி.15:4).
- தேவனுடைய எதிரிகளை தைரியத்தோடு எதிர்கொள்ளுங்கள். அது கொண்டு வரும் பாடுகளைத் தாங்குங்கள் (மத். 10:16-42).

**IV-28 இஸ்ரவேலின் தேவன் புறஜாதிகளை ஆசீர்வதிக்கிறார்** (தொடர்புடையவை: ராகாப், தேவனுடைய தேசத்துக்குள் கொண்டு வரப்படும் அந்நியர்கள், எல்லா ஜாதிகளையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் சபை).

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் விசுவாசமுள்ள அந்நியர்களை தேவன் கொண்டு வந்து தம் மக்களாகிய இஸ்ரவேலோடு சேர்த்துக் கொண்டார்:**

- கானான் தேச வேசியாகிய ராகாப் தேவனுடைய உளவாளிகளை விசுவாசத்தால் மறைத்து வைத்தாள். எரிகோ பட்டிணம் விழுந்தபோது அவள் தப்புவிக்கப்பட்டாள், யோசுவா 2:6:17.
- மேவாப் தேச விதவையாகிய ரூத், தனது மாமி நகோமியை நேசித்து, இஸ்ரவேல் தேசத்துக்கு வந்து தேவனை விசுவாசித்தாள். கிறிஸ்துவின் வம்சா வழியில் ரூத்தும், ராகாபும் உண்டு. ரூத், தாவீது, இராஜாவின் பெரிய பாட்டியாவாள். ரூத் -ஒரு அழகிய காதல் கதை.
- சீரிய தேச படைத் தளபதி நாகமான், தன் கர்வத்தை விட்டுவிட்டு, யோர்தான் நதியில் குளித்தான். தேவன் அவனது குஷ்டரோகத்தை சொஸ்தமாக்கினார், 2 இராஜா 5.

(பு.ஏ) **கிறிஸ்துவின் சபை எல்லா தேசங்களையும் (ஜாதிகள்) உள்ளடக்கியது: கானானிய ஸ்திரியின் விசுவாசத்தை இயேசு சோதித்து பலன் அளித்தார், மத் 15:21-28.**

- கானானிய ஸ்திரியின் விசுவாசத்தை இயேசு சோதித்து பலன் அளித்தார், **மத் 15:21-28**
- விசுவாசத்தின் காரணமாக ஒரு ரோம நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை இயேசு குணப்படுத்தினார், **லூக். 7:1-10**
- அப்போஸ்தலர் பவுல் பல தேசங்களுக்கு மிஷனரி பயணங்களை மேற்கொண்டார், **அப் 13-14: 17-20.**

**(நமது பதில்) இயேசு, சுவிசேஷம் அறிவித்து எல்லா ஜாதியையும் சீஷராக்கும்படி கட்டளை இட்டார், லூக். 24:46-48: மத். 28:18-20**

**IV-29 பலவீனத்தில் பலத்தைக் கண்ட கிதியோன்** (தொடர்புடையவை: கிதியோன், தாவீது கோலியாத்தைக் கொல்கிறான், பேதுருவின் மறுதலிப்பு, ஆவிக்குரிய போராட்டம்)

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் தேவன் பலவீனமான மனிதர்களை உபயோகித்து பலவான்களைத் தோற்கடித்தார்.**

- முந்நூறு வீரர்களால், தேவனின் ஆச்சரியமான ஆலோசனைகளை பின்பற்றி, கிதியோன் ஒரு பெரும் சேனையை தோற்கடித்தான், நியாயதிபதி 6-7.
- ஆட்டிடையனாகிய தாவீது பெலிஸ்தனாகிய இராட்சனை தோற்கடிக்கிறான், 1 சாமு. 17.

(பு.ஏ) **புதிய ஏற்பாட்டில் பலவீனமானவர்களையும் தவறிழைத்தவர்களையும் உபயோகித்து தேவன் பெரிய காரியங்களைச் செய்கிறார்.**

- பேதுரு இயேசுவை மறுதலித்தார். ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின் தேவன் அவரை மகத்தான முறையில் உபயோகித்தார், மத் 26:31-35, 69-75

**(நமது பதில்) நமது பாவங்களையும் பலவீனங்களையும் தேவனுக்கு அறிக்கை இடுவோம்.**

- மனித ஞானத்திலும் சொத்திலும் நம்பிக்கை வைக்காமல் தேவ வல்லமையில் விசுவாசம் வையுங்கள் (1கொரி. 1-2)
- என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று பவுல் கூறியது போல வல்லமைக்காக ஜெபிக்கவும் (பிலி.4:13).
- தேவன் தருகிற ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை உபயோகித்து ஆவிக்குரிய யுத்தத்தை நடத்துங்கள் (எபே. 6:10-18)

**IV-30 ரூத்** (தொடர்புடையவை: பெண் தலைவர்கள், பெண்கள் மதிக்கப்பட்டனர்)

(ப.ஏ) **பழைய ஏற்பாட்டில் ரூத், தொபொராள், எஸ்தர் போன்ற விசுவாசமுள்ள பெண்களை தமது காரியங்களுக்காக பலப்படுத்தினார்.**

- இஸ்ரவேலை விடுதலையாக்க தெபொராள் தைரியமான போரை வழிநடத்தினாள், நியா.4-5. எஸ்தர், ரூத் ஆகிய புத்தங்களையும் வாசிக்கவும்.

(பு.ஏ) **புதிய ஏற்பாட்டில் விசுவாசம் உள்ள பெண்களை தமது காரியத்துக்காக தேவன் பலப்படுத்தினார்.**

- கர்த்தரின் பணிப்பெண்ணாக இருக்க மரியாள் ஒத்துக் கொண்டாள். ஓர் அற்புதமான துதி ஜெபத்தைப் பாடினாள், **லூக் 1:22-56.**
- பிரிஸ்கில்லா தனது கணவனுடன் சேர்ந்து கூடாரங்களை செய்து பல சபைகள் ஸ்தாபிக்கப்பட உதவினாள். அப்பொல்லோவுக்கு அறிவுறைகள் கூறினாள், **அப்.18.**
- தோற்காள் ஏழைகளுக்கு ஆடைகள் தைத்தாள், **அப் 9:36-43.**
- பெண்களை மதித்து கனப்படுத்துங்கள். விசுவாசமுள்ள தூய பெண்களைப் போற்றுங்கள் (நீதி. 31: 10-31: எபே. 5:21-33).
- தேவன் அளித்துள்ள வரங்களை பயன்படுத்தி கிறிஸ்தவப் பெண்களை ஊழியத்தில் ஈடுபட ஊக்குவியுங்கள் (உதாரணம் பிலிப்பின் மகள்கள், அப் 21:8-9).

## IV-31 மகா பரிசுத்தமான உடன்படிக்ககைப் பெட்டியை பெலிஸ்தர்கள் பிடிக்கின்றனர்.

(தொடர்புடையவை: தண்டனை, பாடுகள், உடன்படிக்கைப் பெட்டி, ஸ்தேவான், துன்புறுத்தல், தியாகிகள்).

(ப.ஏ) **தீய மனிதர்களால் தவறு செய்யும் தமது ஜனங்கள் தண்டிக்கப்படவும், நீதிமான்கள் உலகில் துன்பப்படவும் தேவன் அனுமதிக்கிறார்:**

- நியாயாதிபதிகளின் புத்தகம் எவ்வாறு தேவ பிள்ளைகள் விக்கிரக ஆராதனையிலும் பல பாவங்களிலும் விழுந்தார்கள் என்பதற்கு உதாரணங்களைத் தருகிறது. பின் புறஜாதியர் அவர்களை ஒடுக்க தேவன் விட்டுவிடுகிறார். அவர்கள் மனம் திரும்பும் போது ஓர் இரட்சகனை எழுப்புகிறார். அவர்கள் சமாதானமாக வாழ்கிறார்கள். இது மீண்டும் அவர்கள் பாவம் செய்வது வரை தொடரும். அவ்வாறு இந்த சக்கரம் சுழல்கிறது.
- ஒழுக்கக் கேடுகள் உள்ளவனாக இருந்த போதிலும் சிம்சோனை உபயோகித்து தேவன் விக்கிரக வழிபாட்டு பெலிஸ்தர்களிடம் இருந்து இஸ்ரவேலை விடுவிக்கிறார். நியா. 14-16.
- பெலிஸ்தர்கள் உடன்படிக்கை பெட்டியைப் பிடித்து மீன் கடவுளாகிய தாகோனின் கோயிலில் வைக்கின்றனர். முன்றாவது நாள் தாகோனின் தலை உடைந்து போகிறது. பழைய பாம்பாகிய சாத்தானின் ஆட்சி நிலவும் மரண பிரதேசத்துக்குள் இயேசு நுழைந்து, அவனது தலையை நசுக்கி கைதிகளை விடுதலையாக்கி மூன்றாம் நாள் எழுந்ததை இது குறிக்கிறது. ஓட்டுவதற்கு யாருமில்லாத பசுக்கள் உடன்படிக்கை பெட்டி இருந்த வண்டியை இஸ்ரவேல் தேசத்துக்குள் கொண்டு வந்தன. ஜெயம் பெற்ற இயேசு உயிர்த்தெழுந்த பின் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டு பரத்துக்கு ஏறியது போலாகும் இது, I சாமு. 4-6.
- யோபு நீதிமான். ஆனால் பெரிதும் துன்பப்பட்டான். அவன் தேவனிடம் கேள்விகள் கேட்டான். ஆனால் அவருக்கு விரோதமாகத் திரும்ப வில்லை, யோபு 1-42 (இது ஒரு நீண்ட கதை. சிறுசிறு பகுதிகளாக சுருக்கிப் படிக்க, படிப்பிக்க வேண்டும். முக்கியமான அதிகாரங்கள் 1-4, 40-42.)

(பு.ஏ) **இப்போது நாம் பாடுபட தேவன் அனுமதிக்கிறார். பின்னர் அவருடைய மகிமையில் பங்கு பெறலாம். அவரது பிள்ளைகளை ஒடுக்குகிறவர்களை அவர் தண்டிக்கிறார்.**

- ஏரோது இராஜா யோவான் ஸ்நானகனின் தலையை வெட்டிக் கொன்றான். யாக்கோபையும் பிறரையும் கொலை செய்தான். ஆனால் பின்னர் அவனைப் புழுக்கள் தின்றன, **அப். 12.**
- அவிசுவாசிகளான யூதர்கள் ஸ்தேவானை எருசலேமில் கல்லெறிந்து கொன்றனர். கிறிஸ்தவர்களை துன்புறுத்தினர். இதனால் அவர்கள் பல இடங்களுக்கு சிதறி ஒடினர். சுவிசேஷம் பரந்தது. பலருக்கு ஆசீர்வாதமாக மாறியது, **அப் 7-8**
- பவுல் அப்போஸ்தலர் யூதர்களால் அடிக்கப்பட்டார்: கல்லெறியுண்டார்: திருடர்களிடம் அகப்பட்டார்: அவர் சென்ற கப்பல் உடைந்தது. **2 கொரி. 11:22-33: அப்.27-28.**

**(நமது பதில்) கிறிஸ்துவுக்காக துன்பப்படும்போது நாம் களிகூர வேண்டும். ஏனெனில் மகிமையான பிரதிபலன் மகா பெரிதாய் இருக்கும் (1 பேதுரு 4:12-19).**

- இந்த உலகம் கிறிஸ்துவை வெறுத்தது. அது நம்மையும் வெறுக்கிறது. இதனால் இந்த உலகில் நாம் துன்பப் படுகிறோம். ஆனால் நமக்கு பிரதிபலன் உண்டு (யோவான் 15:18-27: ரோமர். 8:17-39)
- இயேசு நமக்குக் கொடுத்த சிலுவையை சுமக்க வேண்டும் (லூக் 9:22-26)

## இஸ்ரவேல் இராஜாக்களின் காலத்தில்நடந்த நிகழ்ச்சிகளும் அதுபோன்ற பிற்கால நிகழ்ச்சிகளும்

**IV-32 இஸ்ரவேலின் தலைவர்களை தேவன் உருவாக்குகிறார்** ( தொடர்புடையவை: சாமுவேல், அன்னா, ஏலி, சவுல் இராஜா, ஏசாயா, அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துதல்)

(ப.ஏ) **பலவகைகளில், யோசேப்பு, மோசே, தானியேல் போன்ற தீர்க்கதரிசிகளையும், தலைவர்களையும் தேவன் ஆயத்தப்படுத்துகிறார்:**

- தேவனுக்கு சேவை செய்ய அன்னா தன் குழந்தையான சாமுவேலை தலைமை ஆசாரியனாகிய ஏலியிடம் கொடுக்கிறாள்: சாமுவேல் ஏலிக்காக ஒரு அதிர்ச்சியான செய்தியைப் பெறுகிறான், 1சாமு. 1-3
- இஸ்ரவேலர் தங்களை வழிநடத்த ஒரு இராஜாவை அபிஷேகம் செய்ய வேண்டும் என்று கெஞ்சுகின்றனர். அதன் விளைவுகளைக் குறித்து சாமுவேல் எச்சரிக்கிறான். ஆனால் அவர்கள் விடாப்பிடியாய் நிற்கின்றனர். எனவே அவன் பலசாலியான வீரன் சவுலை அபிஷேகம் செய்கிறான்.மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர், 1 சாமு. 8-10.
- சவுல் நன்றாக ஆட்சி செய்கிறான். பல இஸ்ரவேலின் எதிரிகளைத் தோற்கடிக்கிறான். பின் சில மோசமான தவறுகளை செய்கிறான், 1 சாமு. 11-15.
- தாவீது பல முள்ள வீரனாக மாறுகிறான். ஆனால் பொறாமை கொண்ட சவுலால் துரத்தப்பட்டு ஒடி ஒளிகிறான். தேவன் இதை உபயோகித்து அவன் தம் மேல் நம்பிக்கையாய் இருக்கும் படி செய்கிறார் (தாவீதின் பல சங்கீதம் இதை உணர்த்துகிறது), 1 சாமு 18-31. இந்த அதிகாரங்களில் பல யுத்த கதைகள் உண்டு.
- கர்த்தர் தமது ஆலயத்தில் இருக்கும் பயங்கரமான தரிசனத்தை ஏசாயா கண்டு தன்னை பாவியாக உணாந்து கீழே விழுகிறான், ஏசாயா 6.
- எருசலேம் வீழ்ச்சியை தீர்க்கதரிசனம் உரைத்து, குழிக்குள் போடப்படுவது உட்பட பல பாடுகளை எரேமியா அடைகிறான், எரே.38.

(பு.ஏ) **புதிய ஏற்பாட்டில் தேவன் தமது தலைவர்களை ஆயத்தப்படுத்துகிறார்:**

- போதகராகிய இயேசுவை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சென்று பேதுருவும் மேலும் 11 சீஷர்களும் முதல் அப்போஸ்தலர்கள் ஆகிறார்கள், மாற்கு 3: 13-19.
- பவுல் அப்போஸ்தலர் பல பாடுகள் பட்டார். அப்போஸ்தல பணிகளை ஆரம்பிக்கும் முன் அரேபியாவில் நாட்களைக் கழித்தார், கலா. 1:11-24.

**(நமது பதில்) தியாகம் செய்வது உட்பட கர்த்தருக்கு சேவை செய்ய நாம் நன்கு ஆயத்தமும் ஆக வேண்டும்.மோசே, எகிப்து அரண்மனை சொத்துக்களை விட்டுவிட்டு, தமது மக்களுக்கு சேவை செய்ய அவமானமும் அடைந்தான் (எபி.11:24-28).**

- இந்த ஆயத்தம் என்பதில் இப்போது நீங்கள் செய்வது போல தேவ வார்த்தையைப் படிப்பதும், அதை உங்கள் குடும்பத்திற்கும், மக்களுக்கும், புதிய தலைவர்களுக்கும் போதிப்பதும் அடங்கும். (2 தீமோ. 2:2)

**IV-33 இஸ்ரவேலின் நல்ல அரசர்கள்** (தொடர்புடையவை: தாவீதின் நல்லாட்சி, சாலொமோன், கீழ்ப்படிதல், அரசர்கள், ஷீபாவின் ராணி, இஸ்ரவேல் இராஜாக்கள், மூப்பர்கள்)

(ப.ஏ) **விக்கிரகங்களை விட்டு விலகி தமக்குக் கீழ்ப்படிந்த நல்ல தலைவர்களாகிய தாவீது, அவன் மகன் சாலொமேன் போன்றோரை தமது மக்களை ஆளும்படி தேவன் அனுமதித்தார். மோசமான இராஜாக்கள் விக்கிரகங்களை வணங்கி கொடூரமாக ஆட்சி செய்ய விட்டுவிட்டார். பெரும்பாலான இராஜாக்கள் மோசமானவர்களே.**

- தேவனிடம் ஞானத்தைக் கேட்டு வாங்கி சாலொமோன் ஆட்சி செய்ய ஆரம்பித்தான். அவனது ஞானமான தீர்ப்புகள் தூர தேச மக்களையும் கவர்ந்தது, **1 இராஜா 3:4:21-34)**
- சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினான். மிகுந்த விழாக் கோலமாக உடன்படிக்கைப் பெட்டியை அதற்குள் கொண்டு வந்தான், **1 இராஜா 8.**)
- சாலொமோனின் மகிமையைக்காண ஷீபா தேசத்து இராணி வெகு தூரத்தில் இருந்து வந்தாள். அவனுடைய ஞானத்தையும் சொத்துக்களையும் பார்த்து வியப்பு அடைந்தாள், **1 இராஜா. 10:1-13.**
- சாலொமோனின் ஆட்சி காலத்தில் இஸ்ரவேல் மிகவும் வளம்பெற்று விளங்கியது, **1 இராஜா 10:22-29.**
- யோசபாத் விக்கிரகங்களை அகற்றினான். பன்னிசாரா கல்வி முறையில் இஸ்ரவேலர் எல்லோருக்கும் தேவ நியமங்களைப் போதித்தான், **2 நாளா. 17-18.**
- சிறுவனாகிய யோசியா இராஜா, ஆலோசகர்களின் அறிவுரை கேட்டு இஸ்ரவேலில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தான், **2 இராஜா. 22-23.**
- **எசேக்கியா இராஜா கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான், 2 நாளா 29-32.**

(பு.ஏ) **தமது வார்த்தையையும், ஆவியானவரின் வழிகாட்டுதலையும் பின்பற்றும் நல்ல தலைவர்களை தேவன் தமது சபைக்குத் தருகிறார்.**

- கிரேத்தாவில் உள்ள புதிய சபைக்கு கண்காணியாக நல்ல வகையான மூப்பர்களை நியமிக்கும்படி பவுல் தன் உதவியாளரான தீத்துவிடம் கூறுகிறார், தீத்து 1:5-9.

**IV-34 இஸ்ரவேலின் தீர்க்கத்தரிசிகள்** (தொடர்புடையவை: எச்சரிக்கை, எலியா, ஆகாப், பாகோல், மனந்திரும்புதல், போலித் தலைவர்கள்)

(ப.ஏ) **மோசமான இராஜாக்களும், மக்களும் மனம்திரும்பும்படி எச்சரிக்க தேவன் தமது தீர்க்கத்தரிசிகளை அனுப்பினார்.**

- சாலொமோனின் அறிவற்ற மகன் ரெகொபெயாம் மக்களுடைய வரிப் பளுவை குறைக்க மறுத்தான். இது வட கோத்திரத்தாரையும் யெரொபெயாமையும் கோபமுற வைத்ததால் அவர்கள் இராஜ்யத்தை உடைத்தனர். வடக்கில் இஸ்ரவேலும், தெற்கில் யூதாவுமாக அது பிரிந்தது, **1 இராஜா.12.**
- வட ராஜ்யமான இஸ்ரவேலின் முதல் அரசன் யெரொபெயாம். அவன் தீர்க்கத்தரிசிகளின் எச்சரிப்பையும் பொருட்படுத்தாமல் விக்கிரக ஆராதனையை துவக்கி வைத்தான், **1 இராஜா 13.**
- யெரொபெயாமின் இந்த மோசமான முன்னுதாரணத்தைப் பல இராஜாக்கள் பின்பற்றினர். ஆகாப் ஏறக்குறைய இஸ்ரவேல் யாவரும் விக்கிரக ஆராதனையில் ஈடுபட அனுமதிக்கிறான். ஆனால் எலிசா தீர்க்கதரிசி அற்புதங்களைச் செய்து தேவன் ஜீவிக்கிறார் என்பதையும், உயிரற்ற சிலைகளை விட அவர் மிகுந்த வல்லமை உடையவர் என்பதையும் நிரூபிக்கிறார். எலியா ஒரு விதவையின் மகனை குணப்படுத்துகிறார். **1 இராஜா 17.**
- எலியா, தன்னையும் ஆகாபையும் கர்மேல் பர்வதத்தில் ஒரு போட்டிக்காக சந்திக்குமாறு பாகால் தீர்க்கத்தரிசிகளுக்கு சவால் விடுகிறான், **1 இராஜா 18.**
- எலியா தான் மட்டுமே தனியாக விடப்பட்டதாக எண்ணி வருத்துகிறான். ஆனால் கர்த்தருடைய தூதன் அவனுக்கு போஜனம் கொடுக்கிறான், **1 இராஜா 19**
- மிகவும் தீய மன்னனான ஆகாபை எலியா மனம் திருந்த வைக்கிறான், **1 இராஜா 21.**
- மிகாயாவின் தீர்க்கத்தரிசனத்தை ஒதுக்கித் தள்ளி ஆகாப் தனது கொடூரமான சாவுக்குத் தானே வழிவகுக்கிறான். **1 இராஜா 22.**

- தீய மன்னனான அகசியாவின் தூதுவர்கள் மேல் வானத்தில் இருந்து எலியா அக்கினியை வர வைக்கிறான், **II இராஜா 1.**
- எலியா அக்கினிமயமான ரதத்தின் மூலம் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறான். அவனுடைய உதவியாளனான எலிசாவுக்கு அவனுடைய வல்லமையை தேவன் அளிக்கிறார், **2 இராஜா** 2.
- மேவாபியரின் சேனையை அதிசயமாக முறியடிக்க யோராமுக்கு எலிசா உதவிசெய்கிறான், **2 இராஜா3.**
- எலிசா தேவனுடைய வல்லமையால் ஓர் ஏழை விதவை கடனை அடைக்க உதவுகிறான், **2 இராஜா 4.**
- எலிசா தேவ வல்லமையைக் கொண்டு சீரிய படைத்தளபதி நாகமானின் குஷ்டரோகம் நீங்க உதவி செய்கிறான், **2 இராஜா 5.**
- எலிசா தேவ வல்லமையால் முற்றுகை இட்ட எதிரிப் படை முறிந்தோடிப் போகப் பண்ணுகிறான், **2 இராஜா 7-8.**
- எரேமியா தேவ தண்டனையையும், எருசலேமின் வீழ்ச்சியையும் தீர்க்கத் தரிசனமாக உரைக்கிறான். ஆனால் இராஜா கேட்க மறுக்கிறான், **2 நாளா. 36:11-23, எரே. 36.**
- அரசனும் மக்களும் மேலும் மேலும் அநீதி இழைத்து கடைசியில் எருசலேம் வீழ்ச்சி அடைகிறது. பலர் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போகின்றனர், **2 நாளா. 36.**
- தேவ கட்டளையை மீறி இன்னொரு நாட்டுக்கு ஒடிப்போன முதல் ஊழியக்காரனான யோனாவுக்கு, தேவன் கீழ்ப்படிய கற்றுத் தருகிறார், யோனா.

(பு.ஏ.) **இயேசு மனிதர்களை மனம்திரும்பச் சொல்கிறார். மோசமான தலைவர்களைக் குறித்து எச்சரிக்கை செய்கிறார். ஓநாய்கள் தேவ மக்களை வழிதவறச் செய்கின்றன.**

- இயேசு வழிதப்பிய ஆட்டைப் பற்றிய உவமையைக் கூறி, ஒரு பாவி மனம் திரும்பும் போது பரலோகத்தில் ஏற்படும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார், **லூக் 15:1-10.**
- கெட்ட குமாரனின் உவமை மூலம் மனிதனை மனம்திரும்ப வைக்கும் தேவ கிருபையை இயேசு விளக்குகிறார், **லூக் 15:11-32**
- பெந்தெகொஸ்தே நாளில் கூடி இருந்த திரளான மக்களுக்குப் பேதுரு சுவிசேஷத்தை அறிவித்து மனம் திரும்பச் செய்கிறார், **அப் 2:1-41.**
- ஓய்வு நாளில் இயேசு ஒரு குருடனை சொஸ்தமாக்குகிறார். ஓய்வு நாளில் இதைச் செய்ததால் போலி மதத் தலைவர்களை குறை கூறுகின்றனர், **யோவான் 9.**
- தர்சுப் பட்டிணத்தானாகிய பவுல் கிறிஸ்தவர்களை சிறையிலிட்டு கொலை செய்கிறான், ஆனால் அவனே மனமாறி பவுல் அப்போஸ்தவன் ஆகிறான், **அப் 9:1-31.**
- தங்களை பற்று மிகுந்த கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் போலிகளான ஒநாய்களைப் பற்றி இயேசு எச்சரிக்கிறார், **மத். 7:15-20.**
- யோவான் ஸ்நானகன் ஏரோது அரசனை அவனது ஒழுக்கக் கேட்டிற்காக எச்சரிக்கிறான். ஏரோது யோவானை சிறையலடைத்து பின் தலையை வெட்டுகிறான், **மத்14.**
- இயேசு பரிசேயராகிய புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கிறார் - சுய நீதி, மனித விதிகள், **லூக் 12:1 மத். 15:1-20.**
- ஒநாய்கள் (போலி தலைவர்கள்) அவர்களது சபையைப் பிரித்து, கெடுத்துவிடக் கூடும் என்று எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் எச்சரிக்கை செய்கிறார், **அப் 20:28-32**
- அந்திக் கிறிஸ்து அராஜகமாக விசுவாசிகளைத் துன்புறுத்துவான் என்பதை தேவன் யோவானின் தீர்க்கத் தரிசனம் மூலமாக எச்சரிக்கிறார், **வெளி 13.**
- மனம்திரும்பாதவர்கள் மேல் கடுமையான நியாயத் தீர்ப்பு வரவிருப்பதை யோவானின் வெளிப்பாடு எச்சரிக்கிறது, **வெளி. 16-18.**
- மனத் திரும்புபவர்களுக்கு மாபெரும் கலியாண விருந்து பரலோகத்தில் ஆயத்தமாய் இருப்பதை யோவானின் வெளிப்பாடு கூறுகிறது. **வெளி.19.**
- மனம் திரும்பாதவர்களுக்கு தேவனின் மாபெரும் வெள்ளை சிம்மாசனத்திற்கு முன்பாக இறுதியான நியாயத் தீர்ப்பு இருக்கிறது என்பதை யோவானின் வெளிப்பாடு உணர்த்துகிறது, **வெளி 20.**
- கிறிஸ்துவுடன் என்றென்றும் இருந்து நாம் அரசாளும் புதிய வானமும் புதிய பூமியும் பற்றி யோவான் வெளிப்படுத்துகிறார். அங்கு கண்ணீரும் இல்லை, சாபமும் இல்லை, வேதனையும் இல்லை, **வெளி. 21-22.**

**(நமது பதில்)**

- நமது சொந்தக் குடும்பத்தில் இருந்து ஆரம்பித்து தேவன் கண்காணிக்கும் படி நமக்குத் தந்த மந்தையை கவனித்துக் கொள்ள வேண்டும் (அப். 20:28-32)
- அனுபவம் மிக்கவர்களும், தங்கள் திறமையை நிருபித்தவர்களுமானவர்களையே தலைமைப் பொறுப்புக்கு நியமியுங்கள், (1 தீமோ. 3)
- பிரிவினைகளை உண்டாக்குபவர்களிடம் இருந்து விலகுங்கள் (தீத்து 3:10-11).
- வெளி 2-3ல் கிறிஸ்து நம்மை எச்சரிக்கும், சபைகளைப் பலவீனப்படுத்தும் பொதுவான தவறுகளை நமது சபை விலக்க வேண்டும்.
- பரிசுத்த ஆவியின் தினமும் பதிதாக்குதலை நாடுங்கள். (2 கொரி. 4:16-18)
- நித்தியமான பலனைப் பற்றி எடுத்துக் கூறி பாடுபடும் விசுவாசிகளை தேற்றி உறுதிப்படுத்துங்கள் (1 பேதுரு 1:6-9: 1 யோவான் 3:1-3).

**IV - 35 லூசிபர்** (தொடபுடையவை: பரலோகத்தில் இருந்து சாத்தானின் வீழ்ச்சி ஆவிக்குரிய யுத்தம், சாத்தான் இயேசுவை சோதிக்கிறான், பிசாசு)

(ப.ஏ) **லூசிபர், " பாபிலோனின் இராஜா", ஓர் அழகிய தேவதூதன், அகந்தையள்ளவனாக மாறி வானத்தில் இருந்து விழுந்து, நமது எதிரியான சாத்தான் ஆனான், ஏசா. 14:3-17. இந்த நிகழ்ச்சி சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் நடந்தது. ஆனால் இராஜ்யம் பிளவுபட்டபோதே வெளிப்படுத்தப்பட்டது.**

(பு.ஏ) **தேவ மக்களுக்கு எதிராக சாத்தான் விடாது யுத்தம் செய்கிறான்.**

- சாத்தானும். அவனோடு சேர்ந்து கொண்ட தூதர்களும், பரலோகத்தில் நடந்தப் போர் ஒன்றைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற்றப் படுகின்றனர், **வெளி 12:7-9.**
- சாத்தான் இயேசுவை சோதிக்கிறான், **மத். 4**
- நமது இருதயத்தில் விதைக்கப்படும் தேவ வார்த்தையாகிய விதைகளை எடுத்துப் போட சாத்தான் தீய ஆவிகளைப் பறவைகளைப் போல அனுப்புகிறான் என்று இயேசு எச்சரிக்கிறார், **மத்.13.**
- சாத்தான், இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாசைத் தூண்டுகிறான்,
  **யோவான் 13:21-30: 18:1-12**
- விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களான அனனியா சப்பீராளைக் கூட சாத்தான் பாவம் செய்யத் தூண்டுகிறான், **அப் 5:1-11.**

**(நமது பதில்)**

- சாத்தானுக்கு எதிர்த்து நின்றால் அவன் ஓடி விடுவான் (யாக் 4:7)
- யாரை விழுங்கலாம் என்று கர்ஜிக்கும் சிங்கம் போல சுற்றித் திரியும் சாத்தானுக்கு எச்சரிக்கையாய் இருங்கள் (1 பேதுரு 5:8-9).

## மீதியாய் இருந்த சிறைப்பட்ட இஸ்ரவேலர் தங்கள் தேசத்துக்குத் திரும்பி வந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளும், அது போன்ற பிற்கால நிகழ்ச்சிகளும்

**IV - 36 இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைப்படுதல்** (தொடர்புடையவை: மொர்தேகாய், தானியேல், விசுவாசிகளின் பாதுகாப்பு, இயேசு - நல்ல மேய்ப்பன்)

- மொர்தேகாய் தன் மருமகளாகிய தைரியமிக்க எஸ்தர் ராணிக்கு, தேவ விரோதிகளின் அழிவுக்கு திட்டமிட உதவுதல்,எஸ்தர் (முழுப்புத்தகம்)
- எரியும் உலையில் இருந்து தேவன் தானியேலின் மூன்று நண்பர்களைக் காக்கிறார், தானி. 3, தானியேலை சிங்கக் கெபியில் இருந்து மீட்கிறார், தானி 6.

(பு.ஏ) **நல்ல மேய்ப்பனாகிய இயேசு, தமது சீஷர்களை தமது கரத்தில் என்றென்றும் பாதுகாப்பதாக வாக்களிக்கிறார், யோவான் 10:7-39.**

**(நமது பதில்) தமது கரத்தில் வைத்து “என்றென்றும் காக்கும் தேவனின் அளவிலா கிருபையில் விசுவாசம் வையுங்கள்”• ரோமர் 8:28-29.**

**IV - 37 சீர்திருத்தவாதியாகிய எஸ்ரா** (தொடர்புடையவை: மறு உருவாக்கம், பாபிலோனின் அடிமைத்தனத்தில் இருந்து திரும்புதல், நெகேமியா, ஆவிக்குரிய வரங்கள்)

(ப.ஏ) **தமது மக்களை மறுசீரமைப்பு செய்யவும், தமக்கு சேவை செய்யும்படி ஒழுங்குபடுத்தவும் தேவன்உண்மையுள்ள தலைவர்களைத் தந்தார்.**

- பாபிலோனிய சிறை இருப்பில் இருந்து மீண்டு வந்து இஸ்ரவேல் நாட்டையும் தேவாலயத்தையும் மறுசீரமைக்கும் படி பெர்சியாவின் இராஜா கோரேசு அனுமதி அளிக்கிறான். **எஸ்ரா1.**
- மக்கள் திரும்பி வந்து மிகுந்த மகிழ்ச்சி ஆரவாரத்தோடும் கண்ணீரோடும் தேவாலயத்தை மறுபடியும் கட்டத் துவங்குகின்றனர், **எஸ்ரா 3.**
- எருசலேமைத் திரும்பிக் கட்ட அர்தசஷ்டா இராஜாவிடம் நெகேமியா அனுமதி கோருகிறான். நெகேமியா வந்து பாழாய்க் கிடந்தவற்றைப் பார்வை இடுகிறான், **நெகே 1-2.**
- மிகுந்த எதிர்ப்பின் மத்தியில் ஆயுதம் ஏந்திய பணியாளர்களுக்கு தலைமை ஏற்று நெகேமியா எருசலேமின் சுவர்களை எடுத்துக் கட்டுகிறான், **நெகே. 3-4.**
- மக்கள் தேவ வார்த்தையைக் காது கொடுத்துக் கேட்கின்றனர். பாவங்களை அறிக்கை இட்டு மனம்திரும்புவதால், மாபெரும் தேச மறுமலர்ச்சி ஏற்படுகிறது, **எஸ்ரா 8-9**

(பு.ஏ) **தலைமை தாங்கவும், ஒருவருக்கொருவர் சேவை செய்யவும், தேவையில் இருப்போருக்கு உதவி செய்யவும் நமக்கு தேவன் தமது பரிசுத்த ஆவியால் வரங்களையும் வல்லமையையும் தருகிறார்.**

- இயேசு மனம் திரும்பிய பாவிகளோடு அமர்ந்து உணவு அருந்துகிறார். இது அவர்களுக்கு தேவ கிருபையைக் கொண்டு வருகிறது. மாற்கு 2:13-17.
- சபையாகிய அங்கத்தில் ஒருவருக்கு ஒருவர் அன்போடு சேவை செய்ய மற்றவர்களின் வரங்களோடு இயைந்து நாம் நமது ஆவிக்குரிய வரங்களை உபயோகிக்கிறோம், 1 கொரி. 12:14-31.
- பெருகும் வினை தொடர்ந்து நடைபெற, புதிய தலைவர்களைத் தேர்ந்து பயிற்சி அளிக்குமாறு பவுல் தமது உதவியாளர்களுக்குக் கூறுகிறார், தீத்து 1:5 2தீமோ.2:2.

**(நமது பதில்) விசுவாசத்தோடு நமது மக்களை தேவ பணிகளுக்காக ஒன்று திரட்ட திட்டம் இடுவோம் (எபே. 4: 11-16)**

- மிகவும் தேவைப்படும் இடங்களுக்கு புதிய பணியாளர்களை பொறுப்பளித்து அனுப்பி வைக்கவும் (அப். 13:1-3 தீத்து 1:5).

## இயேசுவின் உலகவாழ்க்கை காலத்து நிகழ்ச்சிகள்

**IV-38 இயேசுவின் வாழ்க்கை** (தொடர்புடையவை: அப்போஸ்தலர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர், ஜெயபவனி, சிலுவை, இயேசு உயிர்த்தெழுகிறார், இயேசு பரத்துக்கு எழுந்தருளுகிறார்.)

- இயேசுவின் பிறப்பு **மத். 1-2: லூக் 2**
- இயேசுவின் ஞானஸ்நானம், **மத் 3**
- இயேசுசாத்தானால் சோதிக்கப்படுதல், **மத்.4**
- இயேசு 12 சீஷர்களை அழைக்கிறார். இவர்களே பின்னர் அப்போஸ்தலர்கள் ஆகின்றனர், **மத் 4:18-21 9:9-13 யோவான் 1:35-51 மாற்கு 3:13-19.**
- இயேசு மறுரூபமாதல், **மத் 17.**
- இயேசுவின் எருசலேம் வெற்றி பவனி (குருத்தோலை ஞாயிறு, **மத்.21.**
- இயேசு கர்த்தரின் பந்தியை ஆசரித்தல், **மத்.26:17-29.**
- கெத்செமெனே தோட்டத்தில் இயேசுவின் மகா வேதனையும், அவரது கைதும், **மத் 26:36-56.**
- பல அதிகாரிகளின் முன்னிலையில் இயேசுவின் விசாரணை, **மாற்கு 14:55-64 யோவான் 18:28-40 19:1-16.**
- இயேசுவை சிலுவையில் அறைதல், **மத். 27 மாற்கு 15, லூக் 23, யோவான் 19:17-37.**
- இயேசுவை அடக்கம் செய்தல், **யோவான் 19:38-42.**
- இயேசு உயிர்த்தெழுந்தவராகக் காணப்படல், **மத் 28, யோவான் 20-21.**
- பரிசுத்த ஆவியின் வல்லமையால் மனம் திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள அறை கூவும்படி எல்லா ஜாதிகளிலும் சீஷர்களை உருவாக்க இயேசு பொறுப்பளித்தல், **மத் 28:18-20, மாற்கு 16:15-16, லூக். 24:46-48 யேவான் 20:21-23, அப் 1:18.**
- இயேசு பரத்துக்கேறல், **லூக் 24:5-53**

## மகிமைக்குள் இயேசு எழுந்தருளியதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள்

**IV-39 பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கி வருதல்** (தொடர்படையவை: ஸ்தேவான், பெந்தெகொஸ்தே, சபைக் குழு, ஊழியர் குழு, நியாயத் தீர்ப்பு).

- பெந்தெகொஸ்தே நாளில், யூத விசுவாசிகளின் மேல் பரிசுத்த ஆவி வருதல், **அப் .2**
- காலங்காலமாக அவர்களுடைய முன்னோர்கள் தேவனை எதிர்த்தே வந்துள்ளார்கள் என்ற உண்மையை பழைய ஏற்பாட்டு வரலாறு மூலம் ஸ்தேவான் விளக்கியபோது கிறிஸ்துவின் எதிரிகள் ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றனர், **அப்.7.**
- முதல் புறஜாதியார் சபை: புறஜாதி விசுவாசிகளும் பரிசுத்த ஆவியைப் பெறுதல், **அப்.10**
- முதல் சுவிசேஷ ஊழியக் குழு, **அப் 13-14**
- முதல் சபைகளுக்கு இடையில் ஏற்பட்ட குழு: **அப்.15**
- இறுதித் தீர்ப்பு, வெளி. **20:11-15.**

## பகுதி V
# பொருள் அகராதி


**அ**

அகரிப்பா IV-21
அக்கினிசோதனை IV-25
அடிப்படை வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் II-1
அடிமை IV-13, 15
அந்நியர்கள் IV-28
அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டவர்கள், பகுதி III (எல்லாம்); தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் III-12
அப்போஸ்தலர்களின் ஆயத்தம் IV-32
அவமானம் - குற்றம் வேறுபாடு III-12
அன்பு II-4, சபையில் III-7; நடைமுறையில் III-5
அன்னா IV-32

**ஆ**

ஆகாப் IV-34
ஆசாரித்துவம் IV-22
ஆட்டுக்குட்டியின் இரத்தம் IV-14
ஆட்சியாளர்கள், நல்லவர்கள் IV-33
ஆதாம் I-1; IV-2
ஆதிபாவம் I-1; IV-2
ஆபிரகாம், அவனுடைய விசுவாசம், III-9; IV-6,7,10; மன்றாட்டு ஜெபம் III-12
ஆராதனை III-3; முக்கிய அம்சங்கள் II-3, உண்மை I-2
ஆலோசனை III-8
ஆவிகள் IV-24
ஆவிக்குரிய வரம் III-2; IV-37
ஆவிக்குரிய யுத்தம் IV-29, 35

**இ**

இயேசு
தேவ மக்களுக்காக வாதாடியவர் IV-12
மகிமைக்கு ஏறல் IV-38
அவரது ஞானஸ்நானம் III-1
தேவையில் இருப்பவர்கள் மேல் பரிவு III-10
பிசாசுகளைத் துரத்துதல் I-4
குழந்தைப் பருவம் III-9
கற்பனைகள் IV-8
சாத்தானையும் தீயசக்திகளையும் மரணத்தையும் முறியடித்தல் I-4, IV-2
நல்ல மேய்ப்பன் IV-36
மாபெரும் ஆணை I-8
தலைமை ஆசாரியன் III-10; IV-22
மனித, தெய்வீக இயல்புகள் III-10
வாழ்க்கை IV-38
தீய ஆவிகளை மேற்கொள்ளுதல் IV-24
மரித்தோரில் இருந்து எழுதல் I-3; I-8; IV-38
தியாக மரணம் I-3
சாத்தானின் சோதனை III-4
இரக்க ஊழியம் III-10
இரட்சிப்பு IV-11
இரத்தபலி IV-3, 14

இரண்டாம் மரணம் IV-4
இறையியல் கல்வி - மேய்ப்பர் பயிற்சி காண்க
இனங்கள் IV-5
இஸ்லாம் IV-7
இராஜாக்கள்-இஸ்ரவேல்-யூதா IV-33

**ஈ**
ஈசாக்கு IV-7, 10; மனைவியை தேவன் தருதல் III-9

**உ**
உடன் படிக்கை IV-6
உடன்படிக்கைப் பெட்டி IV-31
உயிர்த்தெழுதல் I-3, IV-14, 15
உறுப்பினர் கவனம் III-8

**ஊ**
ஊழியம்-புதிய ஏற்பாட்டின் படி, பகுதி III (அனைத்தும்)
ஊழியர்கள் III-14; IV-27; அனுப்பப்பட்டவர்கள், IV-27; குழுக்கள் IV-39

**எ**
எச்சரிக்கை IV-34
எத்திரோ IV-17; மோசேக்கு அறிவுரை III-6
எலியா: மனமுறிவு III-8, அற்புதம் I-2; IV-34
எஸ்தர் ஜெபத்தால் தேசம் இரட்சிக்கப்படுதல் III-12
எஸ்ரா IV-37

**ஏ**
ஏசா IV-11
ஏசாயா IV-32
ஏலி-மோசமான தகப்பன் IV-32

**ஐ**
ஐக்கியம், சபைக்குள்ளும் சபைகளுக்குள்ளும் III-7
ஐக்கிய ஆராதனை II-6; III-3; IV-14

**ஓ**
ஓய்வுநாள் IV-19

**க**
கடைசிவிருந்து III-3; IV-14, IV-13, 14
கட்டுப்பாடு-சபையில் III-11
கண்காணிகளின் கடமை III-10
கர்த்தரின் பந்தி, ஐக்கிய ஆராதனை
கலாச்சாரம் IV-5
கிதியோன் IV-29
கிருபை II-4; IV-11
கிறிஸ்துவின் இரத்தம் IV-3

கிறிஸ்துவின் சபையில் எல்லா தேசமும் உண்டு IV-28
கீழ்ப்படிதல்-கிறிஸ்துவுக்கு I-7; பகுதி II (எல்லாம்); கீழ்ப்படிதலுள்ள இராஜாக்கள் IV-33
கீழ்ப்படியாமை IV-21
குடும்ப வாழ்க்கை பலப்படுதல் III-9
குணமாக்குதல் IV-9
கூடாரம் III-3; IV-22
கெட்ட குமாரன் I-1, IV-34
கொடுத்தல் II-7; III-13; IV-8

**ச**

சகேயு I-6
சட்டம்-ஓய்வு நாளைப் பற்றிய பழைய ஏற்பாட்டு பிரமாணம், IV-18
சந்திப்பு III-8
சபையாகிய சரீர வாழ்க்கை, III-2, சபைக்குழு IV-39; சபை ஸ்தாபித்தல் III-5; IV-27
சமாரியன், நல்ல சமாரியன் அந்நியனை நேசித்தான், II-4
சமாரியப் பெண் I-2
சவுல் IV-32, III-12
சாட்சி I-8
சாத்தான் அழிவு IV-24; வீழ்ச்சி IV:35; ஆதாமை சோதித்தல் IV-2; இயேசுவை சோதித்தல் IV-35
சாமுவேல் IV-32, III-9
சாலொமோன் IV-33
சாவாமை IV-15, 16
சிருஷ்டிப்பு I-1, IV-1
சிலுவை IV-38
சிறுகுழுக்கள் III-5
சிறுகுழுக்கள்-செல்
சிறையிருப்பு IV-36
சீரமைப்பு
சீஷர்கள் I-8; II-3
சுவிசேஷம் அறிவித்தல், பகுதி I, (எல்லாம்); III-1
சூனியம் IV-24
செங்கடல் IV-15
சேவை - ஒருவருக்கொருவர் III-5
சொத்து IV-26
சொத்து-பரலோகத்தில் IV-25
சொத்து-ஏமாற்றுகிறது, I-5
சோதனை IV-2

**ஞ**

ஞானஸ்நானம் I-7; II-2; III-1

**த**

தண்டனை IV-4
தலைமை III-6
தலைமை ஆசாரியன் IV-22
தலைவர்கள் IV-32
தாவீது-மறைமுகப் பாவம் தண்டிக்கப்பட்டது III-11; நல்லாட்சி IV-33
தாவீது கோலியாத்தை கொல்லுதல் IV-29
தானியேல் IV-36
தியாகி IV-31

திருத்துதல் II-6; III-11
திருமணம் III-9; IV-23
தீமோத்தேயு III-6
தீர்க்கத்தரிசி IV-34
தேசம் IV-28
தேவன் ஒருவரே I-2; அவர் பரிசுத்தர்-எனவே பாவம் தண்டிக்கப்படும் I-5
தேவ மக்களின் மேய்ப்பர்கள் IV-17
தேவையில் இருப்போர் III-10
தோற்காள் III-13

**ந**
நாகமான் I-7
நித்தியவாழ்வு IV-16
நியாயத்தீர்ப்பு IV-4; 39
நியாயப்பிரமாணம் IV-18
நெகேமியா III-2; IV-37
நோயாளி III-10
நோவாவும் வெள்ளப்பெருக்கும் I-5; IV-4

**ப**
பணியாளர் தலைவர் III-6
பத்துகட்டளை IV-18
பயம் III-1
பயிற்சி, மேய்ப்பர் பயிற்சி காண்க
பரலோகம் IV-25
பரலோகப் பொக்கிஷம் II-7
பராமரிப்பு II-7, III-13; IV-8
பரிசுத்தம் I-6; III-11
பரிசுத்த ஆவி II-1; III-11; IV-10, 39
பரிசுத்தஸ்தலம்
பலம் IV-29
பவுல் I-8; III-5
பழைய உடன்படிக்கை IV-18
பஸ்கா III-3; IV-14
பாகால் IV-34
பாடுகள் IV-31
பாபிலோன் IV-37
பாபேல் IV-5
பாபேல் கோபுரம் III-7
பாவம், ஆதி IV-2; தண்டனை I-5
பாவம்-மன்னிப்பு I-3, II-4; IV-12
பாவ அறிக்கை I-6
பிசாசு IV-35
பிசாசுகள் I-4; இயேசுவின் நாமத்தில் துரத்துதல் III-12, IV-24
பிலேயாம் IV-26
பிள்ளைகள் III-9; IV-23
புதிய உடன்படிக்கை IV-18

பெந்தெகொஸ்தே IV-10; 39
பெரும் பொறுப்பாணை I-8
பெண் தலைவர் IV-30
பேராசை 26
பேதுரு-மறுதலித்தல் IV-29; பவுலால் கடிந்து கொள்ளப்படல் III-11
பொன்கன்றுக்குட்டி IV-20
பொருளாசை IV-26
பொருளுடைமை IV-26
போலித்தலைவர்கள் IV-34

**ம**
மகிழ்ச்சி III-11
மதச்சடங்கு IV-19
மந்திரம் IV-24
மரணம்-இயேசுவால் மேற்கொள்ளப்படல் I-4; IV-2
மறுபிறப்பு IV-1
மறு உருவாக்கம் IV-37, IV-1
மனம் திரும்புதல் I-1, 7; II-1, IV-4, 34
மன்னா IV-16
மன்றாட்டு IV-9; 12
முரண்பாட்டுத் தீர்மானம் III-7
மூப்பர்கள் கடமை II-6; III-6; IV-17, 33
மேய்ப்பர் பயிற்சி III-6
மேய்ப்பர்கவனம், ஆலோசனை III-8
மொர்தேகாய் IV-36
மோசே IV-16; 22

**ய**
யாக்கோபு IV-11; III-9
யோபு III-8
யோசேப்பு IV-12
யோசுவா IV-27
யோசியா III-4

**ர**
ராகாப் IV-28
ரெகொபெயாம் III-7
ரூத் III-13, IV-30

**ல**
லூசிபர் IV-35

**வ**
வரம், ஆவிக்குரிய வரங்கள் பார்க்க
வாக்குத்தத்தம்-தேவன் IV-6
வாக்குத்தத்தம்-நாடு IV-21
விசுவாசம் III-9; IV-6; 7;9;11;21
விசுவாசிகள் பாதுகாப்பு IV-36
விடுதலை IV-15
விடுதலை ஆவிகளிடம் இருந்து, பிசாசு பார்க்கவும்
விக்கிரக ஆராதனை I-2; IV-20
வேதாகமம், கல்வி, போதனை, தேவ வார்த்தையை நடைமுறைப்படுத்துதல் III-4; வேதாகமக் கதைப் பட்டியல், IV-1-39

**ஜ**

ஜலப் பிரளயம் I-5; IV-4
ஜீவ அப்பம் IV-16
ஜீவ தண்ணீர் IV-16
ஜெபம்II-5; III-12; IV-9
ஜெயபவனி IV-38
ஷீபாவின் ராணி IV-33
ஸ்தேவான் III-1; IV-31, 39